

ஸ்ரீ வேணுகோபாலன்

மனதை உருக்கும் விதத்தில் ஏராளமான சிறுகதைகளும், நாவல்களும், வரலாற்றுப் புதினங்களும் எழுதி வரும் ஸ்ரீ வேணு கோபாலன் [புஷ்பா தங்கதுரை] நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து எழுதி வருகிறார்.


இவருடைய பல கதைகள் இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவரது நாடகமான "அமைச்சர் மதுரகவி"யைப் புகழ்பெற்ற டி.கே.எஸ். சகோதரர்கள் நடித்திருக்கிறார்கள்.

இவரது "ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது" "நந்தா என் நிலாஞ" "லீனா மீனா ரீனா" [அந்த ஜூன் 18] ஆகிய நாவல்கள் திரைப்படங்களாக வந்துள்ளன. இவரது பல தொடர்கள் டி.வி. தடங்களில் வந்துள்ளன.

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம்,
848,91- வது தெரு,
13 - வது செக்டார்,
கே.கே.நகர்,
சென்னை - 600 078.
Phone : 4839543
E-mail : spushpa@vsnl.com

திருவரங்கன் உலா

பாகம் - 4



ஸ்ரீ வேணுகோபாலன்

நூல் விவரம்

Released by Maran's Dog ,Toronto, Canada

நூல் தலைப்பு	:	திருவரங்கன் உலா 4-வது பாகம்
ஆசிரியர்	:	ஸ்ரீவேணுகோபாலன்
மொழி	:	தமிழ்
பொருள்	:	வரலாற்றுப் புதினம்
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு – டிசம்பர் 2001
உரிமை	:	ஆசிரியருக்கு
தாளின் தன்மை	:	11.6 கி.கி.
நூலின் அளவு	:	கிரௌன் சைஸ் (12 ½ x 18 ½ செ.மீ.)
அச்சு எழுத்து அளவு	:	10 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	322 பக்கங்கள்
நூலின் விலை	:	ரூ. 100/-
அச்சிட்டோர்	:	கே யெம் பேக்கேஜிங் இன்டஸ்டிரீஸ், சென்னை - 14. போன் : 8269578

Released by Maran's Dog. Toronto, Canada

இதோ புதுப் பதிப்பகம்!

Released by Maran's Dog. Toronto, Canada

வணக்கம்.

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகத்தை
மீண்டும் துவங்குகிறேன்.
இதன் முதல் வெளியீடாக
"திருவரங்கன் உலா" நான்காவது பாகம்
திருத்திய முதல் பதிப்பாக வருகிறது.
உங்களது ஆதரவை என்றும் விரும்பும்,

Released by Maran's Dog. Toronto, Canada

ஸ்ரீவேணுகோபாலன்

லக்ஷ்மிஸ்ரீ பதிப்பகம்,
848, 91-வது தெரு.
13-வது செக்டார்,
கே.கே. நகர்,
சென்னை 600 078.
Phone : 4839543
E-mail: spushpa@vsnl.com

திரு. கோபுலு அவர்கள்

"திருவரங்கன் உலா" ஒரு தொடராக வெளிவந்த போது அதற்கு அழகும் ஜீவனும் ததும்ப ஓவியங்கள் வரைந்து கொடுத்தவர் கலைமாமணி கோபுலு அவர்கள்.

உண்மையில் அவரது ஓவியங்களால் என் முதல் சரித்திரக் கதைக்கு ஒரு மதிப்பும் மவுசும் ஏற்பட்டன.

ஓவியம் மட்டுமல்ல! கதை எழுதும் போது எனக்கு அவர் அவ்வப்போது சரித்திர நுணுக்கங்களையும் கூறி விளக்கி வருவார்.

எல்லோரும் போற்றும் இந்த மேதை எனது நூலுக்கு கலை அழகு நிறைந்த வர்ண மயமான முகப்பு ஓவியத்தை வரைந்து கொடுத்திருப்பதும் என் பாக்கியமே!

--- ஸ்ரீவேணுகோபாலன்.

1

வைணவர்கள் வல்லபனையும், தத்தனையும் அழைத்துக் கொண்டு விறுவிறுவென்று போனார்கள்.

சிறிது தூரம் சென்றதுமே வல்லபனுக்கு ஏதோ ஒரு நினைவு சுரீர் என்று தோன்றியது.

உடனே அவன் திரும்பி அந்த நான்கு வைணவர்களையும் திடுக்கிட்டுப் பார்த்தான்.

அப்போது மாலை மயங்கிக் கொண்டிருந்த நேரம்.

அந்த நான்கு வைணவர்களும் பரபர என்று நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களது நடையே அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

தத்தனைக் கிள்ளி, "தத்தா இவர்கள் யார்? எங்கேயோ பார்த்தது போல இருக்கிறதே!" என்று கேட்டான் வல்லபன்.

"நானும் அதைத்தான் யோசிக்கிறேன்" என்றான் தத்தன்.

அதற்குள் அவர்களது பின்புறத்தில் சத்தங்கள் எழவே, வைணவ குரு, "வாருங்கள் சீக்கிரம்" என்று சொல்லி ஓட ஆரம்பித்தார்.

அவரைத் தொடர்ந்து எல்லோரும் ஓடத் தொடங்கினார்கள்.

சிறிது தூரம் சென்றதும் எல்லோரும் நின்று பார்க்க பின்னால் எங்கேயோ தொலைவில் குதிரைக் குளம்புகள் வரும் ஓசை சன்னமாகக் கேட்கவே, "ம். .

சீக்கிரம்!" என்று குரு கூறினார். முன்னைவிட அதிக வேகமாக எல்லோரும் ஓடினார்கள்.

சிறிது தூரம் ஓடி சடக்கென்று இடது பக்கம் திரும்பி ஒரு குங்குலியத் தோப்பில் நுழைந்த போது, இருட்டத் தொடங்கியது.

தோப்பின் ஓரத்து இடைவெளியில் நான்கு குதிரைகளை சித்தமாக வைத்துக் கொண்டு இரண்டு பேர் நின்று கொண்டிருந்தார்கள்.

அவைகளின் மீது அந்த வைணவர்கள் பட்பட்டென்று தொத்தி ஏறிக் கொண்டார்கள்.

"ம், நீங்களும் ஏறுங்கள்!" என்றார் குரு அந்த இளைஞர்களை நோக்கி.

நடப்பதெல்லாம் கண்கட்டு வித்தைப் போல் இருக்கிறதே என்று இரு இளைஞர்களும் மறுமொழி இல்லாது ஆளுக்கொரு குதிரை மீது இரண்டாவது ஆளாக தொத்திக் கொண்டார்கள். ஏற்கெனவே அவற்றின் மீது இரு வைணவர்கள் ஏறி இருந்தார்கள்.

குதிரைகள் பறந்து சென்றன. அந்த குருவுக்குக் குறுக்கு வழிகள் எப்படித்தான் தெரியுமோ தெரியவில்லை. வலக்கையும், இடக்கையுமாகத் திரும்பி இடையே பல தோப்புகளுள் குறுக்குலாகப் பாய்ந்து சென்று கொண்டிருந்தார்.

அவர் குதிரையைச் செலுத்திய அநாயாசமும், மற்றவர்கள் தங்கள் குதிரைகளைச் செலுத்திய வேகமும் இளைஞர்களைத் திகைக்க வைத்தன.

இவர்கள் யார்? நமக்கு வேண்டியவர்களா? நம்மை ஆபத்தில் சிக்க வைப்பார்களா? என்ற எண்ணமே அவர்களைத் தொடர்ந்தது.

ஒரு நாழிகைப் பிரயாணம் செய்ததும் சிற்றோடை ஒன்று குறுக்கிட்டது. வறண்ட சிறிய நதி போல் அது மணற்பாங்காக இருந்தது.

சிரமப் பரிகாரம் செய்து கொள்ள அங்கே இறங்கினது தான் தாமதம், விடப்பட்டு போயிருந்த குளம்பொலிகள் திடீரென்று கீழ்த் திசையில் கேட்டன. விறுவிறு என்று அவை பெரிதாகி வந்தன.

இமைக்கும் நேரத்துள் எட்டு குதிரை வீரர்களின் கரி உருவங்கள் அந்த இருளில் தூரத்தில் தெரிந்தன.

வேகமாக அவர்கள் சாடி வந்து கொண்டிருந் தார்கள்.

வைணவர்கள் பரபரத்தார்கள். சுமைகளை விரைவாக அவிழ்த்து அவற்றிலிருந்து வாட்களை எடுத்துக் கொண்டார்கள்.

'ஹோய், ஹோய்' என்ற இரைச்சலுடன் குதிரை வீரர்கள் வேகமாக வந்தார்கள்.

மணற்கரையில் வந்து தொப் தொப்பென்று குதித்தார்கள். வாட்களை உருவிக் கொண்டு வைணவர்களோடு சண்டைக்குப் போனார்கள்.

அந்த இரு திறத்தாருக்கும் மணற்கரையில் ஒரு வாட்போர் நிகழ்ந்தது.

நான்கு வைணவர்களும் எட்டு வீரர்களை எதிர்ப்பது கடினமாக இருந்தது. இருந்தும் கட்டுக் கோப்புடன் அழகாகச் சண்டையிட்டார்கள் அவர்கள்.

இளைஞர்கள் பக்கம் திரும்பி, "அகோ! நீங்களும் கலந்து கொள்ளுங்கள்!" என்று குரு இரைந்தார்.

இளைஞர்கள் தயங்கினாலும் உடன் சண்டை யிடுவது தான் சரி என்று உணர்ந்து, குதித்து எழுந்து

தம் சுமைகளில் மறைத்து வைத்திருந்த வாட்களை உருவி, கோஷம் செய்து கொண்டு மணற்கரைக்கு வந்தார்கள்.

அடுத்த நிமிடத்தில் முதலாவது எதிரி விழவே, அவனை அடுத்து இதர எதிரி வீரர்களும் ஒவ்வொருவராகக் கீழே விழுந்து மடிந்தார்கள்.

கடைசியில் சூறாவளி ஒன்று அமிழ்ந்து விட்டது போல் எங்கும் மீண்டும் அமைதி சூழ்ந்தது.

வைணவர்கள் களைத்துப் போய் ஓடைக் கரைக்குப் போய் நீர் அருந்தினார்கள்.

வல்லபனும், தத்தனும் வாட்களைக் கழுவும் போது ஏராளமான மீன்கள் நிணத்திற்காக வாட்களைக் கொத்த வந்தன.

கரை ஏறியதும் வல்லபன் தத்தனை நோக்கி மெதுவாக, "தத்தா! இந்த வைணவர்கள் யார்? இவர்களுக்காக அநாவசியமாய்ப் போரில் இறங்கினோமே! பல உயிர்கள் பலியாவதற்கு நாம் காரணமாக இருந்தோமே! என் மனம் கேட்க வில்லையே!" என்றான்.

உடன் தத்தனும், "வல்லபா! எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. முன்பு நாம், ஒரு கற்பூர வியாபாரியைப் பார்த்தோமே நினைவு இருக்கிறதோ?" என்று கேட்டான்.

"ஆமாம்!" என்றான் வல்லபன்.

"இந்த வைணவ குரு அவனைப் போலத்தான் இருக்கிறார். மற்றவர்கள் அவன் சகாக்கள். இவன் ஒரு கோர காரியம் செய்துவிட்டுத் தப்பித்துக் கொண்டிருக்கிறான்!" என்றான்.

"என்ன காரியம்?"

"சம்புவராய அரசரின் மகன் மீது வாள் வீசியிருக்கிறான். இவனைத்தான் அரசு வீரர்கள் தேடி வந்திருக்கிறார்கள். இவனும் நாமும் தப்பித்து ஓடிக் கொண்டிருக்கிறோமே!" என்றான்.

"ஐயோ, ஆபத்தாயிற்றே!" என்றான் வல்லபன். இருவரும் உடனே சேர்ந்து ஓடைக்கரைப் பக்கத்தில் தனியாக அமர்ந்து கொண்டிருந்த வைணவ குருவை அணுகினார்கள்.

"ஐயா! நாங்கள் வருகிறோம்! இவ்வளவு தூரம் எங்களை அழைத்து வந்ததற்கு மகிழ்ச்சி அடைகிறோம். விடை கொடுங்கள்!" என்றார்கள்.

குரு அதற்கு மறுமொழி பேசவில்லை. ஏதோ கை காட்டிவிட்டு, மும்முரமாக ஒரு காரியத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் ஏதோ ஒரு விதச் சடங்கு செய்வது போல் தெரிந்தது.

கடைசியில் அவர் நீரை வாரி இறைத்து விட்டுக் கரையேறி மெள்ள அவர்களை நோக்கினார்.

"பிள்ளைகளே! எங்களை விட்டுப் பிரிவதற்காகவா உங்களை அழைத்து வந்தோம்?" என்று மெதுவாகக் கேட்டார்.

இளைஞர்கள் திடுக்கிட்டார்கள்.

"ஏன் சுவாமி! வேறு எதற்காக அழைத்து வந்தீர்கள்?" என்று கேட்டான் வல்லபன்.

"ஏன் தம்பி உனது லட்சியம் நிறைவேற வேண்டாமா?" என்று கேட்டார் குரு.

"எங்கள் லட்சியமா? அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றான் வல்லபன்.

"நீங்கள் தாடி மீசை வைத்துக் கொண்டதாலே

உங்களை எனக்குத் தெரியாமல் போய்விடுமா?" என்றார் குரு.

இளைஞர்கள் மீண்டும் திடுக்கிட்டார்கள்.

உடன் தத்தன் அவரை நோக்கி குறும்பாக "எங்களுக்கும் நீங்கள் யார் என்று தெரியும். மொட்டை அடித்து விட்டால் எங்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டான்.

பலமாகச் சிரித்தார் குரு.

"தெரிந்தால் அது என் வேலையைச் சுலபமாக்கி விடுமே. என்னை யார் என்று நினைத்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்!" என்றார் குரு.

"அந்த ஆஷாடபூதி கற்பூர வியாபாரிதானே!" என்றான் தத்தன் தைரியமாக.

குரு உரக்கச் சிரித்தார்.

"ஆஷாடபூதி! நன்றாக சொன்னாய்! வேடம் போடுவது எனக்கு மற்றொரு தொழில்! அதை நான் மாற்ற முடியுமா? இந்த வேடம் போட்டதால்தானே உங்களை நான் காஞ்சிபுரத்திலிருந்து தப்பிக்கும்படி செய்ய முடிந்தது. நான் இதைச் செய்திராவிட்டால் உங்கள் கதி என்னவாகியிருக்கும்? நீங்கள் தப்பித்திருக்கவே முடியாது. உங்கள் அரங்கன் மீது ஆணை!" என்றார் குரு.

வல்லபன் வெகுண்டான்.

"ஐயா வியாபாரியே! உமக்கிருக்கும் சாமர்த்தியம் எமக்கிருக்காது என்று எண்ண வேண்டாம். நீங்கள் உதவி செய்திராவிட்டால் கூட எங்களால் தப்பித்திருக்க முடியும். அது மட்டுமல்ல! நீங்கள் எங்களைத் தப்பிக்க வைத்தது வீண் போகவில்லை. அதற்கு பிரதியாக உங்களையும், நாங்கள் இங்கே

காப்பாற்றி விட்டோமே! எங்களைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள்!" என்றான் வல்லபன்.

"பிள்ளைகளே! உங்களை நான் சாதாரணமாக நினைக்கவில்லையே! நினைத்திருந்தால் உங்களை வாள் ஏந்தச் சொல்லியிருப்பேனா? சண்டையிலே புகச் சொல்லியிருப்பேனா? கேளும் பிள்ளைகளே! உங்கள் உதவி என்றென்றும் எம் பக்கம் இருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் உங்களை காஞ்சிபுரத்தில் கண்டு பிடித்ததும் தப்பிக்க வைத்தேன். இதை நினைவில் வையுங்கள்!" என்றார் குரு வேடம் தரித்திருந்த கற்பூர வியாபாரி.

"ஓகோ! உங்கள் கூட்டாளிகளாக எங்களைச் சேர்க்கப் பார்க்கிறீர்களா? அதற்கு நாங்கள் ஒருபோதும் சம்மதியோம்! எங்களுக்கு லட்சியங்கள் வேறு! எங்கள் வழியே போகிறோம்!" என்று கூறினான் வல்லபன்.

பிறகு இளைஞர்கள் மணல் மேட்டில் கிடந்த சுமைகளை விருட்டென்று தூக்கி முதுகில் போட்டுக் கொண்டு புறப்பட்டார்கள்.

"பிள்ளைகளே!" என்று உரத்து கூவினார் கற்பூர வியாபாரி.

அவர்கள் திரும்பினார்கள். வியாபாரி கால்களை எட்ட நடந்து அவர்களை அணுகி, "பொறுங்கள் பிள்ளைகளே! உங்கள் லட்சியம் என்று இப்போது என்னவோ சொன்னீர்களே! அது நிறைவேற வேண்டாமா?" என்று கேட்டார் நயத்துடன்.

"எங்கள் லட்சியமா?" என்றான் வல்லபன் அலட்சியமாக. "அது தர்ம ரீதியானது. உங்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை!" என்றான் தாட்சண்யம் இன்றி.

"வல்லபா!" என்றார் வியாபாரி முதல் முறை அவனைப் பெயர் சொல்லி அழைத்துக் கொண்டே, "உன் லட்சியத்தை ஏன் நாங்கள் எங்கள் லட்சியமாக எடுத்து கொள்ளக் கூடாது?" என்று கேட்டார் ஆர்வத்துடன்.

"ஹூம்!" என்று அலட்சிய மூச்செறிந்தான் வல்லபன். பிறகு, "எங்கள் லட்சியமெல்லாம் நிறைவே றிவிட்டது. அதை முடித்து விட்டுத் தான் ஊர் திரும்புகிறோம்!" என்றான் உதாசீனத்துடன்.

"எங்கே நிறைவேறியது? உன் லட்சியத்தில் பாதி தானே நிறைவேறியிருக்கிறது. அரங்கன் உனக்குக் கிடைத்து விட்டார் அவ்வளவுதான்! அவர் இன்னும் அரங்கம் போய்ச் சேரவில்லையே!" என்றார் வியாபாரி.

வல்லபன் திடுக்கிட்டான்.

இந்த மனிதனுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறதே? அரங்கனைக் கண்டோம் என்பது கூட இவனுக்கு எப்படித் தெரியும்? இவனுக்கு இதை எல்லாம் யார் சொல்லியிருப்பார்கள்? யமகாதகனாக இருக்கிறானே? என்று நினைத்தான் வல்லபன்.

அவன் விழிப்பதைக் கண்டதும் கற்பூர வியாபாரி மேலும் தொடர்ந்தார்.

"பிள்ளைகளே! அரங்கனைத் திருவரங்கத்திற்கு எடுத்துச் செல்வதில் உங்களோடு நான் கூட்டுச் சேருகிறேன். அதற்கு பிரதியாக நீங்கள் என் விஷயத்திலும் அவசியம் கூட்டுச் சேர வேண்டும்" என்று கூறினார்.

வல்லபனும், தத்தனும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள்.

தத்தன் உடனே, "ஐயா! ஆஷாடபூதியே! நீங்கள் யார்? அதை முதலில் தெரிவியுங்கள். கற்பூர வியாபாரி என்கிறீர்கள் இங்கே கத்தியையும், வாளையும் பிடிக்கிறீர்கள்! ஆட்களோடு சண்டை போடுகிறீர்கள்! வெறும் வேடிக்கைச் சண்டையல்ல! முறைப்படியாக வீசி வீரனைப் போல் சண்டை இடுகிறீர்கள். தந்திரங்கள் பல புரிகிறீர்கள். இரக்கமில்லாமல் ஆட்களைக் கொல்கிறீர்கள்! சொல்லுங்கள், நீங்கள் யார்?" என்று கேட்டான்.

வியாபாரி மீண்டும் பலக்கச் சிரித்தான்.

"ஏன், பிள்ளைகளே, ஒரு வியாபாரி வாள் பிடிக்கக் கூடாதா? சண்டை செய்யக் கூடாதா?" என்று கேட்டார் நகைப்புக் குரலில்.

"செய்யலாம். ஆனால் ஒரு வியாபாரியிடம் இரக்கம் இருக்கும். உங்களைப் போல் இரக்கம் இல்லாமல் இராது!" என்றான் வல்லபன்.

"ஏன் என்னிடம் கூட இரக்கந்தான். சற்றுமுன் ஓடைத் தண்ணீரில் சில சடங்குகள் செய்தேனே! அவை என்ன?" என்று கேட்டார் வியாபாரி.

"எங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் தான் சொல்லுங்களேன்!" என்றான் தத்தன் இளக்காரமாக.

"தம்பி! என்னை எப்போதும் தாழ்வாக நினையாதே. நான் சத்திரத்தில் ஒரு நாள் உங்கள் உயிர்களைக் காப்பாற்றியவன். நான் சொல்வதைச் செவி சாற்றிக் கொள்ள வேண்டும்!" என்றார் வியாபாரி.

"சரி சொல்லுங்கள்!" என்றான் வல்லபன்.

"நான் ஓடைக் கரையில் செய்தது தர்ப்பணம் அப்பா!" என்றார் வியாபாரி.

"என்ன?" என்று திடுக்கிட்டுக் கேட்டார்கள் இளைஞர்கள்.

"இப்போது இங்கே நாம் கொன்றோமே அந்த எட்டு ஆத்மாக்களும் கரை ஏறுவதற்காகத்தான் தர்ப்பணம் செய்தேன். பாவம்! அப்பாவிகள்! ஒரு ராஜ காரியத்தைச் செய்வதற்காக நமது பின்னால் ஓடி வந்தார்கள். நாம் கொடுத்தது பொய் லச்சினை என்று தெரிந்தவுடன் இவர்களை யாரோ ஏவி விட்டிருக்கிறார்கள். இவர்கள் நம்மைத் தொடர்ந்து ஓடி வந்து நம் வாட்களுக்குப் பலியாகி விட்டார்கள். எங்கள் வாளால் இறக்கும் எந்த உயிருக்கும் தர்ப்பணம் உடனே செய்வது எங்கள் குல மரபு! ஆகையால்தான் இதைச் செய்தேன்!" என்றார் வியாபாரி.

அந்த வியாபாரி பேசிக் கொண்டு போன நயமும், சாதுர்யமும் இளைஞர்களைக் கவர்ந்தன. இந்த ஆள் யார்? என்னவெல்லாம் பேசுகிறானே!

வல்லபன் உடனே அவரைப் பார்த்து, "ஐயா! நீங்கள் பேசுவதைப் பார்த்தால் நீங்கள் ஒரு வியாபாரிதானா என்று சந்தேகம் வருகிறது. நீங்கள் யார்? உண்மையில் வியாபாரிதானா? அதை முதலில் கூறுங்கள்!" என்று கேட்டான்.

வியாபாரி சிரித்தார்.

"நல்லது தம்பி! நீ கேட்டது சரிதான்! நான் அந்த அளவுக்கு சந்தேகத்தை உன் மனதில் வளர்த்து வைத்து விட்டேன். தம்பி! நான் யார் என்று சொல்கிறேன். இந்த விஜயநகர மண்டலத்தின் தென்பிரதேசத்திலுள்ள பிரதான ஒற்றன் நான். இங்கே வந்திருப்பவர்கள் என் சகாக்கள். நாங்கள் வியாபாரம் செய்து எல்லாம் ஒற்று அறிவதற்குத்தான்!" என்றார் வியாபாரி.

இளைஞர்கள் அதிசயத்து நின்றார்கள்.

"ஆமாம்! தம்பி! இதை நம்புங்கள்! நான் விஜயநகர மண்டலத்து ஒற்றன்!" என்றார் வியாபாரி மீண்டும்.

"தங்கள் பெயர் என்ன?" என்றான் வல்லபன்.

"பெயர் எதற்கு தம்பி? கற்பூர வியாபாரி என்று சொன்னாலே போதும். என்னைக் கற்பூரகாந்தன் என்றே பலரும் அழைப்பார்கள்!" என்றார் வியாபாரி சிரித்துக் கொண்டே.

இரு இளைஞர்களும் அதிசயத்திலிருந்து மீளவில்லை. யோசனையிலேயே மூழ்கி இருந்தார்கள்.

2

வியாபாரியின் பேச்சுத் தொடர்ந்து கொண்டிருந்த போதே, அவரது சகாக்கள் அந்த எட்டு வீரர்களின் உடல்களையும், குழி தோண்டிப் புதைத்து வைத்தார்கள். அவர்களது குதிரைகளைப் பிடித்து மேட்டில் ஏற்றி வடதிசையாய் அடர்ந்த காட்டுக்குள் விரட்டி விட்டார்கள்.

எங்கும் கும்மிருட்டுக் கவியத் தொடங்கி இருந்தது.

இளைஞர்கள் இன்னும் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

வியாபாரியும், அவரது சகாக்களும் தங்கள் குதிரைகளில் ஏறிக் கொண்டு, அந்த இளைஞர்கள் பக்கம் வந்தார்கள்.

வியாபாரி அந்த இளைஞர்களைப் பார்த்து, "ஏறிக் கொள்ளுங்கள் தம்பி!" என்றார்.

வல்லபன் அவர்களை ஆழ்ந்து பார்த்தான்.

பிறகு தலையைக் குனிந்து கொண்டே, "இல்லை ஐயா, நாங்கள் வரவில்லை!" என்றான்.

வியாபாரி சிரித்தார் மீண்டும்.

"தம்பி இவ்வளவு சொல்லியும் அவநம்பிக்கையா? ஒரு விஷயம் கேள் தம்பி. நீ இந்த ராஜ்யத்தைத் தாண்டுகிற வரை உங்களுக்கு எப்படியும் ஆபத்து உண்டு. எங்களுடன் சேர்ந்து சென்றால் அதை நிச்சயமாய்த் தவிர்க்கலாம். அதற்காகவாவது எம்முடன் வாருங்கள்!" என்று கூறினார் அவர்.

வல்லபன் யோசனை செய்திருக்கும்போது, தத்தன் இடைமறித்து, "சரி உங்களுடன் வருகிறோம்!" என்றான் தீர்மானமுடன்.

ஆச்சரியத்துடன் வல்லபன் அவனைப் பார்த்தான்.

"கவலை வேண்டாம்!" என்பது போல் தத்தன் கண்ணைக் காட்டினான்.

பிறகு இருவரும் வைணவர்கள் ஏறியிருந்த குதிரைகள் மீது தொத்திக் கொண்டார்கள்.

அவ்வளவில் குதிரைகள் இருட்டுக்குள் சிட்டாய்ப் பறந்தன.

இரவாகி வெகு நேரம் ஆனபடியால், எங்கும் ஒரு மினுமினுப்புக் கூடி, பார்க்கும் இடமெல்லாம் சொப்பனம் போல் தெரிந்தது.

இடையில் உள்ள சத்திரங்களைத் தவிர்த்து, சுற்று வழியாய் ஒரு யாமம் பிரயாணம் செய்ததும், குதிரைகள் எல்லாம் நுரை தள்ளி விட்டன.

உடன் ஒரு வெட்டவெளியில் அமர்ந்து தங்கள் உணவுகளைக் கூட்டாக அருந்தி, குதிரைகளையும் மணல் மீது அலுப்புத் தீரப் புரள விட்டார்கள்.

எல்லோரும் சிரமப் பரிகாரம் செய்து கொண்ட பிறகு மீண்டும் பிரயாணத்தைத் தொடங்கினார்கள்.

அடுத்து நான்கு நாழிகைகள் அவர்கள் பிரயாணம் செய்ததும் விடியாமக் கோழியின் முதல் கூவல் தூரத்திலிருந்து கேட்டது.

அப்படியும் அந்தக் குரு தம் குதிரையைச் செலுத்திப் போவதைப் பார்த்து வல்லபன் ஆச்சரியம் அடைந்தான். களைப்பில்லாதவர் போல் அவர் போய்க் கொண்டிருந்தார். எவ்வளவு தூரம் இன்னும் போவாரோ என்று நினைக்கும் வேளையில் ஒரு இடத்தில் சடக்கெனக் குதிரையை நிறுத்தினார்.

எல்லோரும் நின்றார்கள்.

கற்பூர வியாபாரிக்கு அந்த இடமெல்லாம் கரதல பாடமாய் தெரிந்திருந்தது. எல்லோரையும் அழைத்துக் கொண்டு அங்குள்ள தோப்புக்குள் சென்றார். அதன் அருகாமையில் சலசலத்த ஓடையில் நீர் அருந்தி களைப்போடு ஒரு மேட்டு வெளியிலே அமர்ந்தார்.

அப்பால் அந்த ஒற்றர் தலைவன் இரு இளைஞர்களை சற்று தூரம் இட்டுச் சென்று,

"தம்பிகளே! உங்களைப் பிரியும் நேரம் வந்துவிட்டது. அதற்கு முன் ஒரு வார்த்தை! அதோ பாருங்கள்!" என்றார்.

பார்த்த இடத்தில் சிறு மலையும், மலைக்கு

மேலே கோட்டையும், கோட்டைக்கு மேலே மாட மாளிகை ஒன்றும் தென்பட்டது.

"என்ன தெரிகிறது?" என்றார் கற்பூர வியாபாரி.

"மாளிகை, ஐயா!" என்றான் வல்லபன்.

"கோட்டை எப்படித் தெரிகிறது?"

"அழகிய நிழற் சித்திரமாய்த் தெரிகிறது!"

"எனக்கு அப்படித் தெரியவில்லை. அந்த அரண் மேல் உள்ள பரிகங்களைப் பார்! அதைப் பார்த்தால் ஆகாயத்தை நோக்கி வாயைத் திறந்து தனது பற்களை எல்லாம் காட்டிக் கொண்டிருக்கும் ஒரு அரக்கன் போல் தெரிகிறது!"

வல்லபன் உற்றுப் பார்த்தான்.

"தாங்கள் சொல்வது போலவும் இப்போது தெரிகிறது!"

"நன்றாகச் சொன்னாய் வல்லபா! அவரவர் நோக்கம் போல காட்சி தெரியும். குழந்தைக்கு அதன் பொம்மைதான் யானை! ஆனால் தச்சருக்கு அது வெறும் மரம்!"

"தாங்கள் சொல்லுவது உண்மைதான் ஐயா! நான் குழந்தைதான்!" என்றான் வல்லபன்.

கற்பூர வியாபாரி மெள்ள நகைத்தார்.

"நல்லது குழந்தையைப் பெரியவனாக்கி விடலாம் அல்லவா? அதற்காகத்தான் உன்னை இப்போது அழைத்தேன். நீ குழந்தை அல்ல என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். கேள் வல்லபா! அந்தக் கோட்டையை அரக்கன் என்று சொன்னேன்! உண்மையில் அது அரக்கத்தனம் நிறைந்த கோட்டை!"

"ஏன்? அந்தக் கோட்டையில் யார் இருக்கிறார் கள்?" என்றான் வல்லபன்.

"சொன்னால் ஆச்சரியப்படுவாய்!"

"சொல்லுங்கள்!"

"அங்கே ஒரு உயிரைச் சிறைப் பிடித்து வைத்திருக்கிறார்கள்!"

"யாருடைய உயிர் அது? சிறைப்படுத்தியவர் யார்? இது யாருடைய கோட்டை? யாருடைய ராஜ்யம் இது?" என்று சரமாரியாகக் கேட்டான் வல்லபன்.

"வல்லபா!" என்று துவங்கினார் வியாபாரி. "நாம் இருப்பது ராஜகம்பீர ராஜ்யம். தொண்டை மண்டலம் என்று பழம் நாளிலிருந்து சொல்வார்கள். இதை இப்போது சம்புவராயர்கள் ஆள்கிறார்கள். இதன் அரசர் ராஜநாராயண சம்புவராயர்! அவருக்கு ராஜகம்பீரன் என்றொரு பட்டம் உண்டு. அதனாலேயே இந்த ராஜ்யத்தை ராஜகம்பீரம் என்று அழைப்பார்கள். அதோ அந்த மலை தெரிகிறதே, அதுதான் ராஜகம்பீரமலை! படைவீடு என்பது இதனது பழைய பெயர். உண்மையில் இதைப் படை வீடாகவே உபயோகப்படுத்துகிறார்கள் சம்புவராயர் கள். யார் படை எடுத்து வந்தாலும், இந்தப் படை வீட்டுக்குள் அவர்கள் புகுந்து விடுவார்கள். இவர்களை மற்றவர்கள் துரத்திப் போவது கடினம்! கோட்டைகளிலே மலைக்கோட்டையை வெல்வது கடினம். ஆகவே இந்த ராஜகம்பீர மலை இவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஆனால் இப்போது வல்லபா, இந்த மலையை இவர்கள் பல அநியாய காரியங்களுக்காக உபயோகிக்கிறார்கள்!"

"என்ன செய்கிறார்கள், ஐயா?" என்றான் வல்லபன்.

"இதில் ஒருவரைச் சிறை வைத்திருக்கிறார்கள், அநியாயமாக!"

"யாரை என்று கேட்டேனே?" என்றான் வல்லபன்.

"உனக்குத் தெரிந்த ஒருவர்தான்!" என்றார் வியாபாரி.

வல்லபன் திடுக்கிட்டான்.

"எனக்குத் தெரிந்தவரா? யார் அது?" என்று பரபரப்புடன் கேட்டான்.

"ஒரு பெண்!"

"பெண்ணா?"

"ஆமாம்!"

"யார் அவள்? எனக்கு எப்படித் தெரிந்தவள்?"

வியாபாரி அவனை ஆழ்ந்து பார்த்தார்.

"நீ கூட அவளைக் காப்பாற்ற நினைத்தாய்!"

வல்லபன் பரபரத்தான்.

"யார் அது ஐயா? சொல்லுங்கள்! புதிர் போடாதீர்கள்!"

"வல்லபா! மகர கண்டிகை கொடுத்தாளே அந்தப் பெண்!"

"யார்?" என்றான் வல்லபன் திடுக்கிட்டு.

"உன்னைச் சத்திரத்தில் பார்த்தாளே அந்தப் பெண்!"

வல்லபன் மீண்டும் திடுக்கிட்டான்.

அவனது இதயத்தில் "மகரவிழியாளே!" என்ற ஒரு அழைப்பு கின்னர கீதமாய் ஒலித்தது.

"அவளா?" என்றான் பாதியான குரலில். "அவளை ஏன் அங்கே வைத்திருக்கிறார்கள் ஐயா?"

"அவள் ஒரு ராஜகுமாரி!"

அந்த வார்த்தைகள் விழுந்ததுதான் தாமதம், வல்லபனின் மனப் பூப்பூவாய் மலர்ந்தது.

எங்கிருந்தோ மகிழம்பூவின் வாசம் வந்து அவனைத் தழுவியது.

அந்த சுகிர்தமான அனுபவத்தில் அவன் உடல் பரவசமாகித் தத்தளித்தது.

என்ன ஒற்றுமை? அவன் நினைத்ததற்கும் அவள் ராஜகுமாரியாக இருப்பதற்கும்!

வியாபாரி தன் வார்த்தையை நிறுத்திவிட்டு, அவனைக் கவனிப்பதை பார்த்ததும், பரபரத்து, "எந்த தேசத்து ராஜகுமாரி ஐயா?" என்று குழறியவாறு கேட்டான் அவன்.

"அவளா? பாண்டியத்தின் ராஜகுமாரி!"

"பாண்டியர்களா?"

"ஆமாம் வல்லபா! மதுரை மண்டலத்தில் கடைசியாக ஆட்சி புரிந்தாரே மன்னர் சடையவர்ம பராக்கிரம பாண்டியர். அவரது பேத்தி இவள். மதுராங்கினி என்று பெயர்!"

அந்தப் பெயர் காதில் விழுந்ததும் மீண்டும் மனமெல்லாம் குளுமையாகியது. அவனது மகரவிழியாள் மதுரமான நயனங்களோடு அவனைக் குளிர வைப்பது போல் இருந்தது. அவள் பெயரே மதுரமாக வழிகிறதே என்று நினைத்தான்.

"ஐயா!" என்றான் வல்லபன். "தாங்கள் சொல்வதெல்லாம் ஆச்சரியமாய் இருக்கிறதே! உங்களுக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?" என்று கேட்டான்.

சிரித்தார் வியாபாரி. "வல்லபா! இதைக் கூடத் தெரிந்துக் கொள்ளாவிட்டால் நான் ஒற்றர் தலைவனாக எப்படி இருக்க முடியும்? ஒரே ஒரு தவறு! பாண்டியர் பூமியில் இப்படி ஒரு சதி நடக்கிறது என்பது எனக்குத் தெரியாமல் போய்விட்டது!"

"என்ன சதி ஐயா?" என்றான் வல்லபன்.

"சம்புவராயர்கள் அந்தச் சதியைச் செய்திருக்கிறார்கள். பாண்டிய வம்சத்தாரில் சிலர் அதற்கு உடந்தையாக இருக்கிறார்கள்!"

"என்ன செய்தார்கள் என்று சொல்லுங்கள்!" என்று ஆவலுடன் கேட்டான் வல்லபன்.

"வல்லபா! ஒரு இரணம் என்றால் அதன் ஆணிவேரைத் தேடிச் செல்வார்கள் வைத்தியர்கள். அந்தச் சதியின் மூலக் கதையைச் சொன்னால்தான் உனக்குப் புரியும் வல்லபா. தமிழ் பேசும் பூமியில் ராஜ்யங்கள் இருக்கும் நிலையைக் கவனி. தெற்குக் கோடியின் சிறிய பகுதியில் பலவீனமான பாண்டியர்கள். வடக்குக் கோடியில் சம்புவராயர்கள். நடுவில் உள்ள பெரும் பகுதியில் சுல்தானியர்கள். இதில் சம்புவராயர்கள் பாண்டியர்களைத் தங்களோடு சேர்த்துக் கொண்டால் இடையில் உள்ள சுல்தானியர்களை ஏதாவது செய்து விடலாம் என்று நினைத்தால். . . . "

"அப்படிச் செய்ய முடியுமா?"

"செய்ய முடியாதுதான்! சுல்தானியர்கள் மிகப் பலம் பொருந்தியவர்கள். அவர்களை இந்தச் சம்புவராயர்கள் எளிதில் தோற்கடித்துவிட முடியாது."

"சுல்தானியர்களுக்கு அடிமைகள்தானே இந்தச் சம்புவராயர்கள். தங்கள் எஜமானர்களையே இவர்கள் எதிர்க்கத் துணிவார்களா?" என்றான் வல்லபன்.

"துணியலாம். இப்போது இருக்கும் ராஜரீக முறையில் தர்மம் என்ற பேச்சிற்கே இடமில்லை. சம்புவராயர்கள் சோழர் காலத்திலிருந்து குறுநில மன்னர்கள் தான்! இருந்தும், சோழ அரசன் பலவீனமானால், இவர்கள் உடனே தங்கள் அதிகார சுதந்திரத்தை நிலைநாட்டி விடுவார்கள். ஆகவே சம்புவராயர்களை நம்பிவிட முடியாது. அதுவும் இப்போது அவர்களுக்குப் புது ஆசைகளும் புதுப் பயங்களும் தோன்றியிருக்கின்றன!"

"அவை என்ன ஐயா?"

"முதலில் பயங்களைச் சொல்கிறேன். அது எங்கள் விஜயநகர மண்டலம் பெரிதாக வியாபித்துக் கொண்டே வருவது தான். இப்போது எங்கள் மண்டலம் தெற்கில் சந்திரகிரி வரை வந்து இவர்களது எல்லையைத் தொட்டுக் கொண்டு நிற்கிறது. இதனால்தான் இவர்களது பயங்கள்!"

"புரிகிறது ஐயா!"

"நாங்கள் இப்படியே வியாபித்துக் கொண்டு, மெள்ள மெள்ள தெற்கு நாடுகள் எல்லாவற்றையும் கபளீகரம் செய்து விடுவோமோ என்று அஞ்சுகிறார்கள்."

"அதையும் புரிந்து கொள்கிறேன்."

"அப்படி ஏதாவது நாங்கள் செய்வதற்கு முன், இவர்களே தெற்கு நாடுகள் எல்லாவற்றையும் ஜெயித்து விட்டு பெரியதொரு சாம்ராஜ்யத்தை ஏற்படுத்த விரும்புகிறார்கள்!"

"அது முடியுமா?"

"முடியுமோ, முடியாதோ அது அவர்கள் ஆசை! ஆகவே மதுரை சுல்தானை ஒழிக்கும் எண்ணத்துடன் நாங்கள் ரகசியமாக சம்புவராயர்களின் உதவியைக் கோரும் போதெல்லாம் அவர்கள் எங்களுக்கு எந்தவித பிடியும் கொடுக்காமலே இருந்து வந்திருக்கிறார்கள். இது நமது தர்மத்திற்கும் வாழ்க்கைக்கும் அவர்கள் செய்யும் துரோகம்! அநியாயத் துரோகம்!" என்று வெகு அழுத்தமாக உறைத்துப் பேசினார் வியாபாரி.

வியாபாரி கடைசியாகச் சொன்னது வல்லபனைச் 'சுள்' என்று உரைத்து விட்டது.

ஒரு கணம் நிமிர்ந்து அமர்ந்தான் அவன்.

"ஐயா! என்ன சொன்னீர்கள்? சுல்தானியர்களை ஒழிப்பதற்கு நீங்கள் இந்தச் சம்புவராயர்களின் உதவியை நாடினீர்களா? அவர்கள் உங்களுக்கு அதைத் தர மறுத்தார்களா?" என்று படபடப்போடு கேட்டான் வல்லபன்.

"ஆமாம் தம்பீ! நாங்கள் கேட்டோம். அவர்கள் தர மறுத்தார்கள். இது நியாயமா?" என்று குரலை உயர்த்திக் கேட்டார் வியாபாரி.

"அநியாயம், அநியாயம்!" என்று வெகுண்டு இரைந்தான் வல்லபன். அந்த விடியாமத்து வேளையின் நிசப்தத்தில் அது எங்கும் ரீங்கரித்தது.

"ஐயா! நமது ஜனங்கள் சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாய் அந்நிய ஆட்சியில் நலிந்து விட்டார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் கொடுமைகளுக்கு அஞ்சி அண்டை ராஜ்யங்களில், புகலிடங்களில் சரண் புகுந்து விட்டார்கள். நமது கோவில்கள் எல்லாம் பாழடைந்து விட்டன. ஒரு

விழா ஒரு உற்சவம் ஒரு பண்டிகை ஒரு நல்ல நாள் எதையும் கொண்டாடாமல் இந்தத் தமிழ் பேசும் நாடுகள் எல்லாம் கைம்மை அடைந்தது போல் கிடக்கின்றன. மக்கள் எங்கும் பரிதவிக்கிறார்கள். அல்லாடுகிறார்கள். இவற்றுக்கெல்லாம் காரணமாக இருக்கும் ஒரு பொதுவான எதிரியை ஒழித்துவிடாமல் இந்தச் சம்புவராயர்கள் வெறும் சுயநலக்காரர்களாக இருக்கிறார்களே! இது நம் சமூகங்களுக்கே செய்யும் பெரும் துரோகம்!" என்று உணர்ச்சி பொங்க இரைந்தான் வல்லபன்.

அவன் அப்படிப் பேசுவதைப் பார்க்கப் பார்க்கக் கற்பூர வியாபாரிக்கு மகிழ்ச்சி பொங்கியது.

அவன் உணர்ச்சிகள் மெள்ள அடங்கும் போது, "தம்பீ!" என்றார் அவர். "இந்த நிலையில் இந்தச் சம்புவராயர்கள் மற்றொரு துரோகத்தையும் செய்ய முன் வந்திருக்கிறார்கள்!"

"என்ன அது ஐயா?"

"தெற்கு ஓரம் பாண்டியர்களைத் தங்களோடு இணைத்துக் கொள்ள முன் வந்திருக்கிறார்கள்!"

"ஏன் அது ஐயா?" என்றான் வல்லபன்.

"தங்களுக்குத் துணைகளைச் சேர்த்து எங்களைப் பயமுறுத்துவதற்காகவோ அல்லது சுல்தானியர்களை விரட்டித் தாங்களே தமிழ் பூமி முழுவதையும் கைப்பற்றுவதற்காகவோ. இதில் இரண்டாவது காரணம் நிறைவேறினால் நாங்கள் மிகவும் சந்தோஷப் படுவோம்!" என்றார் அவர்.

"அது நிறைவேறுமா?" என்றான் வல்லபன்.

"நிச்சயம் நிறைவேறாது. இவர்கள் பலமில்லாத வர்கள். சுல்தானியர்களை விரட்டி விட முடியாது.

இருந்தும் இந்தச் சம்புவராயர்கள் ஒரு சதியில் முனைந்தும் விட்டார்கள். அதுவும் கேவலமான ஒரு சதி!" என்றார் கற்பூரத்தார்.

"அதைச் சொல்லவில்லையே, ஐயா!" என்றான் வல்லபன்.

"சொல்கிறேன். பாண்டியத்திலிருந்து அரசகுமாரி மதுராங்கினியைக் கடத்தி வந்திருக்கிறார்கள். இவளைத் தங்கள் அரச குமாரனுடன் *ராட்சஸ விவாகம் செய்வித்து பாண்டியர்களைத் தங்களுக்கு பக்கபலமாக ஆக்கிக் கொள்ள முனைந்து இருக்கிறார்கள். இது மிகவும் கேவலமான காரியம் அல்லவா?" என்றார் கற்பூரத்தார்.

வல்லபனின் நினைவுகளைப் பக்கென்று ஏதோ கவ்வியது.

அவன் கண்களும் அப்படியே ஸ்தம்பித்து நின்றன.

அவன் உணர்வுகளை ஊசலாடவிடுவது போல் கற்பூரத்தார், சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

பிறகு, "அந்தப் பாண்டிய அரசகுமாரி மதுராங்கினி தான் அதோ அந்த ராஜகம்பீரக் கோட்டையில் ஒரு மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். அங்கேதான் நீ இன்னும் சில நாழிகைக்குள் போகப் போகிறாய்!" என்று சொல்லி அவனை உற்றுப் பார்த்தார் கற்பூர வியாபாரி.

* ராட்சஸ விவாகம் - பலாத்காரத் திருமணம்

3

இன்னும் சில நாழிகைக்குள் கோட்டைக்குள் இருக்கப் போகிறாய், மதுராங்கினியைப் பார்க்கப் போகிறாய் என்று கற்பூர வியாபாரி சொன்ன போது வல்லபன் அதிசயித்தான்.

'இந்த வியாபாரி ஏன் இப்படிச் சொல்கிறார்? மேலும் சிக்கலில் நம்மைச் சிக்க வைத்து விடுவாரோ, அல்லது இவருக்கு வேறு ஏதாவது நோக்கங்கள் இருக்குமோ? இவர் சொல்வதெல்லாம் உண்மை தானோ?' என்று பலவாறாக சிந்தித்தான்.

அம்மா வாசந்திகா ஓலை நறுக்கில் எழுதிய நறுக்கான வாக்கியங்கள் கண்களில் விழுந்தன.

விழியில் பிறழாதே!

வழியில் பிறழாதே!

மொழியில் பிறழாதே!

தொடர்ந்து தாயாரின் கலங்கிய கண்களும் தெரிந்தன. 'வல்லபா! நீ எங்கு இருக்கிறாய்? எங்கு இருக்கிறாய்?' என்று அவள் புலம்புவது போல் இருந்தது.

மனத்தில் தாபம் எழுந்து விட அவன் அந்த வியாபாரியைப் பார்த்து, "ஐயா! நாங்கள் ஒரு காரியத்திற்காக வந்தோம். அது முடிந்துவிட்டது. புறப்படுகிறோம். இனிமேல் இங்கே தாமதிப்பதற்கு வழி இல்லை!" என்றான்.

வியாபாரியின் மறுபேச்சுக்குக் காத்திராமல், "தத்தா! உம், புறப்படு!" என்று சொல்ல இருவரும்

சுமைகளைத் தூக்கி தோள் மீது வைத்துக் கொண்டார்கள்.

அந்த வியாபாரி கண நேரமே சிந்தித்து உடனே ஓடிப் போய் அவர்கள் முன்னால் குறுக்காக விழுந்து.

"தம்பிகளே! உங்கள் அரங்கன் மீது ஆணை! என்னைத் தாண்டி நீங்கள் போகக் கூடாது!" என்றான்.

இளைஞர்கள் வெலவெலத்து நிற்க, வியாபாரி மிகுந்த தாபத்துடன் அவர்களை நோக்கி, "தம்பிகளே! இதென்ன இத்தனை நாழிகை இராமாயணம் கேட்டீர்கள்! பிறகு உங்கள் வழியே போகிறீர்கள்! இதற்காகவா இவ்வளவு பேசினேன்?" என்று கேட்டார்.

அதற்கு வல்லபன், "ஐயா! நீங்கள் ஆயிரம் பேசுவீர்கள். அதற்காக நாங்கள் இங்கேயே தங்கிவிட முடியுமா?" என்று ஆத்திரமாகக் கேட்டான்.

"தம்பி!" என்றார் வியாபாரி. "நான் ஒன்று கேட்கிறேன். மறுமொழி சொல்! உங்கள் அரங்கன் திருவரங்கத்திற்கு போக வேண்டுமா, வேண்டாமா?" என்று கேட்டார்.

"அவசியம் போக வேண்டும்!"

"அப்படியானால் இந்தக் காரியத்தில் இறங்க வேண்டும்."

வல்லபன் சிரித்தான். "நன்றாகச் சொன்னீர் ஐயா. வியாபாரியே எதற்கும் எதற்குமோ சம்பந்தமில்லாமல் தொடர்பு காட்டுகிறீர்களே!" என்று கூறிக் கடகடவென்று சிரித்தான்.

"இல்லை தம்பி! நான் சொல்வது முற்றிலும் உண்மை கேள்! கவனத்தோடு கேள்! உங்கள் அரங்கனை திருவரங்கத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிறேன் என்று கோபணா வாக்கு அளித்திருக்கிறார் அல்லவா?" என்று கேட்டார் வியாபாரி.

"ஆமாம்! உண்மைதான்!"

"அதைச் செய்ய வேண்டுமானால் முதலில் அவர் மதுரையை ஜெயிக்க வேண்டும்!"

"ஆமாம் அது உண்மை!"

"அந்த மதுரையை ஜெயிப்பதற்குச் சாதாரண குறுநில மன்னரின் படைகள் போதாது. மிகப் பெரும் படை தேவை! அதைப் புரிந்துக் கொள்வாயா?"

"புரிந்து கொள்கிறேன்!"

"அப்படி ஒரு படையை சம்புவராயர்களோ, தென் பாண்டியர்களோ திரட்டிவிட முடியாது. எங்களைப் போன்ற பலம் வாய்ந்த சுதந்திரமான அரசர் தான் திரட்ட முடியும்!"

"அதையும் ஒத்துக் கொள்கிறேன்!"

"அப்படி நாங்கள் திரட்டி வந்தாலும் தென்பாண்டியர்கள் உதவி கூட எங்களுக்குத் தேவை!"

"அப்படியா?"

"ஆமாம்! ஆகவே இந்த சம்புவராயர்கள் இந்தத் தென்பாண்டியர்களோடு எந்தவிதச் சம்பந்தத்தையும் வைத்துக் கொள்வதை நாங்கள் விரும்பவில்லை."

"அதுவும் சரியெனப்படுகிறது!"

"இந்தச் சம்புவராயர்கள் எங்களுக்கும், நம் தர்மங்களுக்குமே விரோதமான காரியங்களைச் செய்து வருகிறார்கள். எனவே அவர்கள் எம் விரோதிகள்! அவர்களை நாங்கள் ஒழிக்க வேண்டும்!"

"அப்படியா?" என்று அதிசயத்தோடு கேட்டான் வல்லபன்.

"ஆமாம்! அவர்களை ஒழித்தே தீர வேண்டும். அதற்குப் பூர்வாங்கமாகப் பல வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதில் இந்த வேலையும் ஒன்று!"

"எந்த வேலை?"

"மதுராங்கினியைக் காப்பாற்றும் வேலை! அதை நீ தான் செய்ய வேண்டும். அவசியம் செய்ய வேண்டும். இப்போது இருக்கும் நிலையில் உன்னை விட்டால் ஆள் இல்லை. ஆகவே எனக்கு உதவ வேண்டும்!" என்று கூறி முடித்து முகத்தைத் தம் உத்திரியத்தால் துடைத்தார் வியாபாரி.

அந்த வியாபாரியின் குரலில் ஒரு அதிசயமான கனிவும் மனித சமூகங்கள் மீது ஒரு அளவு கடந்த பிரியமும் தொனித்தது.

அவர்கள் கஷ்டங்களை விவரிக்கும் போது அவர் குரலே பல இடங்களில் கரகரத்துப் போய்த் துக்கமாய்ப் பரிணமித்தது.

அவர் கண்களிலேயே ஒரு தீவிரமும் லட்சியமும் தீபஸ்தம்ப ஒளிகள் போல் மினுமினுத்தன.

தமது நீண்ட பேச்சை அவர் நிறுத்திக் கொண்டதும் அங்கே ஒரு மௌனம் விழுந்தது.

அப்போது காலையின் முதல் கிரணம் வானத்தில் வீசி விழுந்து கொண்டிருந்தது.

வல்லபன் தத்தனைப் பார்த்தான்.

தத்தன் வியாபாரியின் பேச்சில் வசப்பட்டிருப்பது தெரிந்தது.

ஆகவே வல்லபன், "சரி! நீங்கள் என்னதான் செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"அப்படியா!" என்று சொல்லி வியாபாரி மகிழ்ச்சியுடன் எழுந்தார்.

"அந்தக் கோட்டையைப் பார்! அதில் உப்பரிகையுடன் நிற்கும் அந்த மாளிகையைப் பார்! அந்த மாளிகைக்குள் தான் மதுராங்கினி சிறை வைக்கப்பட்டிருக்கிறாள். சூழவரத் தாதியர்கள் இருக் கிறார்கள். வெளியே காவலாட்கள் இருக்கிறார்கள். அது சம்புவராயரின் மாளிகைதான். அதன் அந்தபுரத்தில்தான் அந்த இளம் பெண்ணை வைத்திருக்கிறார்கள். அந்தப் பெண்ணை தன் மகனுக்குப் பலாத்காரமாக மணம் செய்து வைக்க நினைத்திருக்கிறார் சம்புவராயர்!" என்றார் வியாபாரி.

"அந்த மகனது பெயர் என்ன?"

"வென்று மண் கொண்டான்!"

"அழகான தமிழ்ப் பெயராக இருக்கிறதே!"

"ஆமாம். இந்தப் பெயர் அவனது பாட்டனாருக்குக் கிடைத்த பட்டப்பெயர். அதையே இப்போது பேரப் பிள்ளையும் வைத்துக் கொண்டு இருக்கிறான். அடுத்த மாதம் திருமணத்தை நடத்த நிச்சயத்திருந்தார்கள். அதற்குள் அந்த அரசகுமாரன் 'வென்று மண் கொண்டான்' மீது யாரோ வாள் எறிந்து அவனைப் படுத்த படுக்கையாக்கி விட்டார்கள்!"

வியாபாரி இப்படிச் சொன்னதும் வல்லபன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

"யாரோ என்று ஏன் சொல்கிறீர்கள்? நீங்கள் தான் அந்தத் திருக்காரியத்தைச் செய்திருக்கிறீர்கள்?"

சிரித்தார் வியாபாரி.

"ஒரு தவறு செய்து விட்டேன். நாலு பேருக்குத் தெரியும்படியாய் நின்று கத்தியை வீசி விட்டேன்!"

"அப்படி ஒரு அடாத செயலைச் செய்யலாமா?"

"இது ராஜரீகம் தம்பி! இங்கே தர்ம அதர்மங்களுக்கு இடையே எல்லை கிடையாது. நான் அப்படிச் செய்தால் தான் திருமணத்தை ஒத்திப் போட வழி ஏற்படும்! அதை உணர்ந்து தான் அப்படிச் செய்தேன்!"

"திருமணத்தைத் தடுப்பதால் என்ன பயன் ஏற்படும்?"

"ஏன் தம்பி? பலாத்காரத் திருமணங்கள் மூலம் நாடுகளை இணைத்துக் கொள்வது இக்கால வழக்கமாக இருக்கிறதே! சம்புவராயர்கள் தென்பாண்டிய நாட்டை இந்த உறவால் இணைத்துக் கொள்வார்கள். அதை நிறுத்த விரும்புகிறோம்!"

"அதைத்தான் செய்து விட்டீர்களே!"

"இல்லை, வென்று மண் கொண்டான் இன்னும் இறந்து விடவில்லை. ஆகவே இன்னமும் திருமண ஆபத்து இருக்கிறது!"

"அதற்கு என்ன செய்ய வேண்டும்?"

"இந்தப் பெண் மதுராங்கினியை நீ போய்ப் பார்க்க வேண்டும்!"

"நானா?"

"ஆமாம். நீயும், தத்தனும் இரத்தின வியாபாரி களாக இந்தக் கோட்டைக்குள் போக வேண்டும்."

"உள்ளே விடுவார்களா?"

"அதற்கு வழிவகைகளை எல்லாம் நான் சொல்லி

கொடுக்கிறேன். உள்ளே போய் நீங்கள் அந்தப்புரத்தில் சென்று இரத்தினங்களை விற்க வேண்டும்!"

"எங்களிடம் ஏது இரத்தினம்?"

"அதையும் நான் தருகிறேன்!"

"இரத்தினங்களையா?" என்று வாய்கொள்ளாமல் ஆச்சரியத்துடன் கேட்டான் தத்தன்.

"ஆமாம்!"

"நூறு இரத்தினங்கள். இன்னும் வைடூரியங்கள், கோமேதகங்கள், நீலங்கள், புஷ்பராகங்கள், பவளங்கள் எல்லாமே தருகிறேன். நீ அவைகளை அந்தபுரத் திற்குள் சென்று ராணிகளுக்கு விற்க முயல வேண்டும். அப்படி விற்கும் போது நிச்சயம் மதுராங்கினியையும் பார்க்க உனக்கும் தருணம் ஏற்படும். அச்சமயம் நீ ஒரு ஓலை நறுக்கை அவளிடம் இரகசியமாகக் கொடுத்து விட வேண்டும்."

வல்லபன் திகைத்து நின்றான்.

"என்ன, வியாபாரியே! இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா?"

"நீ மனது வைத்தால் நிச்சயம் நடக்கும்!"

"எனக்குப் பயமாக இருக்கிறது. இதில் என் மனம் செல்லவில்லை!"

"தம்பி தம்பி! உங்கள் இருவரின் பராக்கிரமங்களை நேரில் கண்டவன் நான். முடியாது என்று சொல்லாதே! உங்களால் முடியும். இதைச் சாதாரணக் காரியமாக நினைக்காதே! இழந்த நாட்டை மீண்டும் பெற நாம் செய்யும் முயற்சி என்று நினை; அல்லது உன் அரங்கனைத் திருவரங்கத்தில் கொண்டு

போய்விடும் முயற்சியில் இது ஒரு முக்கியமான பகுதி என்று நினை. இரண்டுமே ஒன்றுதான். ஆகவே இந்தப் புனித காரியத்தில் நீ அவசியம் ஈடுபட வேண்டும். தட்டி, ஏதும் பேசிவிடாதே. என் மனம் புண்ணாகிவிடும். நாங்கள் இந்த நாட்டின் எல்லா சக்திகளையும் ஒன்று சேர்ப்பதில் முனைந்து இருக்கிறோம். உங்கள் பலங்களும் எங்களுக்கு அவசியம் தேவை!" என்று நயந்தும் வற்புறுத்தியும் கூறினார் வியாபாரி.

வல்லபன் யோசனையிலேயே இருந்தான். பிறகு,

"சரி ஐயா! ஓலையில் என்ன எழுதி இருக்கிறீர்கள்?" என்றான்.

"நீயே படித்துப் பார்! அந்தப் பெண்ணை பயப்பட வேண்டாம் என்றும், அவளை மீட்பதற்காக முயற்சிகள் நடக்கின்றன என்றும் எழுதியிருக்கிறேன். அவள் அதை அவசியம் படிக்க வேண்டும். இல்லாவிடில் அவள் தற்கொலை செய்து கொண்டாலும் கொண்டு விடுவாள். அதுதான் பயமாகயிருக்கிறது!"

"ஏன்? அவள் தற்கொலை செய்து கொண்டால் உங்களுக்கு நல்லதுதானே! திருமணம் நடைபெறாமல் போகுமே!" என்றான் வல்லபன்.

"இல்லை தம்பி! எங்கள் நோக்கம் வேறு. பாண்டிய ராஜகுமாரியை இழந்து பாண்டிய மன்னர் பரிதவிக்கிறார். அவருக்கு அந்தப் பெண் மீது உயிர். இந்த நிலையில் நாங்கள் மீட்டுக் கொடுத்தால் அவர்களுக்கு எங்கள் மீது மதிப்பு ஏற்படும். மதுரையை விட்டு சுல்தானை விரட்டும் எங்களது பணியில் அவர்களையும் இழுத்துக் கொள்ளலாம் அல்லவா! இப்போது இருக்கும் நிலையில் சிறு துரும்பும் பல் குத்த உதவும், என்பது போல், சிறு

உதவியும் எங்களுக்கு மகத்தானது. அதனால் தான் இப்படிச் செய்ய விரும்புகிறோம்" என்றார் வியாபாரி.

வல்லபன் யோசித்தான். பிறகு திரும்பி, "ஐயா, இந்த ஆபத்தான காரியத்தை எங்களிடம் ஏன் கொடுக்கிறீர்கள்? நீங்களே ஏன் செய்யக் கூடாது?" என்று கேட்டான்.

"தம்பி, என்னையும் என் சகாக்களையும், கோபணாவையும் கம்பண மகாராஜாவையும் வடக்கே புக்கராயர் உடனே வரச் சொல்லி ஆள் அனுப்பி இருக்கிறார். நாங்கள் அவசரமாகப் போக வேண்டும். ஆகவே நிதானமாக இங்கேயிருந்து இந்தக் காரியத்தை நிறைவேற்றக் கூடியவன் நீதான் என்று நினைத்தேன். தவிரவும் உனக்கு அந்தப் பெண்ணை நன்றாகத் தெரியும். உனக்கு அவள் மீது இரக்கம் உண்டு. அவளை முன்பே ஒரு முறை நீ காப்பாற்ற நினைத்திருக்கிறாய்!" என்றார் வியாபாரி.

மதியமாகி ஒரு யாமத்திற்குப் பிறகு இரு இளம் இரத்தின வியாபாரிகள் ராஜகம்பீரன்மலை அரண்மனைக்குள் நுழைந்துக் கொண்டிருந்தார்கள்.

அரச சேவகர்கள் அவர்களைக் கண்காணித்து உள்ளே கொண்டு போய் விட்டார்கள்.

அங்கிருந்து வேறு ஏவலர்கள் அவர்களை உள்ளே கொண்டு போய் அடுத்த கட்டுக்குள் விட்டார்கள்.

அங்கே மெய்க்காப்பாளர்கள் அவர்களிடம் ஆயுதங்கள் இருக்கின்றனவா என்று சோதித்து மேலும் ஒரு கட்டுக்குள் அழைத்துப் போய்விட அங்கே சேவகர்களாகப் பணி புரிந்த அலிகள் அவர்களை அழைத்துச் சென்று ஒரு பெரிய கதவு அருகில் கொண்டு போய்விட்டார்கள்.

அலிகள் கதவைத் தட்டியதும் அது மெள்ளத் திறந்தது.

உள்ளே பால் வதனத்துடன் தாதியர்கள் சின்னதாகச் சிரித்து இளைஞர்களை வரவேற்றார்கள்.

சித்திரங்களும் சிற்பங்களும் எங்கும் வியாபித்த ஒளி மயமான கூடம் இது.

நறுமணம் சுற்றிலும் கமழ்ந்து கொண்டிருந்தது.

அதன் நடு மத்தியில் அலங்கார ஆசனத்தில் தாதிகள் படைசூழ பெரிய ராணியார் வீற்றிருந்தார்.

சம்புவராய மன்னர் ராஜநாராயணரின் பட்டத்து ராணி அவள்!

அவளுக்கு நாற்பது வயதாகியிருக்கும்.

அந்த ராணியின் கம்பீர ஆகிருதியைப் பார்த்துக் கொண்டே மனதில் பயமும் விநயமும் கலந்து எழ அடிக்கொருதரம் தாழ வணங்கியவாறு இளைஞர்கள் அவளது முன்னிலைக்குச் சென்றார்கள்.

முன்னால் வந்ததும் பேச முடியாமல் வாய் குழறினார்கள்.

அந்த ராணி அவர்களைப் பார்த்து முறுவலிட்டு ஆசனம் கொடுத்து அமரச் சொல்லி அவர்களது பொருள்களைப் பார்க்கச் சித்தமாக இருப்பதாகக் கூறினாள்.

வல்லபன் மூட்டையை அவிழ்த்து அழகான தங்க நிறப் பேழை ஒன்றை வெளியே எடுத்தான்

அதனை மெதுவாகத் திறந்து உள்ளிருந்த நீல நிறப் பட்டு மெத்தை மீது தீ ஜுவாலை போல் திகழும் இரத்தினங்களை ராணி முன்னால் காட்டினான்.

இரத்தினங்களிலிருந்து நீலகாந்தங்களாகிய மிருதுவான ஒளிகள் பளீரென்று எழுந்து கூடத்தின் பல பாகங்களில் வெளிச்சங்களை அள்ளி வீசின.

ராணியும் பரவசம் கொண்டவளாய் ஒரே ஒரு பரலை மட்டும் வெளியே எடுத்தாள்!

"இது என்ன இரத்தினம்?"

"மகாராணி! தெலுங்கு தேசத்து மாணிக்க ரத்தினம் இது. தோஷங்கள் அற்றது. அணிந்தால் சௌபாக்கியங்களைத் தருவது. உடம்பிலே அழகையும் யௌவனத்தையும் ஊட்டுவது. வியாதிகளை ஓட்டுவது. துர்ப்பயங்களை ஒழிப்பது. அணிந்திருப்பவர்களுக்கு எப்போதும் வசீகரம் உண்டாக்குவது!" என்று கூறினான் வல்லபன்.

அவன் சொல்லச் சொல்ல ராணிக்கு மந்தகாசம் கூடிக் கொண்டே போயிற்று.

பிறகு அவள் மற்றொரு ரத்தினப் பரலை எடுக்க,

அதற்கும் பொருத்தமாய் வல்லபன் குணங்களைக் கூறிக் கொண்டே போனான்.

இப்படி ஒவ்வொரு பரலுக்காக வல்லபன் குணங்களை கூறிக் கொண்டே போன பின் நான்கு நாழிகை நேரம் அங்கே வியாபாரம் நடந்தது.

முடிவில் ராணி நான்கு இரத்தினங்களை எடுத்துக் கொண்டு நூறு வீரசம்பா குளுகைகளை வல்லபனிடம் கொடுக்க, (சம்புவராயர்கள் வழங்கிய பொன் நாணயத்தின் பெயர்.)

அவனும் தாழ வணங்கி அடுத்த இரண்டாம் நாளில் மேலும் பல அழகிய கற்களைக் கொணர்வதாகக் கூறி விடைபெற்றுப் போனான்.

இதுவரை எல்லாம் வெற்றிகரமாக நடந்து விட்டது என்று நினைத்தான் வல்லபன்.

ஆனால் அந்த மதுராங்கினியை மட்டும் காண முடியவில்லையே. அவள் எங்கிருக்கிறாள்? அவளை எந்த அறையிலே விட்டு வைத்திருக்கிறார்கள்?

அடுத்து இரண்டாம் நாள் மீண்டும் இளைஞர்கள் அரண்மனைக்குள் சென்றார்கள்.

அன்று புஷ்பராக, கோமேதகக் கற்களை ராணிக்கு விற்றுவிட்டு அடுத்த முறை இந்திரநீலக் கற்களையும் கொணர்வதாகச் சொல்லிவிட்டு இளைஞர்கள் மீண்டும் தங்கள் இருப்பிடம் வந்தார்கள்.

அன்றும் அவர்கள் மதுராங்கினியைப் பார்க்க முடியவில்லை.

மூன்றாம் முறை கூடாத மனத்தையும் கூட வைக்கும் இந்திர நீலக் கற்களை எடுத்து சென்ற போது ராணி அவர்களையும், அழைத்துக் கொண்டு அடுத்த கட்டுக்குள் சென்றாள்.

அங்கே ஒரு பட்டு ஆதனத்தில் அமர்ந்திருக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து, "மதுரா!" என்று அழைத்ததும் இளைஞர்கள் இருவரும் திடுக்கிட்டார்கள்.

மதுராங்கினி மெள்ளத் திரும்பிக் கண்களை விரித்தாள்.

பதுமை போல் எழுந்து நடந்து வந்தாள்.

ராணியையும் இரு தாதி வைத்த இளைஞர்களையும் மாறி மாறிப் பார்த்தாள்.

வல்லபனின் மனம் அலை போல் புரண்டு அவிழ்ந்தது.

அவன் கண்கள் அந்த பெண் மீது நிலையாய் நின்றன.

கண்களில் நீர்கூடப் பொங்கிவிட்டது. தன்னையும் மறந்து அவளை அழைக்க அவன் வாய் திறந்தான்.

4

மதுராங்கினியிடம் ஏதோ சொல்ல வாயெடுத்த வல்லபனை தத்தன் வழிமறித்து, "ஜாக்கிரதை?" என்று கண்களால் எச்சரித்தான். வல்லபனும் பக்கென அடங்கினான்.

அதன் பிறகு அங்கே வியாபாரம் நடந்தது.

இந்திர நீலக் கற்களை ஒவ்வொன்றாக எடுத்து செவியிலும், நெற்றியிலும், கழுத்திலும் வைத்து அழகு பார்த்தாள் ராணியார்.

ஒரே ஒரு கல்லில் வெளிச்சம் அபூர்வ நீல காந்தியாய் வீசியது. அதை மதுராங்கினியின் நெற்றி மீது வைத்துப் பார்த்த ராணியார் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தாள்.

மதுராவின் கண்களே நீல காந்தியில் ஒளி வீசுபவை.

இந்திர நீலப் பரலை நெற்றியில் வைத்த போது அவள் மூன்று கண்களால் பார்ப்பது போலிருந்தது.

வல்லபன் அவளைக் கூர்ந்து பார்த்தான். எவ்விதமாவது திரும்பி, ஒரு முறையேனும் பார்வையைத் தன் மீது வீசி விடுவாளோ என்று நினைத்தான்.

அவள் நிமிரவேயில்லை.

அன்று வியாபாரத்தில் ஒரே ஒரு இந்திர நீலக்கல்தான் விலை போனது.

சத்திரத்திற்குத் திரும்பி வந்ததும் வல்லபன் உணவு அருந்தவில்லை. மனத்தில் ஏதோ பாரம் அழுத்தியிருந்தது. யோசனையில் ஆழ்ந்து விட்டான்.

தத்தன் அவன் அருகில் வந்தான். "வல்லபா! இன்னும் எத்தனை நாள் இந்த வியாபாரத்தை நடத்தப் போகிறாய்?" என்றான்.

"ஏன்?" என்று கேட்டான் வல்லபன்.

"இங்கு இருக்கும் ஒவ்வொரு கணமும் ஆபத்து கூடிக் கொண்டிருக்கிறது!"

"இன்னும் நாம் அந்த ஓலை நறுக்கை அவளிடம் சேர்க்கவில்லையே!" என்றான் வல்லபன்.

"இப்போது இருக்கும் நிலையைப் பார்த்தால் அதைச் சேர்க்கவே முடியாது போல இருக்கிறது. நாம் புறப்படுவதுதான் நல்லது!"

"இல்லை தத்தா. கற்பூரத்தார் நம்மிடம் ஒரு வேலையை ஒப்படைத்திருக்கிறார்! அதை நிறைவேற்றுவதுதான் நல்லது!"

"அது அவ்வளவு அவசியமா?" என்றான் தத்தன்.

வல்லபன் திரும்பிப் பார்த்தான்.

"தத்தா! நீ என்ன சொல்கிறாய்?" என்றான் சிறிது அழுத்தத்துடன்.

"ஆமாம். இந்த வேலையைச் செய்வது நமக்கு அவசியமில்லை என்று கூறுவேன்!" என்று தலையைக் குனிந்து கொண்டே சொன்னான்.

வல்லபனுக்கு ஒரு கணம் ஏதோ போலிருந்தது.

"அதை அப்போதே சொல்வதுதானே!" என்றான் வல்லபன். ஒரு ஆத்திரம் அதில் தொனித்தது.

தத்தன் நிதானம் இழக்கவில்லை.

"சொல்லியிருப்பேன். ஆனால் அதற்கு எந்த பிரயோஜனமும் இருக்காது என்று நினைத்தேன்!"

அந்த வார்த்தைகள் வல்லபனை எங்கேயோ சென்று தைத்தன.

"ஏன் நினைத்தாய்?" என்றான் சிறிது ஆத்திரம் தொனிக்க.

"நான் சொல்ல வேண்டுமா?"

"அவசியம் சொல்ல வேண்டும். ஏன் நினைத்தாய்?"

"அதெல்லாம் அவரவர் மனத்திற்கே தெரியும்!" என்றான் மீண்டும் குனிந்து கொண்டே.

வல்லபன் உஷ்ணமாக மூச்செறிந்தான்.

"பூடகமாகப் பேசாதே! வெளிப்படையாய் சொல். ஏன் நினைத்தாய்?" என்று வெம்மையோடு கேட்டான்.

தத்தன் நிமிர்ந்தான்.

"சொல்கிறேன் வல்லபா! நீ அந்தப் பெண்ணை எப்படியும் காப்பாற்ற விரும்புகிறாய் என்று நினைத்தேன்!"

"ஏன்?"

"உனக்கு அவளிடம். . . . இரக்கம் இருக்கிறது!"

"எல்லோரிடமும் தான் எனக்கு இரக்கம் இருக்கிறது!"

"அவளிடம் விசேஷமாக இருக்கிறது!"

"அது தவறு இல்லையே!"

"வல்லபா! ஒன்று சொல்வேன்! விழியில் பிறழாதே!"

வல்லபனின் மனம் வெகுண்டது.

"தத்தா!" என்று தன்னையும் மீறி இரைந்தான். "என்னை நீ கேவலமாய் நினைத்தாய், என்னைப் பார்த்து நீ அவதூறு சொன்னாய். நீ என் நண்பன் அல்ல, நண்பன் அல்ல!" என்று ஓங்கிக் கத்தினான்.

சத்திரத்தின் எல்லா சத்தத்தையும் அது ஒடுக்கியது. காணியாளர் சுருக்குப் பையை கட்டிக் கொண்டு அவர்களைப் பார்த்தார்.

மடைப்பள்ளிக்காரர் அகப்பையுடன் ஓடி வந்து பார்த்தார்.

வாயில்புறம் போய் கொண்டிருந்த ஒருவர் நின்று திரும்பிப் பார்த்தார்.,

தத்தன் விலவிலத்து நின்றான்.

வல்லபன் இப்படியும் அப்படியுமாக முகத்தைத் திருப்பினான். பிறகு விருட்டென்று சத்திரத்துப் பின்புறம் நோக்கிப் போய்விட்டான்.

நேரம் ஓடி மெள்ள இருட்டியது. வானில் ஏழு ரிஷி மண்டலம் மெதுவாக உருவாகிக் கொண்டிருந்தது.

வல்லபன் படிக் கல்லில் உறைந்தவாறு இருந்தான்.

அவன் கண்கள் வெறித்தவாறு பார்த்திருந்தன.

அங்கிருந்த குத்துக்கல் மீது ஒரு வெளுப்புப் பூனை மண்டியிட்டு அமர்ந்து கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

அப்போது சிறியதாய் அடிகள் விழும் ஓசை கேட்டது.

வல்லபனது முன்னால் தத்தன் நின்றான்.

அவனது தோள் மீது சுமை ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது.

ஒரு உலோகப் பேழையை வல்லபன் முன் வைத்து விட்டு அவன்,

"நான் வருகிறேன். இதுவரை உனது நட்பு எனக்குக் கிடைத்ததைப் பெரும் பாக்கியமாக நினைக்கிறேன். இனி அதை இழப்பதற்கும் வருந்துகிறேன். எனினும் அதற்கும் வேளை வந்து விட்டால் என்ன செய்வேன்? வருகிறேன். ஊர் போனால் உன் தாயாரிடம் உனது க்ஷேமத்தைக் கூறுகிறேன், வருகிறேன்!" என்றான்.

திரும்பிப் போக ஆரம்பித்தான். முற்றம் முழுவதும் நடந்து துளசி மாடத்தின் அருகில் போனதும் திரும்பிப் பார்த்தான்.

வல்லபன் இன்னும் அப்படியே அமர்ந்து இருந்தான்.

தத்தன் பின் கட்டுக்குள் நுழைந்து தாழ்வாரத்தைக் கடந்து பெரிய ரேழியையும் கடந்து நடைக்கு வந்த போது கண்களில் நீர் மல்கியது. இருட்டில் எதுவும் தெரியவில்லை. தெரிந்து கொள்ளவும் விருப்பமில்லை. நிலை மீது மோதிக் கொண்ட போது யாரோ, 'மெள்ள' என்றார்கள். பெரிய படிக்கட்டில் இறங்கி வாயிலில் வந்து நின்றான்.

வீதியின் கல் விளக்குக் கம்பம் அருகில் சென்றான். அதன் சொரசொரப்பான உடம்பில் வை வைத்து நின்றான். கால் அப்படியே பூமியைப் பிடித்துக் கொண்டது. சிக்கென ஒரு ஆகர்ஷணசக்தி அவைகளைக் கவ்விக் கொண்டிருந்தது.

கண்ணீர் தளும்பி வர அந்தத் தூணின் மீது பெரும் பாரமாய்ச் சாய்ந்து கொண்டான்.

உடல் மீது நீர் வழிந்தோடி அவனது இடுப்பு வஸ்திரத்தைப் பெரும் அளவு நனைத்தது.

அதே நேரத்தில் பக்கத்து மாடத்தில்.

"ஊரிலேன் காணியில்லை.
உறவு மற்றொருவரில்லை."

என்ற தொண்டரடிப் பொடிகளின் பாசுர அடிகளை யாரோ உருக்கமாய்ப் பாடுவது கேட்டது.

தத்தன் பிறவியிலேயே தாயை இழந்தவன். ஒன்பதாவது வயதில் தந்தையையும் இழந்தவன். பிறகு சிற்றப்பன் வீட்டில் அவர்கள் தயவில் எண்ணற்றக் கொடுமைகளை அனுபவித்துக் கொண்டு வாழ்ந்தவன். அவனுக்கு வல்லபனது நட்பு பெரிய துணையாக வாய்த்தது. அதுதான் வாழ்க்கையின் முதல் இன்பத்தையும் அவனுக்கு கொடுத்தது. வல்லபனின் தாயாரின் உபசரிப்புக்களிலும் இதமான பேச்சுக்களிலும் அவனுக்கு அதுவரையில் கிடைக்காத தாய்பாசம் கிடைப்பது போலிருந்தது. அவனது வஸ்திரங்களுக்கும் கல்விக்கும் அவளே பெரிதும் உதவி இருக்கிறாள். இவ்விதம் பல விஷயங்களில் வல்லபனின் குடும்பத்துடன் ஒன்றாகி விட்டதனால் இப்போது இந்தப் பிரயாணத்திலும் அவன் விருப்பத்துடன் பங்கு கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆரண்யங்களைக் கடந்ததுவும்,

அரங்கனைத் தேடியதுவும் எல்லாம் அவனுக்கு வாழ்வில் பெரிய உற்சாகங்களைக் கொடுத்து இருந்தன. அதனால் மனத்தில் பெரிய ஆனந்தமே ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆனந்தமெல்லாம் இந்தக் கணமே மாய்ந்து போகின்றனவோ?

"ஊரிலேன் காணியில்லை.
உறவு மற்றொருவரில்லை."

அந்தப் பாசுர வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாக இல்லாமல் ஒரு துக்கத்தின் சுமையாகவே மனத்துள் பாய்ந்து அழுந்தியபோது குபுக்கென்று விம்மலும் அழுகையும் குமிழியிட்டு வெளி வந்தன. கற்கம்பத்தைப் பிடித்துக் கொண்டு தேம்பினான் அவன்.

விசித்து விசித்து சிறிது நேரம் வரை அழுதிருப்பான்.

அவன் தலை மீது வருடினாற் போல ஒரு கை விழுந்தது.

"தத்தா!" என்று ஆதரவான குரல் கேட்டது. பிழியும் விழிகளுடன் அவன் திரும்பிப் பார்த்தான்.

அங்கே வல்லபன் நின்று கொண்டிருந்தான்.

தத்தனுக்கு அழுகை தாங்கவில்லை.

வல்லபன் அவனைச் சடக்கென்று அணைத்துக் கொள்ள அவனது மார்பு மேல் முகம் புதைத்துக் குழந்தையைப் போல் தேம்பினான் தத்தன்.

இரவின் அடங்கி வரும் நிசப்தத்துள் அவனது விசிப்புகள் விசிறிக் கொண்டே அமிழ்ந்தன.

தத்தனை மெள்ள அணைத்து எடுத்து ஆரத்

தழுவி, "அழாதே! தத்தா! அழாதே! என்னைப் பொறுத்தருளு!" என்று காதோடு காதாக இரைந்து, அவனை மெள்ள நகர்த்தி உள்ளே அழைத்துப் போனான் வல்லபன்.

அங்கே தனிமையான அறை ஒன்றிலே தத்தனை அமர்த்தி இதமான வார்த்தைகளைப் பலவிதமாகச் சொல்லி அவனது ஆற்றாமையை மெள்ள மெள்ள ஆற்றிவிட,

தத்தனும் ஒருவாறு விசிப்பு அடங்கி முகத்தை துடைத்துக் கொண்டு பளிச்சென்று வல்லபனின் முகம் பார்த்தான்.

அவனும், "தத்தா! என் அருமை நண்பா! இதோ இந்தக் கணத்தில் என்னை நன்கு புரிந்து கொள்வாய்! என் மனம் திறந்து பேசுகிறேன். என் மீது எந்தவிதச் சந்தேகமும் கொள்ளாதே! உனக்குத் தெரியாமல் எதையும் செய்ய மாட்டேன். நினைக்கவும் மாட்டேன். ஆனாலும் கேள்! இந்த இளவரசிப் பெண்ணைப் பற்றி நான் அதிக இரக்கம் கொண்டிருப்பதாகக் கூறினாய்! இதை நான் அவசியம் உனக்கு விளக்கிக் கூற வேண்டும். கூறுகிறேன்! கேள்! தத்தா! நீயாவது சிறு வயதில் உன் தந்தையுடன் வெளியூர்களுக்குப் போயிருக்கிறாய். நான் போனதே இல்லை. போயிருந்தால் பல பெண்களைப் பார்த்திருப்பேன். என் தாயார் என்னை வெளியே விட்டது இல்லை. கல்வியும் சரி, சண்டைப் பயிற்சியும் சரி, எல்லாம் உள்ளூருக்குள்ளேயே நடந்தேறின. என் வாழ்க்கையில் இது தான் முதல் முறை வெளி உலகுக்கு வந்திருக்கிறேன். அதுவும் என் தந்தை விட்டுச் சென்ற காரியம் என் தாயாருக்கு மிகப் புனிதமாக தோன்றியதால் தான் என்னை இந்தப் பணிக்கு ஆளாக்கி வெளி சஞ்சாரம் செய்ய அனுப்பியிருக்கிறார்!

"கேள் தத்தா! வித்தை கற்கும் போது பவபூதி காளிதாசர் பாணர் எல்லாம் படித்துவிட்டு அவர்கள் தந்த கனவு உலகங்களிலே மனதைச் செலுத்திவிட்டு கடைசியில் வெளி உலகில் முதன் முறையாக வந்து ஒரு பூரண அழகுள்ள பெண்ணைச் சந்திக்க நேர்ந்தால் என்னைப் போன்ற ஒருத்தனின் மனது என் சொல்லைக் கேளாமலேயே என் அந்தரங்கம் அறியாமலேயே அவள் மீது சென்று விடுமல்லவோ?"

"வான் முகில்கள் கண்டால் மயில்கள் தாமாக தோகை விரிப்பது போலவும் ஆதவனைக் கண்டால் தாமரைகள் தாமாக மடல் அவிழ்வது போலவும், மாலை நேரம் வந்தால் மல்லிகைக் கூட்டங்கள் தாமாக மலர்வது போலவும் தன் செயலால், தன் சுபாவத்தால் தன் போக்காகவே நிகழும் ஒரு இயல்பான நிகழ்ச்சிதான் இது.

"இது இயற்கையின் நியதி. தானாகத் தன்னை அறியாமல் நிகழும் இந்த மனப் போக்கின் பரிணாமங்களைத்தான் நம்மவர்கள் அன்பு, பிரேமை, காதல், களவொழுக்கம் என்றெல்லாம் கூறிவிட்டார்கள்.

"இயற்கையின் நியதியால் தானாக நிகழும் இந்நிகழ்ச்சி தவறானது என்றால் நான் தவறு செய்தவன் தான்.

"அன்றி,

"செலுத்தப்பட்டால்; செல்வதன்றி வேறு வழியில்லை.

"இழுக்கப்பட்டால், இழுபடுவதன்றி வேறு வழி இல்லை.

"என்பது போல, என் சிறு மனதை ஆடாத ஆட்டம் ஆட்டுவிக்கும் இயற்கை என்னை விடக்

கோடிப் பங்கு வலிமையுடையது. அதன் முன் என் சிறு மனத்து எதிர்ப்போ, முறைப்போ எதுவும் செல்லாது. உலக நியதியைப் பூரணமாக ஒருவர் அறிந்திருந்தாரானால் அவர் கண்களுக்கு நான் நிச்சயம் தவறு செய்தவனாக இருக்க மாட்டேன்.

"தத்தா! இந்த இயல்பின் அடிப்படையில் என் மனத்தில் ஒரு கூண்டு வண்டியில் போன பெண்ணின் சித்திரம் விழுந்தால் அது என் தவறு அல்ல! இயற்கை அதை விதைத்தது. இயற்கையால் அது விளைந்தது அவ்வளவுதான்!

"இந்தச் சலனங்களுக்கு நான் ஆட்பட்டேன் என்பது முற்றிலும் உண்மை!

"தத்தா! அந்தச் சித்திரத்தை என் கண்ணில் விழ விட்டேன். ஆனால் கண்ணை மறைக்க விடவில்லை.

"இது முற்றிலும் உண்மை! தத்தா இந்தக் கோட்டைக்குள் போக நினைத்தேன் என்பதோ அங்கே இரத்தினம் விற்க நினைத்தேன் என்பதோ சத்தியமாக அந்தச் சித்திரத்தால் எழுந்த விருப்பம் அல்ல! இதை நிச்சயமாய் அறிவாய்!

"அது என் அரங்கன் மீது விழுந்த ஆறாத பாசத்தால் ஏற்பட்ட விருப்பம்!

"நான் சத்தியம் இட்டுச் சொல்கிறேன்.

"பூஜைக்குப் போகிறேன். கும்பிடுவதற்காகப் போகிறேன். அங்கே பானகமும், எனக்குக் கிடைக்கப் போகிறது என்பது என் மனத்தில் ஓரமாய் எழும் ஒரு சுவையான எதிர்பார்ப்பான உணர்ச்சி. அதுபோலத்தான் இந்த இரத்தினம் விற்கப் போய் நான் சித்திரம் பார்க்க விரும்புவதும்! இதைப் பூரணமாக அறிந்து கொள் தத்தா! என் மீது எள்ளளவும் சந்தேகம் கொள்ளாதே!

"என் உறுதி நிச்சயம் என்று தெரிய வேண்டுமானால் இதோ இன்னொன்றும் சொல்கிறேன்.

"இந்தக் கணமே இந்தக் காரியத்தில் மேலும் இறங்காமல் கோட்டைக்கு வெளியே போய்விடச் சித்தமா இருக்கிறேன். எனக்கு இதில் லவலேசமும் வருத்தம் கிடையாது.

"ஆகவே மனம் திறந்து சொல்!

"கற்பூரத்தார் எனக்கு நல்லவராக தோன்றினார். நம் உயிரையும் அவர் காப்பாற்றினார். அவர் இப்போது நம்மிடம் வேண்டிக் கொண்டுள்ளார். உள்ளம் நெகிழ மிக உருக்கமாகப் பிரார்த்தித்தார்.

"அவர் கொடுத்துள்ள இந்தக் காரியத்தை இனி நாம் தொடர்ந்து முடிக்கவோ, மறுக்கவோ நீயே சொல் மனம் திறந்து!" என்று கூறி நிறுத்திப் பெருமூச்சு விட்டான் வல்லபன்.

அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே தத்தனின் கண்களில் கண்ணீர் பிழிந்தது.

உருகும் வண்ணம் அவன் கேள்வியைக் கேட்டு நிறுத்தியதுதான் தாமதம். தத்தன் உடனே அவனைத் தழுவிக் கொண்டான்.

"வல்லபா! வல்லபா! மனம் நோகாதே! நான் உன்னைப் புண் செய்துவிட்டேன். நீ அன்றும் எனக்கு நண்பன். இன்றும் எனக்கு நண்பன். நீ சொல்வ தெல்லாம் சரியே! என் மனத்தில் இருந்த அற்ப சொற்ப சந்தேகமும் இந்தக் கணமே அடங்கிவிட்டது. வீரியத்துடன் காரியத்தில் இறங்கு!" என்று கூறி தழதழத்தான்.

மறுநாள் மதிய வேளைக்கு, அவர்கள் இருவரும் அரண்மனை அந்தரப்புரத்திற்குள் இருந்தார்கள்.

நல் பவழங்களைக் காட்டும் பாவனையில் அவை களைச் சிதறிவிட, அவை நாலாபுறமும் ஓட, ராணியாரும் அவற்றில் சிலவற்றைப் பொறுக்குவதில் ஈடுபட,

வல்லபன் தைரியமாக மதுராங்கினியின் சமீபமாகச் சென்று மெதுவாக, "இளவரசி!" என்று கூற,

மதுரா திடுக்கிட்டு நிமிர்ந்து அவனைப் பார்க்க,

அவனும் தன் கழுத்தில் தொங்கும் மகர கண்டிகையைக் கையில் ஏந்தி,

"நினைவு கொள்ளுங்கள் இளவரசி! சீக்கிரம்!" என்று மெதுவாக இரைந்தான்.

அவன் ஏதோ பேசுவதை ராணியார் கவனித்து விட்டார்.

"ஏய்!" என்றாள் கோபத்துடன்.

5

ராணியார் "ஏய்" என்று சொல்வதற்கும் வல்லபன் நடுங்கித் தன் கையில் வைத்திருந்த ஓலைச் சுருளை நழுவ விடுவதற்கும் சரியாக இருந்தது.

அரசி ஓடி வந்து சுருளை எடுத்தாள். படித்தாள். முகம் சிவந்து போயிற்று. "பிடியுங்கள் இவர்களை!" என்று கத்தினாள். அலிகள் வாளை உருவிக் கொண்டு ஓடி வந்தார்கள்.

"நில்லுங்கள்!" என்று இரைந்தான் தத்தன். கத்தியை விருட்டென்று உருவி ஒரே துள்ளில் ராணியார் பக்கத்தில் நின்றான்.

"யாராவது ஏதேனும் செய்தீர்களோ உங்கள் ராணியாரைக் கொன்று விடுவேன்!" என்று சொல்லி ராணியின் கைகளைப் பிடித்தான்.

ராணி, "வீல்" என்று அலறினாள். தத்தன் அவள் வாயை மூடினான்.

இதற்குள் வல்லபன் நிலைமையைப் பூரணமாக உணர்ந்து விட்டான். அவனும் கத்தியை உருவினான். "எல்லோரும் கீழே போடுங்கள் வாளை!" என்று கத்தினான்.

அலிகள் வாட்களைக் கீழே போட்டார்கள்.

வல்லபன் ஓடிப் போய் அங்குள்ள தூமச் சட்டிகளில் வாசனைப் பொடியை வாரிப் போட்டான். குபீரென்று புகை எழுந்து மண்டலமாக நிரம்பிக் கூடத்தை இருட்டாக்கியது. வல்லபன் உடனே தத்தனை இழுத்துக் கொண்டு புகையுள் புதைந்து மறைந்து போனான்.

புகை தெளிவதற்கு நேரம் ஆகியது. எல்லோரும் அதுவரை ஏதும் செய்வதறியாது நின்றார்கள். புகை தெளிந்து ஒருவருக்கு ஒருவர் பார்க்கும் நிலை வந்த போது ராணியார், "ஓ" என்று இரைந்து "பிடியுங்கள்! அவர்களைப் பிடியுங்கள்!" என்று கத்தினார்.

அலிகள் நாலாபுறமும் ஓடினார்கள். அந்தப்புரத்திற்கு இரண்டு கதவுகள்! அதன் வழியே கூக்குரலிட்டு வெளியே ஓடினார்கள்.

சீக்கிரத்தில் சர்வநாயகருக்கும் (அரண்மனை பரிவாரங்களுக்கெல்லாம் அதிகாரி) வாயில் காரியத்திற்கும் (அரண்மனைக்கு உள்ளே போவோர் வருவோரைக் கட்டுப்படுத்தும் அதிகாரி) விஷயம்

போகவே அவர்கள் ஏவலாட்களை அனுப்பி எங்கும் தேட ஆரம்பித்தார்கள்.

"யாரையும் வெளியே விடாதே!" என்று கோட்டைக் காவலுக்கும் செய்தி போயிற்று.

ராஜகம்பீர நகரம் இவ்விதம் அல்லோல கல்லோலப்படும் வேளையில் வல்லபனும், தத்தனும் அரண்மனை அந்தப்புரத்து அடிவாரத்தில் குத்தியிட்டு அமர்ந்து பரிதவித்துக் கொண்டு இருந்தார்கள்.

அந்தப்புரம் நல்ல உயரத்தில் இருந்தது. அதன் சாளரம் வழியே அவர்கள் கீழே குதித்திருந்தார்கள். அரண்மனைப் பகுதியில் ஏதாவது ஒரு பகுதியாக இருக்கும் ஆதலால் யாராவது தென்பட்டால் எதையாவது சொல்லித் தப்பி விடலாம். செய்தி தெரியும் முன் கோட்டையை விட்டு வெளியே போய்விடலாம் என்று எண்ணியிருந்தார்கள்.

ஆனால் அவர்கள் விழுந்த இடம் ஒரு பாழான அரண்மனைப் பகுதி. அதன் முன்னால் பத்தடி தூரத்தில் உள்அகழி ஒன்று இருந்தது. அதற்கப்பால் கோட்டைச் சுவர்! பின்புறம் திரும்பினால் அரண்மனைக்குள் போவதற்கான வாயில் ஒன்று இருந்தது. பல வருடங்களுக்கு முன் அகழியில் விழுந்து யாரோ தற்கொலை செய்து கொண்டதால் இந்த வாயிலைக் கல் எழுப்பி மூடி விட்டிருந்தார்கள்.

பக்கவாட்டில் போகலாம் என்று பார்த்தால் இரண்டு பெரிய கற்சுவர்கள் அகழிவரை நீட்டியிருந்தன. அந்தச் சுவர்கள் வெகு தூரம் வரை அகழியை ஒட்டியே இரு புறங்களிலும் ஓடியிருந்தன.

ஆக, ஏதோ ஒரு குதிருக்குள் அகப்பட்டது போல் இரண்டு பேரும் அகப்பட்டு விட்டார்கள்.

தூய நீர் பாயும் துங்கபத்திரை நதியின் தென்கரையில் அந்தப் புதிய பட்டணம் மாலை வெயிலில் தகதகத்துக் கொண்டிருந்தது.

மாளிகைகளின் விதானங்களும் உப்பரிகைகளும் கோபுரக் கூர்மைகளும், வசந்த மண்டபங்களின் அடுக்குகளும் இன்னும் ஏராளமான வீடுகளின் மாடங்களும் வான வீதியை அங்கங்கே உராய்ந்து நின்றுக் கொண்டிருந்தன.

நகரைச் சுற்றி வர வெவ்வேறு உயரங்களில் மலைகள் ஒன்றையொன்று தொடர்ந்தார்போல் ஓடி இருந்தன.

அவை ஒன்றின் மீது ஒன்றாக வெகு விசித்திரமாக நின்று கொண்டிருந்தன.

தொடர்வான மலைகளில் இடுக்கு விழுந்த இடமெல்லாம் பெரும் கல் அரணைக் கட்டி அந்தப் பட்டணம் பாதுகாக்கப்பட்டிருந்தது.

பட்டணம் இருந்த இடம் போக எஞ்சியுள்ள நிலப்பரப்பு முழுவதிலும், நெல், கரும்பு, வாழை முதலியவைகள் பயிரிடப்பட்டிருந்தன.

அங்கங்கே ஓடைகளும், குளம், ஏரி போன்ற பெரும் நீர்ப் பரப்புகளும் மின்னிக் கொண்டிருந்தன.

பட்டணத்திற்குள் நுழைந்தால் ஒரு அதிசயத்தைக் காண்கிறோம்.

வீதிகள் யாவும் அகலமாயும், சீராகவும் இருக்கின்றன. மக்கள் நிச்சிந்தையாக மகிழ்ச்சியுடன் உலாவு கிறார்கள்.

வண்டிகளும், குதிரைகளும், மாடுகளும், யாத்ரிகர்களும், வியாபாரிகளும், யவனர்களும் இந்த வீதிகளில் நிறைந்திருக்கிறார்கள்.

வீதிகளின் வீடுகள் யாவும் புத்தம் புதியவையாய்த் தெரிந்தன.

தமிழ் பேசும் நாடுகள் எல்லாம் ஒரு வேற்று ஆட்சியில் நலிந்து போய் சோம்பிக் கிடக்கும் வேளையில் வடக்கே இந்த நகரம் இப்படிக் கலகலப்பும், ஆனந்தமும் கொண்டு லட்சுமிகரமாக விளங்குவதைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த அதிசயமான நகரந்தான் விஜயநகரம்.

இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி.1336) அஸ்திவாரம் இடப்பட்டு சொற்ப காலத்திற்குள் ஒரு குபேர பட்டணமாக மாறியிருந்தது இந்த நகரம்.

அந்த மாலை நேரத்தில் அந்த நகரத்தின் அழகான அரண்மனையின் விசாலமான மந்திராலோசனைக் கூடத்தில் விஜயநகர மண்டலத்தின் அரசர் புக்கராயர் கம்பீரமாக வீற்றிருந்தார்.

அவரை அடுத்தாற் போல் முள்வாய் ராஜ்யத்தின் (ராஜ்யம் என்பது மண்டலத்தின் ஒரு பகுதிதான்) அதிபதியான குமார கம்பணர் அமர்ந்திருந்தார்.

அவரை அடுத்துப் பிரதானி (மந்திரி) சோமப்ப தண்டநாயகரும், பிரதானி கண்டாரகுளி மாராய்ய நாயகரும் வீற்றிருந்தார்கள்.

அவர்களை அடுத்து பண்டாரி (பொக்கிஷதாரர்) ஆனகுந்தி விட்டப்பர் அமர்ந்திருந்தார்.

எதிர்ப்புறத்தில் ஓலைநாயகம் (அரசரின் கட்டளை களை நிறைவேற்றி வைப்பவர்) சாளுவமங்கு அமர்ந்திருக்க அவரைத் தொடர்ந்து

அடைப்பம் (அரசருக்கு தாம்பூலம் தருகிறவர்கள். அந்த நாளில் அது ஒரு முக்கிய உத்தியோகம்) லக்கப்பரும் நரகப்பரும் அமர்ந்திருந்தார்கள்.

“பிரபோ!” என்று சொல்லி எழுந்தார் சோமப்பர். “இந்த நேரத்தை தருணமாக வைத்துக் கொண்டு சுல்தானியர்களை ஒழித்து விடுவது நல்லது. இவ்வளவு நாட்கள் வாளாவிருந்து விட்டோம்!” என்று கூறினார்.

உடன் கோபணாவும், “ஆமாம் மன்னவா! தெற்கே தமிழ் பேசும் நாடுகளில் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அகதிகளாக நம் ராஜ்யங்களுக்குள் நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். இவை ஒரு புறம் இருக்கட்டும். சோழ பாண்டிய நாடுகளில் கோவில்களைப் பற்றி தாங்கள் எவ்வளவோ கேள்விப்பட்டிருப்பீர்கள். அவை இப்போது பூஜைகளும் விழாக்களும் அற்று மூடியே கிடக்கின்றன. மதுரையில் பிரசித்தி பெற்ற மீனாட்சி கோவில் பாழடைந்து விட்டது. பார் புகழும் திருவரங்கன் இப்போது நமது எல்லைக்குள் திருப்பதி மலை மீது இருக்கிறார். தமது சொந்த நகரை விட்டு உருத்திரோத்காரி வருடத்தில் புறப்பட்டு விட்டவர். முப்பத்தேழு ஆண்டுகளாகியும் தமது இருப்பிடத்திற்கு இன்னும் போகவில்லை. எல்லாவற்றையும் விட இராமேசுவரத்திற்கு யாத்திரை செல்லும் வழி நிரந்தரமாக அடைபட்டு விட்டது. நம்மிடையே எழுந்துள்ள தற்போதைய தலைமுறையினர் இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தை இதுவரை பார்த்ததே இல்லை!” என்று உணர்ச்சி ததும்பக் கூறினார்.

புக்கராயர் மனம் வெதும்பிக் கண்களில் துக்கம் பெருகுவது தெரிந்தது.

“குமாரா! நீ என்ன சொல்கிறாய்?” என்றார்

கம்பணரை நோக்கி, (புக்கராயரின் மகன் தான் குமார கம்பணர்)

கம்பணர் எழுந்து, "தந்தையே!" என்று விநயத்துடன் கூறி, "தமிழ் பேசும் மக்களை நான் நேரிலே பார்த்தேன். அங்குள்ள நிலைமை மிக மோசமாகத்தான் இருக்கிறது. நேரிலே மக்களின் கஷ்டங்களைப் பார்க்கும்போது என் இரத்தம் கொதித்து எழுகிறது. இவர்களுக்கு ஏதாவது உடனடியாக செய்ய வேண்டுமே என்று மனம் துள்ளியெழுகிறது. எனினும், என் ஆத்திரத்தை என் அறிவுக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறேன். ஆத்திரம் சொன்னால் நடவடிக்கை எடுக்க் மாட்டேன். அறிவு சொன்னால்தான் எடுப்பேன். இதற்கான நிதானத்தை என் தந்தையராகிய தங்களது உபதேசங்கள்தான் எனக்கு அளித்திருக்கின்றன. நானும் சுல்தானியர்களை ஒழிக்க விரும்புபவன்தான். அவர்களை ஒழித்து நம் விஜய நகர மண்டலத்தின் எல்லையைத் தெற்கே கன்னியாகுமரி வரை பெரிதாக்க விரும்புபவன்தான். ஆனாலும் எனக்குப் பல தயக்கங்கள் இருக்கின்றன!" என்று கூறினார்.

"என்ன தயக்கம்?" என்றார் புக்கராயர்.

"எமது முள்வாய் ராஜ்யத்தின் படைகள் மட்டும் இதற்குப் போதாது. எனினும் நமது கோபணாவும் சாளுவமங்குவும் என்ன கூறுகிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்!" என்றார் கம்பணர்.

முதலில் சாளுவமங்கு எழுந்திருந்தார். "பிரபோ! சம்புவராயர்களை உடனே ஒழித்து விட முடியும். ஆனால் சுல்தானியர்களை எதிர்க்க எங்கள் தெற்கத்திய படை மட்டும் போதாது!" என்றார்.

"கோபணா என்ன கூற விரும்புகிறார்?" என்று கேட்டார் புக்கராயர்.

கோபணா எழுந்திருந்தார்.

"மன்னவா! சுல்தானை அழிப்பதற்கு சாமானியப் படைகள் போதாது. வல்லாளதேவர் லட்சம் ஆட்களுடன் படையெடுத்தார். பல சிற்றரசர்களும், அவருக்கு உதவினார்கள். அப்படியும் போரில் அவர் தோல்வியுற்றார். ஆகவே நாமும் பெரும் சைனியத்துடன் சென்றால்தான் எதிரியைத் தோற்கடிக்க முடியும். இல்லாவிடில் முடியாது. ஆனால் இந்த வேலையில் ஒரு விசயத்தைக் கூற விரும்புகிறேன். தென்நாடுகளில் ஜனங்கள் எல்லோரும் நம்மைத்தான் எதிர்நோக்கி இருக்கிறார்கள். நாம் இத்தனை நாளும் வெறுமனே இருப்பதைப் பார்த்து வருத்தமுறுகிறார்கள். நானே இந்த ஜனங்களின் அவஸ்தைகளை நேரிலே பார்த்தேன். அதை என்னாலேயே சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. உணர்ச்சி உள்ளவர்கள் யாரும் இந்த மக்கள் அல்லல் படுவதை விரும்பமாட்டார்கள். ஏதாவது உடனடியாகச் செய்யத்தான் இஷ்டப்படுவார்கள். மன்னவ! எனக்கு இந்தக் காரியத்தில் உடனே ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்று தோன்றுகிறது. நம்மிடம் இதற்குப் படைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி! வாழ்ந்தால் நம் ஜனங்களுடன் வாழ்வோம்! இல்லாவிடில் அவர்களுடனே வீழ்வோம்! மன்னவ! நான் உணர்ச்சி வசமாய்ப் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். தென் நாடுகளுக்கு நான் உதவுவதற்காகவே சபதம் எடுத்து வந்திருக்கிறேன். என் உயிருள்ளவரை அதை நிறைவேற்றித்தான் ஆக வேண்டும்!" என்றார் கோபணா அழுத்தமாக.

"சபதமா? என்ன சபதம்?" என்றார் புக்கராயர்.

கோபணா மெதுவாக திருவரங்கன் கதை முழுவதையும் விரிக்க கூறினார். அவர் குரல் பல

இடங்களில் துக்கத்தால் கம்மியது. அநேக இடங்களில் நாத் தழ தழத்தது. அரங்கனைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம் பக்தி கொந்தளித்து விளையாடியது.

அரங்கன் கதை முழுவதையும் சொல்லி தாம் சபதம் செய்த விவரத்தையும் கூறி முடித்தது தான் தாமதம். அந்த மந்திராலோசனை சபையே அப்படியே ஒரு மாயத்தால் கட்டுண்டு கிடந்தது.

எங்கும் நிசப்தம் நிலவியது.

புக்கராயர் மிகவும் உணர்ச்சி வசபட்டிருந்தார். அவர் கண்களிலே கூட நீர் சுரந்திருந்தது.

சிறிது நேரம் அவர் மௌனமாகவே இருந்தார்.

பிறகு, "கோபணா!" என்று அழைத்து மெதுவாக ஆசனத்தை விட்டு எழுந்தார்.

"இப்போது என் குமரன் கம்பணன் உணர்ச்சி வசப்படக் கூடாது என்று சொன்னான். ஆனால் இங்கே இப்போது உங்களது பேச்சைக் கேட்ட பிறகு உணர்ச்சிதான் மிகுந்து நிற்கிறது. உணர்ச்சி சில சமயம் வழி தவறச் செய்யும். ஆனால், அதே உணர்ச்சி நமக்கு நல்ல வழிகளைக் காட்டி மகோன்னதமான உயரங்களுக்கும் நம்மை அழைத்துச் சென்று விடும். இந்த விஜயநகரம் பிறந்ததே உணர்ச்சியில் தான். நாங்கள் உணர்ச்சி வசப்பட்டோம். இந்த நாட்டை ஸ்தாபித்தோம். இப்போது உங்க பேச்சைக் கேட்டேனே கோபணா இது எத்தகைய உணர்ச்சியைத் தருகிறது என்கிறீர்கள்? அன்று விஜயநகர மண்டலம் எழும்புவதற்கு எங்களிடம் எத்தகைய உணர்ச்சி எழுந்ததோ அதே, உணர்ச்சியை தான் இது தருகிறது. நன்றாகச் சொன்னீர்கள். தென் நாடுகளின் ஒரே சின்னம் இந்தத் திருவரங்கர் என்று அது முற்றிலும்

உண்மையே! அந்த அரங்கரது கதியையும் அல்லல்களையும் வெகு அழகாக வர்ணித்தீர்கள். சொல்லப் போனால், தென் நாட்டு மக்களின் வருத்தம் முழுவதற்கும் ஒரு சின்னமாகவே திகழ்வது தான் இந்தத் திருவரங்கரின் கதை. அதை எனக்கு நன்றாக உணர்த்தி விட்டீர்கள். பட்டதையெல்லாம் கடவுளே பட்டார். அந்தக் கடவுள் பட்டதையெல்லாம் தெரிந்து கொண்டால் போதும், மக்கள் பட்டதெல்லாம் தெள்ளத் தெரிந்து விடும்.

கோபணா, நானே உணர்ச்சிக்கு ஆளாகி விட்டேன், என் மனம் வேதனையில் குமுறுகிறது. என்ன செய்ய வேண்டுமோ சொல்லுங்கள் செய்ய முடியுமா என்று பார்ப்போம்?" என்று முடித்தார் மன்னர்.

"நேராக சுல்தான் மீது படையெடுக்க வேண்டியதுதான் வழி!" என்றார் கோபணா.

6

"மதுரை சுல்தான் மீது படையெடுக்க வேண்டும்" என்று கோபணா ஆணித்தரமாகக் கூறினார்.

மற்ற அதிகாரிகளும் உடனே அதுதான் சரி என்று ஆமோதித்தார்கள்.

புக்கராயர் குமார கம்பணரைப் பார்த்து, "குமாரா! நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"படை எடுக்கச் சித்தமாக இருக்கிறேன். தங்கள் உத்தரவு தான் கிடைக்கவில்லை" என்றார் கம்பணர்.

புக்கராயர் எல்லோரையும் ஆழ்ந்து பார்த்தார்.

"சரி! நீங்கள் சொல்வதெல்லாம் சரி! ஆனால் பாமனிக்காரர்களை யார் எதிர்த்து நிறுத்துவது?" என்று கேட்டார்.

யாரும் பேசவில்லை. ஒரு மௌனம் அங்கே நிறைந்தது. மன்னர் கூறியதைப் பற்றி எல்லோரும் யோசித்தார்கள். வெகு நேரம் யாரும் பேசவில்லை.

பாமனி அது ஒரு தொல்லைதான். அந்த ராஜ்யம் மட்டும் இல்லையென்றால் இதற்குள் புக்கராயர் மதுரை சுல்தானை அழித்திருப்பார். தென் நாடுகள் முழுவதையும் ஒன்றாக்கி விஜயநகர சாம்ராஜ்யம் என்று பெயர் சூட்டியிருப்பார். மண்டலாதிபதி என்ற தம் பெயரை ராஜாதிராஜன் என்று மாற்றி இருப்பார்.

ஆனால் அவைகளையெல்லாம் நிகழ விடாமல் செய்து விட்டதே, இந்த பாமனி ராஜ்யம்.

விஜயநகர மண்டலம் ஸ்தாபிதம் ஆன பதினொரு ஆண்டுகளில் (கி.பி.1347) குல்பார்க்காவைத் தலைநகர் ஆக்கிக் கொண்டு அலாவுத்தீன் பாமன் என்பவர் ஆரம்பித்த புதிய துருக்கிய ராஜ்யம். விஜயநகர மண்டலத்தாருக்கு புதுத் தொல்லைகளை கொடுத்து வந்தது.

ஆரம்ப காலங்களில் இரு ராஜ்யங்களுக்கும் பல சண்டைகள் நடந்த பிறகு இரண்டும் ஒன்றுக்கொன்றின் பலங்களை அறிந்து கொண்டு ஒருவித நடைமுறை சமாதானத்திற்கு வந்திருந்தாலும் இரண்டு ராஜ்யங்களுக்கும் உள்ளே ஒரு உட்பகை கனிந்து கொண்டே தான் இருந்தது. (விஜயநகர வட எல்லையில் இருந்தது பாமனி ராஜ்யம்)

அப்படி வடக்கே ஒரு பகை தோன்றியிருக்கும் போது, தெற்கே மன்னரை சுல்தான் மீது படையெடுக்க வேண்டும் என்று இப்போது கோபணா தைரியமாக கூறிவிட்டார்.

ஆனால், பாமனி அரசரை யார் எதிர்த்து நிற்பது? அதற்கே நமது எல்லாப் படைகளும் தேவைப்படுகிறதே! உண்மையில் இந்தப் படைகளைக் கண்டுதானே பாமனிக்காரர்கள் நம்மீது படை எடுக்காமல் இருக்கிறார்கள். இந்தப் படைகளை நாம் தெற்கே மதுரை சுல்தானை எதிர்ப்பதற்கு அனுப்பி வைத்தால், நமது வடஎல்லை பலம் குறைந்துவிடும்! இதுதான் தருணம் என்று பாமனிக்காரர்கள் நம் நாட்டுக்குள் புகுந்து விடுவார்களே! இந்த ஒரு காரணத்தினால்தான்தானே, தெற்கே மதுரையைப் பற்றி, அக்கறை காட்டாமல் இருந்தோம். நான் சொல்வது உண்மைதானே! தவறான காரியம் செய்துவிட்டு நமது புது நாட்டை நாமே அழித்துக் கொள்வதா? என்று புக்கராயர் கேட்டதும் எல்லோரும் வாய் மூடி மௌனமாக இருந்தார்கள்.

பாமனி என்ற ஒரு சொல்லே அவர்களை எல்லாம் கவலையில் ஆழ்த்தி விட்டது என்று அறிந்ததும் புக்கராயர் எழுந்தார்.

மெதுவாக புன்னகை புரிந்து, "அவையீர்களே! பாமனிக்காகக் கவலைப்படுவதை நிறுத்துங்கள்! நாமும் இனி நிறுத்துவோம்!" என்றார்.

எல்லோரும் ஆச்சரியத்துடன் புக்கராயரைப் பார்த்தார்கள்.

"ஆமாம். அவர்களைப் பற்றி எத்தனை நாள் கவலைப்பட்டுக் கொண்டே வேறு காரியங்களில் ஈடுபடாமல் இருப்பது? இப்போது நிச்சயமாகவே தீர்மானித்து விட்டேன். தெற்கு நாடுகள் முழுவதையும் நம் மண்டலத்தில் சேர்த்துத்தான் ஆக வேண்டும்!" என்றார் புக்கராயர்.

துள்ளி எழுந்தார் குமார கம்பணர்.

"தந்தையே! இந்த அருஞ்சொல்லுக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன். உத்தரவு போடுங்கள்!" என்றார் மகிழ்ச்சி பீறிட.

"குமாரா! பொறு!" என்றார் புக்கராயர். "இது நான் செய்த தீர்மானம் அல்ல. அரங்கன் செய்த தீர்மானம்!" என்று தொடர்ந்தார்.

"மன்னவா. அரங்கன் தங்களுக்குக் கட்டளை யிட்டாரா?" என்றார் கோபணா.

"கோபணா!" என்றார் புக்கராயர். "அரங்கன் எமக்கு நேரில் கட்டளையிட்டால் மிகவும் தன்யனாவேன். ஆனால் அந்த பாக்கியத்திற்கு இன்னும் நான் ஆளாகவில்லை. ஆனால் நமது அரசியார் தேவாயி இருபது வருடங்களாகவே இரு ஆசைகளை எம்மிடம் தெரிவித்து வந்திருக்கிறாள். இரண்டும் சாதாரண ஆசைகள். ஆனால் நிறைவேற்றுவது தான் மிகவும் கஷ்டம்!" என்றார் கோபணா.

"மண்டலாதிபதிக்குமா கஷ்டம்?" என்று கேட்டார் சாளுவமங்கு.

"ஆமாம். ராணியாரின் ஆசைகளைச் சொல் கிறேன். கேளுங்கள்! திருவரங்கத்தில் அரங்கனது தேர் விழா ஒன்றை நடத்த வேண்டும். தெற்கே தாமிரவர்ணியின் புண்ணிய நீரில் ஆழ்ந்து குளிக்க வேண்டும். இவ்வளவுதான் அந்த ஆசைகள்! ஒன்றல்ல இரண்டல்ல இருபது ஆண்டுகளாகக் கூறி வருகிறாள். நானும் அதற்கென்ன எல்லாம் ஒரு நாளில் நிறைவேறும். என்று கேட்கும் போதெல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறேன். ஆனால் சென்ற மாதம் அரசி என்னை அந்தரப்புரத்தில் ஒரு தனி

உள்ளுக்குள் அழைத்துப் போனாள். அங்கே அதன் கதவுகளைத் திறந்த போது அதிர்ந்து விட்டேன். ஒரே குவியலாகத் தங்கப் பணங்களும், கூறைகளும் (புடவைகள்) குவிந்திருந்தன. இவை எதற்கு என்று கேட்டேன்.

"பணங்கள் எல்லாம் அரங்கனுக்குச் சேர்ந்தவை. கூறைகள் தாமிரவருணிக் கரையில் தானம் வழங்குவதற்காக!" என்றாள். அப்போதுதான் எனக்கு ஒரு உண்மை புலப்பட்டது. அவளது ஆசைகள் ஒரு நாளில் நிறைவேறும் என்று அவநம்பிக்கையில் சொல்லி வந்திருக்கிறேன். ஆனால், அவளோ நம்பிக்கையிலேயே வாழ்ந்திருக்கிறாள். இல்லாவிடில் இருபது வருடங்களாக ஒவ்வொரு தங்கப் பணமாகப் பொறுமையுடன் இவ்வளவு சேர்த்திருப்பாளா?

"அன்று ராத்திரி முழுவதும் அது பற்றித் தான் நினைத்தேன். பத்து வருடங்களாக அவள் நம்பிக்கை வளர்ந்தது போலத்தானே தென் நாடுகளில் மக்களும் வளர்த்து வந்திருப்பார்கள். சொல்லப் போனால் பத்து ஆண்டுகள் அல்ல, இருபது ஆண்டுகளாக நம்பிக்கை வளர்த்திருப்பார்களே! வேத மார்க்கத்துச் சமயங்களை எல்லாம் ரட்சிப்பதற்கு இந்த விஜயநகர மண்டலம் தோன்றியிருக்கிறதே, அவர்கள் நம்மை காப்பாற்ற வருவார்கள் நிச்சயம் வருவார்கள் என்று தானே அவர்கள் நினைத்து வந்திருப்பார்கள். அவர்கள் எல்லோருக்குமே உத்தரமாக, எல்லாம் ஒரு நாள் நடக்கும் என்று எத்தனை நாள் நான் சொல்லிக் கொண்டே இருப்பேன்?

"இப்படி நான் யோசிக்கும் வேளையில்தான் திருப்பதியில் இருந்து யாதவராயரும், கோபணாவும் அனுப்பிய தூதுவர்கள் இங்கே வந்தார்கள். அடுத் தடுத்து அவர்கள் வந்த போது இதுவும் தெய்வச் செயல் தான் என்று நினைத்தேன். இதனால் என்

Released by Maran's Dog. Toronto, Canada

நினைவுகள் பரபரத்தன. சீக்கிரமே இந்த முடிவுக்கு என்னை வரச் செய்தன. நாம் தெற்கே நமது மண்டலத்தை இனி விஸ்தரிக்கிறோம். அதை எப்படியாவது, ஏதாவது யுக்தியிலாவது செய்ய வேண்டும். இதற்கு தடை இனி இல்லை. குமாரா இதை தெரிவிப்பதற்குத் தான் உங்கள் எல்லோரையும் விஜயநகரத்துக்கு அழைத்தேன்."

இவ்வாறு உணர்ச்சியுடன் சொல்லி புக்கராயர் அமர்ந்ததுதான் தாமதம் கோபனா எழுந்தார்.

"மன்னவா! நீங்கள் நீடூழி வாழ்க! என் சபதத்திற்கு ஒரு வழி செய்து விட்டீர்கள்!" என்றார்.

கம்பணர் எழுந்து, "மன்னவா! என் ஆசைகளும் நிறைவேறுவதற்கு வழி வகுத்து விட்டீர்கள். தென் கடல் வரை இந்த மண்டலம் வியாபிக்க வேண்டும் என்று நினைத்தேன். அது நிறைவேறப் போகிறது!" என்றார்.

பின்னர் விஜயநகரத்திலிருந்து படைகளை தெற்கே கொண்டு போவது பற்றிப் பேசினார்கள். தலைநகரி விருந்து படைகளை கொண்டு போவதால் ஏற்படும் ஆபத்துகளையும் பற்றிப் பேசினார்கள். அதுவும் பாமனிக்காரர்கள் துங்கபத்திரையின் வடகரையில் இருக்கும் தருவாயில் அப்படிச் செய்யலாமா என்றும் ஆலோசித்தார்கள். (துங்கபத்திரை நதிதான் எல்லை. அதன் தெற்கே, விஜயநகரம்! வடக்கே பாமனி ராஜ்யம்!)

எல்லா விஷயங்களையும் ஆர அமர அலசி முடிவுகளுக்கு வருவதற்குள் இரவு நேரமாகியது.

அவர்கள் முடிவுகளில் முதலாவது, சம்புவராயர் களைத் தாக்கி அவர்கள் ராஜ்யத்தை இணைத்துக் கொள்வது. இதற்குச் சிறு படை போதுமானது!

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

இப்படிச் செய்யும் போது மதுரை சுல்தானியர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டியது.

அதன் பிறகு சந்தர்ப்பங்கள் சரியாக இருந்தால் மதுரை சுல்தானியர் மீதும் உடனே படை எடுத்து விடுவது.

தீர்மானங்கள் செய்த பின்னர் புக்கராயர் தம் குமாரரான கம்பணரை அருகில் அழைத்து உணர்ச்சிப் பெருக்குடன் அவரைத் தழுவி, தாம் அணிந்திருந்த விலையுயர்ந்த பொன், ரத்தின மாலைகளை அவருக்கு அணிவித்து, மறுநாளே நன்றாக இருப்பதால் படைகள் புறப்படலாம் என்று கூறிவிட்டு எல்லோரிடமும் விடைபெற்று அரண்மனைக்குள் சென்றார்.

Released by Maran's Dog. Toronto, Canada

மறுநாள் நடப்பதை மதுரா விஜயம் எழுதிய கங்காதேவியின் வர்ணனைக்கே விட்டுவிடுகிறேன்.

"மறுநாள் தாமரைகளை எல்லாம் உயிர்ப்பிக்கச் செய்யும் தெய்வீகக் கதிரவன் எழுந்த போது அரசர், கம்பணன் எழுந்து காலை ஜபங்களை எல்லாம் முடித்த பிறகு தமது தளபதிகளை அழைத்துப் படைகளைச் சித்தமாக்கும்படிக் கூறினார்.

"பின்னர் மந்தார மலையைக் கொண்டு சமுத்திரத்தைக் கடைந்த போது ஓசை எழுப்பியதே அது போன்ற மாபெரும் ஓசைகளைத் துந்துபிகள் எழுப்ப ஆரம்பித்தன.

"முகப்படாம் தரித்த யானைகள், கவசம் தரித்த குதிரைகள், வீரர்கள் யாவரும் உடனே சித்தமானார்கள்.

"மதநீர் வழியும் நூற்றுக்கணக்கான போர் யானைகள் ஒன்றாகக் குவிந்தன.

"நானா தேசங்களிலிருந்தும் (குறு நிலங்களில் இருந்தும்) வாள், ஈட்டி, வில், கத்தி தாங்கிய காலாட் படைகள் ஒரு சேரக் குவிந்தார்கள்.

"பலம் பொருந்திய பல குறுநில அரசர்கள் கம்பணர் வருவதை எதிர்பார்த்து அரண்மனை வாயில் வெளியே காத்திருந்தார்கள்.

"அந்தப் பிரதேசம் முழுவதும், தூக்கிப் பிடித்த குடைகளால் நிரம்பிவிட்டன. படைகள் என்னும் பெரும் நதியில் பூத்த தாமரைப் பூக்கள் போல அவை தோன்றின.

"நல்ல முகூர்த்தங்களைக் கணக்கிடும் முறையை கம்பணரே தெரிந்துக் கொண்டிருந்தார். எனினும் தமது புரோகிதர்கள் அந்த நல்ல நேரத்தைக் கணிப்பதற்காக அவர் காத்திருந்தார்.

"அந்தணர்கள் அதர்வ வேதத்தை ஓதி அரசரை ஆசீர்வதித்தார்கள். அரண்மனையை விட்டு, புறப்பட்ட கம்பணர் வாயிலில் சித்தமாக இருக்கும் தமது உயரமான குதிரையை ஏறிட்டுப் பார்த்தார்.

"குதிரை மீது ஏறிக் கொண்டு பின்னால் எண்ணற்ற படைகள் புடை சூழ வெளிவாயிலை மன்னர் கடந்தார்.

"ஒரு பெரிய படையை அழைத்துச் செல்லும்போது மன்னர், பெரும் மேகங்களை இழுத்துச் செல்லும் கீழ்த்திசைக் காற்று போல் தென்பட்டார்."

கம்பணர் தமது சமுத்திரம் போன்ற சேனைகளுடன் தெற்கு நோக்கிச் சென்று கர்நாடக நாட்டில் ஆறு தினங்கள் பிராயணம் செய்து தமது ராஜ்யத்தின் தலைநகரான முள்வாய்ப் பட்டணத்தை அடைந்தார்.

முள்வாய் நகரம் அதிசயம் அடைந்தது. படைகள் எல்லாம் நகரத்திற்கு வெளியே தண்டு இறங்கியிருக்க, குமார கம்பணரும் ஏனைய படைத் தலைவர்களும் நகருக்குள் சென்றார்கள்.

படையெடுப்பின் செய்திகள் முன்னரே நகரத்திற்கு அறிவிக்கப்பட்டதால், நகரம் எங்குமே விழாக் கோலம் பூண்டிருந்தது.

கம்பணர் நேராகத் தமது அரண்மனைக்குள் சென்றார்.

கங்காதேவி மகிழ்ச்சி பொங்க ஓடி வந்து அவரை ஆரத் தழுவிக் கொண்டாள்.

திரு நாராயணபுரம் போய்விட்டு ஒரு வாரத்தில் வருகிறேன் என்று சொன்ன கணவர் எத்தனை மாதங்கள் கழித்துத் திரும்பியிருக்கிறார்?

இவ்வளவு நாட்களும் வராமல் ஏமாற்றி விட்டாரே!

எங்கெல்லாமோ போய்விட்டு கடைசியில் விஜயநகரத்தில் இருந்து ஒரு பெரும் படையோடு வந்து நிற்கிறாரே!

இவரை என்ன செய்தால்தான் என்ன என்று கங்கா மனத்தில் நினைத்து துக்கமும், மகிழ்ச்சியும் ஒருங்கே பொங்க கம்பணரை மனதாரத் தழுவினாள்.

ஐந்து தினங்கள் கம்பணர் தலைநகரில் இருந்து பல ஆயத்தங்களைச் செய்து கொண்டார்.

ஆறாம் நாள் படைகளோடு மீண்டும் புறப்பட்டார்.

ராணி கங்காதேவியும், அவரது பிரயாணத்தில் சேர்ந்திருந்தாள்.

கிழக்கு முகமாக ஒரு வாரம் பிரயாணம் செய்து பாலாற்றின் கரையிலுள்ள விரிஞ்சிபுரத்தை எல்லோரும் அடைந்தார்கள்.

விரிஞ்சிபுரம் சம்புவராய ராஜ்யத்தைச் சேர்ந்தது.

விஜயநகரத்திலிருந்து பெரும் படை ஒன்று பாலாற்றில் தண்டு இறங்கியிருக்கும் செய்தி சம்புவராய அரசர் ராஜ நாராயணனுக்கு எட்டிவிட்டது.

அவர் அப்போது காஞ்சிபுரத்தில் வெட்டுக் காயத்திலிருந்து குணமாகி வந்த தமது குமாரன் 'வென்று மண் கொண்ட' சம்புவராயனுடன் தங்கியிருந்தார். அவர் உடன் தமது படைகளைச் சித்தம் செய்து கொண்டு காஞ்சிபுரம் கோட்டையைப் பலவிதங்களில் பலப்படுத்தத் தொடங்கிவிட்டார்.

கம்பணரின் படைகள் விரிஞ்சிபுரத்தில் சில நாட்கள் தங்கி தகுந்த தருணத்தை எதிர்பார்த்த வண்ணம் இருந்தன.

சூசகமான தருணம் கிடைத்தவுடன் கம்பணர் படைகளைப் புறப்படச் சொல்லி வேகமாகக் காஞ்சீபுரத்தை நோக்கிப் பிரயாணப்பட்டார்.

காஞ்சீபுரம் பெரும் தாக்குதலுக்கு உட்பட்டது.

உள்ளே தங்கியிருந்த ராஜநாராயண சம்புவராயர் தமக்கு எங்கிருந்தாவது ஏதாவது உதவி வரும் என்று எண்ணியிருந்தார்.

ஆனால் எந்த உதவியும் வருவதற்கில்லை என்று நான்கு நாட்களில் தெரிந்து விட்டது.

கம்பணரின் படைகள் இதற்கிடையில் தங்கள் தாக்குதலை உக்கிரமாக்கிக் கோட்டையை உடைக்க முயலவே, சம்புவராயர் இரவுக்கிரவே மகனுடனும், படைத் தளபதிகளுடனும் கோட்டையை விட்டு

வெளியேறி நேராகத் தமது தலைநகரான ராஜ கம்பீரமலைக்குச் சென்று விட்டார்.

காஞ்சீபுரம் கோட்டை கம்பணரிடம் சரண் அடைந்தது.

தர்மத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்காக மாபெரும் விஜயநகர சேனை வந்திருக்கிறது என்று தெரிந்து வீடுகளையும், வீதிகளையும் மக்கள் அலங்கரித்து வைத்திருந்தார்கள்.

காஞ்சீபுரத்து வீதிகளில் கம்பணர் நுழைந்த போது, "வீர கம்பணர் வாழ்க! குமார கும்பணர் வாழ்க!" என்ற வாழ்த்தொலிகள் எங்கும் பரந்தன.

நகரமே ஒரு வெறியான ஆர்ப்பரிப்பில் பொங்கி எழுந்து கொண்டிருந்தது.

நகரின் அரண்மனைக்குச் சென்று தண்டு இறங்கிய கம்பணர் தமது ராணி கங்காதேவியை அழைத்து,

"கங்கா! பிரசித்தி பெற்ற காஞ்சி நகரைப் பார்க்க வேண்டும் என்றாயே, நீயே போய்ப் பார்! கோவில்களையும், மடங்களையும் மனதாரப் பார்த்து விட்டு வா!" என்று கூறினார்.

7

"நகரைச் சுற்றிப் பார்ப்பதுதானே?" என்று அரசர் கூறியதும், கங்காதேவி மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

"ஆமாம், சுவாமி! நான் சீக்கிரமே பார்த்தாக வேண்டும். பாரவி சொன்னதைத் தாங்கள் கேட்டதில்லையா?" என்று கேட்டாள்.

"என்ன சொன்னார் பாரவி?" என்றார் அரசர்.

கங்கா உடனே இனிதான குரலில்,

"புஷ்பேஷு ஜாதி,
புருஷேஷு விஷ்ணு,
நாரீஷு ரம்பா,
நகரேஷு காஞ்சி!"

என்று ராகமிட்டுக் கூறினாள்.

இதைக் கேட்ட குமார கம்பணர், "கங்கா உன் அளவு வடமொழியில் பாண்டித்தியம் எனக்குக் கிடையாதே! இதன் அர்த்தத்தைச் சொல்!" என்று கூறினார்.

"சொல்கிறேன். மலர்களில் அழகானது ஜாதி! புருஷர்களில் அழகானவர் விஷ்ணு! பெண்களில் அழகானவள் ரம்பா! நகரங்களில் அழகானது காஞ்சி!" என்றாள் கங்கா.

"பாரவி எப்போது வாழ்ந்தார்?" என்றார் மன்னர்.

"கிட்டத்தட்ட அறுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்ததாகப் பெரியவர்கள் கூறுகிறார்கள்!" என்றாள் கங்கா.

"அடேயப்பா! அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பா? அவர் இப்போது வாழ்ந்தால் என்ன சொல்வார் தெரியுமா?" என்று கேட்டார் மன்னர்.

"சொல்லுங்கள்!" என்றாள் ராணி.

"புஷ்பேஷு ஜாதி,
புருஷேஷு விஷ்ணு,
நாரீஷு கங்கா,
நகரேஷு காஞ்சி!"

என்று முடித்தார் மன்னர்.

கங்கா கலகலவென்று சிரித்தாள். "ஏது! நீங்களே ஒரு கவி போல இருக்கிறதே!" என்றாள்.

"கவி ஆகத்தான் பார்க்கிறேன். ஆனால் நாட்டு நிலைமை அதற்கு அனுகூலமாக இல்லையே!" என்றார் மன்னர்.

மாலையில் ராணி கங்காதேவி நகரத்தை வலம் வர ஆரம்பித்தாள்.

எங்கும் மக்கள் திரள் திரளாக நின்று ஜய கோஷங்களை வழங்கினார்கள்.

அவர்கள் உற்சாகம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது.

சம்புவராயர் வேத சமயத்தையே சார்ந்தவர் என்றாலும் சுல்தானுக்கு அவர் அடி பணிந்து போனதால் மக்களுக்கு அவர் மீது அதிகமாக அதிருப்தி இருந்தது.

வழிபாடுகளிலும், பண்டிகை உற்சவங்களிலும் பூரணமான சுதந்திரத்தைக் காண முடியவில்லையே என்று வருத்தப்பட்டார்கள் அவர்கள்.

எனவே அந்த ஆட்சி இப்பொழுது அழிகிறது என்று தெரிந்த போது அவர்களுக்கு மகிழ்ச்சி கரை புரண்டு வந்தது.

விடுதலை கிடைத்த ஒரு உணர்ச்சி எல்லோரது முகங்களிலும் தனியாகத் தெரிந்தது.

முதன் முறையாகத் தமிழ் பேசும் நாட்டில் உள்ள கோவில்களைத் தரிசிக்கும் பேறு கங்காவுக்குக் கிடைத்தது. புகழ் பெற்ற காஞ்சி வரதரையும், ஏகாம்பரேசுவரரையும் மற்றும் பிரசித்திப்பெற்ற அநேக காஞ்சித் தல கோவில்களையும் தீர்த்தங்களையும் அவள் தரிசித்தாள்.

எல்லாவற்றையும் முடித்துவிட்டு அரண்மனை திரும்பும் போது, கங்காவின் மனம் அதுநாள் வரை அனுபவித்தறியாத இன்பத்தை அனுபவித்தது.

இரவில் கங்காதேவியை, "நகரம் எப்படி இருந்தது?" என்று கம்பணர் கேட்ட போது,

"சுவாமி, பாரவி சொன்னது நிச்சயம் சரிதான். நகரம் அற்புத அழகாக இருக்கிறது. இனி நாம் காஞ்சியைத்தான் நம் தலைநகரமாக்கிக் கொள்ள வேண்டும்!" என்று கூறினாள்.

"செய்வோம். முதலில் சம்புவராயர் ராஜ்யத்தைப் பிடித்துவிட்டு அதைச் செய்வோம். நாளை நாங்கள் ராஜ கம்பீரன் மலைக்குப் புறப்படுகிறோம்!" என்றார் மன்னர்.

அகழிக் கரையோரம் அரண்மனை அடிவாரத்தில் விழுந்திருந்த வல்லபனும், தத்தனும் இரு நாட்கள் பட்டினி கிடந்தார்கள்.

இதற்கு மேலும் என்ன நடக்கும் என்று நினைத்த போது, வல்லபனுக்குச் சில விசித்திரமான நினைவுகள் தோன்றின.

தனது மதுரா மட்டும் உண்மையில் ஒரு அறிவுள்ள பெண்ணாக இருந்தால் அவன் அங்கிருப்பதை உணர்ந்து விடுவாள் என்று நினைத்தான்.

மேலும் அவனைப் போல அவளுக்கும் பிரேமை இருக்குமானால் அவன் இருக்கும் இடம் திருஷ்டியில் உதிப்பது போல அவள் மனத்தில் உதித்து விடும்.

பிரேமைக்கு அத்தகைய அபூர்வ சக்தி உண்டு. ஒருவர் நினைப்பதை மற்றவர் தானாகவே நினைத்து விடுவார்.

ஒருவர் இருக்கும் இடத்தை மற்றவர் தானாகவே உணர்ந்து விடுவார்.

ஆகவே நிச்சயம் அந்த ராஜகுமாரி மதுராதேவி அவள் மனத்தில் தூய பிரேமை இருக்குமானால், அவன் இருக்கும் இடத்தையும், அவன் படும் துயரத்தையும் அறிந்து விடுவாள் என்று நினைத்தான்.

மூன்றாம் நாளும் பட்டினி கிடக்கவே, தத்தன் அவனை நோக்கி, "வல்லபா! வழியில் பிறழாதே என்று உன் தாயார் கூறியிருந்தாளே அவள் சொல்படி நடந்திருந்தால் இந்த இக்கட்டில் அகப்பட்டு இருப்போமா? நாம் நமது வழியே போயிருப்போம் அல்லவா?" என்று புலம்பினான்.

அவனுக்கு மறுமொழி சொல்லத் தெரியாமல் வல்லபன் மௌனமாக இருந்து விட்டான்.

நான்காம் நாள் காலையில் வயிற்றுப் பசி கிள்ளி, இதனால் மயக்கம் ஏற்படுமோ என்று பயப்படும் தறுவாயில் தத்தன் வல்லபனை நோக்கி,

"வல்லபா! நம் உடலில் பலம் எஞ்சியிருக்கும் போது தப்பிக்க ஏதாவது வழி செய்தால்தான் நல்லது. இல்லாவிடில் அசக்தர்களாகி விடுவோம்!" என்று எச்சரித்தான்.

வல்லபனுக்குக் குழப்பமாக இருந்தது. அவன் செய்த காரியம் தவறோ என்று கூடத் தோன்ற ஆரம்பித்தது.

எனினும் மனத்தில் அவன் தன் பிரேமை மீது வைத்திருந்த நம்பிக்கை தளரவில்லை.

தூய பிரேமை மட்டும் இருந்தால் நடக்க முடியாதெல்லாம் நடக்கும் என்று இன்னும் எண்ணினான் அவன்.

எனினும் என்ன செய்வோம் என்ற தத்தளிப்புடன் கீழ் தாழ்வாரப் பதவலை விட்டு வெளியே வந்து மேலே பார்த்த போது, திடீரென்று ஒரு கூடை இறங்குவதைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

அந்தச் சிறு கூடை ஒரு கயிற்றுடன் கீழே இறங்கி, தரையில் அந்தப் புறமும் இந்தப் புறமும் தலையை ஆட்டி அவர்களை அழைத்தது.

வல்லபன் தீவிரமாக யோசித்து பிறகு நீண்ட மரக்குச்சி ஒன்றை எடுத்து கூடையிலிருந்து ஓலையை மட்டும் மெள்ள எடுத்துக் கொண்டான்.

ஆவலோடு பிரித்த போது அதில்,

"இளவரசியார் மதுராங்கினியின் அந்தரங்கத் தாதி விசுவப்ரியா தெரிவிப்பது எமது அரசியார் நீங்கள் இங்கே தான் இருக்க வேண்டும் என்று ஊகம் வைத்திருக்கிறார். இங்கே இருப்பீர்களானால் உத்தரம் அனுப்பவும்!"

என்று கண்டிருந்தது.

ஒரு கணத்தில் உணர்ச்சிகள் பெருக்கெடுத்து வந்தாலும் இதில் ஏதாவது சூழ்ச்சி இருக்கும் என்று சந்தேகித்து அந்த ஓலையை மறுபடியும் அந்தக் கூடைக்குள் போட்டுவிட கூடையும் சிறிது நேரத்தில் மேலே சென்று விட்டது.

அப்பால் கால் நாழிகை கழித்துக் கூடை கீழே இறங்கியது.

இந்தத் தடவை அதே பழைய ஓலையுடன் ஒரு கங்கணமும் வைக்கப்பட்டிருந்தது.

கங்கணத்தின் மீது மீன் உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நிச்சயம் இது அரசகுமாரியின் கங்கணந்தான். அவர்களுக்கு உறுதி

அளிக்கவே இதை அனுப்பியிருக்கிறாள் என்று நிச்சயித்தான்.

ஓலையை எடுத்து அதன் மறுபுறத்தில், "நானும், என் சிநேகிதனும் இங்கே அகப்பட்டிருக்கிறோம். ஓரே பசி! ஏதாவது அனுப்புங்கள். தப்பிக்க வழி செய்யுங்கள்!" என்று எழுதி மேலே அனுப்பினான்.

சிறிது நேரத்தில் உணவுப் பண்டங்களுடன் கூடை இறங்கியது. "சீக்கிரம், நீங்கள் தப்பிக்க ஏற்பாடு செய்கிறோம்!" என்று விசுவப்ரியா ஓலையில் எழுதி இருந்தாள்.

ஒரு வாரம் இதுபோல் பண்டங்கள் போக்குவரத்து நடத்தி பிறகு ஒரு நாள் காலையில் இரு இளைஞர்களும் நூலேணி மூலமாக மேலே ஏற்றப்பட்டார்கள்.

அங்கே அவர்களுக்கு ஒரு பழைய கொடிக் கம்பு வைக்கும் அறை ஒதுக்கப்பட்டது. அதில் மூன்று நாட்கள் தங்கிய பிறகு, முதலில் தத்தனை தப்புவிப்பதற்காக விசுவப்ரியா அழைத்துப் போனாள்.

அவன் போய் இரண்டு நாட்களிலும் வல்லபனுக்கு எந்தவிதச் செய்தியும் வரவில்லை.

யாரிடமாவது தாதிகளிடம் கேட்கலாமா என்று பார்த்தால் அது போல் செய்யக் கூடாது என்று விசுவப்ரியா எச்சரித்திருந்தாள்.

அறையும் எப்போதும் மூடியே இருந்தது. அதைத் திறந்தால் என்ன ஆகுமோ என்று பயம் வேறு.

அப்படித் தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருந்த போது மூன்றாம் நாள், "ஐயா, ஐயா!" என்று இனிதான ஒரு மொழிக் கேட்டது.

வல்லபன் குரல் வரும் திசை தெரியாது குழம்பினான்.

"ஐயா, ஐயா! உங்களைத் தான்! நீங்கள் என் குரலைத் தான் கேட்க முடியும். என்னைப் பார்க்க முடியாது. அப்படி ஒரு இடத்தில்தான் இருக்கிறேன்!" என்றது குரல்.

"சொல்லுங்கள்! நீங்கள் யார்? என்னிடம் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்? நான் இங்கிருந்து தப்ப முடியுமா? என் நண்பன் எங்கே போனான்?" என்று சரமாரியாகக் கேள்விகளைக் கேட்டான் அவன்.

"ஐயா! ஒரேயடியாகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறீரே! ஒவ்வொன்றாகக் கேளுங்கள்!" என்றாள்.

"சரி முதல் கேள்வியைக் கேட்கிறேன். நீங்கள் யார்?" என்றான் அவன்.

"அதற்கு முன் நீங்கள் சொல்லுங்கள் நீங்கள் யார்?" என்றாள் அவள்.

குரல் வரும் திசையைப் பார்த்தால் அவள் ஏதோ ஒரு சாளரத்தின் ஓரத்தில் இருந்து கொண்டு பேசுவது போலிருந்தது. இது யாராக இருக்கும்?

"இது தெரியாதா உங்களுக்கு? ரத்தின வியாபாரி!" என்றான் அவன்.

"இல்லையே! நீங்கள் வேஷம் போட்டிருக்கிறீர்கள்! எனக்குத் தெரிந்து விட்டது!" என்றது குரல்.

"வேஷமா? நானா? எப்படிச் சொல்கிறீர்கள்?" என்றான் அவன்.

"நீங்கள் இரு இளைஞர்களும் வழிப் பிரயாணத்தின் போது தாடி மீசை ஏதும் இல்லாமல் இருந்தீர்கள்."

அவன் திடுக்கிட்டான்.

"அது உங்களுக்குத் தெரியுமா? அப்படியானால் நீங்கள் யார்?" என்றான் அவன் பரபரப்புடன்.

"வழியில் ஒரு பெண்ணைப் பார்த்தீர்களே அந்தப் பெண் தான் நான்!" என்றது குரல்.

வல்லபன் முகத்தில் ரத்தம் ஏறியது.

"நிச்சயமாகத்தானா?" என்றான் அவன். அவன் உடலெல்லாம் குறுகுறுத்தது.

"நான் உங்கள் இருவருக்கும் அனுப்பிய மகர கண்டிகையும், மகர கங்கணமுமே அதற்குச் சாட்சி!" என்றாள் அவள்.

வல்லபன் திடுக்கிட்டான்.

"அப்படியானால் தாங்கள் . . . . ." என்று இழுத்தான்.

"பாண்டிய இளவரசி!" என்றது குரல்.

"தாங்களா?. . . . ." என்றான் அவன் உணர்ச்சிப் பெருக்குடன். பிறகு தன் உணர்ச்சி அதிகமாகி விட்டதென்று தன் நாக்கை கடித்துக் கொண்டான்.

"ஆமாம், நானேதான்! வழிப் பயணத்தில் உங்கள் இருவருக்கும் அதைக் குறிப்பால் உணர்த்தினேன். நீங்கள் புரிந்துக் கொள்ளவில்லை!" என்றாள் அவள்.

"நீங்கள் குறிப்புக் கொடுக்கிறீர்கள் என்பது தெரிந்தது. ஆனால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை!" என்றான் அவன்.

"திருக்குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் என்று பாடினேனே அது தெரியவில்லையா?"

"இரு முறை அதே வார்த்தைகளை அழுத்திப் பாடினது எங்களுக்குத் தெரியும். ஆனால் அதன் உட்பொருளை எங்களால் கணிக்க முடியவில்லை."

"பாண்டிய நாட்டுக்கே என்னை அனுப்பி விடுங்கள் என்று அர்த்தம். சரி, அது போகட்டும். மகர கண்டிகையைச் சத்திரத்தில் போட்டேன். ஓலையும் வைத்தேன். இது பற்றி வண்டி ஏறினதும் அபிநயித்தேன். அதையும் புரிந்து கொள்ளவில்லை!"

வல்லபனுக்கு அவள் சொல்லச் சொல்ல உடலில் எங்கேயோ உறைத்துக் கொண்டிருந்தது.

துப்பு ஆயும் திறன் இல்லாமல் போய்விட்டதே! இவளை அப்போதே காப்பாற்ற முடியவில்லையே என்று நினைத்தான்.

"என்ன மௌனமாகி விட்டீர்கள். நான் சொல்வதெல்லாம் உண்மைதானே?" என்றது குரல்.

"ஆமாம்!" என்றான் அவன்.

"இவ்வளவு குறிப்புகள் நான் கொடுப்பதற்கும் ஒரே ஒரு காரணம் இருந்தது!" என்றது குரல்.

"என்ன காரணம்?"

"உங்கள் இருவரில் ஒருவர் எனக்காக உயிரை விடவும் துணிந்தீர்கள்!" என்றாள் அவள்.

"அது நான் தான் நான் தான்!" என்றான் அவன் அவசரமாக. பிறகு தனது படபடப்பைக் கண்டு அவனே வெட்கப்பட்டான்.

"நல்லது. உங்களது அந்தத் துணிச்சல்தான் உங்கள் இருவர் மீதும் நம்பிக்கையைக் கொடுத்தது. அதனால் தான் நான் யார் என்பதை உங்களுக்கு வெளிப்படுத்த முயன்றேன். ஓலையில் விபரமாக எழுதியிருப்பேன். அதற்கு அவகாசம் இல்லாமல் போய்விட்டது. ஆனால் கடைசியில் நான் யார் என்பதை எப்படியோ கண்டுபிடித்து இவ்வளவு தூரம் வந்திருக்கிறீர்களே! அது எப்படி முடிந்தது?" என்று கேட்டாள் அவள்.

"அதை நாங்கள் கண்டுபிடிக்கவில்லை. வேறொருவர் கண்டுபிடித்தார்!"

"யார் அது?"

"அந்தக் கற்பூர வியாபாரி. சத்திரத்தில் பார்த்தோமே?" என்றான் அவன்.

"அந்தக் கோமாளி வியாபாரியா?" என்றாள் அவள்.

"நானும் கோமாளி என்று தான் நினைத்தேன். ஆனால் அவன் பெரிய விசித்திரசித்தன்!"

"அவர் பேசியதைப் பார்த்தே அது தெரிகிறது யார் அவர்?"

"சொல்கிறேன். விஜயநகரத்து தென்மண்டலத்தின் ஒற்றர் தலைவர் அவர். கற்பூரகாந்தன் என்று பெயர்."

"அவரா என்னைக் கண்டுபிடித்து விட்டார்?"

"ஆமாம்! இளவரசி அவர் யமகாதகராக இருக் கிறார். அவரது அறிவையும், திறமையும் பார்த்து நான் அதிசயிக்கிறேன். அவர் சொல்லுக்கு நான் மந்திரம் போல் கட்டுப்படுகிறேன். அவர்தான் தாங்கள் இன்னார் என்று கூறி, தங்களுக்கு ஒரு ஓலையையும்

கொடுத்து அனுப்பினார். நீங்கள் அந்தப்புரத்தில் சிறை வாழ்ந்து நொந்து போய் தற்கொலை செய்து கொண்டு விடக் கூடாதே என்பது அவர் கவலை. அதற்காகத்தான் எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார். நாங்களும் இரத்தின வியாபாரிகளாக இங்கே வந்தோம். எவ்வளவோ அவர் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார். ஆனால் சரியான சந்தர்ப்பத்தில் கோட்டை விட்டு விட்டோம். இப்படி நேர்ந்ததுகூட எங்கள் சிறுபிள்ளைத்தனத்தால்தான். . "

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே தடால் என்று தாம்பாளம் மறுபுறத்தில் விழும் பெரும் ஓசை கேட்டது.

தொடர்ந்து அரவங்களும் கேட்டன.

வல்லபன் பயந்து போய் மௌனமானான்.

8

அடுத்த அறையில் தாம்பாளம் விழுந்த சப்தம் கேட்டது. அந்தப் பெண் குரல் நின்றுவிட்டது. தொடர்ந்து உள்ளே அரவம் கேட்டன.

ஏதோ அங்கே நடக்கிறது என்று வல்லபன் நினைத்தான். அந்தப் பெண் பேசியதை யாராவது கேட்டிருப்பார்கள். யாருடன் பேசினாள் என்பதை அறியச் சோதனை போட வந்திருப்பார்கள். அப்படிச் செய்யும் போது அடுத்தாற் போல் இந்த அறைக்கும் வருவார்கள். நம்மைப் பிடித்தாலும் பிடிப்பார்கள்.

அறைக்குள் சுற்றி வரப் பார்த்தான். ஒளிய இடம் இருக்கிறதா?

மேலே உச்சாணி வரை கொடிக் கம்பங்கள் நீண்டு கிடந்தன. பழைய கொடித் துணிகள் தாறுமாறாகத் தொங்கி கொண்டிருந்தன.

வல்லபன் ஒரு கம்பத்தைப் பிடித்து மேலே ஏறினான். அங்கே சித்திர வேலைப்பாட்டுடன் ஒரு தாமரைப் பட்டிகை காணப்பட்டது. அதில் காலை ஊன்றுவதற்குத்தான் இடம் இருந்தது. ஏறி அதன் கீழ் அமர்ந்து கொடிக் கம்பங்களை மெதுவாக நகர்த்தி கொடித் துணிகளால் தன்னை மறைத்துக் கொண்டான்.

அவன் நினைத்தது வீண் போகவில்லை. சில விநாடிகளில் சில அலிகளும், பெண் வீரர்களும் கொடிக் கம்ப அறைக்குள் வந்தார்கள்.

இந்தக் கதை நடக்கும் காலத்தில் அரண்மனையில் வேலை செய்யும் பெண் பரிவாரங்கள் எல்லாவிதப் பயிற்சிகளையும் பெறுவது வழக்கம். குதிரை ஏற்றம், யானை ஏற்றம், வாள் பயிற்சி, மல்யுத்தம், வில்பயிற்சி ஆகியவைகளில் ஈடுபட்டு வீராங்கனைகளாகத் திகழ்வார்கள்.

ராணிகள் யாத்திரை போவதனால் இந்தப் பெண்கள் ஈட்டிகளும், வில்களும் தாங்கி, குதிரை மீது ஆரோகணித்துப் போவார்கள்.

அப்படிப்பட்ட பெண் வீரர்கள் பலர், கொடிக் கம்ப அறைக்குள் நுழைந்து சுற்றி வரப் பார்த்தார்கள். கிடந்த துணிப் பொதிகளைக் காலால் உதைத்தார்கள். மாடத்தின் பக்கம் சென்று கைப்பிடிச் சுவரிலிருந்து குனிந்து அரணையும் அகழியையும் பார்த்தார்கள். பிறகு அறைக்கு வந்து அதை மூடிக் கொண்டு வெளியே போனார்கள்.

வல்லபனுக்குக் கதக் கதக் என்றிருந்தது. அகப்பட்டால் என்ன செய்வோம் என்று நினைத்தான். இந்தப் பெண் புலிகளுடன் போராடி வெற்றி பெற

முடியும். ஆனால் எதிரிகளின் அரண்மனைக்குள் அகப்பட்டு இருப்பதால் மற்ற வீரர்கள் ஓடி வந்து அவனைச் சூழ்ந்து விடுவார்கள்.

ஆகவே பேசாமல் இருப்பது தான் ஒரே வழி என்று இருந்து விட்டான்.

இப்போது பெண் வீரர்கள் போன பின் பட்டிகையிலேயே அப்படியே அமர்ந்திருந்தான். நாழிகையாகியும் இறங்கவில்லை.

ஒரு முகூர்த்தம் ஓடியிருக்கும்.

கதவு மெள்ளத் திறந்தது. போர்வை போர்த்திய தாதி ஒருத்தி உள்ளே நுழைந்து, "ஐயா! ஐயா!" என்று அழைத்தாள்.

இவள் நமக்குச் சாதகமானவளா? அல்லது நம்மைப் பிடிக்க மற்றவர்கள் சூழ்ச்சி செய்கிறார்களா?

வல்லபன் அசையாது இருந்தான்.

அந்த தாதி அறை முழுவதும் தேடினாள். பிறகு மாடத்திற்குச் சென்று கீழே பார்த்தாள். மீண்டும் அறைக்குள் வந்தாள்.

"ஐயா! ஐயா! எங்கிருக்கிறீர்கள்? நான் தான் வந்திருக்கிறேன். நீங்கள் வெளியே வரலாம்?" என்றாள்.

அந்தக் குரல் அவனுக்குத் தெரிந்தது போல் இருக்கவே ஆச்சரியப்பட்டு தன்னை மறைத்த கொடிக் கம்பை அவன் நகர்த்த அந்தச் சப்தம் கேட்டு அவள் தலையை நிமிர்த்தினாள்.

அவன் பிரமித்து விட்டான்.

அங்கே நின்று கொண்டிருந்தது யார்? பாண்டிய இளவரசிதானா?

கம்பத்தின் வழியே கீழே இறங்கி அவள் முன்னால் நின்றான். "நீங்களா?" என்று சொல்லித் தடுமாறினான்.

உணர்ச்சி வசத்தில் அவன் பார்வை மறைந்து விட்டது. ராஜகுமாரியின் தோற்றம் ஒரு உருவெளியாகத் தெரிந்தது. அவளை ஏறிட்டுப் பார்க்கவும் அவனுக்குத் திறன் இல்லை.

"ஐயா, புத்திக் கூர்மையுடன் நடந்திருக்கிறீர்கள். இல்லாவிடில் இந்நேரம் சிறைப்பட்டிருப்பீர்கள் உங்களுக்கு என்ன நேர்ந்ததோ என்று பார்க்கவே வந்தேன்!" என்றாள்.

அந்த இனிய குரலை - அவனது மகர விழியாளின் தீங்குரலை அருகில் கேட்கவே கரும்பாக இருந்தது.

உடலில் எங்கெல்லாமோ உணர்வுகள் கொழித்து வந்தன. பேச நா எழவில்லை. எனினும் தடுமாறிக் கொண்டு, "எனக்கு நேர்வது அவ்வளவு முக்கியமல்ல, இளவரசி! தங்களுக்கு ஏதாவது நேராமல் இருப்பதுதான் முக்கியம். ஏனெனில் தங்களது உயிர் எவ்வளவு முக்கியமானது என்பதை கற்பூரகாந்தன் என்ற ஒற்றர் தலைவனே விளக்கிவிட்டார். அவர் விஜயநகரம் நோக்கிப் போயிருக்கிறார். அவசியம் படைகளுடன் சீக்கிரம் வருவார். தங்களை மீட்டுத் தங்கள் ராஜ்யத்தில் சென்று ஒப்படைப்பார். அதுவரை இளவரசி தாங்கள் மனந் தளராது, நம்பிக்கை குறையாது இருக்க வேண்டும். அதைத்தான் கற்பூர காந்தனும் விரும்பினார்!" என்று கூறினான்.

பேசும்போது அவன் ஓரிரு முறை நிமிர்ந்து விட்டுக் குனிந்து கொண்டான்.

"ஐயா!" என்றாள் இளவரசி! "இனம் தெரியாத யார் யாரோ எங்களுக்கு உதவி செய்ய முன்

Released by Maran's Dog. Toronto, Canada

வந்துள்ளார்கள் என்றால், அது எங்கள் குறுங்குடி வாழும் நாரண நம்பியின் அருளால்தான்! உயிர் துறக்க வேண்டும் என்று அடிக்கடி நான் நினைத்தேன். ஆனால் எனது பெண்மைக்கு ஏதும் பங்கம் வராத வரையில் அப்படிச் செய்யக் கூடாது என்று இருந்து வந்தேன். அதுவே நன்மையாகப் போய்விட்டது. கடவுள் உங்கள் உருவிலும் கற்பூர காந்தன் உருவிலும் எனக்கு அருள் புரிகிறார். இதுவே எனக்கு மேலும் உயிரை காக்க உதவி புரிகிறது! ஐயா! எனக்கு அதிக அவகாசம் இல்லை... இங்கே எனக்குக் கண்காணிப்பு அதிகம். அதனால் தான் தாதி உடை உடுத்திக் கொண்டு இங்கே வந்தேன். நீங்கள் ஒளிந்தவாறே இருங்கள்! ஏனெனில் என் மீது பெண் பாதுகாவலர்களுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. இந்த அறைக்குத் திடீரென வந்து அவர்கள் பார்ப்பார்கள். எப்போதும் ஒளிந்து இருங்கள்!" என்று சொல்லி விட்டுப் போகப் புறப்பட்டாள்.

Released by Maran's Dog. Toronto, Canada

"இளவரசி!" என்றான் அவன். அவள் நின்றாள்.

"என் நண்பன் எங்கே? விசுவப்ரியா அழைத்துப் போனாளே?" என்றான்.

"விசுவப்ரியாவைக் காவலாட்கள் பிடித்து விட்டார்கள். துரோகச் செயலுக்காக அவளைச் சிறையில் தள்ளி விட்டார்கள். உங்கள் நண்பர் பிடிபடவில்லை. அதற்குள் தப்பிவிட்டார். இந்த நகரத்திற்குள் எங்கேயாவது ஒளிந்து இருக்க வேண்டும். இதை விட்டு அவர் சென்றிருக்க முடியாது. அவ்வளவு பலத்த பாதுகாப்புகள் கோட்டைக்கு உண்டு. நீங்கள் கவலை கொள்ளாது இருங்கள். ஆண்டவன் நமக்கு நிச்சயம் வழி காட்டுவார். நான் வருகிறேன். நாழிகை ஆகிவிட்டது" என்று கூறி உடனே வெளியே போனாள் இளவரசி.

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

அவள் வந்தது, போனது எல்லாம் ஒரு நாழிகை வரையிலும் அவனுக்குப் பிரமையாகவே இருந்தது.

நடந்ததெல்லாம் கனவா என்று பலமுறை தன்னைக் கேட்டுக் கொண்டான்.

அவளை நன்றாகப் பார்க்காமல் இருந்து விட்டோமே என்று மனம் இடித்துக் காட்டியது.

மனதில் அவளது உருவைப் பல முறை பிடிக்க முயன்று முடியாமல் தவித்தான் அவன்.

சீ! இவ்வளவு அருகில் இருந்தாளே அவள்! ஒருமுறை நன்றாகப் பார்த்திருக்கக் கூடாது?

"இல்லை, பார்க்கத்தான் முயன்றேன். ஆனால் என் உணர்ச்சிகளே என் கண்களை மறைத்து விட்டன!" என்று ஒரு மனம் சமாதானம் கூறியது.

உருவத்தைப் பார்க்காததற்கு ஒருவாறு சமாதானம் அடைந்த பின் அவளிடம் சரியாகப் பேசினோமா என்று மனம் சஞ்சலப்பட ஆரம்பித்தது.

இன்னும் அவளிடம் இரண்டு வார்த்தைகள் அதிகமாக பேசியிருக்கலாம். அவளது நிலையைக் குறித்து ஏதாவது அனுதாபமாகப் பேசியிருக்கலாம். அவளைக் கவலைப்படாதிருக்கும்படி தைரியம் சொல்லி இருக்கலாம். வழிப் பயணத்தில் அவளுக்கு நேர்ந்த கஷ்டங்களைக் குறித்துத் தனது வருத்தத்தைத் தெரிவித்திருக்கலாம். இன்னும் இப்படி எத்தனையோ நுண்ணிதான வழிகளில் அவன் மனம் பாய்ந்து சென்று அவன் செய்யாத காரியங்களையும் சொல்லாத வார்த்தைகளையும் நினைத்து துக்கப்பட்டது.

கடைசியில் ஒரு வார்த்தை, அவள் கூறிய ஒரே வார்த்தை அவன் மனதில் விடாப்பிடியாகத் தைத்து நின்று அவனுக்குப் புளகிதமான இன்பத்தை வாரி வழங்கியது.

"ஆண்டவன் நமக்கு நிச்சயம் வழிகாட்டுவார்!" என்றாள். எவ்வளவு ஆதரவான அன்புகனிந்த வார்த்தை அது! இருவரையும் அதில் பிணைத்துக் கூறிவிட்டாளே! அதை யதேச்சையாகச் சொல்லி இருப்பாளா? உணர்ந்தே சொல்லியிருப்பாளா?

இருவருக்கும் ஒரே அனுபவமாக இப்போது ஒரே தன்மையான கஷ்டம் இருந்தது. ஆனால் அந்தக் கஷ்டமே அவனுக்கு இன்பமாகத் தோன்றியிருந்தது. ஏனெனில் அவளுடன் அவன் சேர்ந்து அனுபவிப்பதால்.

இரவெல்லாம் தூங்கவே இல்லை அவன்.

ஒவ்வொரு தினமாக ஓடியது. ஒரு வாரமும் சென்றுவிட்டது. வல்லபன் தத்தளித்து விட்டான். ஏனெனில் மதுராங்கினி மீண்டும் வரவேயில்லை. அடுத்த அறையிலிருந்து பேசவும் இல்லை.

வேளா வேளைக்கு உணவு வந்து கொண்டிருந்தது. அதைக் கொணர்ந்து கொடுத்த சேடியிடம் அவன் ஏதும் பேசக் கூடாது என்று உத்தரவாகி இருந்தது. நினைவு பொறுக்காமல் ஒரு நாள் அவளிடம் பேசிய போதுதான் அவள் ஊமை என்றும் தெரிந்தது.

சோதனையாக எட்டாவது நாளிலிருந்து அந்தச் சேடி வருவதும் நின்று விட்டது. அத்துடன் உணவு வருவதும் நின்று விட்டது.

எதுவும் அருந்தாமல் அவன் நான்கு நாட்கள் பட்டினியாகக் கிடந்தான்.

ஐந்தாம் நாள் காலையில் எழுந்ததும் அவனுக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டிருந்தது. இளவரசி மதுராவுக்கு ஏதோ நேர்ந்திருக்க வேண்டும் என்று நினைத்தான்.

அதை நினைக்கும் போது மனம் நடுங்கியது.

அவளுக்கு உதவாமல் இப்படிப் பேடி போல ஒரு அறையுள் பதுங்கி இருக்கிறோமே என்று நினைத்தான். ஆத்திரம் பொங்கி வந்தது.

எழுந்தான். மறைத்து வைத்திருந்த தன் உடைவாள் சரியாக இருக்கிறதா என்று பார்த்தான்.

அதை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டான். இனி என்ன ஆனாலும் பொருட்டில்லை. தன் வாள் ஒன்றையே நம்பித் தப்பித்து ஓட வேண்டும் என்று நினைத்தான். புறப்பட்டது தான் தாமதம் காதுகளில் 'ஓ' என்று ஒரு இரைச்சல் கேட்டது.

"இதென்ன?" என்று திடுக்கிட்டு நின்றான்.

காதுகளைக் கூர்மையாக்கி சப்தங்களைக் கேட்டான்.

ஓ. . . ஓ. . . ஓ. . . தூரத்தில் ஏதோ கடல் உடைந்தாற் போல ஓசை கேட்டது.

இதென்ன ஓசை?

எங்கேயாவது சூறாவளி வருகிறதா? ஊழி மழை வருகிறதா? பூமி நகர்ந்து வருகிறதா?

வல்லபன் அதிசயத்துடன் நின்றான்.

சப்தம் வரும் திசையைப் பார்க்க நினைத்தான். மாடம் வரை வந்தான். ஆனால் அவன் இருந்த அறை உயரம் குறைவாக இருந்ததால் மாடத்திலிருந்து எதுவும் தெரியவில்லை. அரண் போன்றக் கோட்டை அவன் பார்வையை மறைத்தது. அறைக்கும் அங்கும் மிங்கும் சென்று எதுவும் தோன்றாமற் போகவே யோசித்தவாறு நின்றான்.

நாழிகை ஏறியது.

சப்தங்கள் மிகுந்து கொண்டே வந்தன.

எத்தனையோ வித ஓசைகளால் அந்த ஊழி சப்தமும் எழுந்து கொண்டிருந்தது.

ஏதாவது படை வந்து கொண்டிருக்கிறதா?

அவன் மனம் பரபரத்தது.

அப்போது அரண்மனையிலிருந்தும் அதன் வெளிப்புறங்களிலிருந்தும் நகரங்களின் ஓசைகள் திடீரென எழ ஆரம்பித்தன.

யுத்த ஆயத்தத்திற்கான முழக்கங்கள் இவை!

ஆகா! யுத்தம் வருகிறதா? யார் படையெடுத்து வருகிறார்கள். விஜயநகர ராஜ்யக்காரர்களா? நிச்சயமாக அவர்கள் தானா? வேறு யாராவது இருப்பார்களா? ஊஹூம் இருக்க மாட்டார்கள். சம்புவராயர்களை எதிர்ப்பவர்கள் விஜயநகரத் தாராகத்தான் இருக்க வேண்டும். ஆகா! இந்த அறைக்குள் அகப்பட்டு இருக்கிறோம்? வெளியிலே நான் இருக்க கூடாதா? வரும் படையாட்களில் ஒருத்தனாக நான் இருக்கக் கூடாதா?

நாழிகை ஆக ஆக எங்கிருந்தெல்லாமோ எத்தனையோ விதங்களில் சப்தங்கள் வர ஆரம்பித்தன. நகரமும் அரண்மனையும் பரபரப்பது போலிருந்தது.

'இப்போது நான் என்ன செய்ய? இந்த இடத்தை விட்டு வெளியே போய் விடுவோமா?'

வல்லபனின் மூளை குழம்பியது.

"கடவுளே! என்னை இப்படி ஒரு இக்கட்டான நிலையில் வைத்து விட்டாயே!" என்று அவன் நினைத்த போது. "ஐயா!" என்று குரல் கேட்டது.

மதுராவின் குரல் கேட்டது.

விருட்டென்று மாடத்தின் பக்கம் திரும்பினான் அவன்.

"ஐயா!" என்று மீண்டும் குரல் கொடுத்தாள் அவள்.

"இதோ இருக்கிறேன் இளவரசி!" என்றான் அவன்.

"ஐயா படைகள் வருகின்றன, படைகள்!" என்றாள் அவள்.

"அப்படியா? எங்கே வருகின்றன?" என்று இரைந்தான் அவன்.

"தூரத்தில் வருகின்றன! இங்கே நான் இருக்கும் மாடத்திலிருந்து நன்றாகத் தெரிகிறது. உங்களால் பார்க்க முடியாது!" என்றாள் அவள்.

அவன் தவித்துப் போய் நின்றான்.

"இளவரசி! நீங்கள் ஜாக்கிரதையாக அங்கே இருக்கிறீர்களா?" என்று கூவினான் அவன்.

"இருக்கிறேன். அரண்மனையிலிருந்து வீரர்களும் பெண் காவலாளிகளும் கோட்டைக்கு ஓடியிருக்கிறார்கள். ஆகவே தான் நான் இங்கே வந்து நின்று பேசுகிறேன். சென்ற நான்கு நாட்களில் என்னை இவர்கள் கீழ் அரண்மனையில் முழு காவலில் வைத்திருந்தார்கள்! அதனால்தான் தங்களுக்கு உணவு என்னால் அனுப்ப முடியவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் அனுப்பி வைக்கிறேன்!" என்றாள் அவள்.

"உணவு இருக்கட்டும் இளவரசி வருகிற படைகள் யாருடைய படைகள்?" என்றான் அவன்.

"அதுதான் தெரியவில்லை. சமுத்திரம் போல் பெரிய சேனைகள் வருகின்றன. கொடிகளின் சின்னங்கள் இன்னும் நன்றாகத் தெரியவில்லை. தெரிந்ததும் சொல்கிறேன்!" என்றாள் அவள்.

பரபரத்த வல்லபன், "அது விஜயநகர சேனையாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள்தான் வருவார்கள். சீக்கிரம் கண்டுபிடித்துச் சொல்லுங்கள் இளவரசி!" என்றான் அவன்.

கோட்டைக்கு அடுத்தாற் போல் உள் அகழியும் அந்த அகழியை அடுத்து அரண்மனையும் இருந்தன.

அரண்மனை மேல் உப்பரிகைகளிலிருந்து பார்க்க கோட்டையும் அதன் முகப்புகளும் வெளிப்புறங்களும் நன்றாகத் தெரிந்தன.

ஆனால் வல்லபன் இருந்த கொடிக்கம்ப அறை தாழ்ச்சியில் இருந்ததால் எதுவும் தெரியவில்லை.

இளவரசியிடமிருந்து சிறிது நேரம் வரை எந்த மறுமொழியும் வரவில்லை.

"இளவரசி!" என்று இரைந்தான் அவன்.

மறுமொழி இல்லை.

"இளவரசி!"

தடால் என்று தாம்பாளம் விழும் ஓசை கேட்டது.

திடுக்கிட்டான் அவன்.

9

தாம்பாளம் விழும் சப்தம் கேட்டதும் வல்லபன் எச்சரிக்கை ஆனான். மதுரா ஏதோ சமிக்ஞை செய்கிறாள் என்று நினைத்தான்.

அவசரமாக உள்ளே போய், கொடிக் கம்பில் ஏறிப் பட்டிகையில் அமர்ந்து கொண்டான்.

அவன் எதிர்பார்த்தபடியே சிறிது நேரத்தில் பெண் காவலாளிகள் உள்ளே வந்து, யாராவது இருக்கிறார்களா என்று தேடி விட்டு, யாரையும் காணாமல் அறை வாசலிலேயே சிறிது நின்றார்கள்.

"அந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. தனக்குத் தானே பேசுகிறாள் என்று சொன்னேன். நீ கேட்கவில்லை. இப்போது உனக்கே தெரிகிறதா?" என்று ஒரு பெண் காவலாளி கேட்க,

மற்றவளும், "ஆமாம்! அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது!" என்று சொன்னாள்.

அவர்கள் போன பிறகு வல்லபனுக்கும் பரபரப்பு ஏற்பட்டது. வெளியே அந்த சமுத்திர ஓசை தெளிவாகக் கேட்கலாயிற்று.

எப்படிப்பட்ட நேரத்தில் இங்கே அகப்பட்டுக் கொண்டோம்? பேடி போல் இருக்கிறோமே!

வெளியே குதித்து ஓடிப் போய் சண்டையில் இறங்க வேண்டாமா?

அது முடியுமா?

அவன் ஒருவனால் என்ன செய்ய முடியும்?

தத்தன் எங்கே போய் அகப்பட்டானோ தெரியவில்லையே! தப்பித்தாலும் கோட்டையை விட்டுப் போயிருக்க மாட்டான். அது முடியாத காரியம். ஒரு வேளை உள்ளே எங்கேயாவது அகப்பட்டு, ராஜ சேவகர்கள் அவனைச் சிரசேதம் செய்து விட்டார்களோ?

நினைக்கவே பகீர் என்றது. உடம்பு பதறியது.

தத்தன் கூறியதைக் கேட்காமல் போய்விட்டோம். கற்பூரகாந்தனுக்கு உதவப் போயிராவிட்டால் நேராக சத்தியமங்கலம் போயிருக்கலாம். அங்கே தாயாரைப் பார்த்திருக்கலாம். எல்லா விஷயங்களையும் விவரமாகக் கூறி இருக்கலாம். பாவம்! ஆறுமாதம் ஆயிற்று அவளைப் பிரிந்து. தவியாய்த் தவித்துக் கொண்டிருப்பாள். மெலிந்து போனாலும் போயிருப்பாள். என்னைப் பற்றியே நினைத்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருப்பாள். அப்படிப்பட்டவளிடம் போய், 'அம்மா, இதோ வந்து விட்டேன்!' என்று சொல்லி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கலாம். அதையெல்லாம் செய்யாமல் யாருக்கோ உதவப்போய், எங்கேயோ போய் மாட்டிக் கொண்டேனே! தத்தா! நீ சொன்னதுதான் சரியா? வழியில் பிறழாதே, என்றாயே! நான் உன் சொல்லையும் என் தாய் சொல்லையும் தட்டிவிட்டேனா?

இப்படிக் குழம்பும்போது, வேறு விதத்தில் அவன் சமாதானப்பட்டுக் கொண்டான்.

சொல்லப் போனால் திருவரங்கனுக்காகத்தான் அவன் இந்தக் காரியங்களில் இறங்கியிருக்கிறான். ஆமாம்! நிச்சயமாகத்தான். அரங்கன் திருவரங்க நகரை அடைய வேண்டுமானால் ராஜரீகமாகப் பல காரியங்கள் நடக்க வேண்டும். சம்புவராயர், மதுரை சுல்தான் ஆகிய இருவருடனும் போருக்குப் போக வேண்டும். இதெல்லாம் நல்லபடியாக நடந்தால் தான் அரங்கன் திருவரங்கத்தை அடைய முடியும். இவை சரியாக நடப்பதற்கு எத்தனையோ வித முன்னேற்பாடுகள் செய்ய வேண்டி உள்ளது. அந்த முன்னேற்பாடுகளில் ஒன்று தான் இந்தப் பாண்டிய குலப் பெண்ணைக் காப்பாற்றுவது! இந்தக் காரியத்தை நம்மிடம் பொறுப்பாகக் கொடுத்திருக்கிறார் விஜயநகர ஒற்றர் தலைவர். ஆக, இதுவும்

அரங்கனுக்காகச் செய்யப்படும் ஒரு காரியந்தான்! நிச்சயம் அதுதான்!

அவன் யோசித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று குரல் மெல்லிதாக, "ஐயா! ஐயா!" என்றது. அது மதுராவின் குரல்தான்.

வல்லபன் விருட்டென்று கொடிக் கம்பத்தின் வழியே இறங்கினான். மாடத்திற்குச் சென்று, "இளவரசி!" என்று மெல்லிதாக இரைந்தான்.

"ஐயா, நான் இங்கே தான் இருக்கிறேன்!" என்று மதுராவின் குரல் கேட்டது.

"உங்களுக்கு என்ன நடந்தது? உங்கள் குரல் ஏன் மெல்லிதாகிவிட்டது?" என்று கேட்டான் அவன்.

"என் கால்களில் சங்கிலி போட்டுக் கட்டியிருக்கிறார்கள். சங்கிலியின் நீளத்தில் நான் இந்த அறை முழுதும் நடமாடலாம். அதைத் தாண்டிப் போக முடியாது!" என்றாள் அவள்.

"இளவரசி! கேட்க வருத்தமாக இருக்கிறது. நான் இங்கே ஒரு ஆண்பிள்ளை இருந்தும் பிரயோசனம் இல்லாமல் இருக்கிறேன்! சொல்லுங்கள்! நான் மேலே வந்து எந்தவித உதவி வேண்டுமானாலும் செய்கிறேன். எனக்கு வெறுமனே இருப்பது அவமானமாக இருக்கிறது!" என்றான்.

"ஐயா, அவசரப்பட்டு ஏதாவது செய்து விடாதீர்கள். அரண்மனை எல்லாமே அல்லோலகல்லோலமாய் இருக்கிறது. சம்புவராய அரசரும் குடும்பமும் காஞ்சிபுரத்திலிருந்து இங்கே வந்திருக்கிறார்கள். எல்லோரும் வெகு ஆத்திரமாக இருக்கிறார்கள். நீங்கள் தனியாக அகப்பட்டீர்களானால் உங்களை உடனே கொன்று விடுவார்கள். அதனால் எதுவும் செய்ய வேண்டாம்.

நடப்பது நடக்கும். திருக்குறுங்குடி வாழும் எம்பெருமாள் மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன்!" என்றாள் அவள்.

அவளது பட்டுப் போன்ற குரலே அவனைத் தாலாட்டுவது போலிருந்தது.

அவள் சொற்களின் பொருளை விட அவைகளின் ஓசை நயமே அவன் மனத்திற்குள் சென்று இனிமையாக நிரம்பிக் கொண்டிருந்தது.

எங்கேயோ ஒரு ஆபத்தில் அகப்பட்டிருக்கும் வேளையில், ஒரு துளி இன்பத்தை யாரோ நல்குவது போலிருந்தது.

இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கும்போது, திடீரென்று வானில் நாரைக் கும்பல்கள் கூட்டமாகப் பறந்து சென்றன.

அதைத் தொடர்ந்து, நகராக்கள், எக்காளங்கள், துந்துபிகள், சேமக்கலங்கள் எல்லாம் ஒருசேர ஒலித்துப் பெரும் ஓசைக் கடலை ஏற்படுத்திவிட்டன.

அது அடங்கியதும், வல்லபன், "இளவரசி வெளிப்புறம் தெரிகிறதா? அங்கே என்ன நடக்கிறது?" என்று கேட்டான்.

"ஐயா! ஐயா!" என்று பலமுறை கூறிய அவள் சில கணங்கள் மௌனமாகி, கடைசியில், "ஐயா! இப்போது நல்ல இடமாகத் தேர்ந்து அமர்ந்துவிட்டேன். வெளி உலகமெல்லாம் நன்கு தெரிகிறது. அடேயப்பா! கோட்டையைப் பெரிய சேனா சமுத்திரம் சூழ்ந்து கிடக்கிறதே! ஐயா! ஐயா! நீங்கள் கேட்டீர்களே! அவர்கள் கொடிகளின் சின்னங்கள் தெரிகின்றன. வராகம் (பன்றி உருவம்) தான் அதில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விஜயநகரக் காரர்கள் தானே?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம் இளவரசி! யார் யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டான் அவன்.

"ஐயா! ஐயா!" அவள் குரல் மகிழ்ச்சியில் தத்தளித்தது. "ஐயா! ஐயா! யார் யார் என்று எனக்குத் தெரியாதே! கம்பீரமான சேனாபதிகள் குதிரை மீது ஆரோகணித்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருத்தர் அருகிலும் ஒரு வராகக் கொடி பறக்கிறது. எல்லோரும் கவசம் அணிந்திருக்கிறார்கள். குதிரைகளுக்கும் கவசம் பூட்டியிருக்கிறார்கள். அவைகளைப் பார்த்தாலே ஏதோ விசித்திரப் பிராணிகள் போல் தோன்றுகின்றன!" என்றாள் அவள்.

"இளவரசி! இளவரசி!" என்று இடைமறித்தான் அவன். "நான் துரதிர்ஷ்டசாலியாக இருக்கிறேனே. நானும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு இந்தச் சம்புவராயக் கோட்டையை உடைக்க முடியாமல் இருக்கிறேனே! இளவரசி! என் உடலும் உள்ளமும் துடிக்கிறதே!" என்று கூறினான்.

அதற்கு அவள், "ஐயா! பதட்டம் அடையாதீர்கள்! சரியான வேளை வரும் வரை பொறுத்திருங்கள்! உங்களை ஆண்டவனே இங்கே அனுப்பினார் என்று நினைக்கிறேன். இல்லாவிடில் நானே கலவரப்பட்டு இருப்பேன். எனக்கு நீங்கள் துணையாக இருப்பது ஒரு வழிக்கு நல்லதாக இருக்கிறது!" என்று சொன்னவள், "ஐயா!. . . ஐயா!. . ." பரபரப்புடன் கூறி மௌனமானாள்.

வல்லபன் ஒரு கணம் துடித்துப் போனான். அவளுக்கு என்ன நேர்ந்தது? அல்லது எதைப் பார்த்து அவள் பரபரப்பு அடைந்தாள்? கணங்கள் யுகங்களாக நகர்ந்தன.

பிறகு, "ஐயா!" என்று அவள் குரல் மெதுவாகக் கேட்டது.

"என்ன இளவரசி?"

"இங்கே ஒரு பிடிச்சுவரிலிருந்து விழ ஏதுவானேன். தப்பித்து விட்டேன்" என்றாள் அவள்.

"ஜாக்கிரதை இளவரசி! பத்திரமாக இருங்கள்!"

"இப்போது நல்ல பிடிப்போடு இருக்கிறேன். முன்னை விட யுத்த களத்தை நேர்த்தியாகப் பார்க்கிறேன். தூரத்தில் பட்டத்து யானை பொன்கவசம் தரித்துச் சிங்காரமாக நடந்து வருகிறது. வராகக் கொடி அதன் அம்பாரியில் பறக்கிறது. சுற்றிவரக் குதிரை ஆட்கள் ஈட்டிகளோடு வருகிறார்கள். ஐயா! அவர்தானே அரசர்?" என்று கேட்டாள் அவள்.

"ஆமாம் இளவரசி! அவர் அரசராகத்தான் இருப்பார். அவர்தான் யானை மீது ஆரோகணித்து வருவார். இளவரசி நான் அதிர்ஷ்டமில்லாதவன்! யுத்தகளத்தைக்கூட நான் பார்க்க முடியாமல் அரணும் கொத்தளங்களும் என்னை மறைக்கின்றனவே!" என்றான் அவன்.

"ஐயா, கவலை கொள்ளாதீர்கள்! உங்களுக்கு நானே பார்த்துச் சொல்லி வருகிறேன்!" என்றாள் அவள்.

அவள் அப்படிச் சொன்ன போது அவனது இதய ஆழத்திலிருந்து பலவித உணர்வுகளை எழுப்பி விட்டது.

"உங்களுக்கு நானே பார்த்துச் சொல்லி வருகிறேனே!" என்ற பேச்சில் அவனையும் அவளையும் பிணைக்கும் ஒரு அன்னியோன்யம் அவனுக்குத் தெரிந்தது. இதை அவள் உணர்ந்து சொன்னாளா? உணராமல் சொன்னாளா?

ராஜ கம்பீர மலை என்ற கோட்டை வடஆற்காடு மாவட்டத்தில் தற்போதுள்ள ஜவ்வாது மலையின் ஒரு பகுதியில் இருந்தது. இந்தக் கோட்டையையும், அதன் அடிவாரச் சமவெளியில் இருந்த நகரத்தையும் படை வீடு என்று அந்த நாளில் அழைப்பார்கள்.

தற்போதுள்ள படைவீடு (படவேடு என்றும் இப்போது கூறுகிறார்கள்) பழைய படைவீடு இருந்த இடத்திலிருந்து சற்று அப்பால் இருக்கிறது. பழைய படைவீடு நகரம் பாழடைந்து போய், அது இருந்த இடத்தில் இப்போது காடு மண்டிக் கிடக்கிறது.

விஜயநகரப் படைகள் முதலில் படை வீட்டு நகரத்தைத் தாக்கின.

நகரக் கோட்டையின் அதிபதி சீக்கிரமே சரண் அடைந்தார்.

நகரத்தின் உள்ளே சென்று பார்க்கும்போது சம்புவராயர் குடும்பம் ராஜகம்பீரன் மலைக் கோட்டைக்குள் போய்விட்டது தெரிய வந்தது.

அடுத்தாற்போல் படைகள் அந்தக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டன.

மலை மீது கோட்டை இருந்ததால் அது நல்ல பாதுகாப்பான இடமாக இருந்தது. எந்தப் போர் நேர்ந்தாலும் சம்புவராயர்கள் இந்தக் கோட்டைக்குள் புகுந்து கவலைப்படாமல் இருந்து விடுவார்கள். கோட்டை எளிதில் சரண் அடையாது.

கோட்டைக்குள் எப்படி ஏறுவது என்பதைச் சர்வ சைனியாதிபதி கோபணாவும், கண்டாரகுளி மாரய்ய நாயகரும் யோசித்தார்கள். சில குறிப்பிட்ட பரிகங்களைத் தேர்ந்தெடுத்து அந்தப் பகுதிகளில் தாக்குதல் நடத்த ஆரம்பித்தார்கள். அதே நேரத்தில்

வேறு சில பகுதிகளில் மணல் பொதிகளை எவருக்கும் தெரியாமல் அடுக்கி வைத்து அவை வழியாக வீரர்கள் கோட்டை மீது ஏற முயற்சி செய்தார்கள்.

இரு தரத்தாருக்கும் யுத்தம் நாள் முழுதும் கடுமையாக நடந்தது.

மறுநாள் காலையில் மீண்டும் யுத்தம் ஆரம்பித்தது. பகலில் நான்கு முகூர்த்தங்கள் ஓடினவாறே, விஜயநகரப் படைகள் பல பகுதிகளில் கோட்டை மீது ஏறிவிட்டன.

இதைக் கண்ட சம்புவராயரின் படைகள் கதிகலங்கிவிட்டன.

படைவீரர்கள் தங்கள் தங்கள் தற்காப்புகளுக்காக உள்ளே ஓட ஆரம்பித்தார்கள். கோட்டையின் கதவுகள் சீக்கிரமே பிளக்கப்பட்டன.

வல்லபன் தன் மாடத்திலிருந்து கொண்டே, "இளவரசி! என்ன நடந்தது?" என்று தவிப்புடன் கேட்டான்.

"கோட்டைக் கதவு உடைந்து விட்டது!"

"வாழ்க! வாழ்க! விஜயநகரத்தார் வாழ்க!" என்று சொல்லித் துள்ளினான் வல்லபன். பிறகு ஆத்திரத்துடன், "படைகள் உள்ளே நுழைந்து விட்டனவா?" என்று கேட்டான்.

"இல்லை, முயல்கிறார்கள். வாசலில் வீரர்கள் கூடி எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சீக்கிரமே விழுந்து விடுவார்கள்!" என்றாள் மதுரா.

வல்லபன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, "இப்போது என்ன நடக்கிறது, இளவரசி?" என்றான் வேட்கையுடன்.

"ஐயா! எதிர்ப்புக்காரர்கள் விழுந்து விட்டார்கள். எஞ்சியவர்கள் பின் வாங்கி ஓடுகிறார்கள். விஜயநகரப் படைவீரர்கள் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறார்கள்!" என்றாள்.

வல்லபன் மீண்டும் குதித்தான்.

கோட்டை விழுந்து கொண்டிருந்தது. அரசர் ராஜ நாராயண சம்புவராயர் மிகுந்த கோபத்தில் இருந்தார். திரும்பி ஓடும் வீரர்களைக் கண்டு, "வீரர்களே! வாருங்கள் கோட்டையைக் காப்போம்!" என்று கூவி, தம்முடன் சேர்ந்த வீரர் குழுவுடன் கோட்டை வாயிலில் வந்து நின்றார்.

அதே நேரத்தில் கம்பணரும், அவரது படையாட்களும் உள்ளே நுழையவே இரு தரத்தாருக்கும் வாயிலில் பெரும் பூசல் ஏற்பட்டது.

கம்பணரை இனம் கண்டு கொண்ட சம்புவராயர், உடனே அவர் மீது பாய்ந்தார்.

"ஐயா! ஐயா! விஜயநகரப் படையுடன் வந்த அரசர் இருக்கிறாரே! அவர் மீது சம்புவராயர் தனியாகப் போர் தொடுக்கிறார்!" என்று இரைந்தாள் மதுரா.

"இளவரசி! நம் கட்சி வெற்றி பெறுவதற்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்!" என்றான் வல்லபன்.

"ஐயா! இந்த விஜயநகர அரசரைப் பார்த்தால் எங்கேயோ பார்த்தது போல இருக்கிறதே! ஆஜானுபாகுவாய், வெகு கம்பீரமாகக் காணப்படு கிறாரே! அப்பா? என்ன விதமாக வாளைச் சுழற்றிப் போர் புரிகிறார்! உடம்பு ஒரு இடத்தில் தரித்து நிற்கவில்லையே! அங்குமிங்கும் மின்னல் போலப் பாய்கிறாரே! ஐயா! இப்போது அவர் சாயல் எனக்குத்

தெரிகிறது. நமது கற்பூர வியாபாரி போல்தான் அவர் இருக்கிறார்!" என்று பரபரத்துக் கூறினாள் மதுரா.

"இளவரசி! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று துள்ளிக் கொண்டு கேட்டான் வல்லபன்.

"ஆமாம் ஐயா! கற்பூர வியாபாரி போலத் தான் அரசர் இருக்கிறார். இப்போது அவர் உக்கிரமாகப் போர் புரிகிறார். சம்புவராயரின் கிரீடம் இதோ விழுந்துவிட்டது. இன்னும் வாளை விடாது சுழற்றிக் காற்றாடியாகப் புரள்கிறார் விஜயநகர அரசர். இதோ. . . இதோ. . . ஐயா! ஐயா. . . சம்புவராயர் கீழே வீழ்ந்து விட்டார்!" என்று இரைந்தாள் மதுரா.

அதைத் தொடர்ந்து ஆரவாரங்களும் வாழ்த்தொலிகளும் எங்கும் எழுவது கேட்டது.

"கம்பணர் வாழ்க! கம்பணர் வாழ்க!" என்ற ஒலிகளுடன் படைகள் கோட்டைக்குள் புகுந்து வரும் ஓசை கேட்டது.

வல்லபன் பரபரத்தான். இனி என்ன செய்வது? விஜயநகரப் படைகள் அரண்மனைக்குள் வந்து அவர்கள் யாவரையும் விடுதலை செய்யும் வரை பொறுத்திருப்பதா?

அதற்குள் பாண்டிய இளவரசிக்கு யாராவது தீங்கு செய்ய முனைந்தால்?

தோற்றுப் போன ஆத்திரத்தில் யாரும் என்ன வேண்டுமானாலும் செய்வார்களே!

"இளவரசி! இளவரசி!" என்று அவன் கூப்பிட்டான்.

மறுமொழி இல்லை. மேலும் இருமுறை கூப்பிட்டும், உத்தரம் வராமல் போகவே, அவனுக்குச் சந்தேகங்கள் தோன்றின.

உடனே உடைவாளை அணிந்து கொண்டான். தன் கவச அணிகளையும் தரித்துக் கொண்டான். கொடிக் கம்ப அறையை விட்டு வெளியே வந்தான்.

வெளிப்பக்கம் நீண்ட தாழ்வாரமாக இருந்தது. இதில் எங்கே போனால் இளவரசி இருக்கும் அறையை அடையலாம்?

முன்னால் போனான். எல்லா இடங்களும் வெறிச் சென்றிருந்தன. யாருமே இல்லை.

இரண்டு அறைகளைத் தாண்டியதும், மாடிப் படிகளைக் கண்டான். அவை மீது விரைவாக ஏறிச் சென்று மேல் மாடத்தை அடைந்தான். அங்கு வலப்பக்க அறைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று ஒரு பெண்ணின் தீனக் குரல் கேட்டது. குரல் வந்த திசை நோக்கி இடது சாரியில் ஓடி, அகலமான மாடம் ஒன்றை அடைந்த போது, அங்கே கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது.

மதுராவைக் கையில் விலங்குடன் ஒரு வீரன் இழுத்துச் சென்று கொண்டிருந்தான். அப்போது நடந்த சண்டையில் அவன் பங்கெடுத்து விட்டு அரண்மனைக் குள் ஓடி வந்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் உடல் மீது ஆங்காங்கே சிறு சிறு காயங்களும், அதனால் ஏற்பட்ட இரத்தக் கறைகளும் தென்பட்டன. அவன் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்பது அவன் முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது.

அவன் அந்தப் பாண்டிய இளவரசியை இழுத்துப் போக, அவள் திமிறியவாறு விசித்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சி வல்லபனை உலுக்கிவிடவே, உடனே அவர்கள் முன் குதித்து, "ஐயா! எச்சரிக்கை! இளவரசியை விட்டு விடுங்கள்!" என்று கூறினான்.

அந்த வீரன் திடுக்கிட்டு வல்லபனைப் பார்த்தான். அவன் முகத்தில் ஒரே ஆத்திரம் கொழித்தது.

"நீ யார்? இங்கே எப்படி வந்தாய்?" என்று மிரட்டிக் கேட்டான்.

சிரித்தான் வல்லபன்.

"உன் கேள்விக்கு என் வாய் உத்தரம் சொல்லாது. என் வாள் தான் சொல்லும்!" என்று வாளை உறுவினான்.

அந்த வீரனும், வாளை உறுவ, அந்த இருவருக்கும் அங்கே ஒரு சண்டை நடந்தது.

வீரன் அப்போதுதான் சண்டை போட்டு வந்ததால் களைத்திருந்தான்.

வல்லபன் ஐந்து தினங்களாக உண்ணாமல் இருந்ததால் களைத்திருந்தான். ஆகவே இருவருக்கும் ஒரு சமமான களைப்பு உடலில் இருக்க, இருவரும் ஆத்திரத்துடன் சண்டை இட்டார்கள்.

சம பலத்துடன் அரை முகூர்த்தம் சண்டை இட்டபின் வல்லபனின் ஒரு வீச்சில் அந்த வீரன் நெஞ்சில் அடிபட்டுக் கீழே சாய்ந்தான். விழுந்தவன், "அம்மா! அம்மா!" என்று முணுமுணுத்த போது வல்லபன் பரிதாபத்துடன் அவனைப் பார்த்தான்.

10

விழுந்த வீரனை வல்லபன் இரக்கத்துடன் பார்க்க அவன் "அம்மா! அம்மா!" என்று புலம்பினான்.

"பாவம்! தாயாரை நினைக்கிறானே!" என்று வல்லபன் இரக்கம் கொண்டான்.

உடன் அந்த வீரனை மடியில் எடுத்து வைத்து அவனது இரத்தத்தைத் துடைத்து "வீரரே! வீரரே!" என்றான்.

"என் அம்மாவிடம் சொல்லுங்கள்! அவளைத் தான் கடைசிவரை நினைத்தேன்!" என்று வீரன் முனங்கினான்.

"தங்கள் தாயார் யார்? எங்கிருக்கிறாள்? நான் அவசியம் சொல்கிறேன்!" என்றான் வல்லபன்.

"பரகூரில் இருக்கிறார்!" என்று புலம்பினான் வீரன்.

"பெயர் என்ன?"

"கிருஷ்ணாயி! ராணி கிருஷ்ணாயி!"

தீயை மிதித்தவன் போல் வல்லபன் தலை நிமிர்ந்தான்.

"ஐயா! என்ன சொல்கிறீர்கள்? ராணி கிருஷ்ணாயியா?" என்று கேட்டான்.

"ஆமாம்!"

"தங்கள் பெயர் என்ன?"

"என் பெயர் 'சின்னக் குலசேகரன்!' என் தாயாருக்கு என் மீது உயிர்! அவளைக் கடைசிவரை நினைத்தேன் என்று சொல்லுங்கள்!" என்றான் வீரன் திக்கியவாறு.

"ஐயா! தங்கள் தந்தை யார்?" என்றான் வல்லபன்.

"என் வளர்ப்புத் தந்தை வல்லாள ராஜா! பெற்ற தந்தை குலசேகரர்!"

அந்த வார்த்தைகளைச் சொன்னதுதான் தாமதம். வல்லபனின் கண்களில் நீர் குபுக்கென்று வந்தது. ஆவேசம் கொண்டவன் போல அந்த வீரனை அணைத்தான். "சகோதரா! என் தமையனையா நான் குற்றுயிர் ஆக்கினேன்? என்ன அநியாயம் இது. இந்த அக்கிரமம் எந்த உலகத்திலும் உண்டா? நான் ஒரு பாபி! நான் ஒரு பாபி!" என்று கூவிக் கோவென அழ ஆரம்பித்தான்.

"திருவரங்கன் உலா முதல் பாகமும், இரண்டாம் பாகமும் வாசித்தவர்களுக்கு ராணி கிருஷ்ணாயி யார் என்று தெரிந்திருக்கும். துளுவ நாட்டின் ராணி அவள்! ஒய்சள அரசரான வல்லாள தேவர் அவளைத் தமது வயோதிகத் தசையில் திருமணம் செய்து கொண்டார். தமது ராஜ்யம் மேலைக்கடல் வரை விஸ்தரிக்கும் என்ற எண்ணத்திலேயே இந்தத் திருமணம் செய்து கொண்டார்.

இந்தத் தம்பதிகளுக்குக் குழந்தை ஏதும் பிறக்கவில்லை. ராணி கிருஷ்ணாயிக்கு ஒரு குழந்தை பெற வேண்டும் என்று ஆசை இருந்தது. ஆனால், அது வல்லாளர் மூலமாக நிறைவேற்ற வழியில்லை. ஆகவே அவள் வேறு ஒரு வழியை அணுகினாள்.

துளுவ நாட்டு மலை இனத்துப் பெண்களிடையே அந்நாளில் ஒரு பழக்கம் இருந்தது. 'அலிய சந்தான முறை' என்று சொல்வார்கள். அந்த முறைப்படி ஒரு பெண் தாற்காலிகக் கணவர்களை ஏற்றுக் கொள்ளலாம். அதற்கான உரிமை அவளிடம் இருந்தது.

அந்நாளில் அந்த மலை இனத்தவரிடையே அந்த முறை கேவலமாகக் கருதப்படவில்லை. எத்தனையோ வித வழக்கங்களில் அதுவும் ஒன்றாக இருந்தது.

இந்த 'அலிய சந்தான' முறைபடி ராணி கிருஷ்ணாயி குலசேகரன் என்ற இளைஞரைத் தமது மறு கணவராக வரித்தாள். (குலசேகரன் திருவரங்கன் உலா முதல், இரண்டு பாகங்களில் வரும் கதாநாயகன்) அவன் மூலம் ஒரு ஆண் மகவைப் பெற்றுக் கொண்டாள். அதற்குத் தனது ஆசை நாயகன் குலசேகரனது பெயரையே சூட்டினாள். அந்த மகன்தான் இங்கே வல்லபன் முன்னால் விழுந்து கிடந்த வீரன்.

தானும் அந்த வீரனும் ஒரு தந்தைக்குப் பிறந்த புதல்வர்கள் என்று தெரிந்ததும் அந்த சின்னகுலசேகரனை அணைத்துக் கண்ணீர் வெகுவாக உகுத்தான் வல்லபன்.

அவன் செய்கையைப் புரியாமல் அந்தக் குலசேகரன் ஆச்சரியம் காட்ட, வல்லபனும் அவனுக்குத் தான் இன்னார் என்று விளக்கினான்.

அவ்வளவில் வீரனும் அவனை அணைத்துக் கொள்ள முயற்சி செய்து முடியாமல் உணர்ச்சிகளில் தளும்பினான்.

பிறகு வல்லபன் அவனை ஒரு கல்மேடையில் கிடத்தி, "ஐயா! எனக்கு ஒரு சகோதரன் இல்லையே என்று நினைத்தேன். நீங்கள் கிடைத்தீர்கள். உங்களை அடைந்தேன் என்று நினைப்பதற்கு முன் இழக்கிறேனே! தாங்கள் சம்புவராயர் பக்கம் இருப்பது எனக்குத் தெரியாமல் போயிற்றே! தங்களை முன்னரே அடையாளம் கண்டுபிடிக்காது போனேனே!" என்று புலம்பினான்.

அந்த வீரன் அவனைத் தேற்றும் முறையில் திக்கிப் பேசியவாறு, "சகோதரா! எங்கள் குடும்பம் நாட்டை இழந்த பிறகு தான் சம்புவராயர்கள் மூலம் மதுரை சுல்தானை ஒழித்து எங்கள் ராஜ்யத்தை

மீண்டும் பெறலாம் என்ற ஒரே நோக்கந்தான் இதற்குக் காரணம்!" என்று கூறினான். அதற்கு மேல் அவனால் பேச முடியவில்லை.

வல்லபன் அவனைக் கனிவுடன் பார்த்து, "சகோதரா! தாங்கள் சம்புவராயர் மீது நம்பிக்கை வைத்தது சரியல்ல. அவர்கள் அந்த சுல்தானுக்கு அடிபணிந்தே இருந்தவர்கள். எதிர்காலத்தில் இந்தக் கொள்கையை விடுவார்களா என்று சொல்ல முடியாது. தாங்கள் நினைத்ததை இப்போது விஜயநகரத்தார் செய்து வருகிறார்கள்!" என்றான் வல்லபன்.

அவன் கூறியதை அந்த சின்னகுலசேகரன் ஒத்துக் கொள்வது போலிருந்தது. கைகளை மட்டும் எடுத்து ஆட்டினான். அது அவனை ஆசீர்வதிப்பது போலவும் இருந்தது.

பிறகு கண்களை நிரந்தரமாக மூடினான்.

வல்லபன் த்வய மந்திரத்தைக் கூறி அவனை இறுகத் தழுவினான். கண்ணீர் பிலுபிலு என்று வழிந்தது.

இவ்வளவு நேரமும் இந்தச் சம்பவம் முழுவதையும் பார்த்துக் கொண்டிருந்த மதுரா அருகில் வந்தாள்.

"ஐயா! என்ன அநியாயம்? இருவரும் சகோதரர்கள் என்று தெரியாது ஒருவர்க்கொருவர் சண்டை போட்டிருக்கிறீர்களே!" என்று கூறித் துக்கித்து நின்றாள்.

வல்லபன் அவளை நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. அவன் தலைகுனிந்து தேம்பிக் கொண்டிருந்தான். பின்னர் தனக்குத் தானே புலம்புவது போல், "எனக்கு எல்லாவற்றிலும் விரக்தி ஏற்படுகிறது. குடும்பங்களைப் பாதுகாக்கவே

ராஜாக்களை வைத்து இருக்கிறோம். ஆனால் அந்த ராஜாக்களுக்காகக் குடும்பங்களைப் பாழ்படுத்து கிறோமே!" என்றான்.

வீதியில் அப்போது கூச்சல் பெருகியது. அரண்மனைக்குள் சத்தங்கள் பெருகிவிட்டன. சற்றைக்கெல்லாம் விஜயநகர் வீரர்கள் அரண்மனையில் ஒவ்வொரு பகுதியாகத் தேடிவிட்டு மாடத்திற்கு வந்து விட்டார்கள். அவர்கள் முன்னிலையில் தத்தன் நின்று கொண்டிருந்தான்.

மேலே பெரிய மாடத்தில் வல்லபன் இருக்கும் காட்சியைப் பார்த்ததும் எல்லோரும் திடுக்கிட்டு நின்றார்கள்.

தத்தன் ஓடிப் போய்த் தன் நண்பனை அணைத்துக் கொண்டு கரைகாணா இன்பம் அடைந்தான். அதே நேரத்தில் வல்லபன் தனது துக்கத்தைப் பற்றிச் சொல்லவும் அவனும் வெகுவாகத் துக்கித்து வல்லபனைச் சமாதானம் செய்வித்தான்.

அந்த இரவுக்குள் அந்தக் கோட்டை அமைதியாகி விட்டது. இது யுத்தம் நடந்த கோட்டையா என்று தெரியவில்லை. ஜனங்கள் பழையபடி தங்கள் தங்கள் காரியங்களில் ஈடுபடத் தொடங்கினார்கள். எங்கும் மகிழ்ச்சியே தென்பட்டது.

இரவு மன்னர் அழைக்கிறார் என்று இரு இளைஞர்களுக்கு செய்தி வந்தது.

சபைக்குள் நுழைந்ததும் இருவரும் குமார கம்பணரை முதன்முறை பார்த்ததும் அதிசயம் அடைந்தார்கள். வல்லபன் ஏற்கெனவே அறிந்து இருந்ததால் அவனிடம் குறும்புப் புன்னகை ஒன்றுதான் ஏற்பட்டது. எதிரே மேடையில், கற்பூர வியாபாரியின் முக ஜாடையோடும், புன்னகையோடும் குமார கம்பணர் ஒரு ஆதனத்தில் வீற்றிருந்தார்.

இளைஞர்களைப் பார்த்ததும், "வாருங்கள்! வாருங்கள்!" என்று உபசரித்த அவர், தாமே எழுந்திருந்து வந்து அவர்களைத் தழுவிக் கொண்டார்.

தத்தன் அதி ஆச்சரியத்துடன் சிலிர்த்துப் போக, வல்லபன் அவரை நோக்கி, "பிரபோ! வியாபாரியாக வந்து எம்மைத் திக்குமுக்காட வைத்து விட்டீர்களே! தங்களிடம் மரியாதை இல்லாமல் பலமுறை நடந்து கொண்டிருக்கிறோமே! இதற்கெல்லாம் எங்களுக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் தகும்!" என்று கூறினான்.

"வல்லபா! நிச்சயம் உங்களுக்குத் தண்டனை கொடுக்கத்தான் போகிறேன். இதையும் இதோ சொல்லி விடுகிறேன். உங்களுக்கு நிறைய வேலைகள் இங்கே காத்திருக்கிறது!" என்று கூறினார்.

வல்லபனும் தத்தனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"பிரபோ!" என்று தயங்கினான் வல்லபன்.

"என்ன? தைரியமாகச் சொல்!" என்றார் மன்னர்.

"நாங்கள் எங்கள் ஊருக்கு அவசியம் போயாக வேண்டும். எங்கள் உற்றார் கவலையோடு இருப்பார்கள்!" என்றான் வல்லபன்.

"நல்லது வல்லபா! அதையும் நான் அறிவேன். நீங்கள் வீட்டைவிட்டு வந்து எத்தனையோ மாதங்கள் ஆகிவிட்டன! அவசியம் போக வேண்டும்! அதை விட மற்றொரு காரணமுண்டு. அரங்கன் கிடைத்து விட்டார் என்ற செய்தியையும் சொல்ல வேண்டும். அதை எல்லாம் நான் உணர்கிறேன். ஆகவே உங்கள் விருப்பத்திற்கு இசைந்தவாறு தான் நான் கொடுக்கப் போகிற புது வேலையும் இருக்கும்!" என்றார் மன்னர்.

"நல்லது!" என்றான் வல்லபன்.

"கேள் வல்லபா! நாம் பாண்டிய வம்சத்தாரிடம் ஒரு நல்லதனமான உறவை உடனே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குச் சிறந்த வழி இளவரசி மதுராங்கினியை அவர்களிடம் பாதுகாப்போடு சேர்த்து விடுவதுதான்!" என்றார் மன்னர்.

"நல்லது!" என்றான் வல்லபன்.

"இந்தப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக நீங்கள் இருவரும் போக வேண்டும்!" என்றார் மன்னர்.

வல்லபன் திடுக்கிட்டான். இதுபோல் அவர் சொல்வார் என்று எதிர்பார்க்கவில்லை.

"பிரபோ! இதை எங்களால் செய்ய முடியுமா? நாங்கள் வயதில் மிகச் சிறியவர்களாயிற்றே!" என்றான் வல்லபன்.

"நிச்சயமாக முடியும்! அதற்கான தகுதி உங்கள் இருவரிடமும் இருக்கிறது. நான் ஏற்கெனவே அதை கணித்து விட்டேன். ஆகவே, தயங்காமல் சென்று வாருங்கள். உங்களுக்குத் துணையாக நூறு குதிரை வீரர்களையும் அனுப்புகிறேன். எதற்கும் கவலை வேண்டாம்!" என்றார் மன்னர்.

வல்லபன் தயங்கினான்.

"பிரபோ!" என்றான்.

"சொல்லு, வல்லபா!"

"இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் எங்கள் பெற்றோர்களை எப்படிப் பார்ப்பது?" என்றான்.

"நல்லது!" என்று சிரித்தார் மன்னர். "எல்லாவற்றையும் யோசித்துத்தான் வைத்து இருக்கிறேன். சொல்கிறேன் கேள். நீங்கள்

இளவரசியை அழைத்துப் போகும்போது சுல்தானின் ராஜ்யம் வழியாகப் போக முடியாது. ஆகவே நீங்கள் எமது கர்நாடக நாட்டு வழியாகத்தான் போகப் போகிறீர்கள். அப்படிப் போகும் வழியில் முள்வாய் நகரத்திலோ, திருநாராயண புரத்திலோ கோஷ்டியை நிறுத்தி விட்டு நீங்கள் சத்தியமங்கலம் சென்று உங்கள் உறவினர்களைப் பார்த்து மீண்டும் கோஷ்டியுடன் சேர்ந்து கொள்ளலாம்!" என்றார்.

வல்லபன் திகைத்து நின்றான்.

"தயங்காதே வல்லபா! இப்போதிருக்கும் சோதனைகளில் உன் போன்றவர்கள் உதவினால்தான் நல்லது. சம்புவராய ராஜ்யத்தைப் பிடித்து விட்டோம். இதனால் சுல்தான் என்ன காரியம் செய்யப் போகிறாரோ, தெரியாது. நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த நிலையில் உன் போன்றோரின் உதவியை நாங்கள் கேட்கிறோம். இவை எல்லாம் உனது நோக்கத்திற்குப் புறம்பானவை என்று நினைக்காதே! அரங்கன் திருவரங்கத்திற்குச் செல்வதற்காக நீ புரியும் சேவை என்றே நினை! நாங்கள் செய்யும் காரியமும், நீ கோரும் காரியமும் ஒன்றே தான்!" என்றார் மன்னர்.

வல்லபன் யோசனையில் ஆழ்ந்தான். ஒரு நாட்டு மன்னரே அவனிடம் யாசித்து நிற்பது போலத் தோன்றியது. அரங்கனுக்காக என்று அவர் விளக்கம் கொடுத்தது அவனுக்குப் பொருத்தமாகக் கூடப் பட்டது.

"என்ன சொல்கிறாய்?" என்று மன்னர் திருப்பிக் கேட்டதும்,

"தங்கள் விருப்பப்படியே செய்கிறேன்!" என்றான் வல்லபன்.

அவ்வளவில் அவன் தோளைத் தட்டிய மன்னர்,

"வல்லபா! நீ யோசிப்பது கூட எனக்குப் பிடிக்கிறது. யோசித்து முடிவு செய்வது எப்போதும் நல்லது. இன்னொன்றும் கூறுகிறேன். நீ இரண்டு காரியங்கள் செய்கிறாய். உன் ஊருக்குப் போகிறாய். இரண்டாவது இளவரசியைப் பாண்டிய நாட்டில் கொண்டு விடப் போகிறாய். இவை இரண்டும் செய்த பிறகு, நேராக எம்மிடம் வந்து விடப் போகிறாய்!" என்றார்.

மீண்டும் திடுக்கிட்டான் வல்லபன்.

"ஆமாம், வல்லபா, லட்சியத்தைப் பெரிதாகப் போட்டுக் கொண்டு விட்டோமே! எல்லோரும் வடம் பிடிக்க வேண்டாமா? உன் தந்தையார் எவ்வளவு பெரும் தீரர்? எப்படி ஒரு நோக்கத்திற்காக வாழ்ந்தார், உயிர் விட்டார் என்றெல்லாம் கேள்விப்பட்டேன். அவர் விட்டுப் போயுள்ள குறைக் காரியங்களையும் நீதான் நிறைவேற்ற வேண்டும். அதற்காக நீ எம்முடன் தோள் போட்டுத் தான் ஆக வேண்டும்!" என்று அழுத்தமாகக் கூறினார் கம்பணர்.

மறுநாள் காலையில் பாண்டிய இளவரசியோடும் நூறு குதிரை வீரர்களோடும் இளைஞர்கள் கர்நாடக நாட்டை நோக்கிப் பிரயாணமானார்கள்.

வல்லபனின் மனம் துடித்தது. "இந்தப் பயணத்தில் மதுரா அவனிடம் பேசி ஒரு பிரேமையை வளர்ப்பாளா? அவளது மனத்தில் அவன் குடி புக முடியுமா?" என்றெல்லாம் நினைத்தான்.

11

கோஷ்டி புறப்படுமுன், கம்பணரின் ராணியான கங்காதேவி இரு இளைஞர்களையும் அழைத்து, அவர்கள் செய்த உதவிகளையெல்லாம் பாராட்டி,

"பாண்டிய இளவரசியைப் பத்திரமாக அழைத்துச் செல்லுங்கள். போகும் வழியில் முள்வாய் நகரத்தில் தங்குங்கள்! பாண்டியகுல இராணிமார்களை நான் வணங்கியதாகத் தெரிவியுங்கள். அவர்களிடம் இந்தப் பட்டு ஆடைகளையும், இரத்தினங்களையும், காணிக்கைகளாக அளியுங்கள். இவ்வளவும் செய்து விட்டு, நீங்கள் இருவரும் திரும்ப வரும் போது ஒரு காரியம் செய்ய வேண்டும்?" என்று கூறினாள்.

"என்ன செய்ய வேண்டும், மகாராணி?" என்றான் வல்லபன்.

"சுல்தானியர்கள் மதுரையைக் கைப்பற்றிய முப்பத்தெட்டு ஆண்டுகளாகப் பாண்டிய நாட்டாருடன் தொடர்புகள் விட்டுவிட்டன. தெற்கே அவர்கள் நெல்லைச் சீமையில் இருந்து வருகிறார்கள். இவர்கள் ராஜ்யத்திலே புலவர்களும், கவிஞர்களும் அநேகம் பேர் இருப்பார்கள். இந்த வித்வான்கள் எழுதிய காவிய கிரந்தங்கள் ஏதாவது இருந்தால் தயை செய்து படி எடுத்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்து அவைகளைக் கொண்டு வாருங்கள்!" என்று கூறினாள்.

"சரி!" என்று சொல்லி இளைஞர்கள் புறப்பட்டார்கள்.

முதல் ஏழுநாள் வரையில் பிரயாணத்தில் ஏதும் நடக்கவில்லை. தமிழ்ப் பேசும் பூமியை விட்டுக் கர்நாடக ராஜ்யத்தின் வழியாகப் போனார்கள். எங்கும் மலைப்பிரதேசமாக இருந்தது. அதன் பசுமையும் குளிர்ச்சியும் வல்லபனைப் பெரிதும் கவர்ந்தன. மனத்தில் நிச்சிந்தையாக இயற்கையை அனுபவித்துக் கொண்டு சென்றது புதிய அனுபவமாக இருந்தது. வாழ்க்கைச் சங்கடங்களிலிருந்து விடுபட்டு ஆத்மா மேலே மிதப்பது போலிருந்தது.

வழியில் பல்வேறு சத்திரங்களில் தங்கி அவர்கள் பிரயாணத்தை மேற்கொண்டார்கள். அப்படித் தங்கும் போதெல்லாம், முன்கூட்டியே வீரர்கள் மூலம் ராஜகட்டளை போயிருந்ததால் சத்திரங்களின் உபசாரங்களும், மரியாதைகளும் அபரிமிதமாக இருந்தன.

பாண்டிய இளவரசி மதுராவுக்கு ஒரு பட்டத்து ராணிக்குரிய மரியாதைகள் அளிக்கப்பட்டன. பல ஊர்களிலும் கோவில்களிலும் பூரண கும்ப மரியாதைகளும் வழங்கப்பட்டன.

இளவரசியின் விருப்பங்களை அறிவதற்கு அந்தரங்கத் தாதிகளும், அவற்றை நிறைவேற்றப் பெண் காவலாளிகளும் எப்போதும் சித்தமாக இருந்தார்கள்.

அந்தப்புரத்தில் தலைமை அதிகாரியாக இருக்கும் வயதான பெண்மணி, 'அந்தப்புரக் காரியம்' என்பது அவளது பதவியின் பெயர். பாண்டிய இளவரசிக்கு எல்லா விதங்களிலும் உதவிக் கொண்டிருந்தாள். சிறு கூற்றத் தலைவர்களும், வள நாட்டுத் தலைவர்களும் இளவரசிக்கு வரவேற்பு அளிக்கும்போது அவர்களிடம் பேசும் முறை, நடந்து கொள்ளும் முறை, விடைபெறும் முறை எல்லாவற்றையும் இளவரசிக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

இவ்விதம் ஒரு அரச பரிவாரமே, அவளைச் சூழ்ந்திருக்கும் சமயத்தில் கோஷ்டிப் பாதுகாப்புக்காகப் போயிருந்த வல்லபனுக்கும், இளவரசிக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லாமலேயே இருந்தது.

இது ஒரு விதத்தில் வல்லபனது மனத்தில் கிலேசத்தைக் கொடுத்தது. ஒவ்வொரு பகலும் போய்

இரவு வரும் போதெல்லாம், 'இன்று ஒரு தினமும் போய்விட்டது. அவளிடம் பேச முடியவில்லையே. . ' என்று எண்ணினான் அவன்.

அந்தத் தாபம் நாள் செல்லச் செல்ல அதிகமாகி வர இரவு வரும்போதெல்லாம் தனிமையில் இருந்து கொண்டு தானே மனம் கசிந்து உள்ளே நெகிழ ஆரம்பித்தாள்.

ஏழாம் நாள் மாலையில், அஸ்தமிப்பதற்கு ஒரு முகூர்த்த அளவுக்கு முன் அவனுக்கும் அந்தப்புரக் காரியத்திற்கும் சிறிய அபிப்பிராயப் பிளவு ஏற்பட்டது.

கோஷ்டி அப்போது ஒரு சிற்றூரை அடைந்திருந்தது. மாலையாகிவிட்டதால் அங்கே தங்கிவிடலாம் என்று காரியப் பெண்மணி கூற,

'இரண்டு முகூர்த்தம் பிரயாணம் செய்து அடுத்துள்ள பெரிய சத்திரத்தை அடைந்து விடலாம்' என்று வல்லபன் கூறினான்.

இது குறித்து இருவரும் இளவரசியிடம் செல்ல, இளவரசியும், "இங்கேயே தங்கி விடலாம்!" என்று அபிப்பிராயம் கூறினாள். வல்லபன் அதைக் கேட்டுக் கொண்டு தலை குனிந்தவாறு வந்து விட்டான்.

இந்த நிகழ்ச்சி அவனைப் பெரிதும் பாதித்தது. அங்கேயே தங்கலாம் என்று சொன்னது கூட அவனுக்குத் தவறாகப் படவில்லை. இளவரசி ஒரு ராஜரீக பீடத்தில் சென்று விட்டாள் என்பது தான் அவனை வருத்தியது. ஒரு தேசத்து ராணி போல் அவளுக்கு ஆலோசகர்கள், காரியஸ்தர்கள், பணியாட்கள் எல்லோரும் தோன்றிவிட்டார்கள். இதனால் அவனுக்கும் அவளுக்கும் தூரம் அதிகமாகிவிட்டது. அவளும் தனது ஸ்தானத்தின்

வரைமுறைகளுக்கு ஏற்ப, "வீரரே!" என்று அழைத்துத் தனது விருப்பத்தை பாதி விருப்பமும் பாதி கட்டளையுமான பாஷையில் தெரிவிக்கத் தொடங்கினாள். திடீரென்று இளவரசிக்கு ஏற்பட்ட இந்த மாற்றந்தான் அவனைத் திகைக்க வைத்தது.

இரவு மனத்தில் இனம் காணா வேதனை ஏற்பட்டது. 'இவளுக்கும் எனக்கும் என்ன? நான் ஏன் இவளுக்காக வருத்தப்படுகிறேன்? நானாக அவள் மீது ஒரு எண்ணத்தை நிர்மாணித்துக் கொண்டு, மனத்தில் நானாகக் கற்பனைகளை வளர்த்துக் கொண்டு. இப்போது என் அனுமானங்களுக்கு எதிராக ஏதாவது நடக்கும் போது ஏன் வருத்தப்பட வேண்டும்?'

மனத்தை அவன் இவ்வாறு சமாதானம் செய்ய முயன்றாலும், காவியங்களில் வரையப்பட்ட நாயகன் போல் அவனும் ஒருவன் என்றும், அவனுக்கு அந்தக் காவியங்களில் தோன்றுவது போலவே பிரேமை தோன்றிவிட்டது என்றும், அந்த பிரேமை முழுமை பெறா வண்ணம் பல சோதனைகள் வருகின்றன என்றும், இதற்கெல்லாம் அவனும் அந்த நாயகர்களைப் போலவே தனிமையாக, இரகசியமாக, அந்தரங்கமாக, மனத்துள், உள்ளத்துள் ஜீவனுக்குள் நொந்து வருந்தி அழ வேண்டும் என்று நினைத்தான்.

பிரேமைக்குக் கண்ணீர்தான் அருமையான தோழி என்று எங்கேயோ படித்ததன் நினைவு அவனுக்கு வந்தது. ஆகவே, இளவரசி அவனை நினைத்தாலும் நினைக்காவிட்டாலும் அவனாக - அவளை நினைப்பதிலோ, அதன் மூலம் ஒரு பிரேமையை வளர்ப்பதிலோ தவறில்லை என்று நினைத்தான். ஒருவரைப் பிரேமித்து, அதனால் எழும் சோகத்தில் அழுந்துவதே ஒரு பெரும் சுகம் என்று அவன் எண்ணினான்.

"ஆமாம். இந்த விரகமும், தாபமும், ஏக்கமும் அதனால் உகுக்கும் கண்ணீருமே என் மனத்திற்கு இதமான சுகத்தை அளிக்கின்றன. பிரேமை சோகமாக மாறினாலும் அது ஒரு சுகமான சோகம்" என்று நினைத்தான் அவன்.

அடுத்த இரு நாள் பிரயாணங்களும் எந்த நிகழ்ச்சியுமின்றி நடந்தன.

மூன்றாம் நாள் வல்லபனுக்கு ஜுரம் கண்டிருந்தது. அன்று மாலையில் சீக்கிரமே ஒரு சிற்றாறு ஓரம் தங்க வேண்டி வந்தது. கூடாரம் அடித்துத் தண்டு இறங்கினார்கள்.

இரவில் வல்லபன் புலம்பினான். அவனது சகோதரன் சின்ன குலசேகரன்அடிக்கடி நினைவில் வந்து கொண்டிருந்தான். தாயார், வாசந்திகா தோன்றி, "வல்லபா! நான் சொன்னதை எல்லாம் செய்தாயா? இன்னும் திரும்பிப் பாராமல் இருக்கிறாயே! வழியில் பிறழ்ந்து விட்டாயா?" என்று கேட்பது போலிருந்தது.

"இல்லை, அம்மா! இல்லை!" என்று உளறினான் அவன். கண்கள் அப்போது விழித்தன. ஜுரம் கதகத நெருப்பு எரிந்தது. அருகில் தத்தனைக் காணவில்லை. பாதுகாப்பு வேலைக்குப் போயிருப்பான். தண்ணீர் வேண்டும் போலிருந்தது.

'தண்ணீர்' என்று சொல்லித் திரும்பினான். அவன் முன்னே ஒரு யட்சிணி நின்று கொண்டிருந்தாள். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

இதுவரை அவன் யட்சிணியைப் பார்த்ததில்லை. யட்சிணியின் கால் எல்லாம் காற்றில் கரைந்திருப்பது போல் தென்பட்டது. அவன் கண்களில் உள்ள ஜுர ஜ்வாலை அந்த உருவத்தை நீராவிக்குள் பார்ப்பது போல் பிரமையை உண்டாக்கியது.

"யார் இது? யட்சிணிதானா?"

உற்றுப் பார்த்தான். கண்களைக் கசக்கினான். கண்ணின் மறைப்பு பளிச்சென்று மறைந்தது. அகல விரித்துப் பார்த்தான். நிற்பது யார்? இன்னும் பிரமை நீங்கவில்லையா? இளவரசி மதுராவாவது, இந்தக் கூடாரத்துள் வருவதாவது.

நேரில் இருக்கும் உருவம் அவள் இல்லை என்றால் வேறு யார்?

அந்தப் பெண் சட்டென்று வெளியே போய் சிறிது நேரத்தில் ஒரு பாத்திரத்துடன் திரும்பினாள். சுடுதண்ணீர் எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

ஆச்சரிய மிகுதியுடன் வல்லபன் அவளைப் பார்த்தான். இது யார்? பழக்கமான உருவம்! பழக்கமான புன்னகை!

"அருந்துங்கள்! என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டது உருவம்.

இளவரசியா இவள்? மதுராவா இவள்? என் கூடாரத்துள் வந்திருக்கிறாளா?

"தாங்கள் இளவரசியா? நான் காண்பது பிரமை இல்லையே!" என்றான் அவன்.

"நீங்கள் அருந்தினீர்களே, அந்த நீர் உண்மையானால், நானும் உண்மை!" என்றாள் அவள்.

அவன் மிரள விழித்தான். "இல்லை இளவரசி! நான் கனவுக்கும் நனவுக்கும் இடையே ஊசலாடுகிறேன். நனவு எதையோ பார்க்கிறது. கனவு அதை மறைத்து விடுகிறது. நீங்கள் மட்டுமல்ல, நீங்களே பேசும் பேச்சுக் கூட எனக்குக் கனவில் கேட்பது போல இருக்கிறது!" என்றான் அவன்.

பிறகு அவன் கண்களை மூடினான். இமைகள் கொதித்து விழிகளை மூடின. கபகப என்று உடம்பு முழுதும் எரிந்தது. இளவரசி, சின்ன குலசேகரன், வாசந்திகா ஆகியவர்களின் பேச்சு சப்தங்கள் கலவையாகக் கலகலத்துக் கேட்டன. ஒரு குழப்பமான ஆழத்தில் மூழ்கினான் அவன்.

ஒரு நீண்ட நேரத்திற்குப் பின்னர் மெதுவாக அவன் கண் விழித்தான். அந்த உருவம் அவன் அருகில் கனிவான பார்வையுடன் அமர்ந்திருந்தது. "இளவரசி! தாங்களா? தாங்கள்தானா?" என்றான் அவன்.

"நானேதான்!" என்றாள் அவள்.

"நம்ப முடியவில்லையே!"

"ஏன்?" என்றாள் அவள்.

"தாங்கள் ராணிக்குச் சமமானவர்கள். இங்கே வரலாமா? அதை அந்தப்புரக் காரியம் ஒத்துக்கொள்ள மாட்டார்களே?" என்றான் அவன்.

"எனக்கு என்று இஷ்டங்கள் இருந்தால் யாராவது அதைத் தடை செய்ய முடியுமா?" என்றாள் அவள்.

"மிகவும் நன்றி உடையேன்! இளவரசி!" என்றான் அவன்.

வல்லபனின் காய்ச்சல் இரண்டு நாட்களில் சிறிது இறங்கியது. அவன் இனிமேல் பிரயாணம் செய்யலாம் என்று தெரிந்த பின் கோஷ்டி புறப்பட்டது. வல்லபன் குதிரை மீது செல்வது கடினம் என்று அறிந்து அவனுக்கு பல்லக்கு ஒன்று கொடுக்கப்பட்டது. அதன் பஞ்சணைகளில் கிடந்த அவன் பாதி உறக்கத்திலும், பாதி விழிப்பிலும் பிரயாணம் செய்தான்.

நான்காவது நாள் எல்லோரும் முள்வாய் நகரத்தை அடைந்தார்கள். அங்கே போனதும், கோவிலை அடுத்துள்ள ஆதுர சாலையில் வல்லபனைக் கொண்டு போய்க் கிடத்தினார்கள்.

காலையில் தலைமை வைத்தியர் அவனைக் கவனிக்க ஆரம்பித்தார்.

வல்லபன் முழுதுமாகக் குணம் ஆக ஒரு வாரம் ஆகியது. நன்றாக எழுந்து வளைய வர ஆரம்பித்தவுடன் அவன் தத்தனைப் பார்த்து, "தத்தா! எனக்கு ஒரு விஷயம் உண்மையா, பொய்யா என்று தெரியவில்லை. நீ சொல்வாயா?" என்று கேட்டான்.

"கேள்!" என்றான் தத்தன்.

"வழியில் தண்டு இறங்கிய போது இளவரசி என் கூடாரத்துள் வந்து என்னைப் பார்த்துப் பேசிப் போனாள் என்று எனக்குத் தோன்றியது. இது உண்மையா, அல்லது என் பிரமையா?" என்றான் வல்லபன்.

"சரியான பைத்தியம் நீ! இளவரசியாவது உன் கூடாரம் தேடி வருவதாவது! கனவு கண்டாயா? இளவரசியை நீ என்ன, சாதாரண மனுஷி என்று நினைத்து விட்டாயா? ஒரு ராணிக்கும் மேலான கௌரவம் அவளுக்கு வந்து விட்டது. நம்மிடம் ஏதோ ஒரு ஆபத்தில் பேசி விட்டாள் என்பதற்காக, எப்போதுமே அவள் சமதையோடு நம்மிடம் வந்து அளவளாவுவாள் என்று பார்த்தாயா?" என்று கேட்டான் அவன்.

வல்லபன் திகைத்து நின்றான்.

"நீ சொல்வதெல்லாம் சரி, தத்தா! அவள் என் கூடாரத்திற்குள் நுழைந்ததை நீ காணவே இல்லையா?" என்றான்.

"இல்லை" என்றான் தத்தன்.

"வேறு யாராவது அதைப் பார்த்தார்களா?"

"நடக்காத போது யார் பார்த்திருக்க முடியும்?"

வல்லபன் திக்பிரமையோடு நின்றான்.

அவள் அவனது கூடாரத்துக்குள் வந்து அவனை விசாரித்து விட்டுப் போனாள் என்ற நினைவில், அவன் எழுப்பிய இன்ப மயமான கோட்டைகளை எல்லாம் இடிக்க வேண்டியிருக்கிறதே என்று நினைத்தான.

மனம் ஒரு ஓரமாக வலித்தது.

தனியாக ஒருவர், மற்றவருக்குத் தெரியாமல் பிரேமை கொண்டால் இந்த அவஸ்தைகளை எல்லாம் தான் பட வேண்டும். கனவானது நனவு போலவும், நனவு கனவு போலவும் தெரியும். மனம் அதீதமாகக் கற்பனை பண்ணி வேதனை உறும் என்று நினைத்தான் அவன்.

இனி இவைகளைப் பற்றி எதுவும் நினைக்க வேண்டாம் என்று நினைத்தபோது வாயிலில், 'ஹை, ஹை' என்று குரல் கேட்டது. ஒரு கம்பீரமான பல்லக்கு அந்த ஆதுரசாலை வாயிலில் இறங்கியது.

12

வாயிலில் வந்த பல்லக்கிலிருந்து இளவரசி இறங்குவாளோ என்று வல்லபன் எதிர்பார்த்தான். ஆனால் ஒரு அதிகாரி உள்ளே வந்து, "ஐயா! தாங்கள் சத்தியமங்கலம் செல்வதற்காக அரண்மனைக் காரியம் இந்தப் பல்லக்கை அனுப்பியிருக்கிறார்கள்!" என்றார்.

வல்லபனுக்குச் சப்பென்று இருந்தது. பிரேமை கொண்டவர்களுக்குச் சிறு சிறு ஏமாற்றங்களே எவ்வளவு பெரிதாகத் தோன்றி விடுகிறது? அவனுக்கு மனத்தில் ஒரு சூன்யம் விழுந்தாற் போலிருந்தது.

எனினும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், "எனக்கு எதற்கு இந்தப் பல்லக்கு?" என்று கேட்டான்.

"இல்லை, தாங்கள் நோயிலிருந்து குணமாகி வருகிறீர்கள். வீண் சிரமங்கள் வேண்டாம் என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்!" என்றார் அதிகாரி. ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்றால் யார்? இளவரசி என்று சொல்லியிருக்கக் கூடாதா? வல்லபனின் மனம் வெதும்பியது. யார் செய்திருக்கிறார்கள் என்று அவனே கேட்டுத் தெரிந்து கொள்வது மதிப்புக் குறைவாகத் தோன்றியது.

"நல்லது!" என்று சொல்லி, அவரை அனுப்பிவிட்டு, வல்லபன் உள்ளே போய்ச் சோர்ந்து அமர்ந்தான்.

தத்தன் பிறகு அவனிடம் வந்து, "ம், புறப்படு, நாழியாகிறது!" என்ற போதுதான் எழுந்தான்.

இருவரும் புறப்பட்டார்கள்!

வெளியில் வந்து பார்த்தபோது தான் இருபது வீரர்கள் நிறைந்த ஒரு சைனியமே காத்திருப்பது தெரிந்தது.

"இத்தனை பேர்கள் எதற்கு? நாம் போகும் இடம் கொங்குநாடு அல்லவா? அந்த நாடு இன்னும் மதுரை சுல்தானுக்கு அல்லவா கப்பம் செலுத்தி வருகிறது? அப்படியிருக்க, விஜயநகர வீரர்கள் வந்தால் அது பூசலுக்கு இடமாயிற்றே?" என்றான் வல்லபன்.

அதிகாரி தலை குனிந்தார்.

"ஐயா! தங்களுக்கு இங்கே நேர்ந்துள்ளது தெரியாதா?" என்று கேட்டார்.

"ஏன்? என்ன நடந்தது?" என்றான் வல்லபன்.

"சம்புவராயர் வீழ்ந்தார் என்னும் செய்தி கேள்விப்பட்டவுடன், கொங்கு நாட்டின் கூற்றம், வளநாடுகளைச் சேர்ந்த தலைவர்களும், தளபதிகளும், இனி சுல்தானுக்குக் கப்பம் கட்ட மாட்டோம். விஜயநகருக்கே எங்கள் நாடுகள் சொந்தம் என்று அறிவித்து விட்டார்கள். எம் மகாராஜரைத் தேடி ஒரு பெரிய குழுவே ராஜகம்பீரன் மலைக்குப் போயிருக்கிறது. எம் மகாராஜரும் இதனை ஒத்துக்கொண்டு விடுவார். ஆனால் அதற்குள் இந்த முள்வாய்த் தலைநகரில் இருக்கும் பிரதானி தாம் ஒத்துக் கொள்வதாகத் தெரிவித்து விட்டார். ஆகையால் இனி கொங்கு நாடும் எங்கள் நாடுதான்!" என்றார் அதிகாரி.

வல்லபனுக்கு மகிழ்ச்சி ததும்பி வந்தது.

"தலைவரே! தாங்கள் சொல்வதெல்லாம் உண்மையா?" என்று ஒரே உற்சாகமுடன் கேட்டான்.

"ஆமாம், ஐயா! போகிற வழியில் காட்டுவதற்கு என்று இதோ வராக இலச்சினை கொண்டு வந்திருக்கிறோம். இந்த இலச்சினையின் கட்டளைகள் செல்லுபடியாகிற நாடெல்லாம் எங்கள் நாடுதான்!" என்று சொல்லி வராக இலச்சினையை எடுத்துக் காட்டினார் அதிகாரி.

"ஆகா! என் நாடும் சுதந்திரமாகிவிட்டதா? பெருமையாக இருக்கிறது தலைவரே!" என்றான் வல்லபன்.

"எல்லோருக்கும் பெருமைதான் ஐயா! இந்தப் பிரயாணத்தைக் கூட அதனால் ஒரு

பரீட்சார்த்தமாகவே செய்ய விரும்புகிறோம்!" என்றார் அதிகாரி.

"ஏன், என்ன காரணம்?" என்றான் வல்லபன்.

"தொண்டை மண்டலம் (சம்புவராயர் ராஜ்யம்) கொங்கு நாடு இரண்டையும் இழந்திருக்கிறார் மதுரை சுல்தான். அவர் இனி என்ன செய்யப் போகிறார் என்ற யோசனையும் எங்களுக்கு இருக்கிறது. கொங்கு நாட்டில் எம் படை ஒன்றையே கொண்டு நிறுத்தலாமா என்று யோசனை! தவிர இன்னொரு விஷயமும் உண்டு. இந்தப் பிரதேசம் பத்திரமானதாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பாதுகாப்பாக இருந்தால் பாண்டிய இளவரசியை நாம் மலையாளம் சுற்றிக் கொண்டு போக வேண்டியதில்லை. இப்படியே குறுக்காகத் தென்பாண்டியத்திற்குப் போய்விடலாம்!" என்றார் அதிகாரி.

"அதுவும் நல்லதுதான்!" என்றான் வல்லபன்.

அப்படிச் சொன்ன ஒரு கணத்தில், இளவரசி மதுரா சத்தியமங்கலத்திற்கு வருவது போலவும், அவனது தாயார் வாசந்திகா அவளை வரவேற்பது போலவும் காட்சிகள் அவன் மனத்தில் தோன்றி மறைந்தன.

எல்லோரும் புறப்பட்டார்கள்.

நான்கு தினங்கள் சென்றவாறே கூட்டம் சத்தியமங்கலத்தை அடைய அதன் சூழலில் தெரிந்த சோலைகளையும், தோப்புகளையும், பூ வனங்களையும் கண்ட வல்லபன் பரவசனாகி பல்லக்கின் சீலையை விரித்தது விரித்தபடியே வைத்திருந்தான். வைரமணிகளைப் போல் கண்ணீர் முத்துக்கள் கன்னங்களில் விழுந்து ஓடின.

விறு விறுவென ஒரு தாய்ப் பாசமும், ஊர்ப் பாசமும் அவனைப் பிடித்து இழுக்க.

இத்தனை நாளும், என்னென்னமோ செய்து காலத்தைக் கழித்தோமே என்று நினைத்தான் அவன்.

ஊரின் கோபுரம் தெரிந்தது. அதன் கலசத்தைக் கண்டதுமே, பழைய ஜன்ம நினைவு வந்தது போல அவனது பழமை எல்லாம் வந்து அவனை அப்பிக் கொண்டது.

பிறகு ஊரின் மாடங்களும், கூரைகளும், அவற்றிடையே தென்னோலையின் கோலங்களும் தெரிய, அவன் அந்தரங்கம் எல்லாம் பிறந்தகம் திரும்பும் ஒரு கங்கை போல பிரவகித்து எழுந்தது.

யுகாந்தரத்திற்குப் பிறகு தன் பிறந்த பூமியை மிதிப்பது போல் நினைத்தான்.

பிரதான பாட்டையில் நுழைந்ததும் ஆங்காங்கே மக்கள் வெளியே வந்து, அந்தக் கூட்டத்தைப் பார்த்தார்கள்.

சிலர் அந்தப் பல்லக்கை வியப்போடு கவனித்தார்கள்.

மாட வீதிக்குள் நுழைந்ததும் வல்லபன் உணர்ச்சி வசமாகித் தன் வயம் இழந்து விட்டான். ஒரே பரபரப்பு அவனை ஆட்கொண்டது.

அவன் வீட்டு வாயிலில் பல்லக்கு நின்ற போது அவன் ஆனந்த அலைமீது இருந்தான். இறங்கும்போது கண்களில் நீர்த் திரை மூடியது.

படிகளில் ஏறி, "அம்மா" என்று அழைத்தான். உடன் தாயார் தென்படாததால், உள்ளே நெடுக நடந்து செல்ல,

அதே நேரத்தில் பின் அடுக்கில் துளசி மாடத்தில் பூ வைத்துக் கொண்டிருந்த வாசந்திகாவும் ஏதோ அரவம் கேட்டு உள்ளே பார்க்க,

ஆளுருவமாய் நிழல் தெரிவது கண்டு அவள் உள்ளே வர,

அவன், 'அம்மா' என்று கன்றின் குரல் போல் கனிவாய் விளிக்க,

அவளும் ஆச்சரியத்தில் ஸ்தம்பித்து, நாத் தத்தளித்து, 'வல்லபா' சொல்லமுதாய்ப் பொழிந்து, நடை தடுமாறி ஓடி வர,

இருவரும் கடலும் கடலும் கலந்தாற்போல் நீக்கமறத் தழுவிக் கொண்டு கண்ணீர்ப் புனலில் ஆழ்ந்தார்கள்.

தாயின் வாட்டமும், இடையிலே அவளுக்கு வந்துள்ள முதுமையும் கண்டு மகன் துணுக்கமுற,

அவளும் இவனது இடைக்கால வளர்ச்சியையும், ஒரு யுவனைப் போன்ற ஆகிருதியையும், கம்பீரத்தையும், பார்வையின் நேர்த்தியையும் கண்டு புளகாங்கிதம் அடைந்தாள்.

அவ்வளவில் வாசந்திகா, "வல்லபா என் கண்ணே எம் கனவை நிறைவேற்றினாயா?" என்று கேட்க,

"ஆமாம், அம்மா கண்டேன் அரங்கனைக் கண்டேன்" என்று பெருமையுடன் சொன்னான் அவன்.

"என்ன? அரங்கனைக் கண்டாயா?" என்று பாதி நம்பிக்கையும் பாதி அவநம்பிக்கையுமாய் அவள் வினவ,

"ஆமாம் அம்மா! கண்டேன் அரங்கனை! கண் குளிரக் கண்டேன். மனதாரக் கண்டேன். காட்டில் கண்டுபிடித்து அவரை நாட்டில் எழுந்தருள வைத்தேன்!" என்று சொன்னான்.

"இப்போது எங்கே அவர் இருக்கிறார்?" என்று அவள் கேட்க, "திருப்பதியிலே இருக்கிறாரம்மா! எல்லாமே உனக்கு விஸ்தாரமாகச் சொல்கிறேன். நீ எப்படி இருக்கிறாயம்மா, அதைச் சொல்லு!" என்று அவளைக் குசலம் விசாரிக்க ஆரம்பித்தான்.

பிறகு அடுத்தபடி "தத்தன் எங்கே?" என்று வினவினாள்.

சற்று தள்ளி மறைவில் இருந்த தத்தன் முன்னே வர, அவனையும் அப்படியே கட்டிக் கொண்டு கண்ணீர் சொரிந்தாள் வாசந்திகா.

தாயும் சேயும் தத்தனும் ஒரு அன்னியோன்யமான, பரஸ்பரமான, அன்பு மயமான பாச வலையில் வீழ்ந்து தம் மனங்களில் இருந்ததையெல்லாம் கொட்டிக் கவிழ்த்து அன்று பகலும் இரவுமெல்லாம் உறவாடினார்கள்.

வாசந்திகாவுக்கு ஒரு நலிந்த நம்பிக்கை திடீரெனத் துளிர்த்துப் பூவும் கப்புமாக வளர்ந்து, கனி குலுங்க நிற்பது போல் தோன்றியது.

சின்னாட்களுக்கு முன்பு மைந்தன் திரும்பி வராததை எண்ணி, இனி எல்லாமே போய்விட்டது என்று மகனையும், தன் நம்பிக்கையையும் ஒருங்கே தள்ளியிருந்தாள் அவள்.

வாழ்க்கையில் கடந்த நாற்பது ஆண்டு காலமாய் வெற்றியை விடத் தோல்விகளையே அதிகம் கண்டிருந்தவள் அவள். ஏதோ ஒரு ஆசையில் நம்பிக்கை வைத்து, தன் மகனையே அந்த ஆசையை

எட்டித் துரத்திய பிறகு தான் செய்தது சரியோ, சரியில்லையோ என்று யோசித்திருந்தாள் அவள். வெகு மாதங்களாய் வல்லபனிடமிருந்து செய்தி ஒன்றும் வராமல் தவியாய்த் தவித்து, அப்பால் காஞ்சிபுரத்திலிருந்து வந்த ஒரு வைணவர் மூலம் வல்லபன் செய்தி அனுப்பக் கேட்டு அதிலேயே சிறிது ஜீவன் துளிர்த்து, பின்பு அதுவும் நிராசையாய் மாறும் வேளையில் வல்லபனே முழுமையாக, நிதரிசனமாக, ஒரு புனர் ஜன்மம் எடுத்தவன் போல் வந்து நின்று விட்டான்.

வந்தது மட்டுமில்லை. பெரிதான ஒரு நல்ல செய்தியையும் கொண்டு வந்து அவளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விட்டான்.

தன் புதல்வன் செய்த வீரசாகசச் செயல்களையும் அலைந்து திரிந்து செய்த சாதனைகளையும் கேட்டுக் கொண்ட அவள், மானசீகமாகத் தன் கணவர் குலசேகரனை நினைத்து, 'என் அன்புக்குரியவரே! தங்கள் மகன் தங்களை நிகர்த்து விளங்குகிறான். தாங்கள் கொண்ட ஆசையைப் பாதி நிறைவேற்றி விட்டான். இனிப் பாதியும் நிறைவேற்றுவான்' என்று சொல்லிச் சந்தோஷமும் பட்டாள்.

மறுநாள் காலையில் அன்னையுடன் மீண்டும் அளவளாவி விட்டு வல்பன், "அம்மா ஒரே ஒரு விண்ணப்பம்! முள்வாய் ராஜ்ய மகாராஜாவான கம்பணர் எனக்கு இன்னும் பல காரியங்கள் வைத்துள்ளார்.

அம்மா! இதெல்லாம் மதுரையைப் பிடிப்பதற்கு முன் செய்ய வேண்டிய பூர்வாங்க வேலைகள் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இவைகளையும் நிறைவேற்ற நான் மீண்டும் போக வேண்டியதம்மா! தத்தனும் என்னுடன் வருவான், பயப்படாதே!" என்றான்.

அதைக் கேட்ட வாசந்திகா திகைத்து வெகு நேரம் வரை பேசாமல் இருந்து விட்டாள்.

பின்னர் அவளிடம் வல்லபன் நாட்டு நடப்புகளையும் எடுத்து உரைக்க, அவளும் மனம் தேறி, அரங்கன் திருவரங்கம் சேர வேண்டும் என்ற அபிலாஷையில், இதுவரை சரியாக நடந்தது இனிமேலும் சரியாக நடக்கும் என்று நம்பிக்கை வைத்து, வல்லபனை நோக்கி,

"வல்லபா! அரங்கன் சித்தம் அப்படியானால் நீ போய் வா!" என்று கனிவுடன் கூறினாள்.

தத்தனையும் வாழ்த்தி வழி அனுப்பினாள்.

மறுதினம் காலையில் வல்லபன் மீண்டும் தத்தனுடன் புறப்பட்டான். சத்திரத்தில் தங்கியிருந்த வீரர் கோஷ்டி மீண்டும் அவனுடன் வந்து சேர்ந்து கொண்டது.

நல்முகூர்த்தம் பார்த்துப் புறப்படும் வேளையில், தாயார் வாசந்திகா மீண்டும் தளும்பும் கண்களுடன் அவனிடம் வந்து,

"வல்லபா நான் கொடுத்த ஓலை நறுக்கைப் பார்த்தாயா?" என்று கேட்க,

அவனும், "பார்த்தேன் அம்மா!" என்று சொல்ல,

"மொழியில் பிறழாதே, வழியில் பிறழாதே, விழியில் பிறழாதே!" என்றாள் அவள்.

பிறகு அவள் மேலும் தொடர்ந்து, "வல்லபா! மற்றொன்று. . . . ஒரு தாயார் கேட்கக் கூடாததைக் கேட்கிறேன். முன்பும் இதையே கேட்டேன்! அரங்கன் திருவரங்கம் சேர்ந்து உன் பெற்றோர்களின் லட்சிய விருப்பம் முடியும் வரை நீ உன் மண வாழ்க்கையைப் பற்றி நினைக்கக் கூடாது!" என்றாள்.

"ஆகட்டும், அம்மா!" என்றான் வல்லபன் புன்னகையோடு.

"இன்னும் ஒன்று! வெகு சீக்கிரத்தில் பரகூர் சென்று ராணி கிருஷ்ணாயியைப் பார்!" என்றாள் வாசந்திகா. அப்போது அவள் குரல் தழதழத்திருந்தது.

"ஆகட்டும், அம்மா!" என்று சொல்லி அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவன் கண்களில் நீர் துளித்திருந்தது. அவளும் உணர்ச்சியில் கண்ணீர் தளும்ப நின்று கொண்டிருந்தாள். முந்திய இரவில் அவன் அவளுக்கு சின்ன குலசேகரனின் மரணத்தைப் பற்றியும் அது நிகழ்ந்த விதம் எப்படி என்பதையும் கூறி, அந்தப் பாதகச் செயல் தன் கையால் நிகழ்ந்தது என்று மனம் உடைந்து அரற்றி அவளது பாதங்களைப் பற்றிக் கொண்டு அழுதிருக்கிறான். அவளும் வெகுவாக அழுது, பிறகு, 'எல்லாம் தெய்வச் செயல்' என்று சொல்லி அவனைச் சமாதானப்படுத்தியிருக்கிறாள். அத்துடன் தன் கணவனுக்கு நேர்ந்த ஒரு அசம்பாவித புத்திர பாக்கியத்தையும், அதன் தொடர்பையும், அவள் அதிகம் தொடர மாட்டாள், மறந்து விடுவாள் என்று நினைத்திருந்தபோது, அவளே இப்போது பரகூர் போய் கிருஷ்ணாயியைப் பார் என்று கூறிவிட்டாள். என்ன விசாலமான இதயம் தன் தாயாருக்கு என்று நினைத்தான் அவன்!

வாசந்திகா பின்னர் தத்தனை அழைத்து அவனையும் ஆசீர்வதித்து, "சென்று வென்று வாருங்கள்!" என்று சொல்லி அனுப்ப,

இரு இளைஞர்களும் தங்கள் பரிவாரத்தோடு புறப்பட்டார்கள்.

நான்கே நாட்களில் மீண்டும் அவர்கள் முன்வாய் நகரம் எட்டிவிட,

அங்கே இளைப்பாறிவிட்டு மூன்றாம் நாளில் மீண்டும் பாண்டிய இளவரசி மதுராவுடன் கோஷ்டியாகப் புறப்பட்டார்கள்.

கொங்கு தேசம் அமைதியாக இருக்கிறது என்று தெரிந்து விட்டமையால், அந்தக் கூட்டம் இந்த நாட்டின் ஓரமாகப் போய், மலைத் தாழ்வாரங்கள் வழியே தென் பாண்டியத்திற்குப் போய்ச் சேர நினைத்தார்கள்.

இரு நாட்கள் பிரயாணத்தில் மலைப் பிரதேசம் அவர்களை வந்து அணவியது.

இளவரசியின் பல்லக்கு அந்த மலைவழியில் ஏற்றங்களில் ஏற ஆரம்பித்தது.

பல்லக்கின் முன்னும் பின்னும் குதிரைகள் செல்ல அந்தப் பெரும் கோஷ்டியே, அந்தப் பச்சை நிற மலைப் பிரதேசத்தில் வெகு துல்லியமாகத் தெரிந்தது.

வளைந்து வளைந்து செல்லும் மேட்டு வழியில் கூட்டம் ஒரு சர்ப்பம் போல் வளைந்து ஏறியது.

கூட்டத்தின் முதல் அணி இரு வளைவுகளுக்கு மேலே செல்லும் போது, அதன் வால் பகுதி கீழே ஒரு நெடும் பள்ளத்திலிருந்து ஏறிக் கொண்டிருப்பது அழகாகத் தெரிந்தது.

அப்படி மேலே வளைந்து போகும் போதெல்லாம் இளவரசியின் பல்லக்கு கீழேயிருந்து வந்து கொண்டிருந்த வல்லபனுக்கு நன்கு தெரிந்தது.

சமயங்களில் மேலே வளைவில் செல்லும் பல்லக்கும் அதன் கீழ் வளைவில் செல்லும் அவனும் கிட்டத்தட்ட ஒரே செங்குத்துக் கோட்டில் இருப்பதை அவன் உணர்ந்தான்.

மேலே மதுராவின் பல்லக்கைப் பார்க்கும்போது அவன் மனம் பக்கென்று வேகமாக அடித்துக் கொண்டது.

அந்தப் பல்லக்கில் மூடிய பட்டுத் திரைச்சீலைகள் பளபளத்துத் துடிக்கும்போது, அவன் இதயத்தின் உணர்வுகள் அதே விதமாய்த் துடித்துக் கொண்டிருந்தன.

இளவரசிக்கு மட்டும் உண்மையாக அவன் மீது பிரேமை இருக்குமானால், அவள் இந்தச் சந்தர்ப்பத்தை விடாமல் அவனைப் பார்த்திருப்பாள் என்று நினைத்தான்.

அப்படி அவள் அவனைப் பார்க்காதது அவன் மனத்தை வாட்டிக் கொண்டிருந்தது.

ஒரு முகூர்த்தம் போயிருக்கும்.

திடீரென்று பிளிறல் ஒலி ஒன்று கேட்டது. கூட்டம் பிரமித்தது.

13

பிளிறல் கேட்டதும், கூட்டம் திகைத்தது. இரண்டு மத யானைகள் திடீரென்று கோஷ்டியின் முன்னே எதிர்ப்பட்டன. அவ்வளவில் எல்லோரும் குழம்பிப் போனார்கள். குதிரைகள் கால்களை மேலே தூக்கிக் கனைத்தன. எல்லா வீரர்களும் கீழே குதித்தார்கள். இளவரசியை நோக்கி ஓடினார்கள்.

சிலர் ஈட்டிகளை எறிந்தும், தீப்பந்தங்களை வீசியும், தமுக்குகளை ஓங்கி அடித்தும் யானைகளை விரட்டப் பார்த்தார்கள். எதற்கும் மசியாமல் அவர்களை நோக்கி அவை வரவே,

எல்லோரும் பீதி அடைந்து. "எல்லாரும் ஓடுங்கள்!" என்று குரல் கொடுத்து ஓடினார்கள்.

பல்லக்கைச் சுமப்போரும், "இளவரசி! இறங்கி ஓடுங்கள்!" என்று பல்லக்கை கீழே வைத்து விட்டு ஓடிவிடவே இளவரசி மதுரா பல்லக்கிலிருந்து குதித்தாள். சுற்றிவரப் பார்த்த போது நிலைமை பயங்கரமாக இருந்தது. ஒரு யானை தத்தனை விரட்டிக் கொண்டிருக்க, மற்றொரு யானை அவளது பல்லக்கை நோக்கி வந்தது.

ஒரு கணம் அவள் இதயம் நின்றது. பயம் பற்றிக் கொள்ளும் போது, "இளவரசி!" என்று குரல் கேட்டது.

கீழே, வளைவுப் பாதையில் வல்லபன் நின்று கொண்டிருந்தான்.

"இளவரசி உருண்டு விடுங்கள்!" என்று அவன் கத்தினான்.

அவ்வளவுதான்! உடம்பைப் போர்த்தி மூடிக் கொண்டு அந்தச் சரிவிலே அவள் விருட்டென்று உருண்டாள். செடி, கொடி, புதர் எல்லாவற்றிலும் முட்டி மோதிக் கொண்டு காற்று வேகத்தில் கீழே போய்க் கொண்டிருந்தாள்.

பத்து ஆள் பிருசம் (ஆழத்தைக் குறிக்கும் சொல்) ஆழமான சரிவில் அவள் உருண்டு வர,

வல்லபன் தன் கைகளை நீட்டித் தடுத்து அவளை ஏந்திக் கொண்டான்.

இருவரும் உடனே அங்கே கண நேரம் கூட நிற்காமல்,

அடுத்தாற் போல் இரண்டு சரிவிலும் உருண்டு, அப்பால் தழை, கொடிகள் அடர்ந்த வனப் பிரதேசத்தில் புகுந்து மூச்சிழைக்க நின்றார்கள்.

யானையின் பிளிறல் இப்போது மேலே எங்கோ தொலைவில் பலமுறை கேட்டது.

அது கேட்ட போதெல்லாம் மதுராவின் மெல்லிய உடல் நடுங்கியது.

மௌனமாக இருந்த அவள் சிறிது நேரத்தில் ஒரு தழைப்புதரின் பின்னால் சென்று, தனது கிழிந்த ஆடைகளைச் சரி செய்து கொண்டு வந்தாள்.

வந்தவள் பேசாமலேயே நின்றாள்.

வல்லபனின் மனம் கரைந்தது. இந்த இளவரசி ஏன் பேசாமல் இருக்கிறாள். தன்னுடைய மதிப்பிற்குக் குறைவாக இருக்கும் என்று நினைக்கிறாளோ என்று எண்ணினான்.

அவன் உடம்பில் நுண்ணிய உணர்ச்சியின் ஊசிகள் ஆயிரம் குத்திக் கொண்டிருந்தன. மதுராவின் மெல்லிய பூ உடலை ஏந்தியபோது ஏற்பட்ட அதிர்ச்சி மயமான இன்பம் இன்னும் மயிர்க்கால்களில் வடிந்தோடிக் கொண்டிருந்தது. அவன் உடலே மெல்ல எழுந்து பறப்பது போல் ஒரு ஆனந்த அனுபவம் தோன்றியது.

அதே நேரத்தில் ஒருவித துக்கமும் மனத்தில் எழுந்தது. இந்த இளவரசி இப்படிப் பேசாமல் இருக்கிறாளே? இவ்வளவு ஆபத்துக்களிலிருந்து தப்பித்து வந்ததும் தனது நன்றியையோ மகிழ்ச்சியையோ தெரிவிக்காமல் இருக்கிறாளே! ஒருவேளை என்னிடம் பேசினால் அதைக் கௌரவக் குறைவாக நினைக்கிறாளோ? இப்படி ஒரு சாதாரண வீரனிடம் பாதுகாப்புக்காக அகப்பட்டுக் கொண்டதையே கேவலமாகக் கருதுகிறாளோ?

இப்படி இருவித உணர்வுகளும் மனத்தில் குமைந்து கொண்டு வர,

அதனால் ஏற்படும் மனத் தாழ்ச்சியில் கண்ணீர் கசிந்து விட,

இமைகளைக் கொட்டி, அதை அடக்கிக் கொண்டே கீழே பார்த்து,

"இளவரசி இந்தப் பாறை மீது ஏறி அமர்ந்து கொள்ளுங்கள்! நான் மற்றவர்கள் என்ன ஆனார்கள்? என்று பார்த்து வருகிறேன்"

என்று கீழே பார்த்தவாறே கூறி அவள் விடைக்குக் காத்திராமல் புறப்பட்டுச் சென்றான்.

போகும்போது, அவன் மனம், 'பிரேமை கொள்ளாதே! அதில் இன்பத்தை விடத் துன்பந்தான் அதிகம். பிரேமையில் அகப்பட்டோர் வாழ்க்கை எல்லாம் கண்ணீர் வாழ்க்கைதான்! பிரேமை ஒருவரது வாழ்க்கையைக் கனவுகளால் மூடிப் பாழடைய விடும்' என்று கூறியது.

சூடாகக் கண்ணீர்த் துளி கன்னத்தில் சிந்த அவன் நடந்து சென்றான்.

அதிக தூரம் போய்விடாமல் சுற்ற வட்டாரத்திலேயே நோட்டம் பார்க்க, மனிதர்களையோ, பாதைகளையோ காணாமல் யோசனையோடு திரும்பி வரும் வேளையில்,

'கிளுக்' என்று குமிழி உடைந்தாற்போல் சப்தம் கேட்க,

அது வந்த திசையைப் பார்க்கும்போது, அங்கு பசுமையாய் இரு யௌவன முதுவ இனத்து ஆணும் பெண்ணும் நிற்பதைப் பார்த்து,

அவர்கள் அருகே சென்று, தனக்கும் தன் கூட்டதாருக்கும் நடந்ததைக் கூறி, இரவு தங்குவதற்கு இடம் கிடைக்குமே என்று கேட்டான்.

அவர்களும் மனமுவந்து, "சீக்கிரம் வாருங்கள்! இடம் தருகிறோம்!" என்று கூற,

உடன் வல்லபனும் பாறைப் பக்கம் போய் இளவரசி மதுராவை அழைத்து வந்தான்.

அந்த முதுவ இனத்து யௌவனங்கள் அவர்களை அழைத்துப் போய் தங்கள் இருப்பிடமான ஒரு குகையில் கொண்டு போய் விட்டார்கள்.

அந்தக் குகை தரை மட்டத்திற்குச் சற்று உயரத்திலிருந்தது. பாறைகள் மீது ஜாக்கிரதையாகக் கால்களை வைத்து ஏறினால் தான் அந்த இடத்தை அடைய முடியும். உயரத்தில் இருந்ததால் இரவில் எந்த துஷ்ட ஜந்துக்களும் அதை அண்டிட முடியாது.

குகைக்குள் ஏறி மதுரா அமர்ந்து கொள்ள, வல்லபன் இறங்கி அந்த மலை ஜாதி யௌவனங்களோடு சேர்ந்து கொண்டான்.

பொழுது போய் இரவு வந்ததும் அந்த யௌவனங்கள் ஒரு பெரும் தீப்பந்தத்தை ஏற்றித் தரையில் நட்டு வைத்து விட்டு ஒருவரை ஒருவர் ஓடிப் பிடித்துப் பலவித விளையாட்டுக்களை விளையாட ஆரம்பித்தார்கள்.

சில சமயங்களில் வல்லபனையும் இழுத்து தாச்சியாக இருக்க வைத்து, கண்ணாமூச்சி போன்ற பல ஆட்டங்களை ஆடினார்கள்.

சமயங்களில் ஒருவருக்கொருவர் பொய்ச் சண்டையிட்டு வல்லபனிடம் மத்தியஸ்தத்திற்கு வந்தார்கள்.

அந்தப் பெண்ணுக்குப் பதினாறு வயதிருக்கும். ஆணுக்குப் பதினெட்டு இருக்கும். புஷ்டியான மேனியுடன் பசுமையும் செழுமையும் நிறைந்த அங்கப் பெருமைகளுடன் அந்த யௌவனங்கள்

சிரித்துக் கலகலத்துத் துள்ளி ஆடுவதே ஒரு காட்சியாக இருந்தது.

ஒரு நாழிகை போனவாறே, அவர்களும் வல்லபனும் அமர்ந்து வெறும் கதைகளைப் பேச ஆரம்பித்தார்கள்.

அந்த இளம் பெண் அவனைப் புன்னகையுடன், 'அண்ணா' என்று அழைத்துப் பேசினாள்.

பிறகு ஓய்ந்த பின்னர், அந்த ஆணின் மடியில் பெண் படுத்துக் கொண்டு தமிழும் மலையாளமும் கலந்த மலைப் பாஷையில் ஒரு பாட்டுப் பாட,

அந்த ஆணும், அவள் கூந்தலை மட்டுமின்றி அவளது உடம்பையும் நீவி விட்டுக் கொண்டிருந்தான்.

வெட்கமறியா அந்தக் காட்சியில் இயற்கையின் இரு அன்றில் பட்சிகள் புற உலகை மறந்து மழலைமொழியில் பேசி, ரதி - மன்மத ஆட்டங்களில் திளைப்பது போலிருந்தது.

அந்தப் பெண்ணின் மிக இனிமையான, கத்தி போல் கூர்மையான குரல் அந்த அரண்ய நிசப்தங்களைக் கிழித்துக் கொண்டு ஒரு வெள்ளி இழை போல ஜிலுஜிலுத்துக் கொண்டு ஓடியது.

அந்தக் குரலிலோ அதில் இழையூடும் வார்த்தைகளிலோ ஒரு சோகம் பிழிந்து சென்று எங்கும் நீவிப் பரவுவது போன்றிருந்தது.

வல்லபனின் அப்போதைய மனத்திற்கு அது மிகவும் ஏற்றதாக இருந்தது.

அதில் அவன் மெய்மறந்து ஈடுபட்டிருக்க, அருகில் திடீரென யாரோ நிற்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.

மதுரா அவனருகில் நின்று கொண்டிருந்தாள்.

உடனே வல்லபன் சட்டென்று எழுந்திருக்க, 'சப்தமிடாதீர்கள்' என்பது போல் சமிக்ஞை செய்து, இளவரசி அவனை அழைத்துப் போய்ச் சற்றுக் கிட்டத்தில் உள்ள பாறை மீது அமர்ந்து கொண்டாள்.

குகையிலிருந்து அவள் இறங்கி வந்ததும், அவனை அழைத்துப் பாறையை நோக்கிச் சென்றதும் வல்லபனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இந்த இருவரும் யார்?" என்றாள் இளவரசி மெதுவாக.

"இவர்கள் முதுவ குலத்தைச் சேர்ந்தவர்கள். மலைஜாதியினர்!" என்றான் வல்லபன்.

"இவர்கள் மட்டும் காட்டில் தனியே இருக்கிறார்களே!" என்றாள் மதுரா.

"ஆமாம்! இவர்களது உறவினர்கள் இங்கிருந்து ஒரு முகூர்த்த தூரத்தில் குடி இருக்கிறார்கள்" என்றான் வல்லபன்.

"இவர்கள் மட்டும் ஏன் இங்கே இருக்கிறார்கள்?"

"இவர்கள் மணம் செய்து கொள்ளப் போகிறார்கள்!" என்றான் வல்லபன்.

"என்ன? மணம் ஆகாமலேயா இப்படி எல்லாம் நடந்து கொள்கிறார்கள்?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள் மதுரா.

"ஆமாம். அது அவர்கள் பழக்கம்! திருமணத்தைத் தீர்மானித்த உடனேயே ஆணும் பெண்ணும் இப்படித் தனியாக வந்து விடுவார்கள்!" என்றான் வல்லபன்.

"திருமணம் ஆவதற்கு முன்பேயா?" என்றாள் மதுரா.

"ஆமாம். மணமாவதற்கு முன்னர்தான்! இப்படித் தனியாக வந்து ஒரு வாரம் வாழ்க்கை நடத்துவார்கள்" என்றான் வல்லபன்.

"அதிசயமாக இருக்கிறதே! இது அவர்களது பெற்றோர்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள் அவள்.

"நன்றாகத் தெரியும்! அவர்கள் தான் இவர்களை இங்கே கொண்டு வந்து விட்டுப் போவார்கள்." என்றான் வல்லபன்.

"அப்புறம் என்ன நடக்கும்?"

"ஒரு வாரத்திற்குப் பின்னர் இவர்கள் திரும்புவார்கள்!"

"உடனே திருமணம் நடக்குமா?"

"நடக்கும்! இந்த ஒரு வார வாழ்க்கையில் இவர்களுக்கு ஒருவர் மேல் ஒருவர்க்குப் பிடிப்பு ஏற்பட்டால்தான்."

"பிடிப்பு ஏற்படாவிட்டால்?"

"திருமணம் செய்து கொள்ள மாட்டார்கள். வேறு யாரையாவது தேடி வரிக்கப் போவார்கள்."

மதுராவுக்குஇன்னும் ஆச்சரியம் தெளியவில்லை

அந்த யௌவனங்கள் இருவரும் அப்போது எழுந்து ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு இருட்டின் ஆழங்களை நோக்கிச் சென்றார்கள்.

உடன் மதுராவும் மௌனமாக எழுந்து அவனிடம் விடைபெற்றுப் பாறைகளில் ஏறி மேலே குகைக்குள் சென்றாள்.

அவள் குகையுள் மறைந்த பிறகும் அவள் விட்டுச் சென்ற மகிழம் பூவின் வாசம் இறக்கையடித்துப் பறந்து வல்லபனைப் பல முறை சுற்றி வந்தது.

மதுரா அவனிடம் பேசியது அவன் மனத்தில் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், இன்னும் தாராளமாக எவ்வளவோ விஷயங்களைப் பற்றிப் பேசாமல் திடீரென்று வந்தது போல் திடீரென்று போய்விட்டாளே என்று தோன்றியது.

'நம் மனம்தான் பிரேமையில் தவிக்கிறது. அவள் மனத்தில் அது இல்லை' என்று விசனத்துடன் அவன் எண்ணிய வேளையில்,

"ஐயா!" என்று குரல் கேட்டது.

மேலே பார்த்த போது அங்கே மதுரா நின்று கொண்டிருந்தாள். குகை வாயிலில் நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன இளவரசி?" என்றான் அவன்.

"நீங்கள் படுத்துக் கொள்ள வசதி இருக்கிறதா? இந்தத் துணியைக் கொடுக்கட்டுமா?" என்று அவளது மேல் போர்வையைக் காட்டினாள்.

"வேண்டாம், இளவரசி! எனக்கு என் உத்திரியமே இருக்கிறது!" என்று சொல்லிவிட்டுத் தலைகுனிந்தான் அவன்.

சில கணங்கள் சென்றவாறே அவள் போய் விட்டாளா என்று பார்க்கும் பாவனையில் மேலே பார்க்க, இன்னும் அவள் அங்கேயே நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் அதிசயத்துடன் அவளைப் பார்க்க, அந்தப் பார்வைகள் இரண்டும் பிரபஞ்சத்தின்

எல்லையில்லாத காலவெளியின் ஒரு சிறு துணுக்கான விநாடியில் அப்படியே உறைந்து நின்று விட்டன.

உடன் வல்லபன் சடக்கெனத் தன் பார்வையை இழுத்துப் பின் வாங்கிக் கீழே குனிந்தான்.

பிறகு மனத்தில் உணர்வுகள் உந்த மேலே நோக்கி,

"இளவரசி! தங்களுக்கு எல்லாம் வசதியாக இருக்கிறதா?" என்று கேட்க,

"வசதியாகவே உள்ளது" என்று கூறிவிட்டு உள்ளே போய்விட்டாள் அவள்.

அவள் போனதும்தான் தாமதம், வல்லபனின் மனம் பொறி கலங்கி நின்றது. சற்றுமுன் அவன் பெறுதற்கு அரிதான ஒரு அனுபவத்தைப் பெற்றது போலிருந்தது.

'மதுரா! இப்போது நீங்கள் வந்தது, குகை வாயிலில் நின்றது, என் மீது அக்கறையோடு கேட்டது, பிறகு ஒரு பார்வையாய் என்னைப் பார்த்து நின்றது, எல்லாமே என்னைப் பரவசத்தில் ஆழ்த்தி விட்டன. இவையெல்லாம் தங்களது பிரேமையினால் எழுந்ததல்ல என்று தெரிந்தால் கூட நான் கவலைப்பட மாட்டேன். இன்றைய இந்த நிகழ்ச்சிகளை மட்டும் மனத்துள் நினைத்து வாழ் நாட்கள் முழுதையும் கழித்து விடுவேன். பெரியவர்கள் சொல்லும் ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? சுவாதி நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும்போது, ஆகாயத்தை நோக்கி, வாயைப் பிளந்து கொண்டே இருக்குமாம் நத்தை. ஆகாயத்திலிருந்து ஒரே ஒரு சிறு மழைத்துளி வாயில் விழுந்தாலும் போதுமாம்! அப்படியே வாயை மூடிக் கொண்டு தண்ணீருக்கடியில் போய் அந்த மழைத் துளியையே முத்தாக்கி விடுமாம்! அந்த நத்தை போலவே ஏங்கிக் கிடந்த எனக்கு இன்று தங்கள் கருணையால் சில குளிர்வான மழைத்துளிகளை வீசி விட்டீர்கள்! இதுபோதும்! இதைக் கொண்டே மனத்தில் ஒரு முத்தான கனவு உலகத்தைச் சிருஷ்டித்து விடுவேன்' என்று தனக்குள் கூறிக் கொண்டான் அவன்.

அப்போது அவன் தோள் மீது யாரோ கையை வைத்தார்கள். வல்லபன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

14

தோளைத் தொட்டது யார் என்று திரும்பிப் பார்க்க, அங்கே தத்தன் இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டு, அவனை ஆரத் தழுவி,

"தத்தா! யானையிடமிருந்து தப்பினாயா! கவலைப்பட்டு விட்டேனே!" என்று கூற,

தத்தனும், தான் தப்பி வந்த செய்திகளைச் சம்பிரமமாகக் கூறி,

"எல்லோரும் மேலே ஒரு காடர் குடியிருப்பில் இருக்கிறார்கள். நாம் காலையில் போகலாம். குதிரைகளை எல்லாம் பறிகொடுத்து விட்டோம்! ஓடிவிட்டன" என்று கூறினான்.

அப்பால் இரு இளைஞர்களும் சற்று தூரம் சென்று தனியிடமாய்ப் பார்த்து அமர்ந்து கொள்ள,

வல்லபன் தத்தனை நோக்கி, "தத்தா! என் வாழ்க்கையில் மிக இனிமையான சுவர்க்கத்தில் நான் ஆழ்ந்திருக்கிறேன்" என்று கூற,

தத்தனும் அவனை ஒரு விதமாய்ப் பார்த்து, "என்ன?" என்று வினவ,

வல்லபனும் சிரித்துக் கொண்டு, மதுராவின் பார்வை ஒன்றுக்காக அவன் ஏங்கித் தவித்ததையும், அது தற்போது கிடைத்து விட்டதையும் கூறினான்.

தத்தன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான்.

வல்லபனுக்கு நிலை கொள்ளாது தத்தளித்தது.

"தத்தா, ஏன் மௌனமாகி விட்டாய்? என் போல் நீயும் இந்த அனுபவத்தைப் பெற்றிருப்பாயே! மஞ்சரியின் கண்கள் உனக்கு இந்த சுகானுபவத்தைத் தரவில்லையா?" என்று கேட்க,

தத்தன் அவனைப் பார்த்துத் திரும்பி, "வல்லபா! ஒரு விவாகமும், ஒரு விவாதமும் சம அந்தஸ்து உள்ளவர்களிடம்தான் சோபிக்கிறது. ஏற்றத்தாழ்வு இருந்தால் சோபிக்காமல் போய்விடுகிறது. பிரேமையும் அப்படித்தான்!" என்றான்.

அதற்கு வல்லபன், "தத்தா! நீ * என்ன சொல்கிறாய்? எனக்கு இந்தப் பிரேமை பொருத்தமற்றது என்று கூறுகிறாயா?" என்று கேட்க,

"அப்படிச் சொல்லவில்லை, வல்லபா! நிறைவு பெறாத பிரேமை வாழ்க்கை முழுவதிலும் சஞ்சலத்தைக் கொடுத்து விடுகிறது. மனிதன் இதனால் பைத்தியமாகி விடுகிறான். உன்மத்தன் போல் திரிகிறான். வேறு எதிலும் அவன் நாட்டம் செல்வதில்லை. அதனால் அவன் தன்னைப் பாழடித்துக் கொள்வதன்றித் தன் குடும்பத்தையும் பாழ் செய்து விடுகிறான். ஆகவே நிறைவேறாத பிரேமையை மேற்கொள்வதை விட நிறைவுறும் பிரேமையை மேற்கொள்வது மேல்" என்றான்.

வல்லபன் சிறிது யோசித்தான்.

"தத்தா! நிறைவு பெறாது என்று ஏன் நாம் நினைத்துக் கொள்ள வேண்டும்?" என்றான்.

இதற்கு தத்தன், "அதைத்தான் முன்னமேயே சொன்னேனே! சம அந்தஸ்து உள்ளவர்களிடையே எழும் பிரேமைதான் நிறைவேற வாய்ப்பு இருக்கிது. நிறைவு பெறாத பிரேமையில் அழுந்திப் புழுப் போல் துடிப்பதை விடப் பிரேமை கொள்ளாமலேயே இருந்து விடுவது நல்லது" என்றான்.

"ஏன், உனக்கு இதில் அனுபவமா?" என்றான் வல்லபன்.

"ஆமாம்!" என்று சொல்லி, சத்திய மங்கலத்தில் அவனது தந்தை வாராந்திர பூஜை செய்யப் போகும் ஒரு செல்வந்தர் வீட்டுக்கு அவன் வாரந்தோறும் சென்றதையும், அங்கே செல்வந்தர் மகளுடன் நயனமொழியில் பேச நேர்ந்ததையும், அது பின்னர் அவன் வாழ்க்கையை ஒரே சஞ்சலமாக்கி விட்டதையும் கூறினான்.

"கண்களைப் பேச விடுவது தவறு வல்லபா! அதனால் தான் விழியில் பிறழாதே என்று உன் தாயே சொல்லியிருக்கிறாள். இது காரணமாகத்தான் நான் மஞ்சரியின் கண்களுக்குச் சிக்காமல் தப்பி வந்து விட்டேன். ஏனெனில் எனது பழைய பிரேமையின் வடு என் மனத்தில் அப்படியே கனமாக இருக்கிறது. புது வடுவைச் சம்பாதித்துக் கொள்ள நான் விரும்பவில்லை" என்று கூறினான்.

வல்லபனுக்கு தத்தனின் பேச்சு அவ்வளவு எடுபடவில்லை.

"தத்தா! நான் வேறுவிதமாக நினைக்கிறேன். எனக்குப் பிரேமை சுகத்தைத் தந்தாலும் இன்பமாக இருக்கிறது. சோகத்தைத் தந்தாலும் இன்பமாக இருக்கிறது" என்றான்.

தத்தன் மறுமொழி கூறவில்லை.

மறுநாள் காலையில் இளைஞர்கள் எழுந்து, மதுராவையும் அழைத்துக் கொண்டு ஒரே உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அந்தக் காட்டு யௌவனங்களைத் தட்டி எழுப்பி, விடை கொண்டு மலைப் பாதையின் மேல் ஏறலானார்கள்.

மதியம் கழிந்தவாறே, அவர்கள் காடர் பகுதியை அடைய,

அவ்வளவில் அந்த வீரர்கள் எல்லோரும் ஆரவாரத்தோடு அவர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

சிறிது நேரம் சிரமப் பரிகாரம் செய்து கொண்ட பின், அவர்கள் கொங்கு தேசச் சமவெளிகளை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

யானைகள் உடைத்துப் போட்ட பல்லக்கை அவர்கள் சீர் செய்து விட்டதால், இளவரசி மதுரா முன்போலப் பிரயாணம் செய்யலானாள்.

எதிர்ப்பட்ட மலைப்பாதை இறங்குமுகமாக இருந்ததால் அநேக வளைவுகளில், பல்லக்கின் திரைக்கூடுகள் மெல்ல விலகிக் கொள்வதையும், பிறகு மூடிக் கொள்வதையும் கவனித்த போது வல்லபனுக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

இளவரசி அவனைப் பார்ப்பதற்காகத்தான் அப்படிச் செய்கிறாள் என்று நினைத்தான் அவன்.

வளைவுகளில் விலகுவது, அவனை அவள் பார்ப்பதற்காகச் செய்யும் காரியம்தான் என்று நினைத்து மிகவும் சந்தோஷப்பட்டான் அவன்.

சமவெளியை அன்று பொழுது சாயும்போது அடைந்து விட்டார்கள். அங்கே தண்டு இறங்கிய பிறகு, இனி நடந்து போனால் தென் பாண்டியம் போய்ச் சேருவதற்குப் பல வாரங்கள் ஆகிவிடும் என்று உணர்ந்து, தத்தன் அங்கு அருகாமையிலுள்ள கூற்றத்து முக்கிய ஊருக்குப் போய், தன்னிடம் உள்ள பொருள் உதவியால் மூன்று குதிரைகளை வாங்கி வந்தான்.

மறுநாள் காலையில் வீரர்கள் யாவரையும் அங்கேயே இருக்கப் பணித்துவிட்டு, இளவரசி மதுராவை அழைத்துக் கொண்டு மூன்று புரவிகளில் அவர்கள் புறப்பட்டார்கள்.

அங்கங்கே சத்திரங்களில் தங்கி, யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் பிரயாணம் செய்து,

ஆறாம் நாள் பகல் வேளையில், பொதியமலைச் சாரலில் இருந்த குலசேகரன்புதூரை அடைந்தார்கள்.

அது தான் மதுராவின் குடும்பம் வாழும் ஊர். ஊரைத் தூரத்திலிருந்து பார்த்ததும், மதுரா ஒரே பரவசமாக, "ஆ! ஊர் வந்துவிட்டது. எங்கள் ஊர் வந்து விட்டது!" என்று குதூகலித்தாள். சுற்றியுள்ள மலைக்காடு களின் இடையே மிக அழகான ஊராக அது விளங்கியது. அதன் அருகில் அகத்திய தீர்த்தம் என்ற சிறு நதி ஓடிக் கொண்டிருந்தது.

மதுரா ஒவ்வொரு இடத்தையும் வல்லபனுக்குக் காட்டிக் கொண்டே போனாள்.

அவளது குழந்தைத்தனமான கொந்தளிப்பு வல்லபனை பெரிதும் கவர்ந்தது.

தென் நாடுகளின் மீது துருக்கியர் படையெடுத்து வந்த போது, சிதறிப் போன பாண்டிய ராஜ வம்சத்தினர் தெற்கே உள்ள வளநாடுகளில் சிதறுண்டு போனார்கள். அவர்களில் குலசேகரப் பாண்டியனின் குடும்பம் இந்த ஊருக்கு வந்து சேர்ந்திருந்தது. இப்போது இந்த ஊரில் இருப்பவர் அந்த குலசேகரனின் பேரர் ஆவார்.

புதூரை அடைந்து, வீதியில் மதுரா அவசரமாகக் குதிரையைச் செலுத்தினாள்.

பலர் அவளை ஏறிட்டுப் பார்த்தார்கள். "ஆ! இளவரசி வந்துவிட்டார்!" என்று பலர் கூவினார்கள்.

மதுரா வெகு விரைவில் அரசு மாளிகையை அடைந்தாள். குதிரையிலிருந்து குதித்து "அப்பா!" என்று பீறிட்டுக் கொண்டு உள்ளே ஓடி, நோய்வாய்ப்பட்டிருந்த குலசேகரரைத் தழுவிக் கொண்டாள்.

அதைத் தொடர்ந்து மாளிகையில் உள்ளே எல்லோரும் கூடத்துள் சூழ, அந்த இடமே நெடுநேரம் அமளிதுமளிப் பட்டது.

ஒருவாறு முதல் ஆரவாரம் அடங்கியதும், மதுரா அந்த இரு இளைஞர்களையும் அழைத்துப் போய் குலசேகரருக்கு அறிமுகம் செய்வித்து, அவர்கள் இருவரால்தான் அவள் விடுதலை அடைந்தாள் என்று பெருமிதத்துடன் கூற,

குறுமன்னரும் மிகச் சந்தோஷப்பட்டு, "பிள்ளைகாள், எனக்கு ஒரே மகள் இவள்தான்! மகன்கள் கிடையாது. பெரும் சாம்ராஜ்யத்தை உண்டாக்கி யவர்கள், எம் முன்னோர்கள். இப்போது நாங்கள் பெயருக்குத்தான் மன்னர்களாக இருக்கிறோம். நான் கேவலம் இந்த வளநாட்டுக்குத்தான் அதிபதி! ஆனால் எம் குடிகள் இன்னும் என்னைப் பாண்டியாதிபதி என்றுதான் கூப்பிடுகிறார்கள். அது அவர்கள் அபிமானம் அவ்வளவே! ஆனால் எங்கள் வம்சத்தின் மாண்பு என்றைக்கு திரும்புமோ?" என்று பாதி வருத்தமாய்க் கூறி, அவர்களைக் குசலம் விசாரித்து மேலே பேச முடியாமல் பெரும் இழுப்புக்கும் இருமலுக்கும் ஆளானார்.

அன்று நேரம் முழுவதும் அவர்கள் ஒருவருக்கொருவர், நடந்த கதைகளைக் கூறுவதிலேயே நேரம் போயிற்று.

இரவில் தங்களுக்கு அளிக்கப்பட்ட மாளிகையில் இளைஞர்கள் படுக்கும் வேளையில், ஒரு புகழ்பெற்ற ராஜவம்சத்திற்கு நேர்ந்த கதியை நினைத்து வருத்தப்பட்டார்கள்.

பாரதப் போர் முடிந்த நாளிலிருந்தே பாண்டியர்கள் அரசு புரிந்தவர்கள். நூற்றாண்டுகள் பலவாய் இடையறாது ஆண்டு விட்டு, சமீப காலத்திலே குடும்பப் பூசல் காரணமாய் எப்படி ஐந்து பேர்களின் தலைமையில், ஐந்து கிளைகளாகப் பிரிந்தார்கள். அதனால் எந்த அளவு பாண்டியநாடு பலம் குறைந்தது அந்நியர் வருவதற்கு வழிகோலிட்டது என்பதையும்,

இப்போதும்கூட அந்த ஐந்து கிளை வம்சத்தினர் ஒன்று சேராது, தெற்கே பொதிய மலையை அடுத்துள்ள தென் பாண்டியத்தில் வெவ்வேறு வள நாடுகளில் தனித்தனியாகப் பிரித்திருப்பதையும் அவர்கள் நினைத்துப் பார்த்தார்கள்.

பாண்டிய வம்சம் நியாயமான முறையில் தொடர்ந்து சென்றிருந்தால், இந்தக் குலசேகரர்தான் மன்னராக விளங்கியிருப்பார் என்பதையும் நினைத்தார்கள். இப்போது அவரைச் சுற்றிச் சொற்ப வீரர்களே இருந்து வருவதையும், அவர்களும் ஒரு பழைய மரியாதை காரணமாக இருந்து வருவதன்றி மன்னரிடம் இருந்து கிடைக்கும் வருவாயில் இருக்கவில்லை என்பதையும் அறிந்தார்கள்.

அவர்களுக்கு அருசுவையாக விருந்து அளித்து, அவர்களது எல்லா வசதிகளையும் மன்னர் குறைவறக் கவனித்துக் கொண்டாலும்,

அந்த மாளிகை இருந்த தோற்றம், அதன் சாதனங்களின் பழமை, சுவர்களில் வர்ணங்கள் அழிந்து போயிருந்த நிலைமை, மாளிகையில் பரிசனங்கள் எளிய ஆடை உடுத்தியிருந்த கோலம் யாவுமே இளைஞர்களுக்குப் பெரிதும் வருத்தத்தை அளித்தன.

எனினும் அம்மன்னர் மீது மக்களும், சுற்றமும் வைத்துள்ள மரியாதை மிகவும் அவர்களைக் கவர்ந்தது.

இரண்டு நாட்கள் தங்கி, மன்னரின் உபசாரங்களுக்கும், மதுராவின் உபசாரத்திற்கும் ஆளானபின்,

மூன்றாம் நாள் - வருத்தமுடன் விடைபெறும் வேளையில், மன்னர் அவர்களை அணைத்துக் கொண்டு, "பிள்ளைகாள்! துங்கபத்திரைக் கரையில் புதிய ராஜ்யம் தோன்றித் துருக்கியர்களுக்கு யமனாக வந்திருப்பதைக் குறித்து மகிழ்ச்சி! பெரிய சாம்ராஜ்யங்கள் தோன்றினால்தான் இந்தத் துருக்கியர்களை முறியடிக்க முடியும். ஆகவே விஜயநகர ராஜ்யம் தோன்றியிருப்பது குறித்து மிகுந்த மகிழ்ச்சி! என் ஆசிகளை புக்க மகாராஜருக்கும், கம்பண ராஜருக்கும் தெரிவியுங்கள்! சீக்கிரம் இந்த மதுரையை ஜெயிக்கச் சொல்லுங்கள்! நாங்கள் என்றுமே அவர் பக்கம் இருந்து உதவி புரிவோம். சம்புவராயர்கள் ஒழிந்தது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி! எம் மகளை அபகரித்து, எவ்விதம் எங்கள் நாட்டைத் தங்களுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று பார்த்தார்கள், கவனித்தீர்களா? துரோகிகள் அவர்கள்!" என்று கூறி,

கொற்கை முத்துக்களை அவர்களுக்கு வெகுமதிகளாகக் கொடுத்து அவர்களை வழி அனுப்பி வைத்தார்.

மாளிகையை விட்டுப் புறப்படும் வேளையில் வல்லபனின் மனம் கனத்தது.

அவன் கடந்த இரண்டு தினங்களில் ஒரு சுவர்க்கத்திலேயே வாழ்ந்து வந்தான். இளவரசி மதுரா அவனை எல்லாவித உபசரணைகளுக்கும் ஆளாக்கிக் கொண்டிருந்தாள்.

அரை நிமிடம் கூட வெறுமையாய் இராமல், அவனது எல்லாத் தேவைகளையும் கவனித்துக் கொண்டாள். அவ்வப்போது அவள் வீசும் ஒரு பார்வை, ஒரு புன்னகை அவனை ஒரே இன்பத்தில் ஆழ வைத்தது.

அந்தப் பார்வைகளில் தயக்கமும், அந்தப் புன்னகையில் தீர்க்கமும்தான் அவனை வெகுவாகக் கலக்கிவிட்டன.

இந்த இரண்டு தினங்களில் இருவரும் எண்ணற்ற முறைகள் பார்த்துக் கொண்டார்கள். சொல்லப் போனால் இருவரது பார்வைகளும், ஒன்றுக்கொன்று எங்கே சந்திக்கப் போகிறோம் என்பதை நன்றாகத் தெரிந்து வைத்திருந்தன.

அப்படித் தெரிந்து வைத்திருந்து, அவைகள் சந்தித்த போது, இரண்டுமே ஒன்றின் இரகசியத்தை மற்றது அறிந்தது . போல் ஒரு பரஸ்பர விசாரிப்பையோ, குசலத்தையோ காட்டிக் கொண்டன. விழிகளால் அவைகள் கேள்விகள் கேட்டன, விடைகள் கூறின, முடிவுகள் செய்தன. இந்த நுண்ணிய செய்கைகள் மூலம் இரண்டும் மானசீகமாகக் கைகோத்து உல்லாசமாய் உலவத் தொடங்கின.

இப்படிப்பட்ட இனிமை மயமான அனுபவங்களில் ஆழ்ந்து வாழ்வில் அதுவரை கண்டறியா உணர்ச்சிகளைப் பெற்ற வல்லபன்,

புறப்படும் அந்த வேளையில் மனத்தில் பெரும் வேதனையும் தாபமும் அடைந்தான்.

துக்கம் பாறை போல் நெஞ்சில் அடைத்தது. உணர்ச்சிகள் அலை வீசிப் புரண்டன. உண்மையில் காலையிலிருந்து பல நாழிகைகளாய் என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்பது கூடச் சரியாகத் தெரியவில்லை.

இளவரசி மதுரா புன்னகையுடன் விடை கொடுத்தாள்.

"வருகிறேன் இளவரசி!" என்றான் அவன். அவனது விழி நீரில் ஆழ்ந்திருந்தது. இளவரசிக்குப் பேச நா எழவில்லை. தலையை மட்டும் அசைத்தாள்.

வாயிலில் குதிரைகள் கனைத்தன.

கண்ணில் உள்ள நீர் சிந்திவிடக் கூடாதே என்பதற்காக, வேகமாக நடந்து குதிரை மீது தொத்தி ஏறினான்.

கடைசி முறை மன்னரையும், மகளையும் பார்த்ததும், கண்ணீர் ததும்பி வர, அது மற்றவர்களுக்குத் தெரியக் கூடாதே என்பதற்காகக் குதிரையை உடனே தட்டி, வேகமாக விரட்டி, அந்த வேகத்தில், கண்ணிலிருந்து உருளும் கண்ணீரைத் தன் கன்னங்களிலேயே ஏந்திக் கொண்டான்.

15

ஊர்ப்புறத்தில் சிறிது தூரம் கூடப் போயிருக்க மாட்டார்கள். பின்புறத்தில் குளம்பொலிகள் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.

அங்கே குதிரை மீது இளவரசி மதுரா கையை ஆட்டிக் கொண்டு வருவதைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

"வல்லபா! கையைக் காட்டி அழைக்கிறாள்! போய் விசாரி!" என்று தத்தன் கூற,

வல்லபனும் விரைவாகத் திரும்பிச் சென்றான்.

சில கணங்களில் அவள் முன்னால் நின்றான்.

அவளைப் பார்த்ததுமே பௌர்ணமிக் கடல்போல் மனம் சீறி விளையாடியது. கண்களில் ஆர்வம் மழைபோல் மூடியது.

"இளவரசி!" என்றான் மேலே பேசவில்லை.

இளவரசி விழிகளும் ஒன்றை ஒன்று கவர்ந்து இழுப்பது போல் பல கணங்கள் இருந்த பிறகு,

மதுரா மெதுவாகத் தன் பிரமையினின்றும் கழன்று, "ஐயா!" என்றாள்.

"இளவரசி!" என்றான் அவன்.

இருவரும் குதிரையிலிருந்து இறங்கினார்கள். நிழலுக்காக அருகில் உள்ள தங்கு மண்டபத்தில் ஒதுங்கினார்கள்.

"ஐயா! தங்கள் பயணத்தை நிறுத்தியதற்குப் பொறுக்க வேண்டும், தாங்கள் புறப்படும் வரை எங்களுக்கு ஒரு குறை இருந்தது. புகழுக்கு ஏற்றவாறு தங்களுக்கு பரிசில் அளிக்கவில்லையே என்று என் தந்தை வருந்திக் கொண்டிருந்தார்!" என்றாள் மதுரா.

"ஏன் இளவரசி! எங்களுக்குத்தான் கொற்கை முத்துக்களைப் பரிசளித்திருக்கிறாரே!" என்றாள் மதுரா.

"இல்லை, எங்கள் கீர்த்திக்கு இது போதாது! இதனால் என் தந்தை மனம் ஒடிந்து போய்விட்டார்!" என்றாள் மதுரா.

"அவர் நிலைமையை என்னால் நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது, இளவரசி!" என்றான் வல்லபன்.

"நீங்கள் போன பின் தான் எனக்கு ஒரு யோசனை தோன்றியது. எங்கள் பரம்பரையில் வழிவழியாக வந்துள்ள ஆபரணங்களில் இந்த இரத்தினக் கத்தியும் ஒன்று. எங்கள் மன்னர்கள் பட்டம் சூட்டும் போதெல்லாம் இந்தக் குறுக் கத்தியையும் தரிப்பார்கள். இந்தப் பெருமை வாய்ந்த கத்தியைத் தங்களுக்கு அளிக்கலாம் என்று என் தந்தையிடம் கூறினேன். அவரும் உடன் அதை ஆமோதித்தார். நான் அதற்காகப் பறந்தோடி வந்தேன்!" என்றாள் அவள்.

அப்படியே தனது இடையில் கட்டியிருந்த குறுக்கத்தியை அதன் உறையுடன் எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

வல்லபன் மிகுந்த பரவசத்துடனும் விநயத்துடனும் அதை வாங்கிக் கொண்டான். உறையிலிருந்து கத்தியை எடுத்தான். கத்தி முழுவதிலும் இரத்தினக் கற்களும், மரகதக் கற்களும் பதிக்கப்பட்டு அது ஒரு அலங்காரக் கத்தியாக இருந்தது.

"இளவரசி!" என்று நன்றிப் பெருக்காகக் கூறினான் அவன். "இந்த வெகுமதி என்னை மிகவும் கவருகிறது. தங்களுக்கு எவ்விதம் என் உணர்ச்சிகளைக் கூறுவதென்று தெரியவில்லை" என்று சொல்லி நிறுத்தினான்.

அவளை ஆதுரமாகப் பார்த்தான்.

அவன் கண்களிலும் ஒரு உணர்வின் ஒளி இந்திர ஜாலமாக ஒளிர்ந்தது.

இருவரும் பல கணங்கள் வரை மௌனமாக நின்றார்கள்.

அந்த மௌனமே அவர்கள் மனங்களில் வெளிவரத் துடித்துக் கொண்டிருக்கும், ஆனால் வெளியே வரமுடியாத, ஆயிரக்கணக்கான வார்த்தைகளைப் பூடகமாக ஒருவர்க்கொருவர் சுட்டிக் காட்டுவது போலிருந்தது.

முடிவில் அவன், "இளவரசி! மிகவும் தன்யன் ஆனேன். தங்கள் தந்தைக்கு என் நமஸ்காரங்களைத் தெரிவியுங்கள்" என்றான்.

தலையை அசைத்தாள் அவள்.

தயக்கத்துடன், "வருகிறேன்" என்றான் அவன்.

முறுவலித்தாள் அவள்.

குதிரையின் மீது ஏறினான் அவன்.

புரவியை ஒரு வட்டமாகத் திருப்பி மீண்டும் அவளைப் பார்த்தபோது அவன் கண்கள் அவள் விழிகளில் லயித்து நின்றன. அவளது இமை சிதறாத பார்வையில் வல்லபனின் மனம் மெள்ளத் தோய்ந்து எழுந்தது.

"வருகிறேன்" என்றான் அவன்.

குதிரையை இழுத்துவிட்டான். அது பறந்தது.

சிறிது நேரத்திலேயே தத்தனின் இருப்பிடத்திற்கு போய்ச் சேர்ந்தான். தத்தன் குதிரையை மரத்தில் கட்டி வைத்து நிழலில் படுத்திருந்தான். அவனைப்

பார்த்ததும் ஆச்சரியத்துடன் வல்லபன், "தத்தா இதென்ன? நேரமாக்கி விட்டேனா?" என்றான்.

தத்தன் சாவகாசமாக எழுந்து குதிரையை அவிழ்த்தான்.

"உனக்கு இதைவிடக் கூட அவகாசம் கொடுக்கச் சித்தமாக இருந்தேன். இதில் நான் பழக்கப்பட்டவன் தானே!" என்று அர்த்த புஷ்டியுடன் சொன்னான்.

வல்லபனுக்கு அவன் சொன்னது மிகவும் பிடித்திருந்தது.

அன்று மாலை மறையும் தருவாயில் அவர்கள் ஒரு சத்திரத்தை அணுகினார்கள்.

சத்திரம் ஒரு அழகான சூழலில் இருந்தது. அதன் மேற்கே நீல வண்ணமாய் மேலை மலைகள் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கடுக்காகத் தென்பட்டன.

மலையின் பச்சை நிறக் காடுகளை அணவிக் கொண்டு வந்த தென்மேல் காற்று மனோரம்யமாய் அவர்கள் மீது வழிந்தோடியது.

இருவரும் குளித்து, சிரமப் பரிகாரம் செய்து, சத்திரத்தின் அறுசுவை உணவை உண்டு, வெளியே வந்து அமர்ந்த போது,

எங்கேயோ ஒரே ஒரு அன்றிலின் குரல் மிலு மிலுவென்று சிலிர்த்து வந்தது.

அதன் சோகமான தொனி அங்கங்கே மரங்களிலும், கிளைகளிலும் முட்டிக் கொண்டு தொலைவில் எங்கேயோ போய் ரீங்கரித்து அமிழ்ந்தது.

அந்த அன்றிலின் வேதனைத் துடிப்புகள் அங்கே, அந்தந்தப் பகுதியிலேயே உறைந்து விட்டன போல் தோன்றியது.

வல்லபனுக்கு ஏனோ தெரியவில்லை. திடீரென்று கண்களில் நீர் வழிந்தது. மனத்தல் இனமில்லா சோகம் நிரம்பிக் கொண்டது.

'நான் ஏன் சோகம் கொள்கிறேன்?' என்று நினைத்தான் அவன்.

'இது தெரியாதா? நீ விரகத்தில் இருக்கிறாய்!' என்றது மனம். அதனால்தான் நீ இப்போது சரியாக உணவு அருந்தவில்லை! தத்தனிடம் முழு மனதுடனும் பேசவில்லை.'

அவன் மனம் கூறியது அவனுக்குச் சரி என்று தோன்றியது.

கீழை நிலவு வெள்ளியாய் புன்னை மர கிளைகளில் மினுமினுத்த போது,

அவன் கடந்து வந்த பாதையில் கிழக்கு முகமாக நின்று கொண்டான்.

இந்தப் பாதை நீண்டு நெளிந்து குலசேகரன்புதூர் வரை போகும் என்றும்,

அந்த ஊரின் வீதிக்குள் சென்று மதுராவின் மாளிகை வாயிற்படியில் தொட்டு கொஞ்சியவாறு நிற்கும் என்றும் அவன் கற்பனை ஓடியது.

'ஆகா! வெறும் மண்ணால் ஆகிய இந்தப் பாதைக்கு என்ன அதிர்ஷ்டம்! மதுராவின் மெல்லிய பூப்பஞ்சுக் காலடிகள் இதன் மீது அடிக்கடி படுவதற்கு வாய்ப்புக் கிடைக்குமே!' என்று நினைத்தான் அவன்.

அதை நினைத்த மாத்திரத்திலேயே பரவசமாகி அவன் கீழே குனிந்து அந்த மண் தரையை முத்தமிட்டான். பிறகு நிமிரும்போது யாராவது தன்னைக் கவனித்தார்களா என்று எண்ணினான்.

ஆழ்வார்களில் ஒருவர் 'படியாய்க் கிடப்பேனே!' என்று விரக மிகுதியால் பாடியதை நினைத்தான். பக்தியும் சரி, பிரேமையும் சரி, முதிர்ந்து போனால், இப்படித்தான் மனிதனை உன்மத்தமாக்கி விடுகிறது.

இந்தப் புதுமையான அனுபவங்களின் தொடக்கத்தில் இருந்த வல்லபன் வெகுநேரம் அந்தப் பாதையிலேயே நின்று கண்ணீர் மல்கி, கசிந்து உருகிக் கொண்டிருந்தான்.

பொழுது போனதையோ, வெள்ளிய நிலா வானின் மீது ஏறியதையோ, அவன் உணரவே இல்லை.

அவனைப் பொறுத்த வரையில் அவன் இருந்தான். அந்தப் பாதை இருந்தது. மனத்தில் அவள் பற்றி இருந்தாள். அவ்வளவுதான்!

மற்றவை எல்லாம் மறைந்து ஒழிந்துவிட்டன.

இப்படி ஒன்றைப் பற்றியே நினைவு உடையவனாய், உள் நெகிழ்ந்து கண்ணீர் விடுபவனாய், இடம், நேரம் எல்லாம் இழந்தவனாய் நிற்கும் அவனை,

தத்தன் மெள்ளப் பிடித்து உலுக்கிய போது அவன் உடலே சிலிர்த்து விட்டது. திடுக்கிட்டு நினைவுக்கு வந்தான்.

"வா வல்லபா! நடுநிசியாகி விட்டது!" என்றான் தத்தன்.

அதைக் கேட்டும் வல்லபன் திடுக்கிட்டான்.

தத்தன் உடனே, "வல்லபா! பிரேமை என்பது க்ஷயம் போல் ஒரு வியாதி! உன்னை உருக்கிக் கொன்றுவிடும். சிதை போல் அது ஒரு நெருப்பு! உன் உடலை தகித்து எரிந்துவிடும். நல்ல மனதைக் கலக்கிவிடும். அறிவை மழுக்கிவிடும். வாழ்க்கையையே பாழடித்து விடும்!" என்றான்.

வல்லபன் திரும்பினான். அவன் கண்களில் பிரேமை பிரவகித்துக் கொண்டிருந்தது.

"தத்தா! நீ இவ்வளவு சொல்லினும் நான் பிரேமையையே விரும்புகிறேன். ஏனெனில் அதன் முடிவு தித்திக்கிறதோ இல்லையோ, அதன் வழியே தித்திக்கிறது. இந்த இனிதான அனுபவத்தை நான் எப்படி உதறிவிட முடியும்?" என்றான்.

தத்தன் அவனைப் பிடித்து இழுத்துச் சென்றான்.

இரவு முழுதும் அவன் உறங்கவில்லை. அவன் கைகள் அந்த இரத்தினக் கத்தியை வருடிய வண்ணம் இருந்தன. இது அவள் கை பட்ட இடம், இது அவளது இடை பட்ட இடம் என்று அவன் மனம் புலம்பிக் கொண்டே இருந்தது.

நினைவுகள் மதுராவைப் பற்றியே நினைத்துப் பறந்தோடின.

காலையில் சீக்கிரமே குளித்துவிட்டு, அவன் மூச்சிரைக்க, தலைக்கூந்தல் சிதறிக் கிடக்க, தத்தனின் முன் வந்து நின்றான்.

"தத்தா, நான் இப்போது ஒரு காரியம் செய்யப் போகிறேன். அதைக் கேட்டதும் நீ சிரிக்கக் கூடாது!" என்று கூறினான் நயந்து.

"வல்லபா! நீ எதைச் செய்தாலும் நான் சிரிக்க மாட்டேன். எனக்குப் பிரேமையைப் பற்றி எல்லாம் தெரியும்." என்றான் தத்தன்.

"தத்தா எனக்கு மதுரா கடைசியாகத் தங்கு மண்டபத்தில் வந்து விடை கொடுத்தாள். அந்த மண்டபமே எனக்குப் புனிதமாகப் போய்விட்டது.

அதை மீண்டும் தரிசித்து விட்டு வந்தால் ஒழிய என் மனம் வேதனையைத் தாங்காது. இங்கேயே அது உடைந்து இரண்டாகிவிடும். ஆகவே அரைநாள் அவகாசம் கொடு! கடிதில் போய் வந்து விடுகிறேன்!" என்றான்.

தத்தன் அவனை உற்றுப் பார்த்தான்.

"நல்லது. போய் வா!" என்றான்.

உடன் வல்லபன், "நீ என் இனிய நண்பன்" என்று தழுவி, ஒரே பாய்ச்சலில் குதிரை மீது தாவி ஏறினான்.

காற்றுதான் அப்படிப் பறக்குமா? அல்லது ஊழிக் கால மேகங்கள்தான் அவ்விதம் பாயுமா? அவன் கல்லையும், மண்ணையும் பார்க்காமல் பாய்ந்து சென்றான்.

இரு புறங்களிலும் மரங்கள் விருட்டென்று பின்னோக்கி ஓடின. பட்சி ஜாலங்கள் குதிரையின் வேகம் கண்டு மிரண்டு பறந்தன. குதிரையின் வாயிலிருந்து நுரை தரையெல்லாம் சிதறி ஓடியது.

பாய்ந்த பூமியில் தூள் பறக்க, ஒரே உன்மத்தமாய் வெறி பிடித்தவன் போல் குதிரையைச் செலுத்தினான் வல்லபன்.

அவன் மனத்தில் வேறு நினைவு ஏதும் இல்லை. கண்கள் ஒரே திக்கில் ஈட்டி போல் பாய்ந்து சென்றன. கடக் கடக் என்ற ஓசைதான் காதுகளில் விழுந்தது. தறிகெட்டு, நிலைகெட்டு, கட்டுக்கடங்கா வேகத்தில் பாய்ந்து சென்றான் அவன்.

மூன்று நாழிகை நேரங்கள்தான். முந்தியநாள் பகல் முழுதும் செய்த பிரயாணத்தை இந்த மூன்றே நாழிகையில் முடித்து அந்த தங்கு மண்டபத்தை அடைந்தான்.

கீழே குதித்தான். குதிரையின் தலைக் கயிற்றைத் தூக்கி எறிந்தான்.

குதிரை நாக்கை நீட்டித் தரையில் ஒருமுறை புரண்டு எழுந்தது.

அதற்கு உலகமே இப்போதுதான் ஓடாமல் நின்றது போல் தோன்றியது.

உடல் முன்னும் பின்னும் மூச்சினால் தள்ளிக் கொண்டிருக்க, இழைத்த வண்ணம் அப்படியே பூமியில் சரிந்து கொண்டது.

வல்லபனின் உடலும் தள்ளாடியது. பூமியைப் பிடித்துக் கொண்டான். உடலின் வியர்வை வழிந்து குளமாகியிருந்தது. ஆடைகள் தெப்பலாகியிருந்தன. தலையிலெல்லாம் புழுதி அடித்துச் செம்பட்டையாகி இருந்தது. கண்கள் இன்னும் நிதானமாகவில்லை. எங்கும் காட்சிகள் ஓடுவது போன்றே பிரமை ஏற்பட்டது. இரண்டு முறை தள்ளாடி விழுந்து மண்டபத்தின் தூணைப் பிடித்துக் கொண்டான். உடம்பில் வேகம் இன்னும் அடங்கவில்லை. கடக் கடக் என்ற இரைச்சல் இன்னும் காதுகளில் விழுந்து கொண்டிருந்தது. தூணின் பிடியை விட்டால் எங்கே உடம்பு பறந்து விடுமோ என்று நினைத்து அதை இறுகப் பிடித்துக் கொண்டான்.

மூச்சு பெரும் ஓசையாய் இழைத்தது. கண்கள் மல்லாடின. தலையெல்லாம் கொதிப்பாய்க் கொதித்தது.

கால் நாழிகையில் மெள்ள மெள்ள ஒரு ஆசுவாசம் ஏற்பட்டது.

கண்கள் நிலைக்கு வந்தன. உடல் அவன் பிடிக்குள் வந்தது. வல்லபனே மெதுவாக உண்மை வல்லபனாகிக் கொண்டிருந்தான்.

தான் தானேயான பின், கண்ணில் நீர் பெருகியது. மதுராவை அவன் நினைத்தது. உன்மத்தமாகியது. ஓடி வந்தது எல்லாவற்றையுமே நினைத்தான்.

சோகமும், தாபமும் பொங்கி வர, "மதுரா!" என்று வாய்விட்டுக் கூறினான்.

அவ்வளவுதான்!

"இதோ இருக்கிறேன் ஐயா!" ஒரு குரல் கேட்டது.

அவன் திடுக்கிட்டான். பிரமையா? தன் மனக் குரலே தன்னை ஏமாற்றுகிறதா? மீண்டும் அழைத்துப் பார்க்க நினைத்தான். "மதுரா!" என்றான்.

"இதோ இருக்கிறேன் ஐயா!" என்று குரல் கேட்டது.

திடுக்கிட்டான் அவன்.

கண்களைத் திருப்பினான். பார்வை இன்னும் கூடச் சரியாகவில்லை. அதன் பளபளப்புக்கிடையே ஒரு உருவெளி தெரிந்தது. மதுராதானா அவள்? அவன் உடல் நடுங்கியது. "மதுரா!" என்று உணர்ச்சி யோடு அழைத்தான். அந்த உணர்ச்சியிலேயே மூர்ச்சித்துப் படியில் சாய்ந்து விட்டான்.

குளிர்காற்றை யாரோ வீசிக் கொண்டிருந்தார்கள். வல்லபன் மெள்ள மெள்ள நினைவுக்கு வந்து கொண்டிருந்தான். எங்கே இருக்கிறோம்? தங்கு மண்டபந்தான்! இது யார், பக்கத்தில்? மதுராவா?

திடுக்கிட்டு எழுந்தான்.

எல்லாம் சொப்பனம் இல்லை. நிஜம் என்றே தெரிந்தது. மதுரா அவனைக் குளிர்ந்த கண்களோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வையில் இரக்கமும் சுரந்து கொண்டிருந்தது.

"மதுரா! நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டான், நிமிர்ந்து கொண்டே.

கனிவாக அவள் நோக்கினாள்.

மெதுவாக, "ஐயா! நீங்கள் எதற்கு வந்தீர்களோ அதற்காகத் தான் நானும் வந்தேன்" என்றாள் அவள்.

அந்த மொழி அவனது பொறியைக் கலக்கியது. மதுரா உண்மையைத் தான் சொல்கிறாளோ?

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள், மதுரா! உண்மையைத்தானா சொல்கிறீர்கள்?"

மெள்ள நிமிர்ந்தாள் அவள்.

"நீங்கள் நேற்று போனீர்கள்! இன்று ஏன் இங்கு வந்தீர்கள்? நீங்கள் சொல்லுங்கள்!" என்றாள் அவள்.

அவன் மறுமொழி சொல்ல இயலவில்லை.

"மதுரா! தயவு செய்து என்னைக் கேட்காதீர்கள்! என்னால் உத்தரம் சொல்ல முடியாது. உண்மை இல்லாத ஒன்றைத்தான் சொல்ல வேண்டியிருக்கும். நீங்கள் சொல்லுங்கள். நான் எதற்கு வந்தேனோ அதற்காகத்தான் நீங்களும் வந்தீர்கள் என்றீர்களே! எதற்கு நீங்கள் வந்தீர்கள்?" என்றான் அவன்.

அவள் முகத்தில் முறுவல் படர்ந்தது.

"ஐயா! ஹர்ஷர் எழுதிய நாகானந்தத்தில் நாயகி ஒரு பூங்காவிற்கு வருகிறாள். நாயகனும் அதே பூங்காவிற்கு வருகிறான். இருவரும் ஒருவருக் கொருவர் முன்னால் பேசிக் கொண்டதில்லை. தீர்மானம் செய்து கொண்டதுமில்லை. அப்படியானால் ஏன் தாமாகவே இருவரும் அங்கே வந்தார்கள்?" என்றாள் அவள்.

அவன் அந்த நாடகத்தைப் படித்திருக்கிறான். அந்த நாயக, நாயகியர்கள் பிரேமை வசமாகி அங்கு வந்ததும் அவனுக்குத் தெரியும். அதையே தான் மதுரா கூறுகிறாளா? அப்படியானால் அவளுக்கும் அவன் மீது பிரேமை இருக்கிறதா?

"மதுரா!" என்று உணர்ச்சியுடன் அழைத்தான்.

அவள் மறுமொழி கூறவில்லை. கண்கள் தயங்கி நின்றன. அவன் விரும்பியதை அவளது விழிகளே கூறுவது போலிருந்தது.

"மதுரா!" என்றான் அவன் மீண்டும் உணர்ச்சி வசப்பட்டு.

"வல்லபரே!" என்று மெள்ள, மிக மெள்ள அழைத்தாள் அவள்.

மெள்ள அவளது கைகளைப் பற்றினான் அவன்.

அவன் கண்ணீரைத் தன் விரலால் துடைத்தாள் அவள்.

வல்லபன் கண்கள் மேலும் பொங்கி விழவே,

"கண்ணீர் விடாதீர்கள். என் மனம் உடையும்" என்று கூறி, தன் முன் துகிலால் அவன் கண்களைத் துடைத்து விட்டாள் அவள்.

அவன் அவளைப் பார்க்க, இருவர் கண்களிலும் புன்னகை மிதந்தது.

அந்த இரு யெளவன இணைகளும், அடுத்த மூன்று நாழிகை நேரம் தங்கள் தங்கள் மனங்களை வெளிக் கொணர்ந்து பேசின. கட்டுண்ட இருபெரு நதிகள் அணைகளை உடைத்துக் கொண்டு வந்தாற் போலப் பரஸ்பரம் ஒன்றை ஒன்று அன்பில் கலந்து கொண்டு ஆரவாரமாய்ப் பேசின.

பொழுது உச்சியைத் தாண்டியதும் வல்லபன் எழுந்தான். அவனுக்கு விடைபெறும் நேரம் வந்து விட்டது.

மதுரா தயங்கி நின்றாள். கண்களில் நீர் தளும்பியது. "சுவாமி!" என்றாள் துக்கத்துடன். "இனி என்று சந்திக்கிறோமோ! அதற்குள் ஒன்று செய்வோம்" என்றாள் தழைந்து கொண்டே.

"என்ன?" என்றான் அவன்.

"நாம் காந்தருவ விவாகம் இக்கணமே இங்கேயே செய்து கொள்வோம்! இல்லாவிடில் என்னால் வாழ முடியாது" என்றாள் கண்ணீருடன் அவள்.

வல்லபனுக்கு மீண்டும் உணர்ச்சிகள் ஆர்ப்பரித்து எழுந்து அடங்கின. அவன் காதுகளில் 'விழியில் பிறழாதே!' என்ற சொல் கேட்டது. அரங்கன் திருவரங்கத்திற்குப் போகும் வரை தனது திருமணத்தைப் பற்றியே சிந்தனை செய்ய மாட்டேன் என்று சொல்லிய வாக்குறுதியும் அவன் நினைவுக்கு வந்தது.

"மதுரா! நம் மனங்கள் கூடி விட்டன. மணம் ஆவதற்குச் சற்றுப் பொறு! நான் ஒரு வாக்குறுதியில் இருக்கிறேன். அரங்கன் திருவரங்கம் போகும் வரை என் சொந்த வாழ்க்கையை நினைக்கக் கூடாது என்று என் அன்னையிடம் வாக்குறுதி அளித்திருக்கிறேன். சீக்கிரம் அரங்கன் திருவரங்கம் போய்ச் சேர்ந்து அது நிறைவேறி விட்டால், நம் மணமும் உடனே நடந்தேறும்" என்றான் அவன். அப்படிச் சொல்லும் போதே அவனுக்குக் கண்ணீர் பெருகி ஓடியது.

மதுரா அதனைப் பொருட்படுத்தினாள் இல்லை. மேலும் பொறுமலுடன் கெஞ்சியவாறு அவனிடம் பேசினாள்.

அவன் அவளைப் பலவிதங்களிலும் சமாதானம் செய்தான். தன் தாய்க்குக் கொடுத்த வாக்குறுதியை விஸ்தாரமாக எடுத்துக் கூறினான். அதன் புனிதத்தையும் விளக்கிக் கூறினான். முடிவில், "மதுரா! என்றென்றும் எந்தக் கணத்திலும் உன்னை நினைத்துக் கொண்டே இருப்பேன். நம் மனங்கள் ஒன்று பட்டு விட்டன என்பதை உறுதியோடு நினை. மற்றபடி, வாழ்வு நமக்குத் தானாகவே அமைந்து விடும். அதற்காக நாம் அரங்கனிடம் பிரார்த்தனை செய்து கொள்வோம்!" என்றான்.

இருவரும் ஒருவருக்கொருவர் தேறுதலும் தைரியமும் சொல்லிக் கொண்டு, ஒருவாறு மன ஆறுதல் அடைந்து தாபத்துடனும் தயக்கத்துடனும் விடை பெற்றார்கள்.

வல்லபன் குதிரை ஏறி அதே மின்னல் பாய்ச்சலில் பாய்ந்து சென்றான்.

16

பத்து கோடைகளும், பத்து குளிர் காலங்களும் வந்து போகின்றன.

பத்து முறை ஆடிக் காற்றுகளும், பத்து முறை ஐப்பசி மழைகளும் அடித்துவிட்டுப் போகின்றன.

இயற்கையின் பருவ நியதிகள் கிட்டத்தட்ட ஒரே ஒழுக்க ரீதியாய் நடந்து வரும் காலவெளியில் பத்து ஆண்டுகள் மெள்ள மெள்ள ஓடி விட்டிருக்கின்றன.

இந்த இடைவெளிக்குப் பிறகு அரங்கர் எங்கிருக்கிறார்.

தென் நாடுகளை உற்றுப் பார்க்கும்போது, ஐந்து துர்க்கங்களும் அழகான ஒரு சிற்றாறும் சேர்ந்த ஒரு ரம்மியமான சூழ்நிலையில் அரங்கர் அதே யோக மயமான புன்னகையுடன் எழுந்தருளியிருப்பது தென்படுகிறது.

இந்த மலைகள் திருப்பதி மலைகள் அல்ல.

தொண்டை மண்டலத்தின் தென் எல்லையில் திருவண்ணாமலைக்குக் கிழக்கே உள்ள செஞ்சி மலைகள்தான் அவை. அந்நாளில் அந்தப் பகுதிக்குக் கிருஷ்ணாபுரம் என்று பெயர்.

பின்னர் அந்த ஊரில் குடி கொண்டிருந்த செஞ்சி அம்மனின் புகழை ஒட்டி அந்தப் பகுதிக்கு செஞ்சி என்ற பெயர் வந்து விட்டது.

அந்நாட்களில் செஞ்சி என்பது, விஷ்ணு செஞ்சி என்றும், சிவ செஞ்சி என்றும் இரு பகுதிகளாக இருந்தது.

இந்த இரண்டு ஊர்களையும், மலைகளையும், வயல்களையும் வளைத்துக் கொண்டு பெரிய கோட்டை ஒன்று இருந்தது. (தற்போதுள்ள கோட்டைகள் பிற்காலத்தில் கட்டப்பட்டவை.)

விஷ்ணு செஞ்சி என்ற பகுதியில்தான் புகழ்பெற்ற சிங்கவரம் கோயில் இருந்தது. சிறிய மலை மேல் உள்ள பாறையைக் குடைந்து ஏற்படுத்திய கற்றளி இது! பல்லவர்கள் செய்த வேலைப்பாடு! கருவறையில் உள்ள மூலவரான அரங்கநாதர், திருவரங்கத்து அரங்கநாதனை விட உருவத்தில் பெரியவர்.

இந்தச் சிங்கவரம் அரங்கநாதர் கோவிலில் தான் திருவரங்கத்து அரங்கன் (உற்சவ விக்கிரகம்) தற்போது எழுந்தருளியிருக்கிறார்.

(தற்போதுள்ள செஞ்சியிலிருந்து சிங்கவரம் இரண்டரை மைல் தொலைவில் இருக்கிறது.)

சிங்கவரக் கோவிலுக்கு திருவரங்கர் எழுந்தருளிய விதம் எப்படி?

சர்வ சைனியாதிபதியான கோபணாவுக்கு அரங்கன் மீது ஏற்பட்டிருந்த ஆறா பக்திதான் அதற்குக் காரணம்.

சம்புவராயரைத் தோற்கடித்த பிறகு தொண்டை மண்டலத்தை விஜயநகர ராஜ்யமுடன் கம்பணர் சேர்த்துக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து தமது தலைநகரான முள்வாய் நகரத்தை விட்டு விட்டு காஞ்சிபுரத்தில் அவர் குடிபுகுந்து விட்டார். தமது சைனியாதிபதி கோபணாவைத் தமது புதிய நாட்டின் தெற்கு எல்லைக்கு அனுப்பி வைத்தார்.

தெற்கே எல்லையில் கோபணா செஞ்சியைத் தோற்தெடுத்து அதில் தமது ராஜ்ய பரிபாலனத்தைச் செவ்வனே நடத்தி வந்தார்.

செஞ்சிக்கு வந்த போது, சிறிது காலம் கோபணா மனம் தத்தளித்திருந்தார். திருவரங்கத்து அரங்கரை நேரில் பார்க்காவிட்டாலும் அவரது பிம்பம் போல் உள்ள சிங்கவரத்து அரங்கரையாவது பார்த்து மனம் திருப்திப் பட்டாலும்,

அடிக்கடி திருப்பதி மலை மேலே இருக்கும் திருவரங்கன் மீது வட்டமிட்டுக் கொண்டே இருந்தது. அவரது நினைவுகள் எல்லாம் அரங்கனது கழல்களின் மீதே லயித்திருந்தன.

புதிய ராஜ்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அவர் மும்மாதங்களுக்கு ஒரு முறை திருப்பதிக்குச் சென்று அரங்கனைத் தரிசித்து வந்து கொண்டிருந்தார்.

அரங்கரைப் பிரிந்திருக்கும் மூன்று மாத காலம் அவருக்கு ஒரு ஊழிபோல் நீண்டிருப்பதாகத் தோன்றியது.

அதனால் ஏற்பட்ட பக்தி பூர்வமான விரகம் அவரைத் தகித்து எரிக்க ஆரம்பித்தது.

'இனியும் பொறுக்கில்லேன்' என்றொரு நிலை வந்த போது கோபணா, திருவேங்கடமலை சென்று, தக்கவர்களிடம் பேசிவிட்டு, அரங்கரை சிங்கவரத்திற்கு அழைத்து வந்தார்.

அங்கே ஏற்கெனவே கோவில் கொண்டிருக்கும் அரங்கநாதர் சன்னிதியில் திருவரங்கத்து அரங்கனையும் எழுந்தருளச் செய்தார்.

இரு அரங்க உற்சவ விக்கிரங்களும் ஒரு சேரக் சாதிக்கும் சேவை அவருக்கு கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தினமும் மலைப் படிகளில் ஏறித் தம் இஷ்ட தெய்வமான திருவரங்கத்து அரங்கரைச் சேவிப்பதில் அவர் பக்திப் பரவசத்தைப் பெரிதும் அடைந்து வந்தார்.

இப்படி இருக்கும் நாளையிலே,

ஒரு வைகாசி மாத நிலா நாளிலே,

கோவிலிலே விசேஷ பூஜைகளைக் கண் குளிரக் கண்டுவிட்டு கோபணா வெளியே திரும்பி வரும் போது, வாயில் நிலைக்கட்டில் பூரண யௌவனனான ஒரு மனிதனும், மூச்சு இழைத்துக் கொண்டிருக்கும் ஒரு மூதாட்டியும் நிற்பதைக் கண்டார்.

அந்த யௌவன மனிதன் கோபணாவைக் கண்டதும், "சுவாமி!" என்று சொல்லிக் கீழே விழுந்து அவரை நமஸ்கரித்தான்.

மூதாட்டியும் தன் இரு கைகளைக் கூப்பி அஞ்சலி செய்தவாறு நின்றாள்.

கோபணா அந்த மனிதனைப் பார்த்து, "போதும் வல்லபா எழுந்திரு!" என்றார்.

வல்லபன் எழுந்திருந்து நின்றான்.

"சுவாமி! இது என் தாயார்! ஏற்கெனவே இரு முறை பார்த்திருக்கிறீர்கள்! தங்களை அவசியம் காண வேண்டும் என்று சத்தியமங்கலத்தில் இருந்து வந்துள்ளாள்!" என்றான்.

கோபணா அந்த மூதாட்டி வாசந்திகாவைப் பார்க்க, அவளும் உடனே, "சுவாமி! சுவாமி! என்றைக்கு மதுரை மீது நீங்கள் படை எடுக்கப் போகிறீர்கள்? என்று என் அரங்கனைத் திருவரங்கம் அழைத்துப் போகப் போகிறீர்கள்? என்று என் ஆசைகள் எல்லாம் நிறைவேறப் போகின்றன? அதற்காகத்தானே நான் இன்னும் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன்!" என்று பொருமலோடு கூறி அப்படியே அழுகையுடன் கீழே சரிந்து விட்டாள்.

கோபணாவும், வல்லபனும் அவளைத் தூக்கி எடுத்து கோவில் முகப்புப்படி மீது அமர வைத்தார்கள்.

அவர் கண்களில் நீர் மளமளவென்று சுரந்து கொண்டிருந்தது.

"அம்மா! வாசந்திகா! சிறிது காலம் பொறுங்கள் அம்மா!" என்றார் அவர் தழதழத்த குரலில்.

"சுவாமி எத்தனை நாள் பொறுப்பது? பத்து ஆண்டுகள் பொறுத்தாகிவிட்டது. சம்புவராயரை ஜெயித்ததும் நீங்கள் உடனே மதுரை மீது படை எடுப்பீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் செய்யவே

இல்லை. இதோ, அதோ என்று சொல்லி பத்து ஆண்டுகள் ஓடிவிட்டனவே! எம் அரங்கர் எத்தனை நாள் தான் இனியும் அன்னியர் கோவிலில் இருந்து வரவேண்டும்?" என்று பொருமிக் கொண்டு வெடித்தாள் அவள்.

கோபணா சில கணங்கள் வரை ஸ்தம்பித்து விட்டார்.

பிறகு மெதுவாக, "அம்மா!" என்று தொடங்கினார். "நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மை. அம்மா! சம்புவராயரை நாங்கள் ஜெயித்ததும் நேரே தெற்கே தமிழ் தேசத்திற்குள் புகுந்து மதுரையைத் தாக்கிப் பிடித்து விடுவோம் என்று நினைத்தோம். ஆனால் அது முடியாமல் போய்விட்டதம்மா" என்றார் அவர்.

"ஏன் சுவாமி?" என்றாள் அவள்.

"நாங்கள் தெற்கே படை எடுத்துப் போகிறோம் என்பது தெரிந்து, வடக்கே, விஜயநகரத்திற்கு வடக்கே இருக்கும் பாமினிக்காரர்கள் விஜயநகரம் மீது படை எடுத்து வந்து விட்டார்கள் அம்மா!"

"யார் இந்த பாமினிக்காரர்கள்?"

"உனக்குத் தெரியாதா? நம் விஜயநகரத்தின் வட எல்லையில் இருக்கும் நாடுதான் இந்த பாமினியரின் ராஜ்யம். இங்குள்ள துருக்கிய வம்சத்தினர் நம் விஜயநகரத்திற்கு அடிக்கடி தொல்லைகள் தந்து வருகிறார்கள். அவர்கள் நம்மீது படை எடுக்கவே நமது சேனைகள் எல்லாவற்றையும் அந்த எல்லைக்கு உடனே அனுப்ப வேண்டி வந்தது. தெற்கே நம்முடன் வந்த சேனையையும் கூட அனுப்ப வேண்டி வந்தது. நான் இதை எதிர்பார்க்கவே இல்லை" என்றார் கோபணா.

"ஏன் சுவாமி, வட எல்லைக்கு எல்லாச் சேனைகளையும் அனுப்பினால்தான் ஆயிற்றா?" என்று கேட்டாள் வாசந்திகா.

"நிச்சயமாக அம்மா! பாமினிப் படைகள் மிகப் பெரிதானது. மிகக் கொடூரமானது. அதற்கு நேராக நம் படைகள் அனைத்தையும் அனுப்பினால்தான் நம் வட எல்லையைக் காப்பாற்ற முடியும்! தெற்கே படைகளை நிறுத்தி வைத்திருந்தால் வட எல்லையில் பாமினியக்காரர்களை முறியடிப்பது மிகவும் கடினம். இதனால்தான் சம்புவராயரை வென்ற கையோடு நம் படைகள் அனைத்தையும் வட எல்லைக்கு அனுப்ப வேண்டி வந்துவிட்டது. இதற்கு மிகவும் நான் வருந்துகிறேன்" என்றார் கோபணா.

"சரி, சுவாமி! விளையாட்டுப் போல் பத்து ஆண்டுகள் ஓடிவிட்டனவே! இன்னமுமா வடக்கிலிருந்து படைகளை இங்கே கொண்டு வர முடியவில்லை?" என்று கேட்டாள் வாசந்திகா.

கோபணாவின் முகம் வேதனையில் தோய்ந்தது.

"இதுவும் விதிதான் அம்மா! வடக்கே நமக்கும் பாமினியருக்கும் இடையறாது பல பூசல்கள், சண்டைகள் நடந்து விட்டன. இப்பவும் நடக்கின்றன. பத்து ஆண்டுகள் ஓடியும் பூரண சமாதானம் ஏற்படவே இல்லை. இதனால் நமது மாமண்டலேசுவரர் புக்க மகாராஜா தமது கவனம் முழுவதையும் வடக்கே வைத்துள்ளார். அவர் எவ்வளவோ விரும்பியும் தெற்கே அவரால் ஏதும் செய்ய முடியவில்லை. செய்ய முடியாது என்றும் எனக்குத் தெரியும்" என்றார் கோபணா.

"செய்ய முடியாதா? சுவாமி? தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? செய்ய முடியாதா? அப்படியானால் எம் அரங்கரின் கதி இப்படியே இருந்து விடுமா?"

என்று பாதிப் புலம்பலும் பாதிக் கேள்வியுமாகக் கூறிவிட்டு மூர்ச்சை ஆனாள் அவள்.

வல்லபன் உள்ளே ஓடோடிப் போய் நீர் கொணர்ந்தான். கோபணா அவளுக்கு விசிறி விட்டார். வாசந்திகாவிற்கு வெகுநேரம் வரை நினைவு வரவில்லை. வல்லபன் அப்போது கோபணாவைப் பார்த்து, "சுவாமி! தாங்கள் மாளிகைக்குச் செல்லுங்கள்! நான் இவர்களைக் கவனித்துக் கொள்கிறேன்" என்று சொல்ல,

"வல்லபா நான் போய் வைத்தியரை அனுப்புகிறேன்" என்று கூறிவிட்டு கோபணா புறப்பட்டார். தம் மாளிகைக்கு வந்து வைத்தியரையும் அனுப்பி வைத்து விட்டு, மனச் சஞ்சலத்துடன் அவர் மாடத்து மேடையில் அமர்ந்தார்.

உள்ளே வேதனை நெருடியது. 'எத்தனை ஆண்டுகள்! பத்து ஆண்டுகள்! எவ்வளவு துரிதமாக ஓடிவிட்டன. தமிழ்த் தேசம் துருக்கியருக்கு அடிமையாகிப் போன முப்பத்து மூன்று ஆண்டுகளையும் இந்தப் பத்துடன் சேர்த்தால் மொத்தம் நாற்பத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டனவே! இன்னும் இந்தத் தேசத்தின் அல்லல் தீரவில்லையே! இன்று விடியும், நாளை விடியும் என்று நானே நாட்களைக் கடத்தி விட்டேனே! உண்மையில் இது தவறுதானே! வடக்கே பயம் இருக்கிறது. கிழக்கே பயம் இருக்கிறது என்று சொன்னால் பாமரமக்கள் என்ன புரிந்து கொள்ளப் போகிறார்கள்? நாம் ஏதோ காரணம் காட்டி வாளாவிருக்கிறோம் என்றுதானே நினைப்பார்கள். நாம் காரியத்தில் இறங்க வேறு வழியே கிடையாதா? மதுரையை மீட்பதற்கு மார்க்கமே கிடையாதா?' என்று வேகமாகச் சிந்தித்தார். வெகு நேரம் இந்தச் சிந்தனை அவரை அலைக்கழித்தது.

பிறகு அவரது மனைவியார் உணவுக்காக அழைக்க வந்ததையும் பொருட்படுத்தாது அவர் அவசரமாக வெளியே சென்றார்.

அப்போது அர்த்த ஜாமம் நெருங்கிக் கொண்டிருந்த நேரம்.

விறுவிறுவென நடந்து வீதிகளைக் கடந்தார். நேராகக் கோவில் அர்ச்சகரின் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினார்.

அர்ச்சகர் எழுந்து வெளியே வந்து கோபணாவைக் கண்டு பதறிப் போய், "தாங்களா? தாங்களா?" என்று சொல்லி நாத் தடுமாற.

"அர்ச்சக ஸ்வாமிகளே, அடியேனுக்கு ஒரு தயவு வேண்டும்!" என்று சொன்னார்.

"பிரபோ! தாங்களா என்னிடம் தயவு கேட்பது? தங்கள் கட்டளைக்கு அல்லவா காத்திருக்கிறேன்" என்றார் அர்ச்சகர்.

"தாங்கள் இப்போது அடியேனுடன் வந்து கோவிலைத் திறக்க வேண்டும்" என்றார் கோபணா.

"சித்தம் பிரபோ!" என்றார் அர்ச்சகர்.

அவர் திறவுகோலை எடுத்துவர, இருவரும் அந்த இரவில் நிச்சிந்தையான நேரத்தில் மலைப்படிகள் மீது ஏறினார்கள்.

மேலே போய், கதவுகளைத் திறந்ததும் கோபணா பிரமை பிடித்தவர் போல ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து அரங்கனை நோக்கிச் சென்றார்.

பத்து அடிகள் சென்றிருக்க மாட்டார். காலில் ஜில்லென்று ஏதோ பட்டது. ஏதோ திரவமாக இருக்கிறதே என்று கைகளில் தொட்டுத் தூங்கா

விளக்கு வெளிச்சத்தில் பார்த்த போது அது இரத்தமாக இருந்தது.

"ஏது இரத்தம்?" என்று திடுக்கிட்டுக் கேட்டார் அவர்.

"இதுவா! அந்தப் பிள்ளையாண்டானும், அவனது தாயாரும் இங்கேதான் அமர்ந்திருந்தார்கள். இரத்தத்தைத் தாயார் வாந்தி எடுத்திருப்பார்கள்! நாங்கள் கவனிக்கவில்லையே! கவனித்திருந்தால் கழுவி இருப்போமே!" என்றார் அர்ச்சகர்.

கோபணா மீண்டும் திடுக்கிட்டார்.

"ஆபத்தாயிற்றே!" என்று சொல்லி அர்ச்சகரைப் பார்த்து, "தாங்கள் சற்று இருங்கள்! இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறி, படிகளில் விரைவாக இறங்கிக் கீழே சென்றார்.

விஷ்ணு செஞ்சியில் மொத்தம் மூன்று சத்திரங்களும், இரண்டு மடங்களும் இருந்தன. இந்த ஐந்திலும் சென்று வல்லபனையும், அவன் தாயாரையும் அவர் தேடினார். கடைசி மடத்திலிருந்து செய்தி கிடைத்தது. வல்லபனின் தாயாருக்கு நினைவு வந்துவிட்டது என்றும், அவர் உடனே காஞ்சிபுரம் போக விரும்பினார் என்றும், இந்த உடல் நிலையில் போகக் கூடாது என்று வல்லபனும், இதரர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதைப் பொருட்படுத்தாமல், போவதிலேயே குறியாக இருந்தாள் என்றும் மடத்துக் காரியம் கூறினார். 'இந்த அம்மாள் ஒரு வெறியில் இருந்தாள். யார் தடுத்தாலும் அவர்களை உதறிவிட்டுப் போய் விடுவாள் போன்றிருந்தது' என்று சொல்லி முடித்தார் அவர்.

கோபணா மனம் வெதும்பினார். வேதனையுடன் கோவிலை நோக்கித் திரும்பினார்.

'எதற்காக அந்த அம்மாளுக்கு இப்படி ஒரு ஆவேசம் வந்திருக்கும்? அரங்கன் கதியை நினைத்துத்தானே வந்திருக்கும்? என்ன விசித்திரமான பக்தை இவள்?' என்று நினைத்துக் கொண்டே மலையருகே வந்து படிகளில் ஏறிக் கோவிலை மீண்டும் அடைந்தார்.

அர்ச்சகர் அதற்குள் இரத்தக் கறையை நீக்கி, சுத்தப்படுத்தி இருந்தார். கோபணாவைக் கண்டதும் அர்ச்சகர் எழுந்திருந்தார்.

"அர்ச்சக சுவாமி! இந்தப் பெண்மணி நான் போன பின் மூர்ச்சை தெளிந்தாளோ? தெளிந்த பின் என்ன செய்தாள்?" என்று கேட்டார்.

அதற்கு அர்ச்சகர், "பிரபோ! அந்த அம்மாள் மூர்ச்சை தெளிந்து எழுந்ததும், அவளது குமாரன், அவளை சன்னிதிக்கு அழைத்துப் போக விரும்பினான். அவள் அதை விரும்பவில்லை. கையை உதறினாள். அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று தெரியவில்லை. இங்கிருந்தே சன்னிதியைப் பார்த்துக் கத்தினாள். 'ஏ ரங்கா! நீ இயக்கும் மனிதருக்குத்தான் சக்தி! இல்லை என்றால் உனக்குமா இல்லை! கேவலம் உன் *திருவை நீ மீட்டுக்கொள்ள வில்லையே! உனக்கு வெட்கமில்லை? உன்னை நான் பார்க்கப் போவதில்லை. பார்த்தால் என்னால் தாங்க முடியாது. இருதயம் பிந்து விழுந்து விடுவேன். இதோ போகிறேன். நான் ஒரு பெண். உன்னை நான் இங்கிருந்து நகர்த்துகிறேனா, இல்லையா, பார்!' என்று சூளுரைத்தாள். பிறகு அவள் அரங்கனைப் பாராமலேயே போய்விட்டாள்!" என்றார்.

* திரு - திருவரங்கமும், திருவரங்கக் கோவிலும் இரண்டும் சேர்ந்த சொத்து!

கோபணாவுக்கு இருதயத்தில் யாரோ அடித்தது போலிருந்தது.

அவர் மனத்தில் அதுவரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் எல்லாம் திரண்டு வருவது போலிருந்தது. திடீரென்று தூணில் தம் தலையை மோதிக் கொண்டார்.

17

கோபணா கல்தூண் மீது மோதியதைப் பார்த்ததும் அர்ச்சகர் பதறிப் போய் அவரைப் பிடித்து இழுத்து, "பிரபோ அபசாரம் அபசாரம்! இப்படிச் செய்யலாமோ? இது அடுக்குமோ?" என்று நடுக்கமுடன் கூற,

கோபணா ஆசுவாசமுடன் நிமிர்ந்து,

"அர்ச்சக சுவாமி! இது ஒரு தண்டனை! தனக்குத் தானே கொடுத்துக் கொள்ளும் தண்டனை! அவ்வளவுதான்!" என்று கூறினார்.

"பிரபோ! தாங்கள் என்ன தவறு செய்தீர்கள், தங்களுக்குத் தாங்களே தண்டனை கொடுப்பதற்கு?" என்று அர்ச்சகர் கேட்க,

"சுவாமி! அதை சொல்கிறேன். கேளுங்கள்! அரங்கனை அழைத்துப் போய் திருவரங்கத்தில் சேர்த்து விடுவதாகச் சபதம் எடுத்தேன். இன்றல்ல நேற்றல்ல! பத்து வருடங்களுக்கு முன்பு! அதன் முதல் படியாக சம்புவராய ராஜ்யத்தின் மீது படையெடுத்து அதை நம் ராஜ்யத்துடன் இணைத்துக் கொண்டோம். அவ்வளவு தான்! அதற்குப் பின் எதுவுமே நிகழவில்லை. எதுவும் நிகழவில்லை" என்று குலுங்கினார் கோபணா.

அர்ச்சகர் கலவரத்துடன் நின்றார்.

"பிரபோ! இன்னும் நேரம் வரவில்லை. அப்படித்தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது" என்றார் அவர்.

"நேரமா? அது எப்படி வரும்? நாமாக உண்டாக்கிக் கொண்டால்தானே அது வரும்! அதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டாமா? நான் என்ன செய்தேன். செஞ்சிக்கு வந்தேன். இது நமது தெற்கு எல்லை. இங்கிருந்து கொண்டு சுல்தானின் ராஜ்யத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தேனே ஒழிய ஏதும் செய்யவில்லையே! அப்படிச் செய்யவும் தோன்றவில்லையே! என் வீரத்திலும், பலத்திலும் நம்பிக்கை வைத்து வெளி உதவி மீது சாராமல் இருந்திருந்தால் ஒரு வேளை என் சபதத்தை முடித்திருப்பேனோ என்னவோ! அதை இப்போதுதான் உணர்கிறேன்" என்றார் கோபணா.

பிறகு அவர் சரேலென்று எழுந்து, "அர்ச்சக சுவாமி! இரண்டு பூப்பந்து கட்டிக் கொடுங்கள். ஒன்றில் துளசி இலையும், மற்றொன்றில் அரளி இலையும் வைத்துக் கொடுங்கள். நான் திருவுளக் குறிப்புப் போட்டுப் பார்க்கப் போகிறேன்" என்றார்.

அர்ச்சகர் பந்துகளைச் சித்தம் செய்ய, இருவரும் சன்னிதி முன்னால் சென்று பிரார்த்தனை செய்து பந்துகளைக் குலுக்கிப் போட்டார்கள்.

அவற்றில் ஒன்றை கோபணா பக்தி சிரத்தையோடு எடுத்துப் பிரித்துப் பார்க்க, உள்ளே துளசி இலை இருந்தது.

உடன் அவர் ஆனந்தம் எய்தினவராய்ப் பரவசத்துடன் எழுந்து, "அர்ச்சக சுவாமி! நான் நினைத்ததற்கு அரங்கன் ஒப்புதல் கொடுத்துவிட்டார். சொந்த வீரத்திலும், சொந்த முயற்சியிலும்

இறங்கலாம் என்று சாதித்து விட்டார்" என்று கூறி, கீழே விழுந்து சாஷ்டாங்கமாக அரங்கனை வணங்கிவிட்டுப் பரபரவென்று கோவிலை விட்டுச் சென்றார்.

மறுநாள் காலையில் நல்ல வேளையில் அவர் காஞ்சிபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

பிரசித்தி பெற்ற காஞ்சிபுரம் நகரம் பழையபடி தன் மகோன்னத வாழ்க்கையில் இருந்தது.

பலமுறை பல மன்னர்களின் கை மாறி வந்த அந்தப் புண்ணியத் தலம் இதுவரை தனது கீர்த்தியில் எவ்விதக் குறைவும் இல்லாமல் இருந்து வந்தது.

ஆனால் சமீபத்தில் சம்புவராயர்கள் ஆட்சி புரிந்த காலத்தில் அதன் சமய வாழ்வுக்குச் சில தடங்கல்கள் ஏற்பட்டு வந்தன. சம்புவராயர்கள் மதுரை சுல்தானியர்க்கு அடிமை மன்னர்களாக இருந்தபடியால் காஞ்சீபுரம் தனது சமய வாழ்வில் பூரணமான சுதந்திரமும் தன்னிச்சையான வாழ்வும் காணாமல் இருந்து வந்தது.

ஆனால், இப்போது விஜய நகரத்தாரின் கைக்கு நகரம் சென்ற பிறகு, மீண்டும் அது பழைய மகோன்னதத்தைப் பெற்றுவிட்டது. அதன் சமய வாழ்க்கை மீண்டும் பழைய பொலிவுடன் இயங்க ஆரம்பித்தது.

பழைய வியாபாரங்களும், போக்குவரத்துக்களும் மீண்டும் தளிர்த்துவிடவே, எங்கும் கலகல என்று ஒரு சுறுசுறுப்பு ஓடிக் கொண்டிருந்தது. சம்புவராய ராஜ்யத்தை ஜெயித்ததிலிருந்து கம்பணர் காஞ்சிபுரத்தைத் தமது தலைநகராக வைத்துக் கொண்டார். முள்வாய் நகரத்திலிருந்து தம் மனைவிகளையும், ஊழியர்களையும் இங்கேயே தருவித்துக் காண்டார்.

நகரில் பெரிதாக அரண்மனையும், அதை அடுத்து சித்திரத் தடாகமும் கட்டிக் கொண்டு அரசர்களுக்கான எல்லாவித விளையாட்டுக்களிலும் ஈடுபட்டிருந்தார்.

வேனில் காலம்! காலை நேரம் சிறிது சிறிதாகக் கரைந்து கொண்டிருந்த வேளையில், மன்னர் கம்பணர் தமது ராணிகளுடன் தடாகத்தில் ஜலக்கிரீடையில் ஈடுபடுவதற்காகப் போய்க் கொண்டிருக்கிறார்.

அந்நாளைய அரசர்களுக்கு இது ஒரு இன்றியமையாத விளையாட்டு. இந்த விளையாட்டில் கம்பணரும் மனம் விட்டுக் களித்துக் கொண்டிருக்க, அங்கு நடப்பவைகளை அவரது புலமைமிக்க மனைவி கங்காதேவி தனது சிருங்காரமிக்க நடையில் எப்படி வர்ணிக்கிறாள் என்பதைக் கவனிப்போம்.

"இந்திரன் தமது தெய்வலோக அழகிகளுடன் போவது போல், கம்பணர் தம் அழகான ராணிகளுடன் உய்யான வனத்தில் நடந்து போனார்.

"தெற்கிலிருந்து பலத்த காற்று எழுமுன் வண்டினங்கள் முரல்வது போல, பெண்களின் மேகலை ஆபரணங்கள் கிணுங்கி முணுமுணுத்தன.

"பெண்களின் இடை அணிகள் குலுங்கும் போதெல்லாம் மன்னர் கம்பணரை மாரனின் அம்பு ரீங்கரித்துத் தாக்குவது போலிருந்தது.

"சித்திரத் தடாகத்தின் தாமரை மலர் மீது அரசர் நீரைத் தெளித்து விளையாடினார். அது ஒரு பெண்ணின் பொறாமையைக் கிளறி விட, அவள் கண்கள் நீரால் நிறைந்து விட்டது.

"ஜலக்கிரீடையில் மன்னர் ஒரு பெண்ணின் தொடை மீது கையை வைத்துக் கிள்ளிய போது அவள் தன்னை ஒரு மீன் கடிக்கிறது என்பது போல்

வேண்டுமென்றே ஒரு பாவனையை ஏற்படுத்திக் கொண்டு இதர பெண்கள் பார்த்திருக்கும் நேரத்திலேயே மன்னர் மீது சரிந்து விட்டாள்.

"குளத்தின் நீர் முதலில் பெண்களின் காலைத் தொட்டது. பிறகு தொடைகளைத் தொட்டது. பிறகு இடையைத் தொட்டது. கடைசியில் மார்புகளைத் தொட்டு நின்றது.

"நீரில் ஜலக்கிரீடை செய்த பெண்கள் கலவை சுகம் துய்த்தவர்கள் போல் தென்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் உதடுகளில் வர்ணங்கள் அழிந்து விட்டன. கண்களில் மை கரைந்து விட்டது. நெற்றியில் திலகம் அழிந்து விட்டது. இதைப் பார்க்கும்போதே மன்னருக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

"முடிவில் எல்லோரும் களைத்துப் போய் நீரிலிருந்து எழுந்து வந்தார்கள். பெண்கள் எழுந்து வரும்போது அவர்கள் தொடைகளில் உள்ள நகக் குறிகள், மெல்லிதான, ஈரம் பொருந்திய துகில் வழியாகத் தெரிவதைக் கண்டு மன்னர் பெரிதும் ரசித்தார்.

"பெண்கள் தங்கள் கூந்தலைத் தூக்கி முடிந்து, புதிய துகில்களை அணியும் நேரத்தில் மன்னர் அவர்கள் மேனிகளைக் கண்டு மிகுந்த ரசனையில் ஆழ்ந்தார்.

"பிறகு அரசர் அந்தப் பெண்களுடன் அந்தப்புரம் சென்று, புதிதுகள் அணிந்து, பயபக்தியுடன் பூஜைக்காகச் செல்லத் தொடங்கினார்."

அந்நாட்களில் போர் செய்வதும் குடிகளைக் காப்பதும் எப்படி ஒரு மன்னருக்குக் கடமையாகக் கருதப்பட்டதோ, அதே போல, பல விளையாட்டுகளில் ஈடுபட்டுத் தன்னையும், தன்னைச்

சார்ந்தவர்களையும் மகிழ்விப்பது கூட ஒரு கடமையாகக் கருதப்பட்டது.

மன்னர் கம்பணர் அன்று நீராடி முடிந்து, பூஜை செய்த பின்னர் போஜனம் செய்து, ராஜரீகக் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கி, குறுநில மன்னர்கள் பலரை வரவேற்றுப் பேசி அனுப்பிவிட்டு, கடைசியில் பொழுது சாய்ந்து, அந்தப்புரத்திற்கு மீண்டும் ஏகிய போது அவர் பெரிதும் களைத்துப் போயிருந்தார்.

"கங்கா என்னவோ தெரியவில்லை. எனக்கு இன்று மனமும் சரியில்லை! உடம்பும் சரியில்லை!" என்றார்.

"ஏன் சுவாமி! இன்று ஜலத்தில் அதிக நேரம் இருந்ததாலோ?" என்று முகத்தில் குங்குமம் குழையக் கேட்டாள் ராணி கங்காதேவி.

"நீ ஒரு கவி! உனக்கு சிருங்கார வார்த்தைகளும் செயல்களும் நிறையப் பிடிக்கும். எந்த விஷயத்தையுமே சிருங்காரத்தால் உற்பவித்தது போல் ஒரு பாவனையை கொடுத்து விடுவாய்! கங்கா! எனக்கு இன்று தலையை வலிக்கிறது. கடமைகள் பலவற்றில் இன்று ஈடுபட்டாலும் மனம் சரியில்லை" என்றார்.

"ஏன் சுவாமி?" என்றாள் கங்கா.

"நம் பிரதானி மாரய்ய நாயகரின் பேத்திக்கு அடுத்த வாரம் பிறந்த தினம் வருகிறதாம்!" என்றார் மன்னர்.

"அதனால் என்ன?" என்று ஆச்சரியமுடன் கேட்டாள் கங்கா.

"உனக்கு ஞாபகம் இருக்கிறதா, மாரய்ய நாயகரின் மகள் சூல் உற்றிருந்த போது தான் நாம் காஞ்சீபுரம் கோட்டையைப் பிடித்தோம்!" என்றார் அரசர்.

"ஆமாம்! நினைவிருக்கிறது" என்றாள் கங்கா.

"அந்த மகளுக்கு மகள் பிறந்து பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இது பத்தாவது பிறந்த தினம்" என்றார் மன்னர்.

"அதற்கு என்ன?"

"காலம் எவ்வளவு சீக்கிரம் ஓடிவிட்டது? நாம் இன்னும் நம் லட்சியத்தில் வெற்றி பெற முடியவில்லையே என்று வருந்துகிறேன். மதுரை இன்னும் சுல்தானியர் வசம் தான் இருக்கிறது. இன்று காலையில் இதெல்லாம் நினைவுக்கு வந்தது. மனம் சோர்வு அடைந்துவிட்டது!" என்றார் மன்னர்.

அவர் சொன்னது நியாயமாகப் படவே கங்கா மௌனம் சாதித்தாள். அவளது மனத்திலும் நினைவுகள் ஓடின.

மன்னர் அப்படியே மஞ்சத்தில் சாய்ந்து கொண்டார். அப்போது இரு தாதிகள் வீணை வாசிக்க ஆரம்பிக்க, கங்கா அவர்களை நிறுத்தி, "போகலாம்" என்று சமிக்ஞை செய்தாள்.

பிறகு அவள் சுவாதீனமாக மன்னர் அருகில் அமர்ந்து கொண்டு, "சுவாமி! தங்கள் மனத்தில் உள்ள இந்த வருத்தம் எனக்கும் இருந்து வருகிறது. நெடுநாட்களாக இருந்து வருகிறது. ஆடல் பாடல்களில் நான் ஈடுபட்டிருந்தாலும் ஒரு சுருதி போல் இந்த சோக நினைவு என் மனத்தில் மீட்டிக் கொண்டே இருக்கிறது. ஆனால் வாழ்க்கையில் சோகத்தை எப்போதும் ஒதுக்குப்புறமாகவே வைத்துப் பேசினால்தான் நமக்கு இன்பம் ஏற்பட வழி கிடைக்கும் இல்லையா?" என்றாள் கங்கா.

மன்னர் அவளை ஆமோதித்துக் கொண்டே பஞ்சணை மீது சாய்ந்தார். கங்கா அவரது நெற்றியைத் தொட்டு விட்டு, "ஐயோ சுடுகிறதே! உங்களுக்குக் காய்ச்சலா?" என்று சொல்லிப் போர்வையை இழுத்துவிட்டாள்.

இரண்டு நாட்களாகவே கம்பணருக்கு ஜுரம் கடுமையாக இருந்தது. மூன்றாம் நாள் சற்றுத் தணிந்தது.

அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்து அவர் தமது பிரத்தியேக மாளிகையின் கூடத்தில் படுத்துக் கொண்டார்.

அன்று பொழுது சாய்ந்து விட்டது. விளக்கு வைத்தாகி விட்டது. வெளியே கரு கரு என்று எங்கும் இருள் பரவிவிட்டது.

கம்பணர் மஞ்சத்தில் படுத்துக் கொண்டு பெரிய நிலை வாயில்கள் வெளியே வானத்தையும் நட்சத்திரங்களையும் பார்த்துக் கொண்டிருந்தார்.

காற்று அப்போது ஜிலு ஜிலுவென்று வீசி அடித்து சீலைகளை ஆட்டி அசைத்த வண்ணம் இருந்தது.

மன்னரின் மனம் நனவுக்கும், பிரமைக்கும் இடையே சஞ்சரித்துக் கொண்டிருந்தது. கண்களை மூடினால் போதும் பிரமை கண்களைத் திறந்தால் பிரமை! உடம்பு இன்னும் சரியாகவில்லை.

உள்ளே எத்தனையோ வித எண்ணங்கள் அலைக்கழிக்கக் கண்களை அவர் மூடினார். தளதள என்று ஒரு வேதனை! அவர் செய்ய முடியாத காரியங்களைக் குறித்த வேதனை. செய்ய முடியாத காரியங்களில் தலையானது மதுரையை வெல்ல முடியாதது. அந்த வேதனைதான் பெரும் வேதனை.

அதை நினைக்கும்போது திடீரென்று ஏதோ ஒரு வித ஓசை கேட்டது. திடுக்கிட்டு கம்பணர் கண்களைத் திறந்தார்.

நிலைவாயிலின் திரைகள் உலைந்து அலைய, அதன் நடுவில் ஒரு உருவெளி தெரிந்தது. உற்றுப் பார்த்தார். யார் அது பெண்ணா? மாயையா?

கம்பணருக்கு வியர்த்துவிட்டது. உருவத்தையே வெறித்துப் பார்த்தார். அது உருவந்தான்! சிலை போலும், தெய்வம் போலும் அசையாமல் நின்றது.

"யார் அது? நான் காண்பது கனவில்லையே! எந்த தேவதையைப் பார்க்கிறேன்? யார் நீங்கள் மகாலட்சுமியா அரங்கநாயகியா? அல்லது பரமேசுவரியா? யார் நீங்கள்?" என்று வாய்விட்டுக் கூறிக் கொண்டே இருந்தார் அவர்.

உருவம் அசைந்தது.

தத்தளித்த கம்பணர், "மீனாட்சியா? மதுரை மீனாட்சியா?" என்று பரபரப்புடன் கேட்டார்.

"ஆமாம்!" என்பது போல் உருவம் தலை அசைத்தது.

கம்பணருக்கு எதுவும் ஓடவில்லை. மார்பு படபடவென்று அடித்தது.

"தாயே மீனாட்சி!" என்றார் அவர்.

"கம்பணா!" என்றது உருவம். "இன்னமும், நீ பேசாமல் இருக்கிறாய். என் இருப்பிடம் பாழாகிக் கிடக்கிறது! நான் தங்குமிடம் இல்லாமல் அலைகிறேன்" என்றது.

கம்பணருக்கு உணர்ச்சி பீறிட்டது. "தேவி!" என்று நடுக்கமுடன் அழைத்தார்.

உருவம் பேச ஆரம்பித்தது. (அதன் பேச்சு முழுவதும் கங்கா தேவியினால் 'மதுரா விஜய'த்தில் எழுதப்பட்டவை. அதைக் கீழே தருகிறேன்.)

"கம்பணா! திருவரங்கத்தைப் பார்? அங்கே ஆதிசேடன் என்ன செய்கிறார் தெரியுமா? மூலவர் மீது கோவில் இடிந்து விழாமல் இருக்கத் தன் படத்தை வளைத்துக் காத்துக் கொண்டிருக்கிறார். கோவில் இடிந்து பாழாய்க் கிடக்கிறது.

"திருவரங்கம் மட்டுமல்ல! தமிழ் பேசும் நாடுகளில் உள்ள இதர கடவுளரின் கோவில்களை நினைத்தாலே என் வருத்தம் எல்லை கொள்ளாமல் விரிகிறது. கோவில் கதவுகளைக் கரையான்கள் அரித்து உண்டு விட்டன. மதில் மேலும், விதானம் மேலும் செடி கொடிகள் முளைத்துக் காடாகிவிட்டன.

"மிருதங்கம் எதிரொலித்த கோவில்களில் இன்று ஓநாய்கள் ஓலமே கேட்கிறது.

"காவேரியை அங்கங்கே தடுக்க அணைகளோ, சேதுக்களோ இல்லாமல் அது தன் இஷ்டப்படித் தனது வழியை மாற்றிக் கொண்டு ஜனங்களை வருத்தியவாறு ஓடுகிறது.

"வேதம் கேட்ட அந்த அந்தணர் வீதிகளில் மாமிசத்தின் நெடி எழுகிறது.

"மதுரை நகரின் சோலைகள் எல்லாம் மறைந்துவிட்டன. தென்னைகள் நின்ற இடத்தில் இப்போது கழு மரங்கள் நிற்கின்றன. அவற்றின் முனைகளில் மண்டையோடுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

"முன்னாட்களில் அழகான நங்கைகளின் பாதசர ஒலிகள் கேட்ட சாலைகளில் இப்போது கை விலங்கு இட்டு இழுக்கப்படும் மக்களின் ஓலம் கேட்கிறது.

"பட்டுத் திரைகள் ஆடிய அரண்மனைகளில் இப்போது சிலந்தி வலைகள் ஆடுகின்றன. சிறைச் சாலைகளில் மக்களின் அழுகைகள் அபரிமிதமாய்க் கேட்கின்றன.

"தாமிரவருணியின் தூய நீரில் ஒரு காலத்தில் சந்தனம் மிதந்து வரும். இப்போது கொலை செய்யப்பட்டவர்களின் இரத்தம் மிதந்து வருகிறது.

"திராவிட தேச மக்களின் பரிதாபமான, கண்ணீர் நிறைந்த முகங்களையும், அவர்களது பெருமூச்சு களையும், அலங்கோலத் தலைகளையும், கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன்.

"கம்பணா! கலி முற்றிவிட்டது. ஒழுக்கம் போய்விட்டது! நேர்மை ஒழிந்து விட்டது! தர்மம் அழிந்து விட்டது!

"கம்பணா! இதோ பார்!"

கம்பணர் விதிர்விதிர்த்து அந்த உருவத்தைப் பார்த்தார். அவர் கண்களை நம்ப முடியவில்லை. அந்த உருவத்தின் கையில் ஒரு குறுவாள் உறையுடன் கிடந்தது.

கரும் உறையிலான அந்த வாளை அந்த உருவம் அவன் முன்னே கொண்டு வந்தது.

"கம்பணா! இந்த வாள் விசுவகர்மரால் சிவபிரானிடம் கொடுக்கப்பட்டது. சிவபிரானும் இதைப் புகழ்பெற்ற பாண்டியர்களிடம் கொடுத்தார். அவர்களும் காலம் காலமாய் இதைத் தம்மிடமே வைத்திருந்தார்கள். அழிக்க முடியாத கீர்த்தியை அடைந்தார்கள்.

"ஆனால் காலப் போக்கினால் அவர்கள் கீர்த்தி மங்கி விட்டதை உணர்ந்த அகத்திய முனிவர், இதை உனக்கே அனுப்பி வைத்துள்ளார்!

"நீ இயல்பிலேயே தைரியசாலி! சாகசங்கள் நிறையச் செய்தவன். இந்தக் குறுவாள் உன்னிடம் இருந்தால் பெரிய பராக்கிரமசாலியாக நீ வாழ்வாய்!

"இதைத் தரித்திருக்கும் வரையில் உன்னை எந்த ஆபத்தும் அணுகாது! எந்தத் தோல்வியும் உன்னை அடையாது! கடவுளர்கள் வந்தால்கூட உன்னை எதிர்க்க முடியாது.

"நீ மதுரைக்குப் புறப்படுவாய். அன்று வடமதுரையில் கண்ணன் கம்சனைக் கொன்றது போல் நீ அந்த யவன அரசரைக் கொன்று விடுவாய்!

"துருக்கியர்களை எல்லாம் விரட்டி அடிப்பாய்! தர்மத்தை நிலை நிறுத்துவாய்! ஆறாய் இரத்தத்தை ஓட வைப்பாய்!

"துருக்கிய அரசரைக் கொன்றுவிட்டு, சேதுக்கரைக்குச் சென்று ஒரு ஜய ஸ்தம்பம் நாட்டுவாய்.

"நீ தமிழ்ப் பேசும் நாட்டை சீக்கிரமே ஆளத் தொடங்குவாய்!

"உன் ஆட்சி ஏற்பட்டால், காவேரி, பழக்கப்பட்ட யானை போல், அமைதியாக இனி அடங்கி ஒடுங்கி ஓடி வருவாள்! ஜய விஜயீபவ!"

இவ்வளவு நீண்ட உரையை முடித்து விட்டு அந்தப் பெண்ணுருவம் புன்னகையோடு அவரைப் பார்த்தது. கையைத் தூக்கி ஆசீர்வதித்தது.

கம்பணர் எழ முயன்றார். பலவீனம் அவரைத் தடுத்தது. குபீரென்று வானவெளியில் மேகக் கூட்டங்கள் பறந்தன. பெரும் காற்று உள்ளே ஓடிவந்து விளக்குகளை அணைத்தது. எங்கும் இருள் சூழ்ந்து விட்டது.

"மீனாட்சி! மீனாட்சி!" என்றார் கம்பணர். மறுமொழி கேட்கவே இல்லை.

18

எங்கும் வெளிச்சம் மறைந்த பிறகு அந்த உருவத்தைக் காணவில்லை. அதன் பேச்சும் கேட்கவில்லை.

கம்பணருக்கு வியப்பாக இருந்தது. தான் கண்டது பிரமையா, உண்மையா என்று தெரியவில்லை. உள்ளே காற்று பலமாக வீசியது. கோடை நாளின் திடீர் மழை அடையாய் விழத் தொடங்கியது.

சிறிது நேரம் கம்பணர் அப்படியே இருந்தார். பிறகு தன் புலன்களையே தாம் நம்பாதது போல் எழுந்திருந்தார். உருவம் நின்ற இடத்தில் போய் நின்று பார்த்தார். அந்த இடம் மட்டும் வெம்மையாக இருந்தது. அதுவே அவரைத் தூக்கி வாரிப் போட்டது.

மெதுவாகக் கதவைச் சாத்தினார். மனம் குழம்பியது. நடந்ததெல்லாம் உண்மைதானா? மதுரை மீனாட்சியே தனக்குக் கட்டளையிடுவதற்கு வந்தாளா என்று நினைத்தார்.

பளிச்சென்று ஒரு எண்ணம் உதயமாகியது. மீனாட்சி அவருக்கு ஒரு குறுவாளைப் பரிசில் அளித்தாளே! நிஜமாக அவள் அளித்திருந்தால் அது ஆதனத்தின் மீது இருக்க வேண்டுமே!

இருட்டில் துழாவிக் கொண்டு நடந்தார். ஆதனத்தின் அருகே சென்று குனிந்தார். கைகளால் அதன் மேல் புறத்தைத் தடவிய போது ஏதோ தென்பட்டது. அது அந்த குறுவாள்தான்.

குறு வியர்வை அரும்பி வர, கண்களில் மல்கும் நீருடன் அப்படியே மண்டியிட்டு அமர்ந்தார்.

"தாயே மீனாட்சி! நீ இந்த மானிடனைத் தேடி வந்தாயா? கேவலம் இந்த நரனிடம் உதவி கேட்க வந்தாயா? எல்லாம் உன் ஆணையினால்தானே, அம்மா நடக்கிறது! எங்களை எல்லாம் நீ உபகரனங்களாகத் தானே வைத்திருக்கிறாய்! கட்டளை இடம்மா! அப்படியே செய்து வைக்கிறேன்" என்று சொல்லி அந்தக் குறுவாளைப் பலமுறை கண்களில் ஒத்திக் கொண்டார்.

கம்பணர் தெய்வ அருளை நினைத்துப் புளகிதம் அடைந்து கொண்டிருந்த அதே தருணத்தில் காஞ்சீபுரம் சத்திரம் ஒன்றில் வாசந்திகா மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஒரு மேடை மீது அமர்ந்து கொண்டிருந்தாள்.

அவள் முன்னால் நின்ற வல்லபன், "அம்மா! நீ செய்தது தவறு! இது தெய்வத்திற்கு ஏற்காது!" என்று சொன்னான்.

"எது ஏற்காது, வல்லபா! தெய்வத்திற்காகத்தானே இதை நான் செய்தேன். ஏமாற்ற வேண்டுமென்று எண்ணி நான் இந்தக் காரியத்தில் இறங்கவில்லையே! கம்பன ராஜாவிடம் முறையிட வேண்டுமென்று போனேன். அவர் தனியாக இருக்கக் கூடிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தேன். நல்லவேளை, அவருக்கு குணமாகி வருவதால் தனியே இருந்தார். அந்தப்புரப் பெண் ஒருத்தியின் துணையை இரகசியமாகப் பெற்று அவர் முன்னால் போய் நின்றேன். நான் வந்த காரியத்தை அவரிடம் முறையிட்டுக் கொள்ளலாம் என்று வாய் திறந்தேன். ஆனால் அவர் ஜுரக் கனவில் இருந்தார் என்று நினைக்கிறேன். என்னை ஒரு தெய்வம் என்று அவர்

நம்பினார். மதுரை மீனாட்சி என்று என்னை அழைத்தார். நானும் யோசித்தேன். எனக்கு அவர் பிரமையே ஆதாயமாகத் தோன்றியது. நன்மை பயக்குமானால் பொய்யும் வாய்மைக்கு நிகரானதே என்று நினைத்தேன். என்னை மீனாட்சியாக மாற்றிக் கொள்ள நான் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. தமிழ் பேசும் நாடுகளின் நிலைமையினை அவருக்கு எடுத்துரைத்து. சீக்கிரம் காரியத்தில் இறங்கச் சொன்னேன். நான் சொன்னதை அவர் தெய்வக் கட்டளையாக எடுத்துக் கொண்டு விட்டார் என்பது அவர் முகத்தைப் பார்த்தவுடனேயே தெரிந்து விட்டது!" என்று கூறி முடித்தாள் வாசந்திகா.

"அம்மா!" என்றான் வல்லபன். "எனக்கு என்னவோ நீ செய்தது சரியாகப்படவில்லை" என்றான் தலை குனிந்து கொண்டு.

"வல்லபா! இது தவிர நான் இன்னொரு காரியமும் செய்தேன். நீ என்னைப் பொறுத்தருள வேண்டும்!" என்றாள் வாசந்திகா.

"என்ன செய்தாயம்மா?" என்றான் வல்லபன்.

"பாண்டிய அரசர் உனக்குப் பரிசாக அளித்திருந்தார் என்றாயே, ஒரு குறுவாளை! அந்த வாளை கம்பண ராஜருக்கு நான் பரிசிலாகக் கொடுத்து விட்டேன்" என்றாள் வாசந்திகா.

"அம்மா!" என்று தீயை மிதித்தவன் போல் கூவினான் வல்லபன்.

அவன் உடல் அதிர்ந்தது. அவன் நினைவெல்லாம் ஒரு கணம் சூன்யமாகப் போய்ப் பிறகு உணர்வு திரும்பியது.

வாசந்திகா திடுக்கிட்டாள். "என்ன வல்லபா?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.

"அம்மா அதையா கொடுத்தாய்?" என்று வேதனையுடன் கூறி நெஞ்சின் மீது கையை அழுத்தினான் வல்லபன்.

"ஏன் வல்லபா! பரம்பரை ராஜவம்சத்து வாள் ஆயிற்றே! அதுவும் கீர்த்தி வாய்ந்த பாண்டிய குலத்தாரின் வழி வழிச் சொத்து ஆயிற்றே! அது ராஜகுலத்தாரிடம் போவதுதானே முறை?" என்றாள் வாசந்திகா.

வல்லபன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"முறைதான் அம்மா! இருந்தாலும், என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே! அந்த வாளை என் உயிரினும் உயிராய் மதித்தேனே! என் வாழ்க்கைக்கு அதை ஒரு ரட்சையாக நினைத்தேனே! எனக்கு அது எல்லாவிதத்திலுமே உற்சாகமும் ஊக்கமும் தர வல்லதாக இருந்ததே! அதைப் போய்க் கொடுத்து விட்டாயே! என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாகாதா, அம்மா, அம்மா!" என்று புலம்பினான் அவன்.

மேடை மீது சோகமாய் அமர்ந்து கொண்ட அவனை வாசந்திகா மெதுவாகப் பற்றினாள்.

"வல்லபா!" என்றாள் இதமாக, "அதில் இத்தனை அபிமானம் வைத்திருக்கிறாயா?" என்றாள்.

"ஆமாம்மா!" என்றான் வல்லபன்.

"பாண்டியப் பரிசில் மீது உனக்கு ஏன் அவ்வளவு அபிமானமப்பா? ஒரு ராஜ வம்சப் பரிசிலுக்கு நாம் தகுதியுடையவர்கள் அல்லவே! அது நமக்கு உகந்ததும் அல்லவே!" என்றாள் வாசந்திகா.

வல்லபன் மனத்தில் அந்த வார்த்தைகள் கூர் அம்புகள் போல் தைத்தன. ராஜ வம்சப் பரிசிலுக்கு

அவன் தகுதியற்றவனா? ஏன் தகுதியற்றவன்? சாதாரணக் குடியில் பிறந்ததாலா?

மனத்தில் இந்த நினைவுகள் நெகிழ்ச்சி ஏற்படுத்தவே கண்ணில் நீர் பெருகியது. "ஐயோ, அம்மா அப்பரிசில் சாதாரணப் பரிசில் அல்ல! இதன் பின்னால் ஒரு பெரும் பிரேமையின் காவியமே அடங்கியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில், இந்தப் பரிசிலும், பரிசிலைக் கொடுத்தவரும் ஒன்றுதானம்மா! இந்தப் பரிசில் மூலம் அதைக் கொடுத்தவரே என்னை அடைந்து என் மனத்தில் வாழ்கிறாரம்மா!" என்று தன் உள்ளத்திலேயே தன் தாயாரிடம் அழுது முறையிட்டான். வெளிப்படையாக எதுவும் பேசவேயில்லை. கண்ணீர்தான் கண்களில் கழன்று வந்தது.

அவன் வெகுநேரம் பேசாமல் இருப்பதையும், அவன் மனத்துள் ஏதோ நிகழ்வதையும் உணர்ந்து கொண்ட வாசந்திகா துணுக்குற்று, அவன் தலையை மெள்ள வருடி,

"வல்லபா! நீ இவ்வளவு வேதனைப்படும்படியாய் அந்தப் பாண்டிய அரசர் கொடுத்த பரிசிலில் என்ன இருக்கிறது? கேவலம் அதன் இரத்தினங்களும், முத்துக்களும் உன்னைக் கொள்ளை கொண்டு விட்டனவா? நீ தினமும் அதை விருப்பத்தோடு பார்க்கும் பார்வையைப் பார்த்தே நான் ஆச்சர்யப்பட்டுக் கொள்வேன். வேண்டாம், அப்பா! வல்லபா! உயர்ந்ததை எண்ணி ஏக்கப்படாதே! உயர்ந்ததை அடையவும் நினையாதே! வாழ்க்கையில் நிரந்தரமான பொருளைத் தேடுவதைவிட ராஜவம்சத்துப் பொருளை நாடாதே!" என்று கூறினாள்.

வல்லபன் பேசவே இல்லை. அவள் வார்த்தைகள் இரண்டு வித அர்த்தங்கள் காட்டி அவனை

என்னவோ செய்தன. தன் தாயாருக்குக் காட்டாமல் தன் பீறி வரும் கண்ணீரை உள்ளே அழுத்திக் கொண்டான்.

இரவில் தூங்குவதற்கு அவன் தனியான போதுதான், அவன் தன்னிச்சையாய்க் கண்ணீரை விட முடிந்தது. கடல்மடை திறந்தாற்போல் அவன் ஏக்கத்தை எல்லாம் வாரி அடித்துக்கொண்டு பளிங்கு மயமான கண்ணீர் பிரவகித்து வெளியே வந்தது.

அவனைப் பொறுத்தவரையில் அந்த குறுவாள் அவனது மதுராவேதான்! தன் விழி ஒன்றையே எடுத்துத் தந்தாளோ என்று சொல்லும்படி அந்தக் குறுவாள் மீன் போல் வளைந்து கூர்வோடு மின்னிக் கொண்டிருந்தது.

அதைக் காணும் போதெல்லாம் வாளைப் போன்ற அவள் விழியும், அதில் தவழும் புன்னகையும், மோகனமான அதன் நீலவிதானமும் கனவோ, காவியமோ எனும்படி அதில் எப்போதும் வருடுகிற ஒரு சொப்பன பாவனையும் அவனை வெகுவாகக் கலக்கி விடுவதுண்டு.

தன் மதுராவே அந்த வாளில் உயிருடன் ஆவிர்ப்பவித்திருக்கிறாள் என்று அவனுக்குத் தோன்றுவதும், அதன் காரணமாய் சிற்சில பிரேமை மயக்கத்தில் அதை நோக்கிச் சிரிப்பதும், குழைவதும், கொஞ்சுவதும் அவனது இனிமை மயமான பொழுதுபோக்காக இருந்து வந்தது.

இப்போது அவனது அந்த மன இன்பங்கள் எல்லாவற்றுக்குமே முற்றுப்புள்ளி வைத்தாற்போல் அவனது பிரேமையின் சின்னமே பறிக்கப்பட்டுவிட்டது போல் தோன்றியது.

கண்ணீர் கங்கை போல் பெருகி அதில் தத்தளித்தான் அவன்.

செஞ்சியிலிருந்து புறப்பட்ட மூன்றாம் நாள் மாலையில் கோபணா தம் மெய்க்காப்பாளருடன் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார்.

சிரமப்பரிகாரங்கள் செய்து கொண்டு வரதராஜப் பெருமானை வணங்கிவிட்டுக் கம்பணரின் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவரைக் கம்பணர் பார்த்ததும், "கோபணா சுவாமி! தங்களை வரச் சொல்லி ஆள் அனுப்ப வேண்டும் என்று நினைத்திருந்தேன். தாங்களே வந்து விட்டீர்களே! ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றார்.

அதற்கு கோபணா "மன்னவ! தாங்கள் நினைத்ததே ஒரு சுபசூசகம்! இன்று நம் பிரதானிகளோடு நாம் மந்திராலோசனை நடத்த வேண்டும். விஷயம் இருக்கிறது" என்றார்.

ஒரு முகூர்த்த நேரத்தில் சோமப்பர், மாரப்பநாயகர், விட்டப்பர், கோபணா, கம்பணர், கங்காதேவி ஆகியோர் ஒரு ஆலோசனைக்குக் கூடினார்கள்.

முதலில் கோபணா எழுந்து, சென்ற சில தினங்களுக்கு முன் தனக்கு நேர்ந்த அனுபவங்களை விவரித்து,

அன்றைய நாளிலிருந்து அவர் மனம் அல்லல் படுவதை எடுத்துக் கூறி,

"மண்டலேசுவரரே, பிரதானிகளே! இத்தனை காலம் நாம் மதுரை மீது படையெடுக்காததை ஒரு இழுக்காகக் கருதுகிறேன். அதை நினைத்து இப்போது கணத்திற்குக் கணம் மனம் நொந்து கொண்டு இருக்கிறேன். நாம் இனி உடனடியாக ஏதாவது செய்து தான் ஆக வேண்டும்" என்று கூறினார்.

உடன் கம்பணரும் தமது அனுபவங்களை எல்லாம் கூறி, அவர் கண்ட உருவெளி அவரது நம்பிக்கையில் மீனாட்சி தேவியே என்றும், அவள்தான் தனக்குப் பிரசன்னமாகிக் குறுவாளை அவருக்குப் பரிசிலாகத் தந்தாள் என்பதையும் தெரிவித்தார். எல்லோரும் மெய் மறந்து அதனைக் கேட்டார்கள். குறுவாளை எல்லாரும் வாங்கி ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

"பிரதானிகளே! நானும் மிக்க வருத்தம் அடைகிறேன். சம்புவராயரை ஜெயித்துப் பத்து ஆண்டுகள் ஆகியும் நாம் மதுரையைப் பிடிக்க எதுவுமே செய்யவில்லை என்று அறியும் போது என் மனமும் புழுவாகத் துடிக்கின்றது. என் கடமையிலிருந்து சிறிது பிறழ்ந்துவிட்டேனோ என்று நினைக்கிறேன்!" என்றார்.

இப்படி இவர்கள் இருவரும் தாங்கள் செய்யாததை நினைத்து வேதனைப் பட்டதை அடுத்து சோமப்பர் பேசினார். "மன்னரும், சைனியாதிபதியும் வீணே மனத்தில் வருத்தப்பட்டிருக்கிறார்கள். இது உணர்ச்சி வசத்தில் நேர்ந்தது என்று நினைக்கிறேன். ஏனெனில், கடந்து போன ஆண்டுகளில் நமது ராஜ்யம் பல சோதனைகளைத் தாண்டி வெளி வந்திருக்கிறது. வடக்கே பாமினித் துருக்கியர்களால் அடிக்கடி தொந்திரவு இருந்தது நமக்குத் தெரிந்த விஷயம். இதனால் வடக்கே யுத்தங்கள் நடத்துவதிலேதான் நம் புக்க மகாராஜரின் கவனம் முழுவதும் இருந்தது. நம் மகாராஜர் தெற்கே காஞ்சிபுரத்தை வந்து தரிசிக்க நினைத்தும், அவரால் அது முடியவில்லை என்றால், வடக்கே அவரது கவனம் எவ்வளவு வேண்டியிருக்கிறது என்பதை அறிவோம். வடக்குதான் நம் பெரும் கவலையாக இருந்து வந்தது. இப்போதும் இருந்து வருகிறது. . . " என்றார்.

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

"ஆமாம்! ஒவ்வொரு வருடமும் நாம் இங்கிருந்து படைக்கு ஆட்களைத் திரட்டியும், பொருள்களைச் சேகரித்தும் வடக்கே நம் மகாராஜாவுக்கு அனுப்பிக் கொண்டு வருகிறோம். நாம் வெறுமனே இருந்து விடவில்லை!" என்றார் விட்டப்பர்.

"அதைத்தான் நானும் சொல்கிறேன். நம் ஆட்களும் பொருட்களும் வடக்கே தேவைப்பட்டு வரும்போது, தெற்கே நாம் கவனியாமல் இருந்தது குற்றமே அல்ல! பத்து வருடங்கள் என்பது நீண்டகாலம்தான்! ஆனால் இந்தப் பத்து வருடமும் வடக்கைக் காப்பாற்றுவதில் தான் நமது பெரும் நேரமும் போயிற்று" என்றார் சோமப்பர்.

கோபணா உடனே, "சோமப்பரே, இதை நான் நன்கு உணர்ந்தவன்தான். இருப்பினும் நம் சொந்த முயற்சியில் ஏதாவது செய்திருக்கலாமே என்று தோன்றியது" என்று கூறினார்.

"சொந்த முயற்சி ஏது? நம் அனைவருடைய முயற்சியும் வட எல்லைக்காகத்தானே வேண்டி வந்தது!" என்றார் சோமப்பர்.

"சோமப்பா!" என்றார் கம்பணர். "ஒரு காரியம் நிச்சயம் ஒத்துக் கொள்கிறேன். சென்ற பத்து ஆண்டு காலமும் வடக்கே படை அனுப்புவதில்தான் நம் காலமெல்லாம் போயிற்று. எனினும் இனிமேல் நாம் ஏதாவது செய்து தான் ஆக வேண்டும்" என்றார் அழுத்தமாக.

"என்னதைச் செய்து விட முடியும், சொல்லுங்கள்! மதுரை சுல்தானிடம் இரண்டு லட்சம் யவனப் படைகள் இருக்கின்றன. அவைகளை அசைத்துவிட முடியுமா?" என்று கேட்டார் விட்டப்பர்.

அவர் கேள்வி அப்படியே ரீங்காரித்து அங்கே நின்றது. எல்லோரும் மௌனம் சாதித்தார்கள்.

"ஆளுக்கு ஆள் வேண்டும் என்றாலும் இரண்டு லட்சம் வீரர்கள் தேவைப்படுமே! நம்மிடம் ஆட்கள் ஏது?" என்றார் சோமப்பர்.

"எல்லா வீரர்களையும் திரட்டி வடக்கேதான் வழக்கமாக அனுப்பி வருகிறோம். இப்போது இருக்கும் நிலையில் சுல்தான் நம் மீது படையெடுத்து வந்தால்கூட நாம் அவரை எதிர்க்க முடியாது. நம்மிடம் போதிய பலம் கிடையாது!" என்றார் விட்டப்பர்.

கம்பணர் திரும்பினார்.

"சுல்தானியரின் இரண்டு லட்ச யவனப் படைகள் தானே நமக்கு உறுத்தலாக இருக்கும்?" என்றார் அவர்.

"ஆமாம், மன்னவ! இதனை எதிர்க்க நமக்குப் பலம் பற்றாது" என்றார் சோமப்பர்.

எல்லோரும் மௌனத்தில் ஆழ்ந்தார்கள். யாராலும் எதுவும் பேச முடியவில்லை. கோபணாவும் பெருத்த யோசனையில் ஆழ்ந்துவிட்டார்.

சிறிது நேரத்தில் அவர் நிமிர்ந்தார். அவர் முகத்தில் ஒரு உறுதி தெரிந்தது?

"பிரதானிகளே! எப்படியும் நாம் இதில் இறங்கித் தான் ஆக வேண்டும்!" என்றார் தீர்மானமாக.

"என்ன வழி?" என்றார் சோமப்பர்.

"இரண்டு லட்ச யவன வீரர்கள்! அதுதானே உங்கள் கவலை?" என்றார் கோபணா.

"ஆமாம்!"

"இவர்களைத் தந்திரத்தால் வெல்வோம்"

மீண்டும் மௌனம்.

"முடியுமா?" என்றார் விட்டப்பர்.

"என்ன தந்திரம்? " என்றார் சோமப்பர்.

"அதை நாம் யோசித்தால் என்ன?" என்றார் கோபணா.

"கோபணா சுவாமி! தாங்கள் கூறியது ஒரு வழியைத் திறந்தாற் போல் இருக்கிறது. நாம் யோசனை செய்யலாம்!" என்றார் கம்பணர்.

"மன்னவ!" என்றார் கோபணா. "இரண்டு லட்சத்தில் ஒரு லட்சம் படை சமயபுரத்தில் இருக்கிறது. மீதி ஒரு லட்சம் படை மதுரையில் இருக்கிறது."

"சரியான இடங்களில்தான் படைகளை வைத்திருக்கிறார் சுல்தான்" என்றார் கம்பணர்.

"இதில் முதல் லட்சத்தைத் தாக்கிப் பாதிப் பேரைக் கொன்று பாதிப் பேரை அடிமைப்படுத்தி விட்டால், அந்த அடிமைகளைக் கொண்டே மற்றொரு லட்சத்தைத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்தலாம்!" என்றார் கோபணா.

"முதல் லட்சத்தைத் தாக்குவது எப்படி?" என்றார் சோமப்பர்.

"நம் படையில் முப்பதினாயிரத்திலிருந்து நாற்பதினாயிரம் வரை சேர்க்க முடியுமா? அது போதும்!" என்றார் கோபணா.

"இப்போது தெற்கில் நம்மிடம் உள்ள படைகளைச் சேர்த்தால் இருபதினாயிரம்தான் தேறும்" என்றார் சோமப்பர்.

"இன்னும் இருபதினாயிரமாவது சேர்க்க வழி செய்வோம்" என்றார் கோபணா.

"நிச்சயம் செய்வோம்! நம் வளநாட்டுக் கூற்றத் தலைவர்கள் அனைவரையும் அழைத்து இவ்வளவு வீரர்களை நீங்கள் தர வேண்டும் என்று சொல்லி விடுவோம்" என்றார் கம்பணர்.

"இது ஒரு தர்மப் போர்! இதில் எல்லோருடைய பூரணமான ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை என்று சொல்லுவோம்" என்றார் கோபணா.

"ஏற்கெனவே படை வீரர்களைத் திரட்டித் திரட்டி அவர்கள் அலுப்பு அடைந்திருப்பார்கள். இது தெற்கே நடக்க வேண்டிய தர்மப் போர் என்று சொல்லிக் கூற்றத் தலைவர்களை எல்லாம் ஊக்கப் படுத்தினால் நல்லது!" என்றார் விட்டப்பர்.

"சரி! இந்தப் படையைத் திரட்டலாம் என்று வைத்துக் கொள்வோம், பிறகு என்ன செய்யலாம்?" என்றார் சோமப்பர்.

மீண்டும் மௌனம்.

அப்போது கம்பணர் பார்வை எதேச்சையாக கங்காதேவி மீது விழ அவள் இலேசாகச் சலசலத்தாள்.

"தேவி!" என்றார் கம்பணர்.

"சுவாமி! இந்தப் பெரியவர்கள் ஆலோசனையில் அடியாள் பேசலாமா?" என்றாள் அவள்.

"ஏன் கங்காதேவி! நிச்சயமாகப் பேசலாம். யாரிடமிருந்து நல்ல ஆலோசனை வந்தாலும் அது நல்லதுதானே!" என்றார் கோபணா.

"தந்திரத்தால் நாம் சுல்தானியர்களை வெல்ல வேண்டும் என்றீர்கள், அது நல்லது! தந்திரத்தால்தான் முன்பு சுல்தானியர்கள் வெல்லாளரின் லட்சம் வீரர்களை முறியடித்தார்கள். இது எப்படி முடிந்தது?

தந்திரத்துடன் ஒற்றும் சேர வேண்டும். முதலில் சுல்தானிய ராஜ்யத்திற்குச் சரியான ஒற்றரை அனுப்ப வேண்டும். சுல்தானிய மன்னரின் வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், அவரது படை இயங்கும் வகை, அவற்றின் தளபதிகளின் சொந்தமான வாழ்க்கைகள், விருப்பு வெறுப்புகள், இன்னும் இது போன்ற பல விஷயங்களையும் தெரிந்து வந்தால் அது நமது தந்திரச் செயலுக்கோ, திடீர்த் தாக்குதலுக்கோ மிக்க உதவியாக இருக்கும். இந்தச் சிறியவளின் ஆலோசனை பொறுத்தமற்றதாகத் தோன்றினால், என்னைப் பொறுத்தருள வேண்டும்" என்றாள் கங்காதேவி.

கோபணா முகம் பிரகாசமாகியது.

"ஏன் கங்காதேவி! இதுகூட ஒரு அருமையான யோசனை" என்றார் அவர்.

"எனக்கும் அதுதான் தோன்றுகிறது" என்றார் கம்பணர்.

"நம் வல்லபனையே ஒற்றனாக அனுப்பலாம்" என்றார் கோபணா.

19

மந்திராலோசனை நடந்த ஒரு வாரத்தில் வல்லபனும் அவன் நண்பன் தத்தனும் 'பக்கிரிகள்' போல் உடை தரித்து ஒற்றுக்காகப் புறப்பட்டார்கள். இதற்காக அவர்களுக்கு யவன பழக்க வழக்கங்களும், சிறிது யவன பாஷை ஞானமும் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

இருவரும் செஞ்சி மார்க்கமாய்ச் சென்று சுல்தானிய ராஜ்யத்தில் பிரவேசித்தார்கள்.

காதவழி நடந்து முதல் பெரும் ஊரை அடைந்த போது அவர்களுக்குப் பல விஷயங்கள் புலனாகத் தொடங்கின.

மக்கள் ஆங்காங்கே தங்கள் கிராமங்களை விட்டு வெகு தூரம் போய், யாரும் அண்ட முடியாத இடங்களில் புதுக் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

தங்கள் குடியிருப்புகளை எந்த அன்னியர்க்கும் எளிதில் அவர்கள் காட்டுவதாக இல்லை.

இப்படிப் புறக்கணிக்கப்பட்ட கிராமங்கள் கேட்பாரற்றுப் பாழடைந்து கொண்டிருந்தன. வயல்வெளிகள் ஆங்காங்கே தரிசைகளாகக் கிடந்தன.

ராஜரீகக் கொடுமைகள் தாளாமல் பலர் துருக்கிய மதத்தையே தழுவி இருந்தார்கள்.

இப்படி நாட்டு நடப்பே அலங்கோலமாகப் போயிருந்த ராஜ்யத்தில் ஒரு ஊரை விட்டு ஒரு ஊருக்குச் செல்வதே கடினமாக இருந்தது.

மக்கள் நடைப் பிணங்களாகப் போயிருந்தார்கள். வருங்காலத்தில் எதுவுமே நடக்காது என்ற ஒரு மனப்பான்மைக்கு வந்திருந்தார்கள்.

தமிழ் ராஜ்யங்கள் சுல்தானியரின் கைவசமாகி 47 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகையால் ஒரு தலைமுறை கிட்டத்தட்ட அழிந்து மற்றொரு தலைமுறை உருவாகியிருந்தது. இவர்கள் தங்கள் பண்பு, சமயம், பழக்க வழக்கங்களை இரகசியமாகவே கடைபிடிக்க வேண்டி வந்தது.

கோவில்கள் எல்லாம் அழிந்து போயிருந்தன. இன்னொரு விஷயத்தை வல்லபனும் தத்தனும் கவனித்திருந்தார்கள்.

அநேகமாகப் போகும் இடம் எல்லாவற்றிலும் இரவு வேளைகளில் மக்கள் ஒதுக்குப் புறமாகக் கூடி ஒய்சள வல்லாளதேவரின் சரித்திரத்தைக் கதையாகப் படித்தோ, நாடகமாக நடித்தோ, கவிதையாகப் பாடியோ அவரது வீர வரலாற்றை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

வீரவல்லாளரின் வாழ்வும், போர்களும் மக்களுக்கு ஒரு அழியாத காவியக் கதை போல் தோன்றிக் கொண்டிருந்தன.

போகும் வழியில் இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு ஏழு தினங்கள் பிரயாணம் செய்து இளைஞர்கள் கண்ணனூரை (சமயபுரம்) நெருங்கியிருந்தார்கள்.

மதுரை சுல்தான் அப்போது கண்ணனூரில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டதால் இளைஞர்களுக்கு இடையே ஒரு சர்ச்சை எழுந்தது. கண்ணனூருக்குள்ளேயே சென்று அங்குள்ள நிலைமையை ஆராயலாமா என்று சிறிது நினைத்தார்கள்.

அப்படிச் செல்ல வேண்டுமானால், ஒரு நம்பகமான மனிதருடன் செல்வதுதான் நல்லது என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

அப்போது திடீரென்று வல்லபன் தத்தனைப் பார்த்து, "தத்தா! நாம் காவேரிக் கரை வரை சென்றால் என்ன?" என்று கேட்டான்.

"எங்கே? திருவரங்கம் போகலாம் என்கிறாயா?" என்றான் தத்தன்.

அதற்கு வல்லபன், "எனக்கு அப்படி ஒரு ஆசையும் உண்டு. ஏன் உனக்கில்லையா?" என்று கேட்டான்.

"ஏன் எனக்கும் தான் உண்டு! நாம் இருவருமே பிறந்ததிலிருந்து திருவரங்கத்தைப் பார்த்தது இல்லையே!" என்றான் தத்தன்.

"ஆமாம்! ஆனால் அதற்குச் சந்தர்ப்பம் இடம் கொடுக்குமோ என்னவோ? இப்போது நான் சொல்வது வேறு காவேரியைக் கடக்காமல் அதற்கு வடகரையிலே இருக்கும் சிற்றூர்களுக்குப் போனால் யாராவது பழைய நாளையக்காரர்கள் தென்பட்டாலும் படுவார்கள். வடகரையில் அழகிய மணவாளம் என்ற கிராமம் இருப்பதையும் அங்கே சிங்கப்பிரான் என்றவர் இருந்ததையும் என் தாயார் பல முறை குறிப்பிட்டு உள்ளார். அங்கு போய்ப் பார்த்தால் என்ன?" என்று கேட்டான்.

"செய்வோம்!" என்றான் தத்தன்.

பிறகு இருவரும் ஒரு நாளெல்லாம் பிரயாணம் செய்து அழகிய மணவாளம் என்ற கிராமத்தை அடைந்தார்கள்.

அந்தக் கிராமமும் பாழாகக் கிடந்தது. இரு இளைஞர்களும் யவன நாட்டார் போல் தோற்றம் அளித்ததால், வெளி வந்த கிராம வாசிகள் ஓரிருவர் கூட வீட்டுக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டார்கள். அவர்கள் பயப்படுகிறார்கள் என்று யோசித்த போது, எதிரே ஒருவரின் வீட்டுக் கதவு திறந்தது. அந்தப் புதிய மனிதர் வெளியே வந்து அவ்விருவர்களையும் அழைத்துச் சென்றார்.

வீட்டுக்குள் போனதும் இரு பெண்கள் காலில் தண்டைகள் கொஞ்ச, ஜிலுஜிலுத்து முன்னால் வந்தார்கள். வாசனை திரவியங்களைத் தெளித்தார்கள். மலர்களைத் தூவினார்கள். நடனம் தொடங்கினார்கள். இளைஞர்களை அந்தரங்கமாக அழைப்பது போல் நயன பாஷைகள் புரிந்தார்கள்.

அதை அறிந்து கொண்டதும் வல்லபன் தத்தனின் காதோரமாக, "தத்தா! தமிழ் ஊர்களில் இவர்கள் வாழும் முறையைப் பார்த்தாயா? தேவதாசிகளைக் கொண்டு யவனர்களைத் திருப்திப்படுத்தித் தங்களுக்கு எந்தவிதத் தீங்கும் வராமல் பார்த்துக் கொள்கிறார்கள்" என்று கன்னடத்தில் கூறினான்.

அந்தப் புதிய மனிதர் குழைந்து கொண்டே வந்து, "பிரபுக்கள் பொறுத்தருள வேண்டும்! பருகுவதற்கு மது அளிக்க இயலவில்லை. ஊரிலே அது பஞ்சமாயிருக்கிறது" என்றார்.

வல்லபனுக்குச் சிரிப்பு வந்தது.

அவனும் தத்தனும் எழுந்து நடனத்தை நிறுத்தினார்கள்.

புதிய மனிதரை அப்பால் அழைத்துப் போனார்கள்.

"சுவாமி! தேவரீர் ஒரு வைணவரோ?" என்று கேட்க,

அந்தப் புதிய மனிதர் அவ்விருவர்களையும் மாறி மாறிப் பார்த்தார்.

உடன் வல்லபன், "ஏன் சுவாமி! நாங்கள் என்ன தங்களைக் கண்ணாஞ்சுழலையிடப் பண்ணுகிறோமா? கூழுக்காள் படாதீர்கள்! எம்மை யாரோ என்று நினைத்துக் கால் வாங்குதல் வேண்டா!" என்று கூறினான்.

(இதன் பொருள் : நாங்கள் தங்களை மருளுமாறு பண்ணுகிறோமோ? சந்தேகப்படாதீர்கள்! எம்மை யாரோ என்று நினைத்துப் பின் வாங்க வேண்டாம்.)

வைணவப் பரிபாஷையில் வல்லபன் பேசுவதைக் கேட்டுப் புதியவரும்,

"சுவாமி யார்? இங்குத்தைக்கான இடையாட்டம் என்னென்றறிய மாட்டிற்றிலேன்!" என்றார்.

(சுவாமி யார்? இவ்விடத்திற்கு வந்ததற்கான காரியம் என்ன என்று அறிய சக்தியில்லாமல் இருக்கிறேன்.)

அவ்வளவில், ஒருவர்க்கொருவர் வைணவர் என்று தெரிந்துவிட்டது.

வல்லபன் அவரை நோக்கி, "சுவாமி! நாங்கள் ராஜகாரியமாக வடக்கிலிருந்து வந்திருக் கிறோம். இங்கே சிங்கப்பிரானின் சந்ததியார் யாரேனும் இருக்கிறார்களோ?" என்று கேட்டான்.

சிங்கப்பிரான் என்று சொன்னதும் புதியவரின் முகம் பளிச்சென்று பிரசன்னமாகியது.

"அவரது குமாரர் திருமணத்தூண் நம்பி என்பார் இருக்கிறாரே வாருங்கள்" என்று சொல்லி அவர்களை அழைத்துப் போனார்.

போகும் வழியில் நின்று கொண்டிருந்த தேவ தாசிகளில் இளமையானவள் தன் இளம் தனங்களை மென்மையாகச் சிலும்பும் வண்ணம் திரும்பி, தன் நீள் விழிகளை வண்டு போல் பல கணங்கள் கொட்டி வல்லபனைத் தீர்க்கமாகப் பார்த்து ஒரு பெரு மூச்செறிந்தாள். ஒரு கணமே வல்லபனும் அதைக் கவனித்துக் கொண்டான்.

பின்னர் அந்தப் புதியவர் ஒரு குடியிருப்புக்குள் நுழைந்து அங்கு ஒரு வீட்டில் வசித்து வந்த திருமணத்தூண் நம்பியை வல்லபனுக்கு அறிமுகம் செய்வித்தார்.

வல்லபனும் அவரை நமஸ்கரித்து, "தங்கள் தந்தை சிங்கப்பிரானைப் பற்றி என் தாயார் நிறையச் சொல்லியிருக்கிறார்" என்று சொல்லி, தன்னை இன்னார் என்று அறிமுகம் செய்து கொண்டான்.

நம்பியும் மிக்க மகிழ்ச்சி அடைந்து, "நானும் தங்கள் தந்தை குலசேகரரைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறேன்" என்று சொன்னார்.

அப்பால் வல்லபன் வடக்கே விஜயநகர ராஜ்யத்தைப் பற்றிக் கூறி, கம்பணர், கோபணா முதலியவர்களைப் பற்றியும் விரிவாகக் கூறி, "இப்போது எம் மண்டலேசுவரர் கம்பணர் இந்த ராஜ்யத்தின் நிலைமை குறித்து ஒற்று அறிந்து வர என்னை அனுப்பியுள்ளார். தாங்கள் எனக்கு உதவி புரிந்தால் நல்லது" என்று சொல்லி முடித்தான்.

அதற்குத் திருமணத்தூண் நம்பி, "ஐயா! என் தந்தையார் ஒய்சள வல்லாள ராஜருக்கு ஒற்றுச் சொல்லி உதவி புரிந்தார். நானும் நிச்சயம் விஜயநகரத்தாருக்கு உதவி புரிவேன். ஆனால் எங்களிடம் ஒரு வருத்தம்!" என்று கூறினார்.

"என்ன வருத்தம், சுவாமி?" என்றான் வல்லபன்.

"விஜயநகரத்தார் இவ்வளவு ஆண்டு காலமாய் இந்த ராஜ்யத்தின் மீது கண் திருப்பாது இருந்து விட்டார்களே! இது நீதியோ?" என்று கேட்டார் நம்பி.

அதற்கு வல்லபன் வடக்கே விஜயநகரத்தார் அடிக்கடி பாமினித் துருக்கியருடன் சண்டை இட நேர்ந்ததை விவரித்துக் கூறி, வடக்கைப் பாதுகாத்தால்தான் தென்னகத்தை வாழ வைக்க முடியும். ஆகவே எல்லோரது கவனமும் வடக்கே தான் இருந்து வந்தது என்று சொன்னான்.

"அப்படியானால் தெற்கை மீட்பதற்கு வழியே இல்லையா?" என்று ஆதங்கத்துடன் கேட்டார் திருமணத்தூண் நம்பி.

"இருக்கிறது. அதற்கான வழிகளை ஆராயத்தான் இப்போது தென் பிரதேச சைனியாபதி கோபணா முனைந்திருக்கிறார். சுல்தானிய ராஜ்யத்தின் நிலையை யும், இதன் படை விசேஷங்களையும் அறிந்து வரத்தான் எம்மை அனுப்பியிருக்கிறார். இங்கே தங்களைப் போன்றோர் இருப்பது ஆச்சரியமாக உள்ளது" என்றான் வல்லபன்.

"ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்?" என்று கேட்டார் திருமணத்தூண் நம்பி.

"இல்லை 47 வருடங்களாக அன்னியரின் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு இங்கே திருவரங்க த்தின் சுற்று வட்டாரத்திலேயே நீங்கள் வாழ்ந்து வருவது ஆச்சரியமாக உள்ளது" என்றான் வல்லபன்.

"என் பக்தி மட்டுமல்ல! இங்குள்ளோரின் வைராக்கியத்தைக் கூடக் காட்டுகிறது. உங்களுக்குத் தெரியுமா? இந்தக் கிராமத்தில் இருக்கும் அனைவரும் தினமும் காவேரிக் கரை போய் அக்கரையில் தெரியும் திருவரங்கக் கோவிலின் கோபுரத்தைத் தரிசிக்கிறார்கள். அப்படித் தரிசித்து வந்த பிறகுதான் உணவு அருந்துகிறார்கள்"

"ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான் வல்லபன்.

"இதைவிட ஆச்சரியம் இருக்கிறது. முன்பு திருவரங்கத்தை விட்டு ஓடிப் போனவர்களின் குடும்பங்கள் சிலவும் திருவரங்கப் பிரேமையினால் மீண்டும் இங்கே திரும்பி வந்து விட்டன. இவர்களில் அநேகர் திருவரங்கத்திலேயே வாழ்கிறார்கள்" என்றார் நம்பி.

"என்ன? திருவரங்கத்தில் வாழ்கிறார்களா?" என்று கேட்டான் வல்லபன்.

"ஆமாம். துருக்கியக் காவலாளருக்குப் பரிசில்கள் கொடுத்து, தொந்திரவுகள் ஏதும் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொண்டு அந்தப் புண்ணிய நகரிலேயே இரகசியமாக வாழ்கிறார்கள்" என்று கூறினார் நம்பி.

"ஏன் சுவாமி? துருக்கியர் மற்ற சமயத்தார்களை கொல்வார்கள், கொன்றார்கள் என்றார்களே?"

"அதெல்லாம் முதலில் இங்கே படை எடுத்து வந்த போது செய்தார்களாம். பிறகு சில வருடத்திற்கு எல்லாம் அதுபோல் செய்வதை நிறுத்திவிட்டார்கள். எல்லோரையும் கொன்றால் விவசாயம் செய்வது யார்? தொழில் செய்வது யார்? இப்போது கோவில் கூடாது, பண்டிகை கூடாது. தவிர மற்றப்படி தொந்திரவு இல்லை. இருந்தாலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டி இருக்கிறது!"

"மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான் வல்லபன்.

"இதைவிட ஆச்சரியம் ஒன்று உண்டு" என்றான் நம்பி.

"என்ன?" என்றான் வல்லபன்.

"அங்கே திருவரங்கனுக்குப் பூஜைகள் செய்தும் வருகிறார்கள்."

வல்லபனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"தாங்கள் சொல்வது உண்மையா, சுவாமி?" என்று கேட்டான்.

"உண்மைதான்! ஆனால் கோவிலைத் திறந்து செய்வதில்லை. கோவிலின் திக்கை நோக்கிச் செய் கிறார்கள். கோவில் ஓர மாளிகையில் திருவரங்கனின்

விக்கிரகம் ஒன்றை வைத்துப் பூஜை செய்து கொண்டு வருகிறார்கள்!" என்றார் நம்பி.

"திருவரங்கன் விக்கிரகமா?" என்று துள்ளிக் கொண்டு கேட்டான் வல்லபன்.

"ஆமாம். அவரது விக்கிரகம்தான்!" என்றார் நம்பி.

வல்லபனது ஆச்சரியம் தாளவில்லை. "சுவாமி! இங்கே ஏது சுவாமி திருவரங்க விக்கிரகம்? அந்த விக்கிரகம் நகரை விட்டுப் போய் வெகுகாலம் ஆயிற்றே! உமக்குத் தெரியாதா?" என்றான்.

"தெரியும். விக்கிரகத்தை எங்கோ சத்தியமங்கல த்தில் எழுந்தருள வைத்ததாகக் கேள்விப்பட்டிருக் கிறேன்" என்றார் நம்பி.

"கேள்விதான் பட்டிருக்கிறீர்களா? அந்த விக்கிரகம் என்னவாயிற்று என்று எதுவும் தெரியாதா?" என்றான் வல்லபன்.

"அது தெரியாது. ஆனால் பல வருடங்களுக்கு முன் மேற்கேயிருந்துதான் யாரோ ஒருவர் அந்த அரங்க விக்கிரகத்தை இரகசியமாக இந்த ஊருக்குக் கொணர்ந்து வந்தார்கள்."

"அரங்க விக்கிரகத்தையா? கொண்டு வந்தவர் யார்? அவர் எங்கிருந்து கொண்டு வந்தார்?"

"அது தெரியாது. கொண்டு வந்தவர் அன்று ராத்திரியிலேயே திடீரென்று இறந்துவிட்டார். அவர் எங்கிருந்து எப்படிக் கொண்டு வந்தார் என்று எதுவும் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் இது திருவரங்க விக்கிரகம் என்று அவர் சொன்னதை மட்டும் நாங்கள் ஏற்றுக் கொண்டோம். அரங்கனை இந்த க்ஷேத்திரத் திற்கு இரகசியமாகக் கொண்டு வந்து விட்டேன். இனி

வழிபடுவது உங்கள் பொறுப்பு என்று சொன்னார்!" என்றார் நம்பி.

வல்லபனுக்கு எல்லாம் வேடிக்கையாக இருந்தது.

"சுவாமி! அரங்கர் எவ்விதமாக சத்தியமங்கலம் போனார். அதன் பிறகு என்ன நடந்தது என்று எதுவும் தங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டான் வல்லபன்.

"அப்படி ஏதாவது விசேஷமாய் நடந்ததா?" என்று கேட்டார் நம்பி.

அப்போதுதான் வல்லபனுக்கு ஒன்று பளிச்சிட்டது. கடந்த 47 வருடங்களுக்குள் ஒரு தலைமுறை கிட்டத்தட்ட மறைந்து மறு தலைமுறை வந்துவிட்டது. பழைய கதை எல்லாம் பழைய தலைமுறையோடு மறைந்துவிட்டது. புதிய தலைமுறைக்கு எதுவும் தெரியாமல் போய்விட்டது.

அவனுக்கு அதனால் வருத்தம் பெருகியது.

20

வல்லபன் யோசனையில் ஆழ்ந்தான்.

ஒரு புதிய தலைமுறையே உருவானதால் ஒரு பழைய கதை அப்படியே மறைந்துவிட்டது.

பழைய கதையா அது?

ஆமாம். பழைய கதைதான் என்று நினைத்தான் வல்லபன். ஆனால் அந்தக் கதை அவன் மனத்தில் சதா வாழ்ந்து கொண்டே இருந்து விட்டதால் அவனுக்கு எப்போதும் அது புதியதாகவும்,

நேற்றுத்தான் நடந்தது போலவும் பிரமை கொடுத்துக் கொண்டிருந்தது.

மற்றவர்களுக்கு அப்படியில்லை.

47 வருடங்களுக்கு முன் அரங்கன் ஊரைவிட்டுப் புறப்பட்டவர்.

அவர் சத்தியமங்கலத்தில் கடைசியாக இருந்தது கூட 28 ஆண்டுகளுக்கு முன்பு!

இப்படி நீண்ட கால இடைவெளிகள் ஓடியிருக்கும் போது, மக்கள் நினைவுகளிலிருந்து அரங்கனைப் பற்றிய கதை பையப் பையத் தேய்ந்து மறைந்து போனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

அதைச் சொல்வதற்கான பெரியவர்களும் கிட்டத்தட்ட மறைந்து விட்டிருந்தார்கள்.

வல்லபன் மனத்திலே மட்டும் நினைவு எதனால் இருந்து வந்தது?

வாசந்திகாவைப் போன்ற ஒரு தாயார் தூண்டி விட்டுக் கொண்டே இருந்ததனால்தானே!

இப்படியெல்லாம் நினைத்து அவன் யோசனையில் ஆழ்ந்து விட்டதை அறிந்த நம்பி, "ஐயா! என்ன யோசனை?" என்று கேட்டார்.

வல்லபன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

"இல்லை! உங்களிடம் ஒரு நீண்ட இராமாயணத் தையே கூற வேண்டியிருக்கிறது" என்றான்.

"ஏன்?" என்று கேட்டார் நம்பி.

"திருவரங்கனின் விக்கிரகம் இப்போது செஞ்சியில் எழுந்தருளி உள்ளது" என்றான் வல்லபன்.

"என்ன? திருவரங்கனின் விக்கிரகமா? செஞ்சி யிலா?" என்று நம்பாதவர் போலக் கேட்டார் நம்பி.

அங்கிருந்த மற்றவர்களும் ஏதோ புதிரைக் கேட்டவர்கள் போல் வல்லபனைப் பார்த்தார்கள்.

"ஆமாம்! நான் சொல்வதே உங்களுக்கு விசித்திரமாக இருக்கும். அதன் பின்னால் ஒரு 47 வருடக் கதையே இருக்கிறது. அந்தக் கதையைத்தான் நான் இராமாயணம் என்றேன்" என்றான் வல்லபன்.

"அப்படியானால் நாங்கள் திருவரங்கத்திலே இரகசியமாக வைத்துக் கும்பிடும் மூர்த்தி அரங்கனின் விக்கிரகம் இல்லையா?" என்று கேட்டார் புதியவர்.

"நிச்சயமாக இல்லை" என்றான் வல்லபன்.

அங்குள்ளவர்கள் அவன் சொல்லை ஏற்றுக் கொண்டவர்கள் போல் தெரியவில்லை. அதுவே வல்லபனுக்கு விசித்திரத்தையும் வேதனையையும் கொடுத்தது.

"அப்போது அந்த இராமாயணக் கதையை எம்மிடம் சொல்லுங்கள்!" என்றார் நம்பி.

"சொல்கிறேன்" என்றான் வல்லபன்.

பிறகு ஒரு முகூர்த்த நேரம் வல்லபன் அரங்கன் திருவரங்கத்தை விட்டு புறப்பட்டதிலிருந்து நடந்ததை எல்லாம் கூறி சத்தியமங்கலத்தில் வாழ்ந்தது. சந்திரகிரிக்காட்டில் உறைந்தது. பிறகு திருமலையில் இருந்தது. கடைசியில் சிங்கவரம் (செஞ்சி) அடைந்து இருப்பது வரையுள்ள வரலாறுகளைச் சுருக்கமாகக் கூறி முடித்தான்.

அவன் சொல்வதைக் கேட்ட திருமணத்தூண் நம்பி அப்படியே யோசனையில் ஆழ்ந்தார்.

அப்போது தத்தன், "சுவாமிக்கு இன்னும் சந்தேகமோ?" என்று கேட்க,

அவரும், "அப்படி இல்லை! நடந்ததை நேரில் பார்த்தவர்கள் இராமையாலே, அது சந்தேகத்திற் கிடமாகப் போக வாய்ப்பிருக்கிறது. ஆனால் இங்கே அரங்கனைப் பற்றி செய்தி எப்படியானால் என்ன? நமக்கு வேண்டியது இந்த ராஜ்யத்தின் மீட்புதானே? அதற்கான முயற்சிகளில் உடனே இறங்கிவிடுவோம். அதற்கு மேல் நடக்க வேண்டியவை விதிப்படி நடந்துவிட்டுப் போகிறது" என்று கூறினார்.

ஒருவர் அதுவரை கேட்டிராத ஒரு விருத்தாந்தத்தை ஏற்றுக் கொள்வது என்பதற்கு எப்படியும் சிறிது காலம் பிடிக்கத்தான் செய்யும் என்று எண்ணினான் வல்லபன்.

அன்று இரவு நம்பியின் வீட்டில் அவர்கள் உணவு அருந்தி விட்டு உறங்கச் சென்ற போது வல்லபனுக்குத் திடீரென்று அந்த இளைய தேவதாசியின் தோற்றமும், பார்வையும் பெருமூச்சும் நினைவிற்கு வந்தன. அவனுக்கு அவை மதுராவை நினைப்பூட்டி விட்டதால், "யாரைப் பார்த்தாலும், மதுரா, நீயாகவே இருக்கிறாய்" என்று புலம்பி வெகு நேரம் உணர்ச்சிகளில் தேம்பி நித்திரை போனான் அவன்.

மறுநாள் காலையில் திருமணத்தூண் நம்பி இரு இளைஞர்களின் இருப்பிடம் வந்து, "சித்தமாக இருங்கள். மதியத்தில் கண்ணனூர் போகிறோம்" என்று கூறினார்.

ஆச்சரியமடைந்த வல்லபன், "கண்ணனூர் நாம் போக முடியுமா?" என்று பாதி சந்தேகத்தோடு கேட்டான்.

"ஏன், நிச்சயமாகப் போகிறோம்" என்றார் நம்பி.

"இரகசியமாகத்தானே?" என்றான் வல்லபன்.

"இல்லை. பகிரங்கமாகவே போகிறோம்" என்றார் நம்பி.

"என்ன சுவாமி பரிகசிக்கிறீர்கள்? சுல்தானியர் நம்மை அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்களா?" என்றான் தத்தன் இடைமறித்து.

"கண்டு கொள்வார்கள். ஆனால் நாங்கள் சுல்தானிய அரசரின் நன்மதிப்பைப் பெற்று இருக்கிறோம். என் தந்தை சிங்கப்பிரான் பல காணிக்கைகளை சுல்தானுக்குக் கொடுத்து அவரது தயவைப் பெரிய அளவு பெற்றிருந்தார். அதன் மூலம் திருவரங்கக் கோவிலை முழு அழிவிலிருந்தும் காப்பாற்றினார். நானும் என் தந்தை வழியைத்தான் பின்பற்றுகிறேன். அதன் மூலம் கோவிலை யவனர்கள் மேலும் பாழ் செய்யாமல் காப்பதும் அன்றி இந்த வட்டாரத்தில் உள்ள வைணவப் பரிசனங்களையும், குடும்பங்களையும் காப்பாற்றி வருகிறேன்" என்றார்.

பிறகு திருமணத்தூண் நம்பி எதையோ சொல்ல வாயெடுத்து அதைப் பேசாமல் இருப்பதைப் பார்த்து வல்லபன், "ஐயா! தாங்கள் எதையோ கூற நினைத்துத் தயங்குகிறீர்கள்" என்றான்.

"ஆமாம். . . . ." என்று இழுத்தார் நம்பி.

"தாராளமாகச் சொல்லலாமே!" என்றான் வல்லபன்.

"சொல்லத்தான் வேண்டும். எவ்வளவு நாழிகை தயங்க முடியும்!" என்று தம்மைச் சித்தப்படுத்திக் கொண்டு தொடங்கினார்.

"ஐயா! நாங்கள் சுல்தானிய அரசரைப் பார்க்கப் போவதாக இருந்தால், பொன், மது, பெண் மூவரையும் எடுத்துச் செல்வோம்!"

"சரி" என்றான் வல்லபன் சிறிது ஆச்சரியத்துடன்.

"பொன்னும், மதுவும் கிடைத்துவிடும். பெண்ணைத் தேவதாசி குலத்திலிருந்து பெற்றுக் கொள்வோம்."

"நல்லது"

"இதற்குத் தேவதாசிகள் யாராவது முற்பட்டு வருவார்கள். அவர்களுக்கு அது ஒரு தியாகம்"

"அப்படியா?"

"ஆமாம். அவர்களின் தியாகம் அளப்பரியது. நம்பிக்கையே வாழ்கிறது"

"சரி"

"இப்படித் தியாகம் செய்ய முன் வரும் பெண், ஒன்று சுல்தானிய அந்தப்புரத்தில் ஆயுட் பூராவும் அகப்பட்டுக் கொண்டு விடுவாள். அல்லது அவளைச் சுகித்த பிறகு சுல்தான் அவளைப் போக விடுத்தால் இங்கே வந்து 'யவன எச்சில் பட்டவள்' என்று எந்தக் குலத்தாருடனும் சேராமல் தனியாக ஒதுக்குப்புறத்தில் வாழ்வாள்"

"ஆச்சரியமாக இருக்கிறதே!" என்றான் வல்லபன்.

"எவ்வகையிலும் அந்தப் பெண்ணின் வாழ்க்கை சோகமாகவே இருக்கும். ஆகவே இந்தத் தியாகத்தை அவர்கள் செய்ய வருமுன், நாங்கள் அவளுக்கு விருப்பமான வரம் ஒன்றைக் கொடுப்போம்!"

"அது நியாயந்தான்" என்றான் வல்லபன்.

"இம்முறைக்குத் தாரா என்ற பெண் தியாகம் செய்ய வந்திருக்கிறாள். அவளிடம் அவள் விருப்பத்தைக் கேட்டோம். அவள். . . " என்று இழுத்தார் நம்பி.

"என்ன சொல்லுங்கள்?" என்றான் வல்லபன்.

"அவள் தங்களுடன் இரு நாழிகை தனியாக இருக்க வேண்டும் என்று சொன்னாள்" என்றார் நம்பி.

திடுக்கிட்டான் வல்லபன்.

"என்ன சுவாமி சொல்கிறீர்கள்?" என்று கலக்கமுடன் கேட்டான்.

நம்பி தலைகுனிந்து நின்றார். பிறகு மெள்ள நிமிர்ந்து, "ஐயா! தங்கள் கலக்கத்தை அறிவேன். சங்கடத்தையும் அறிவேன். ஏனெனில் நாங்கள் இதில் எதுவும் செய்வதற்கில்லை!" என்றார்.

"சுவாமி! பொறுக்க வேண்டும். நான் இதற்கு உடன்படேன்!" என்றான் வல்லபன்.

"ஐயா!" என்றார் நம்பி. அவர் கண்களே தழதழத்தி ருந்தன. "ஐயா! நான் சொல்வதைக் கேளுங்கள். இது அளப்பரிய தியாகம். ஒரு பெண் தானாகவே முன் வந்து தன் வாழ்க்கையைச் சூன்யம் ஆக்கிக் கொள்கிறாள். நிச்சயம் இது ஒரு மகத்தான தியாகம். இதற்கு ஈடு எங்கும் கிடையாது. யாருக்காக இந்தத் தியாகத்தைச் செய்கிறாள்? அதை யோசியுங்கள். அரங்கனுக்காக, எமக்காக, உமக்காக, உம் விஜயநகரத்திற்காக, ஆமாம். இவை எல்லாவற்றின் விமோசனமே இந்தப் பெண்ணின் தியாகத்தில்தான் அடங்கி இருக்கிறது. ஐயா! அதைக் கவனித்தீர்களா? இவள் உதவியால் நாட்டுக்கே

விமோசனம் ஏற்படலாம் என்று இருக்கும்போது. இவள் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவது நம் கடமை. நம் தர்மம். அதுதான் நியாயம்!" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

அடுத்த அரை நாழிகையில், வல்லபனும் தாரா என்ற தேவதாசியும் ஒரு மச்சு அறைக்குள் தனியாக விடப்பட்டு இருந்தார்கள். வல்லபன் சோகத்தோடும் விரக்தியோடும் இருந்தான். தன் எதிரே கதவோரம் வந்து நிற்கும் பெண்ணை அவன் வெகுநேரம் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை.

பிறகு யார் தான் இப்படி ஒரு விசித்திர வரத்தைக் கேட்டார்கள் என்று அறியத் தலையை நிமிர்த்திய போது அங்கே முந்திய நாள் வரவேற்பில் பார்த்த இளமையான தேவதாசி நிற்பதைக் கண்டான். அதைக் கண்டு திடுக்கிடும் போது, அவளது கண்ணிலும் முகத்திலும் ததும்பிய சோகமான குழைவு, அவன் நெஞ்சத்தைத் தொட்டது.

அவன் பார்த்ததைக் கண்டு அவள் தன் கரிய விழிகளால் ஆழ்ந்து அவனைப் பார்த்தாள். பிறகு. "ஐயா!" என்றாள்.

அவன் அவளைப் பார்த்தான்.

"நான் தங்களை இங்கே ஏதோ கேவல நோக்கத்துடன் அழைத்தேன் என்று நினைத்து விடாதீர்கள்! என் விருப்பமே இவ்வளவுதான்! தங்களுடன் இரு நாழிகை தனிமையாக இருக்க வேண்டும். அவ்வளவுதான். இதற்கு மேல் எதுவும் வேண்டாம்" என்றாள்.

வல்லபன் பேசாமலிருந்தான். பிறகு. "இதனால் உனக்கு என்ன பிரயோசனம்?" என்று கேட்டான் வல்லபன்.

"அப்படிச் சொல்ல முடியுமா?" என்றாள் அவள். பிறகு. "என் வாழ்க்கையில் சுவர்க்க மயமான சிறிது நேரத்தை அனுபவிக்கிறேன். அவ்வளவுதான். இறைவனையே மணாளராக வரித்த பின் இனி வாழ்க்கையில் என்ன இருக்கிறது? இருந்தாலும் பூமியில் சில மானிடர்களையே தெய்வ அம்சங்களோடு பார்க்கும்போது மனம் அவர்கள்பால் செல்கிறது. 'தெய்வம் மனுஷ்ய ரூபேண' என்று தானே சொல்வார்கள். தங்களைப் பார்த்ததுமே தாங்கள் தெய்வ அம்சம் உள்ளவர் என்று தெரிந்தது" என்றாள்.

"எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று குறுக்கிட்டுக் கேட்டான் வல்லபன்.

"ஐயா! நடனம் ஆடும்போது தங்களைப் பார்த்தேன். தங்கள் கண் என் மீது விழவில்லை. பிறகு போகும் போதும் குறுக்கே நின்று உங்களைப் பார்த்தேன். அப்போதும் உங்கள் பார்வை என்னை வழுவியேச் சென்றது. என்னைச் சாதாரணமாக எல்லோரும் ரூபவதி என்று தான் சொல்வார்கள். என்னைத் தாங்கள் உதாசீனப்படுத்த வேண்டுமானால் இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும்!" என்றாள் தாரா.

"என்ன காரணங்கள்?"

"ஒன்று மனத்தில் உள்துறவு கொண்டு பெண்களை விலக்கி இருக்கிறீர்கள். அல்லது தாங்கள் யார் மீதோ பிரேமை கொண்டு அவளை நினைத்திருப்பதால் மற்ற எல்லாப் பெண்களையும் வெறுத்திருக்க வேண்டும். இந்த இரண்டு காரணங்களில் எது இருந்தாலும் தாங்கள் தெய்வாம்சம் கொண்டவர்தான். கடவுளை நினைத் தாலும் சரி, பெண்ணை நினைத்தாலும் சரி, ஒன்றையே நினைத்து ஒன்றிலேயே உருகுகிறவர்கள் தெய்வ அம்சம் உடையவர்கள் தான்" என்றாள் தாரா.

வல்லபனின் மனம் அதிர்ந்தது. அவள் சொன்னது அவனை வெகுவாகப் பாதித்தது. மதுராவை நினைத்தான். 'மதுரா! உன்னை நினைப்பதால் மற்ற யாரையும் நான் விலக்குகிறேன். என் பிரேமைக்கு இந்த தேவதாசிப் பெண்ணின் சொல்லே சாட்சி' என்றான்.

அவன் கண்களில் நீர் பனித்து விட்டதை அறிந்த தாரா, "ஐயா! ஐயா! தங்களுக்குக் கலக்கம் ஏன்? தங்கள் மெல்லிய மனத்தைத் துன்புறுத்தி விட்டேனா? தாங்கள் என்ன, பிரேமையில் சிக்கியவரா? அவர்களுக்குத்தான் நொடியில் கண்ணீர் வரும். அவர்களது இதயம் பஞ்சு போன்றது" என்றாள்.

அவளது மிருதுவான மொழிகள் மேலும் அவன் மனத்தைத் தூண்டிக் கரைய வைத்தன. ஸ்படிகக் கற்கள் உருளுவது போல் கண்ணீர் மளமளவென்று உருண்டு ஓடியது.

கண்களை இறுக மூடினான்.

"ஐயா!" என்றாள் அவள் கனிவுடன். அருகில் வந்து நின்றாள்.

அவனால் மறுமொழி சொல்ல இயலவில்லை.

"ஐயா! தாங்கள் பக்திக்கு ஆட்பட்டீரோ?" என்று கேட்டாள். அவன் பேச முடியாததை உணர்ந்து, "பிரேமைதானே?" என்று அவளே கேட்டாள்.

அவன் கண்கள் ஆனந்த பாஷ்பமாக உதிர்த்தன. முகத்தில் மழையை ஊடுருவிக் கொண்டு வரும் இளவெய்யில் போல் அவனது சோகத்தைத் தாண்டி ஒரு முறுவல் வெளிப்பட்டது. 'ஆமாம்' என்பது போல் தலை அசைத்தான் அவன்.

அவள் பச்சாதாபத்துடனும், மகிழ்ச்சியோடும் பின் நகர்ந்தாள்.

"ஐயா! தூய பிரேமை கொண்டவரைப் பார்ப்பது கூட ஒரு இன்பம். அவர்கள் முகம் ஒரு ஆன்ம வெளிச்சத்தில் எப்போதும் பிரசன்னமாயிருக்கும். நொடியில் கண்ணீர் வரும், இனமறியாமல் வரும் புன்னகை! மெழுகாக வரும் வார்த்தைகள், தூரத்தையே அடிக்கடி பார்க்கும் கண் இவையெல்லாம் தூய பிரேமையின் வெளி அறிகுறிகள். அதை நேற்றே சந்தேகித்து விட்டேன். இன்று தங்கள் வாயால் அதை உறுதியாக்கி விட்டீர்கள். ஐயா! நான் இந்தக் கணமே பரவசமாகிறேன். இந்தச் சிறிது நாழிகையில் ஒரு பிரேமையின் சன்னிதியில் நிற்க வாய்ப்புக் கிடைக்க நான் பெரிய அதிர்ஷ்டசாலி! தங்களையே நான் வாழ்நாள் முழுதும் நினைத்துக் கொண்டிருப்பேன். இவைதான் வருங்காலம் முழுவதும் நான் அசை போட இருக்கும் இன்பங்கள்! இவைகளை நினைத்துக் கொண்டே இருந்தால், என் தியாகத்தின் துயரங்கள் பொடிப் பொடியாக மறைந்துவிடும். ஐயா! உங்களுக்கு நான் மிகவும் நன்றியுடையேன். உங்களுடைய இந்த நேரத்தைக் கவர்ந்தது கூட எவ்வளவு பாபம். ஏனெனில் பிரேமிக்கிறவர்களின் நினைவுகள் ஓசையில்லாமல் வழுக்கிக் கொண்டே சீராய்ப் பாத்திரத்திலிருந்து பாத்திரம் விழும் எண்ணெயின் தாரை போல், பிரேமிக்கப்பட்டவரையே சதா நினைத்துக் கொண்டிருக்கும். அந்த இடையறாது ஓடும் புண்ணிய நினைவுகளில் சிறிது நேரம் தடை செய்ததற்குக் கூட நான் வருந்துகிறேன். பொறுத்தருள வேண்டும். ஐயா! வருகிறேன்" என்று சொன்னாள்.

அவளை வாத்சல்யத்துடனும், கருணையுடனும், இரக்கத்துடனும் பவித்திரமான அன்புடனும் பார்த்தான் வல்லபன். ஏதோ மகானைப் பார்த்தது போன்ற புளகிதம் அடைந்து அந்தப் பெண் கீழே விழுந்து நமஸ்கரித்தாள்.

"வருகிறேன்" என்றாள்.

கதவோரம் போய் நின்றாள்.

"வருகிறேன்" என்றாள்.

திரும்பிப் பார்த்தாள்.

"வருகிறேன்" என்றாள்.

தயங்கினாள்.

கனிவுடன் அவனைப் பார்த்தாள்.

முறுவலித்தாள்.

"நீங்கள் பிரேமை வைத்திருக்கும் பெண் உங்களை எப்போது நினைத்துக் கொண்டிருப்பாள்!" என்றாள்.

"இப்போது கூட நினைத்துக் கொண்டிருப்பாள்" என்றாள்.

"இந்தக் கணத்திலும் கூட!"

"அழாதீர்கள்! அவள் உங்களை மறக்க மாட்டாள்!" என்றாள்.

டக்கென்று கதவை மூடினாள்.

வெளியே அவள் கண்ணீரில் விழுந்தாள்.

உள்ளே அவன் கண்ணீரில் விழுந்தான்.

21

மச்சுக்குள் வல்லபன் கண்ணீர் உகுத்தான். மதுராவைப் பாராமல் கழிந்த ஆண்டுகளை எண்ணிப் பார்த்தான். இத்தனை வருஷம் அவள் தன்னை

நினைத்து இருந்திருப்பாளோ என்று நினைவு ஓடியது. 'நிச்சயம் நினைத்திருப்பாள். மறந்திருக்க மாட்டாள். எங்கள் பிரேமை பொய்யாகி விடாது' என்று எண்ணினான் அவன்.

மதுராவை அவள் வீட்டில் கொண்டு போய் விட்ட பிறகு, ஒரே ஒரு முறை மீண்டும் இந்தப் பத்து வருடங்களில் தென் பாண்டியத்திற்கு அவன் போயிருக்கிறான். வடக்கே விஜயநகரத்தார் பாமினிக் காரர்களுடன் சண்டையிட்டு எதிர்பாராமல் தோல்வி அடைந்த நேரம் அது. வீரர்கள் தேவைப்பட்டதால் தென்பாண்டியர்கள் ஏதாவது உதவுவார்களோ என்ற ஆசையில் கம்பணர் அவனை அங்கே அனுப்பி இருந்தார்.

அப்போது எவ்வளவு ஆவலுடன் போனான் அவன்? அவளுடன் எவ்வளவு பேச நினைத்தான் அவன்?

ஆனால் நடந்தது என்ன?

குலசேகரப் பாண்டியர் குடிபெயர்ந்து மலையாளம் போய்விட்டார் என்று தெரிய வந்தது.

பாண்டிய நாட்டில் இருந்தால் தன் மகளை மீண்டும் யாராவது அபகரித்துச் சென்று விடுவார்களோ என்று அவருக்குப் பயம்.

ஏனெனில் பாண்டிய சிங்காதனத்திற்கு, நேர்மை வழியில் பார்த்தால் குலசேகரப் பாண்டியர்தான் உண்மையாக உரிமை உள்ளவராக இருந்தார். இதனால் இதர பாண்டியக் கிளைக் குடும்பத்தினரால் தன் மகளுக்கு ஆபத்து எப்போதும் வரும் என்று நம்பினார்.

மதுராவை எந்த விதத்திலும் தீங்கு நேராமல் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார்.

எனவே குடும்பத்தின் பாதுகாப்புக்கு மலையாள ராஜ்யந்தான் சிறந்தது என்று அங்கு போய்விட்டார்.

அதை அறிந்து கொண்ட வல்லபன் அவர் போயுள்ள ஊர் எது என்று எங்கெங்கோ விசாரித்துப் பார்த்தும் யாராலும் சொல்ல முடியவில்லை.

இது வல்லபனுக்குப் பெரும் மனக்குறை.

இதுவே ஏமாற்றமாகவும், தாபமாகவும் பல்வாண்டுகளாக நீடித்து விட்டன.

இந்த ஆண்டுகளிடையே மதுரா அவனை மறந்திருப்பாளோ என்ற பயமும் பெரிதாய் அவனிடம் வளர ஆரம்பித்தது.

மதுராவின் சின்னமாக விளங்கிய அவளது பரிசிலான குறுவாள் அவனை விட்டுப் போனது அவனது துன்பத்தைப் பெரிதாக வளர்த்தது.

அந்த அதிர்ச்சியிலிருந்து அவன் இன்னமும் மீளாமல் இருந்தான்.

மதுரா அவனது வாழ்க்கையை விட்டு மறைந்ததற்கு இது சூசகமாக அமைந்து விட்டதோ என்று கூட எண்ணினான்.

இப்படிப்பட்ட சமயத்தில் முன்பின் தெரியாத இந்தத் தேவதாசி, 'உன் பிரேமைக்கு உகந்தவள் உன்னை இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறாள்' என்று சொன்னது எவ்வளவு அமிர்தமாக இருந்தது. எவ்வளவு ஆறுதலாக இருந்தது. வல்லபன் கண்ணீர் அடங்க வெகு நேரம் ஆயிற்று.

அன்று மதியத்தில் வல்லபன், தத்தன், திருமணத்தூண் நம்பி, தாரா, இன்னும் வேலையாட்கள் யாவரும் புறப்பட்டார்கள்.

வல்லபனும், தத்தனும் சாதாரணப் பணியாட்கள் போல் வேடம் தரித்துக் கொண்டார்கள். தாரா ஒரு பல்லக்கில் ஏறி வந்தாள்.

நம்பியைக் கண்டதும், கண்ணனூர்க் கோட்டையின் யவன வீரர்கள் வணக்கத்துடன் வழி விட்டார்கள்.

உள்ளே ஊருக்குள் சென்று சுல்தானிய மன்னரைத் தேடும் போது அவர் அரண்மனையில் இல்லை. உய்யானப் பூங்காவில் இருக்கிறார் என்று தெரிய வந்தது.

அதற்காக நம்பி தயங்கிவிடாமல் நேராக உய்யான வனத்திற்குப் போனார். அங்குள்ள காவலாளியான அலியிடம் தம் பெயரைச் சொல்லிவிட, அடுத்த சிறிது நாழிகைக்குள் அவர் உள்ளே அழைக்கப்பட்டார்.

அந்த வனத்தின் பளிங்கு நிற மாளிகையில் சுல்தான் பக்ருதீன் முப்ராக்ஷா சுகமாகத் தலையணைகளில் சாய்ந்து கொண்டு, "வா! நம்பி வா! இன்று என்ன கொண்டு வந்தாய்? மது கிடைத்ததா? மேற்கத்திய மது! அது அருந்தாமல் என் நாக்கு உலர்ந்துவிட்டது" என்றார்.

அவர் வார்த்தையில் இழுத்து இழுத்துப் பேசுவதிலிருந்து அவர் பாதியும் போதையில் இருக்கிறார் என்று தெரிந்தது. சுற்றிவர விதவிதமான அழகிகள் தங்கள் புஷ்டியான உடம்புகளைக் காண்பித்துக் கொண்டு வெவ்வேறு நிலைகளில் அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் எல்லோருமாய்ச் சேர்ந்து வல்லபனைப் பார்க்கும்போது நூறு நீலோத்பலங்கள் அவனைத் திடீரென்று எதிர்ப்பட்டாற் போலிருந்தது.

நம்பி சுவாதீனமாக சுல்தான் முன் வணங்கி நின்று, "பிரபு! அடியேனால் ஆன பிரயத்தனங்களை முழுதும் செய்து விட்டேன். மலையாளத்திற்குக் கூட ஆட்களை அனுப்பினேன். மேற்கத்திய மது கிடைத்தபாடில்லை. சீக்கிரம் கிடைத்துவிடும்" என்றார் வினயமாக.

"நீ சுத்த மோசம்! மோசம்! என்ன நீ சொல்றே, லேலா!" என்று பக்கத்தில் ஒரு பெண்ணை நிமிண்டினார்.

லேலா நிரம்ப அழகாக நெளிந்தாள்.

"அப்போ வேறே என்ன கொண்டு வந்திருக் கிறாய்?" என்றார் சுல்தான்.

நம்பி சமிக்ஞை காட்ட, பல்லக்கு முன்னே வந்து நிற்க, அதிலிருந்து தாரா கீழே இறங்கினாள்.

சுல்தானின் கண்கள் பளிச்சிட்டன.

"பா! பா! பா!" என்றார்.

தன் நீள் விழிகளால் சுற்றி வரப் பார்த்துக் கொண்டு தாரா அடி எடுத்து நடந்தாள்.

சுல்தானின் அருகில் போனதுதான் தாமதம், லபக்கென்று அவர் அவளை இழுத்து இறுக அணைத்து அவளது அதர அமுதத்தை நீண்ட நேரம் பருகினார்.

வல்லபனுக்கு இரத்தம் கொதித்தது. தூய பிரேமை யைப் பற்றிப் பேசிய பெண் பலவந்தமாக இச்சைக்கு ஆளாவது எவ்வளவு கொடுமையாக இருந்தது?

சுல்தானிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட தாரா சடக்கெனத் திரும்பி வல்லபனை

ஒருமுறை பார்த்து விட்டுப் பிறகு துக்கத்துடன் வேறுபுறம் திரும்பிக் கண்களைப் படபடவென்று கொட்டினாள்.

சுல்தான் முன்னால் நம்பி பொன் நகைகளைக் காணிக்கைகளாக வைத்தார். பட்டு வஸ்திரங்களையும் அடுக்கினார்.

சுல்தானின் கண்கள் பளபளத்தன.

கோவில் நிலங்களின் கணக்குகளைக் கேட்டுவிட்டு, (நிலங்களை சுல்தான் தமக்கு எடுத்துக் கொண்டிருந்தார்) நம்பியை அனுப்பிவிட்டார் சுல்தான்.

இரவு கண்ணனூர்ச் சத்திரத்தில் எல்லோரும் தங்கினார்கள். நம்பி எதுவும் உண்ணவில்லை. மற்றவர்கள் பழங்களை அருந்தினார்கள். ஊரில் வேத மார்க்கத்தைச் சேர்ந்த எந்த மனிதருமே இல்லை. சத்திரங்களில் மாமிச வாடை அடித்துக் கொண்டிருந்தது.

மறுநாள் நம்பி யவனத் தளபதியைப் பார்க்கப் போனார். அவரும் போதையில் இருந்தது வல்லபனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

நம்பி கொண்டு வந்த பொன் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, "ரொம்ப சந்தோஷம். ரொம்ப சந்தோஷம்!" என்று கூறினார் அவர்.

"தளபதிகளே! என் உறவினர்கள் இவர்கள். ஊர், கோட்டை, கொத்தளங்கள் எல்லாவற்றையும் பார்க்க வந்திருக்கிறார்கள்!" என்றார் நம்பி.

"நன்றாகப் பார்க்கட்டும். துணைக்கு ஆளை அனுப்பி வைக்கிறேன்!" என்று ஏவலாள் ஒருவனை அனுப்பி வைத்தார் தளபதி.

மேலும் ஒரு நாள் கண்ணனூருக்குள் இருந்து கோட்டை, கொத்தளம், வீதிகள், பாசறைகள் எல்லாவற்றையும் பார்த்து விட்டு அவர்கள் ஊருக்குத் திரும்பினார்கள்.

ஊருக்குள் வந்தபின் எலுமிச்சையின் ரசத்தைச் சிறிது குடித்துத் தனது உபவாசத்தை முடித்தார் நம்பி.

அவர் மிகவும் களைப்பாகவும், சோகமாகவும் காணப்பட்டார்.

"சுவாமி! என்னால் தங்களுக்கு நிறையத் தொந்திரவுகள் வந்துவிட்டன!" என்றான் வல்லபன்.

"இல்லை வல்லபன்! கண்ணனூருக்குப் போய் வருவது என்றாலே ஒரு நரகம்! அங்கே போகும் நாட்கள் எனக்கு உபவாச நாட்கள். நான் இப்படி செய்வதெல்லாம் மகா பாதகமோ என்று நினைப்பேன். ஆனால், அதனால் எத்தனையோ குடும்பங்களும் பரிசனங்களும் இங்கே நிம்மதியாக வாழ முடிகிறது. அரங்கனது கோவிலையும் எங்களால் முடிந்த அளவு காக்க முடிகிறது. இந்தப் பலன்கள் இருப்பதனால் எனக்கு இழி நரகம் கிடைத்தாலும் கிடைக்கட்டும் என்று இந்தப் பாதகமான செயலைச் செய்து வருகிறேன்" என்றார் அவர்.

அன்று இரவு எல்லோரும் மீண்டும் கூடியபோது வல்லபனைப் பார்த்து, "வல்லபா! தாங்கள் என்ன முடிவெடுத்தீர்கள்? கண்ணனூர் எப்படி இருந்தது?" என்று கேட்டார்.

வல்லபன் உடனே, "ஐயா! லட்சம் யவன வீரர்கள் கண்ணனூரில் இருப்பதாக கூறினார்கள். இதில் பாதிப்பேர்தான் யவனர்கள். இவர்கள் கோட்டைக்குள் இருக்கிறார்கள். சுகபோகங்களில் ஆழ்ந்து இருக்கிறார்கள். மீதிப் பாதிப் பேர் பல தரப்பட்ட

வீரர்கள். இவர்கள் கோட்டைக்கு வெளியே இருக்கிறார்கள்" என்றான்.

"இவர்களை நீங்கள் வெல்ல முடியுமா?" என்று கேட்டார் நம்பி.

"நேரிடையான யுத்தமானால் வெல்ல முடியாது!" என்றான் தத்தன்.

"தந்திரத்தால் வெல்ல முடியுமா?" என்று கேட்டார் நம்பி.

"நிச்சயமாக முடியும்" என்றான் தத்தன்.

வல்லபன் தத்தனைப் பார்த்தான். "என்ன செய்யலாம் என்கிறாய்?" என்று கேட்டான் வல்லபன்.

"நான் பெரிய திட்டம் வைத்திருக்கிறேன்" என்றான் தத்தன்.

"சொல்லு தத்தா!" என்றான் வல்லபன்.

தத்தன் ஆரம்பித்தான்.

"சுல்தானது இரண்டு லட்சம் படைகளில் பாதிப்பேர் தான் யவனவர்கள். மீதிப் பேர் இந்நாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள். இந்தப் பெரும் படையில் ஒரு லட்சம் மதுரையில் இருக்கிறது. மற்றொரு லட்சம் கண்ணனூரில் இருக்கிறது. நாம் கண்ணனூரைச் சுற்றிப் பார்க்கும் போது, அந்த ஏவலாளிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட விஷயம் பல உண்டு. சுல்தான் உத்தரவு இட்டால்தான் யவன வீரர்கள் சண்டைக்குப் போவார்கள். வேறு யார் சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அவர்களுக்கு அப்படிக் கடுமையான உத்தரவு. நாம் என்ன செய்ய வேண்டும் என்றால் அந்த உத்தரவு பிறப்பிக்க விடாமல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த வேண்டும்." என்றான்.

"அது முடியுமா?" என்றார் நம்பி.

"முடியும்" என்றான் தத்தன்.

"எப்படி?" என்றான் வல்லபன்.

"எனக்கு ஒன்று தெரிய வேண்டும்!" என்றான் தத்தன்.

"என்ன?" என்று கேட்டார் நம்பி.

"சுல்தானுக்கு மதுவிலோ உணவிலோ எதையாவது கலந்து கொடுக்க முடியுமா?" என்றான் தத்தன்.

"முடியாது. எதைக் கொடுத்தாலும் வைத்தியர்கள் பரீட்சித்துப் பார்த்துவிட்டுத்தான் சுல்தானுக்குக் கொடுக்கிறார்கள். நாம் போன போது கூட வைத்தியர்கள் இருந்தார்கள். பார்க்கவில்லையா?" என்றார் நம்பி.

தத்தன் சிறிது யோசித்தான்.

பிறகு மகிழ்ச்சியுடன் திரும்பி, "அதற்கும் ஒரு வழி இருக்கிறது" என்றான்.

"சொல்லு!" என்றான் வல்லபன்.

"காலில் ஒரு ரணம் ஏற்பட்ட போது அதைத் தன் வைத்தியரால் குணப்படுத்த முடியவில்லை என்று அறிந்து அவரைச் சிரச்சேதம் செய்யச் சொன்னாராமே இந்த சுல்தான்! அது உண்மைதானா?" என்று கேட்டான் தத்தன்.

"ஆமாம்! நீங்கள் இந்த விஷயத்தை ஏவலாளியிடமிருந்து தெரிந்து கொண்டீர்களா?" என்று கேட்டார் நம்பி.

"ஆமாம்" என்றான் தத்தன். "நான் சொல்லப் போவது விசித்திரமாகப்படலாம். இருந்தாலும் சொல்கிறேன். சுல்தானுக்கு நாம் பெண்நோயை வரவழைக்க வேண்டும்."

நம்பியும் வல்லபனும் யோசித்தார்கள்.

"முடியுமா?" என்றான் வல்லபன்.

"ஏன்? இப்போது ஒரு தாராவைக் கொடுத்தீர்களே! இன்னொரு மாலாவை அவரிடம் அனுப்புங்கள். அவள் போவதற்கு முன் அவளுக்குப் பெண் நோயை வரவழையுங்கள்!"

"முடியுமா?" என்றான் வல்லபன்.

"நிச்சயம் முடியும். இன்னொரு தேவதாசியின் தியாகம் தான் நமக்குத் தேவை. சீக்குள்ள ஆணுடன் நிரந்தரச் சகவாசம் பெற வைத்து அவளுக்கு நோயை உண்டாக்கி விடுவோம். பிறகு அவளையே சுல்தானுக்குக் காணிக்கையாகக் கொடுப்போம்!" என்றான் தத்தன்.

"தத்தா! உன் திட்டங்கள் எல்லாம் பிரமாதமாக இருக்கின்றனவே! இப்படிச் செய்வதால் என்ன நடக்கும்?" என்று கேட்டான் வல்லபன்.

"நேற்று இரவிலிருந்து எனக்கு இதே யோசனைகள் தான். கடவுள்தான் எனக்கு இந்தத் திட்டத்தை அளித்தி ருக்கிறார் என்று எண்ணுகிறேன். கண்ணனூரில் ஏவலாள் நம்முடன் வந்தானே, அவனிடம் பல விஷயங்கள் நான் தெரிந்து கொண்டேன். ரணத்தைக் குணப்படுத்த முடியாத வைத்தியரைச் சிரச்சேதம் செய்வித்தார் அல்லவா இந்த சுல்தான்! அவர் அப்படி செய்ததைப் பார்த்ததும் மற்ற வைத்தியர்கள் ஊரைவிட்டு ஓடிவிட்டார்களாம்!"

"சரி!"

"அது போல் இப்போதும் ஒரு நிகழ்ச்சியை நடத்த விரும்புகிறேன். சுல்தானுக்குப் பயங்கரப் பெண் நோயை வரவழைத்துவிட்டால், யவன வைத்தியர்கள் அதை எளிதில் குணப்படுத்த முடியாது. இதனால் எங்கே சுல்தானின் கோபம் கிளர்ந்து விடுமோ என்று பயந்து வைத்தியர்கள் ஊரை விட்டு ஓடிவிடுவார்கள். அந்தச் சமயத்தில் நம்மவர்கள் சுல்தானிடம் போய் அந்த நோயைக் குணப்படுத்துவதற்கான சித்தர் ஒருவர் மதுரைக்கு அடுத்துள்ள பெரியமலையில் இருக்கிறார் என்றும், மலையிலுள்ள மூலிகைகளின் வாசனைக் காற்றே நோயைக் குணப்படுத்தி விடும் என்றும் கூறி சுல்தானை தெற்கே பெரியமலைக்குப் போக வைக்க வேண்டும். அங்கே அவர் போனால், அவருக்கு மது வகைகளில் விஷப் பொருள்களைக் கலந்து கொடுத்து விட வேண்டும். வைத்தியர்கள் ஓடிவிட்டிருக்கிற நேரத்தில் அந்த மது வகைகளைப் பரீட்சித்துப் பார்க்க யாருமே இருக்க மாட்டார்கள். மற்றவர்களால் முடியவும் முடியாது. சுல்தானும் அவைகளை அருந்துவார். சீக்கிரம் புத்தி மழுங்கிப் போவார். இந்தத் திட்டத்தினால் நான் இரண்டு காரியங்களைச் சாதிக்கிறேன். ஒன்று சுல்தானைக் கண்ணனூரை விட்டுத் தெற்கே கொண்டு போகிறேன். இரண்டாவது அவரை மலைமேல் ஏற்றி அவருக்கு நிரந்தரப் போதையைக் கொடுத்து விடுகிறேன். இப்படிச் செய்வதன் மூலம் சுல்தான் ஆபத்து வேளையில் உடனடியாக உத்தரவு பிறப்பிக்க முடியாத விதம் செய்து விடுகிறேன். இதைப் பயன்படுத்தி நாம் இதர வேலைகளில் இறங்கிவிடலாம்!" என்றான்.

மற்ற இருவரும் யோசனையில் ஆழ்ந்தார்கள். "இது சிறிது சுற்று வழியாக இருக்கிறது" என்றான் வல்லபன்.

"வல்லபா! சுற்று வழியானாலும் ஒரு நிச்சய வழியாக இருக்கிறது. நான் இவைகளை எல்லாம் சொன்னேனே! இவற்றின் பின்னால் மற்றொரு பயங்கரமும் ஒளிந்திருக்கிறது" என்றான் தத்தன்.

"என்ன பயங்கரம்?" என்றான் வல்லபன்.

"சுல்தான் இப்போது ஸ்திரீலோலராகவும், மதுப் பிரியராகவும் இருக்கிறார். இதனால் அவரது நிர்வாகத் திறமை வெகுவாகக் குறைந்து விட்டது. இதன் சின்னங்களை கண்ணனூர் முழுதும் கண்டேன். தளபதிகள் உப தளபதிகள், உத்தியோகஸ்தர்கள் எல்லோருமே அரச பயம் இல்லாமல் தன்னிச்சையாக இருக்கிறார்கள். அநேக சேவகர்களும், வீரர்களும் சுல்தானை நையாண்டி செய்து பேசுவதைக் கூட நான் பார்த்தேன். இவ்வளவு தூரம் போய்விட்டால் சுல்தானிய அரச குடும்பத்தினரும், பிரபுக்களும் என்ன செய்வார்கள், தெரியுமா?" என்று கேட்டான் தத்தன்.

"சுல்தானைக் கவிழ்த்து விட்டுத் தாங்கள் பட்டத்திற்கு வரப் பார்ப்பார்கள். இதுதான் அவர்கள் வழக்கமாயிற்றே!" என்றான் வல்லபன்.

"ஆமாம்! இப்போதே நிர்வாகம் க்ஷீணமாகி வருவதை அவர்கள் ஆவலோடு கவனித்துக் கொண்டிருப்பார்கள். சுல்தானுக்கு நாம் வேறு ரோகங்களைக் கொடுத்துவிட்டு, அவரது புத்தியையும் பேதலிக்கச் செய்து விட்டால், பிரபுக்கள் சூழ்ச்சி செய்து அவரைக் கொன்றாலும் கொன்று விடுவார்கள். அப்படி நடக்கும் பட்சத்தில் உள் பூசலும், சண்டையும் கிளர்ந்துவிடும். இந்தக் குழப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டு நாம் படை எடுத்து எல்லாவற்றையும் சீக்கிரமாக முடித்துவிட வேண்டும். நேரம் தான் இதில் முக்கியம். இவ்வளவுதான்

யோசனை! இனிப்படை எடுப்பது பற்றித் திட்டம் செய்வது சைனியாதிபதிகளின் பொறுப்பு!" என்று சொல்லி முடித்தான் தத்தன்.

வல்லபனுக்கு ஏனோ சந்தோஷம் பொங்கி வந்தது.

"தத்தா! இவ்வளவு சூசகமாக ஒரே பிரயாணத்தில் ராஜ்ய நடப்பு, அதன் பலவீனங்கள், அந்தப் பலவீனங்களை நம் இலாபமாக மாற்றிக் கொள்ளும் வழி, இவைகளை எல்லாம் ஒரு பழக்கப்பட்ட ஒற்றனைப்போல் எவ்வளவு அழகாகக் கண்டுபிடித்து வைத்திருக்கிறாய்? உன்னை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன்!" என்றான் வல்லபன்.

"தத்தா!" என்றார் நம்பி. "உன் திட்டம் மிகவும் பிரமாதமப்பா. நாம் செயலில் இறங்குவோம்."

22

தத்தனின் ஆலோசனைகளைக் குறித்து காஞ்சிபுரத்தில் கம்பணர், கோபணா, இதர பிரதானிகள் எல்லோரும் சர்ச்சை செய்தார்கள்.

"யுத்தத்தில் நேருக்கு நேர் நின்று போர் புரிந்து வெற்றி பெறுவதுதான் அழியாத கீர்த்தியைத் தரும் மற்றவை புகழைத் தராது!" என்று சோமப்பர் கூறினார்.

அப்போது கோபணா எழுந்து, "பிரதானிகளே இனியும் தர்மங்களைக் குறித்துப் பேசுவது தகாது. நம் எதிரிகள் தர்மத்தைக் கடைப்பிடிக்கவில்லை! சூழ்ச்சி களையும், தந்திரங்களையும் கையாளுகிறார்கள். வீர வல்லாள தேவரை அவர்கள் போரில் எப்படி முறியடித்தார்கள்? அதர்ம வழிகளால் தானே? முறியடித்த பிறகு அவரை அவர்கள் நடத்திய விதம்

எப்படி? நயவஞ்சகமாக அவரிடமிருந்து யானை பலம், குதிரை பலம், பொக்கிஷங்கள் யாவற்றையும் பணயமாக வாங்கிக் கொண்டு கடைசியில் என்ன செய்தார்கள்? பணயத்தின் நிபந்தனைப்படி வல்லாள தேவரை விடுதலை செய்தார்களா? இல்லை. நிராயுத பாணியாக அவரை நிறுத்திக் கொன்றார்கள். அந்தப் புனித மன்னரின் தோலை உரித்தார்கள். வைக்கோல் அடைத்து மதுரைக் கோட்டை வாசலிலே தொங்க விட்டார்கள்.

"இவ்வளவு அநியாயங்களைச் செய்து ஒரு நாட்டை அபகரித்தவர்களை நாம் வாளாவிடலாமா?

"பழிக்குப் பழி சூழ்ச்சியாலேயே சுல்தானைக் கொல்வது தான் முறை. அது அதர்மம் 'ஆகாது!" என்று கூறி முடித்தார்.

கம்பணர் எழுந்து, "பிரதானிகளே! நான் கோபணா கூறியதைத்தான் ஆமோதிக்கிறேன். மதுரையை நோக்கி இந்த மாதம் போவோம். அடுத்த மாதம் போவோம் என்று சொல்லியே பத்து ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த ஆண்டுகளில் நாம் வெறுமனே இராமல் வடஎல்லைக் காகப் படைகளையும் பொருள்களையும் சேகரித்து அனுப்பி வந்தாலும், மதுரையை ஜெயிக்காதது நம் மனங்களில் பெரும் பாரமாக இருந்து வந்திருக்கிறது. இந்த நிலையில் இப்போது நமக்குத் தெய்வ அனுகூலமும் கூடி வந்திருக்கிறது. இல்லாவிடில் எனக்கும் கோபணாவுக்கும் இந்த வேகம் வந்திருக்காது. நம் மனங்களில் நம்மை அறியாமலே ஒரு உந்துதல் ஏற்பட்டால் அது தெய்வத்தின் செயல்தான்! எனக்கு மீனாட்சியின் கட்டளை பிறந்துவிட்டது. கோபணா சுவாமிக்குத் திருவரங்கனின் கட்டளை பிறந்துவிட்டது. சகோதரரும் சகோதரியும் கட்டளை பிறப்பித்த பிறகு மற்ற தடங்கல்களுக்கு நாம்

கவலைப்படுவானேன்? தைரியமாகக் காரியத்தில் இறங்குவோம்!" என்று கூறி முடித்தார்.

மந்திராலோசனை ஒரு முடிவுக்கு வந்த பிறகு காரியங்கள் மளமள என்று நடக்கத் தொடங்கின.

அழகிய மணவாள கிராமத்தில் இருக்கும் திருமணத்தூண் நம்பிக்கும் செய்தி பறந்தது.

அவரும் திருவரங்கனின் மீது பாரத்தைப் போட்டு விட்டுக் காரியத்தில் இறங்கினார்.

முதல் காரியமாக ஒரு ரோகமுள்ள தேவதாசிப் பெண்ணைத் தேடி அவரும் அவர் ஆட்களும் எல்லா இடங்களிலும் அலைந்தார்கள்.

அத்தகைய பெண் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. அப்படி யாரேனும் கிடைத்தால் அந்தப் பெண் முப்பதுக்கு மேல் வயது படைத்தவளாகவும், விகாரமுள்ளவளாகவும் இருந்தாள்.

இனி என்ன செய்வோம் என்று அவர்கள் பிரமித்து விட்டபோது திருமணத்தூண் நம்பிக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

தாரா என்ற தேவதாசியை கண்ணனூரில் கொண்டு போய் விட்டதிலிருந்து இதுவரை நான்கு முறை அவர் அங்கே போய் வந்திருக்கிறார்.

சுல்தானது கேளிக்கைக் கூடமான உய்யான் வனத்தில் அவர் சுல்தானைப் பார்க்க சென்றிருந்த போதெல்லாம் தேவதாசியான தாரா சுல்தானுக்கு மிகவும் பிரியமாகி விட்ட பெண்ணாக இருப்பதைக் கண்டு கொண்டார்.

தாராவும் இரகசியமான ஜாடைகளால் சுல்தான் தனது மையலில் சிக்கி அடிமையாகி விட்டதை மிக நயமாகத் தெரிவித்திருந்தாள்.

இப்போது அந்த தாராவை உபயோகித்து, அவள் மூலமாகவே சுல்தானுக்கு ரோகத்தை வரவழைத்தால் என்ன? இப்படித்தான் நம்பியின் எண்ணம் ஓடியது.

ஒரு யௌவனமான அழகிய பெண் தன் மீது ரோகத்தை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருப்பாளா? அதையும் யோசித்தார் அவர்.

ஏற்கெனவே அந்தபுரத்தில் நரக வாழ்க்கையை அனுபவிக்கும் அவளுக்கு மேலும் ஒரு கொடுமையை அவரே கொடுக்கலாமா?

கொடுக்கக் கூடாது தான்! ஆனால் வேறு என்ன வழி.

அவர் மூளை வெகுவாகக் குழம்பியது.

ஆனால் தாரா எந்தத் தியாகத்திற்கும் சித்தமாக இருப்பாள் என்று நினைத்தார் அவர்.

இந்த யோசனை வந்ததும் தாராவைச் சீக்கிரம் சந்தித்துத் துணிவும் தன்திட்டத்தை வெளியிட நினைத்தார் அவர்.

உடனடியாகக் கண்ணனூருக்கு அவர் பிரயாணம் ஆனார். அங்கே உய்யான வனத்திற்குச் சென்று தாராவுக்குப் புஷ்ப மாலை கொடுப்பதுபோல் அதன் உள்ளே ஒரு நூலுக்குள் ஓலையை வைத்துக் கொடுத்து விட, அவளும் அந்த நறுக்கை இரகசியமாகப் படித்து விட்டு, தனது விருப்பத்தை மிகவும் சந்தோஷத்தோடு மறுநாள் ஜாடைகளில் தெரிவித்து விட்டாள்.

அதை அடுத்து நம்பி சுல்தானிடம், "பிரபோ! தங்கள் பிரியத்திற்கு உகந்தவளான தாராவை ஒரே ஒரு மாதம் எம் கிராமத்திற்கு அனுப்பி வைத்து அனுக்கிரகிக்க வேண்டும். அவளது தாயார் மிகவும்

நோய்வாய்ப்பட்டிருக்கிறாள். தனது ஒரே மகளைப் பார்ப்பதற்கு மிகவும் ஆசைப்பட்டுக் கொண்டு இருக்கிறாள். தயவு செய்ய வேண்டும்" என்று விண்ணப்பித்தார்.

சுல்தான் முதலில் அதற்கு இணங்கவில்லை. பிறகு நம்பியின் வற்புறுத்தலின் பேரில் சிறிது தளர்ந்து.

"இரண்டே இரண்டு வாரத்தில் நீர் தாராவை எம்மிடம் கொண்டு வந்து விட வேண்டும். வரும்போது மேற்கத்திய மதுவை எப்படியாவது கொண்டு வர வேண்டும்" என்று கட்டளை இட்டு, அவளை அவருடன் போக விடுத்தார்.

வரலாறுகளைப் படிக்கும் போது ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடந்த காரியங்களையும், நிகழ்ச்சிகளையும் தற்கால நோக்கோடு பார்த்து அவற்றை இகழ்வதோ குறை கூறுவதோ சரியல்ல.

அந்தக் காலத்தில் பரவியிருந்த அறிவின் அளவுக்குத் தகுந்தாற் போலவே அந்தந்தக் காலத்துச் செய்கைகளும், வழக்கங்களும் பெரும்பாலும் அமைந்து விடும்.

தற்காலக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது அவை விகாரமாகவும், கொடூரமாகவும், மூட நம்பிக்கையாகவும் நமக்குத் தோன்றிவிடும். எனினும் அவைகளைக் குறை கூறுவது உயர்ந்த பண்புக்கு அடையாளம் ஆகாது.

தேவதாசிகளை ஒழித்து விட்ட ஒரு கால வரம்புக்குள் இருக்கும் நாம், அந்தப் பழைய நாட்களில் தேவதாசிகளால் நடத்தப்பட்ட சில காரியங்களை அருவருப்போடு பார்க்கக் கூடாது. அந்தந்தக் காலத்திற்கு அதது ஏற்றதாக இருந்தது என்று நினைத்துக் கொள்ள வேண்டும்.

தாரா என்னும் தேவதாசி இருவாரங்கள் கிராமத்தில் தங்கிவிட்டு, கண்ணனூருக்கு ஒரு நாள் புறப்பட்டாள்.

கண்ணனூரை அடைந்ததும் அவளைக் கொண்டு விட வந்திருந்த திருமணத்தூண் நம்பி, உய்யான வனத்தின் எல்லையில் பல்லக்கின் திரையை விலக்கி, "அம்மா, தாரா! போய் வருகிறாயா?" என்று கனிவு ததும்பக் கேட்டார்.

அந்தப் பெண் விக்கித்துப் போய், அவரைப் பார்த்தாள். அவள் குரல்வளையில் பேச்சு எழவில்லை.

நம்பியின் மனதில் உடனே எண்ணங்கள் ஓடின. 'ஆகா! இந்தப் பெண் பூரண சந்திரிகை போல் இருந்தாளே! இப்போது பாசிக் குளத்தில் தெரியும் சந்திரன் போல் விமரிசை இல்லாமல் இருக்கிறாளே! அவள் கொண்ட ரோகம் அவள் மனத்தையும், உடலையும் இம்சிக்க ஆரம்பித்து விட்டதே! தெரிந்து கொண்டே ஒரு பெண்ணின் ஆரோக்கியத்தைக் குறைப்பதற்கு நான் உடந்தை ஆனேனே! அதன் மூலம் அவள் ஆயுளையும் குறைப்பதற்கு ஏதவாய் இருக்கிறேனே?' என்று நினைத்தார்.

கண்களில் நீர் சுரந்துவிட்டது. வருத்தம் தோய்ந்திருக்கும் அவரை தாராவும் ஆழ்ந்து பார்த்து, "ஐயா! வருத்தம் ஏனோ? எல்லாம் அரங்கனுக்காக நானே மனமுவந்து செய்கிறேன். எனக்குப் பிற்காலங் களில் அமைதியோடு அரங்கனை வழிப்படப் போகும் எத்தனையோ லட்சோப லட்சமான ஜனங்களில் யாராவது ஒருவர் மனம் கசிந்து என்னையும் என் இனத்தாரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்களானால் அதுவே எங்கள் எல்லோருடைய ஆத்மாக்களையும் திருப்திபடுத்திய தாக இருக்க முடியும்.

"இந்த கல்தான் அழிந்து நமது கோவில் நமக்குக் கிடைக்கும்வரை நான் உயிர் வாழ்வேனோ என்னவோ என் நோய் அவ்வளவு கடுமையான நோய். அப்படி என்னை வாழவிடாது அரங்கன் என்னை அழைத்துக் கொண்டு விட்டால் தாங்கள் அவசியம் இந்த ஏழையை நினைவு கூர வேண்டும். என் கடைசிக் கர்மங்களை தாங்கள் தான் எனக்குச் செய்து வைக்க வேண்டும். ஜனங்களிடையே என்னைப் பற்றிப் பெருமை யோடு கூற வேண்டும். அப்படிக் கிடைக்கும் புகழ் மூலமாகத்தான் நான் வானுலகில் உயர்ந்த ஒரு ஸ்தானத்தை அடைய முடியும். ஐயா எனக்காக இதைச் செய்வீர்களா? ஒரு சிலரையாவது நன்றியோடு, அன்போடு வெறுப்பும் உதாசீனமும் ஏதும் இன்றி இந்த அபலையை நினைக்க விடுவீர்களா?

"ஐயா, தாங்கள் ஏன் அழுகிறீர்கள். தங்கள் திருக்கண்களிலிருந்து இவ்விதம் முத்துக்கள் சிதறலாமோ? தாங்கள் கண்ணீரை நிறுத்துங்கள். தங்கள் மனம் தாபப்படும் படி ஏதாவது சொல்லிவிட்டேனோ! என்னைப் பாருங்கள். தாங்கள்அழுதால் நானும் அழுதுவிடுவேன். ஐயா, எங்கே என்னைப் பார்த்துச் சொல்லுங்கள்! என் சிந்தூரப் பொட்டு சரியாக இருக்கிறதா? பார்த்துச் சொல்லுங்கள்!" என்றாள் மிகவும் கெஞ்சிக் கொண்டே.

திருமணத்தூண் நம்பி தமது திருமுகத்தை நிமிர்த்தவேயில்லை. குழந்தைபோல் தேம்பிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தார். உத்திரியத்தால் கண்களைத் துடைத்து அடிக்கடி மூக்குறிஞ்சிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழித்து அவர் தம்முள் தாமே தேறி அந்தத் தாரா என்னும் தியாக சிகரத்தை நோக்கி,

"அம்மா தாரா! நீ என்னிலும் மேலானவள்! என்னிலும் அதிக அரங்க பக்தி உள்ளவள். என்றைக்கும் அழியாத புகழைப் பெறப் போகிறவள். உன்னை வருங்காலமெல்லாம் போற்றி நினைக்கும். உன்னைப் பற்றி நான் ஊராரிடம் சொல்லாவிட்டால் நான் நன்றியுடையவனாக இருக்க மாட்டேன். அரங்கனுக்கு உகந்தவனாகவும் இருக்க மாட்டேன். நீ இந்த சிறுவயதில் பெரும் புகழை பெற்று விட்டாயம்மா. அரும்பெரும் தியாகம் ஒன்றை அரங்கனுக்காக செய்து விட்டாயம்மா! உன்னையும் நினைப்போம். உன் இனத்தாரையும் இதயபூர்வமாக நினைப்போம் அம்மா! உன்னிடம் இந்த அடியவன் பிரார்த்திப்பது ஒன்று உண்டம்மா!" என்றார் தேம்பலுடன்.

"சுவாமி! அபசாரம் அபசாரம்! தங்களை அடியவன் என்று கூறுகிறீர்களே! பிரார்த்திக்கிறேன் என்று என்னிடம் சொல்கிறீர்களே! தங்கள் பாத தூசிக்கும் அடிபணிந்து போகும் அடியாள்தான் நான்! கட்டளை இடுங்கள்!" என்றாள் தாரா.

"அம்மா தாரா! அழகாகப் பேசுகிறாயம்மா. ஒன்று கேள். இது என் பிரார்த்தனைதான். கட்டளை இட என் மனம் துணியவில்லை. அதற்குண்டான அருகதையும் என்னிடம் இல்லை. அம்மா தாரா! உனக்குக் கொடிய ரோகம் வரவழைத்துவிட்டோம். இப்படி ஒரு காரியம் நிறைவேற உடந்தையாக இருந்தவன் நான். பின்னால் இந்த ரோகம் முற்றும்போது தேகத்தின் உள்ளும் புறமும் அழுகி, மெத்தவும் நீ அவஸ்தைப் படும்போது என்னை நினைத்து, 'இவர்தானே இந்தத் திட்டம் செய்தவர்' என்று மனம் நொந்து என்னைச் சபித்து விடாதே அம்மா. அதற்கு மாறாக ஒரு பரம்பரைக்காக, ஒரு சமுதாயத்திற்காக, ஒரு ராஜ்யத்திற்காக ஒரு வைணவத் தொண்டன் தன்

கடமையைச் செய்தான். பிரயோசனம் எதிர்பாராத தனது சேவையைச் செய்தான் என்று நினைத்தே என்னைப் பொருத்தருளி விடுவாயா அம்மா? உன்னதமானவளே! என்னைப் பொறுத்தருளுவாயம்மா?" என்று தழதழப்புடன் கெஞ்சிக் கேட்டார் அவர்.

"ஐயா" என்று குரல் உடைந்து கூறினாள் தாரா. "தங்களை நான் நொந்துக் கொள்வேனோ? அபசாரம் அபசாரம்! அப்படிச் செய்தால் எனக்கு ஈரேழு ஜன்மங்களிலும் நரகம் தான் கிடைக்கும். இந்த ஏழை அப்படிச் செய்யவே மாட்டாள். தாங்கள் ஒருவர்தான் ஆபத்துக் காலத்தில் மற்றநாடுகளுக்கு ஓடிவிடாமல் இந்தத் தமிழ்பேசும் நாட்டில் மக்களோடு வாழ்ந்துகொண்டு அவர்களது சுகதுக்கங்களில் பகிர்ந்து கொண்டு, அவர்களுக்கு நல்லனவே செய்து வருகிறீர்கள். பெரும் உத்தமர் தாங்கள். தாங்கள் செய்வதெல்லாம் உத்தமத் தொண்டு. தங்களை நிச்சயம் நொந்து கொள்ள மாட்டேன். தாங்கள் எனக்குக் கிடைக்க வழி செய்துள்ள ரோகம் உண்மையில் நான் அரங்கனுக்காக அணிந்துள்ள நவரத்தின ஆரம். இதை அடைந்ததற்கு நான் பாக்கியம் தான் செய்திருக்கிறேன். இதில் சந்தேகமே இல்லை. ஐயா! மனத்தின் தாபத்தை விடுங்கள். வருத்தப்படாதீர்கள். சந்தோஷமாக இருங்கள்!" என்றாள் அவள்.

அவ்வளவில் நம்பிக்கு உள்ளத்தில் பெரும் ஆறுதல் ஏற்பட்டது.

நிம்மதியுடன் அவர் பல்லக்கின் திரையை மூட முற்பட்டபோது, "ஐயா!" என்று சொல்லி நிறுத்தினாள் அவள்.

"என்ன?"

அவள் மென்று விழுங்கினாள்.

"சொல்லு, தாரா!" என்றார் அவர். அவள் கண்கள் ஒரு கணம் பனித்தன.

"சொல்லு தாரா!"

அவள் எங்கேயோ ஆழ்ந்து பார்த்துக் கொண்டு இருந்தாள். பிறகு, "அவரிடம் சொல்லுங்கள்" என்று பாதிப் புலம்பலாகக் கூறினாள்.

"யாரிடம்?" என்றார் அவர்.

அவள் பார்வை இன்னும் தூரத்தில் சென்றது.

"யாரிடம்?"

"அந்த இளைஞர் வல்லபனிடம்!" என்றாள் அவள்.

தொடர்ந்து என்னென்னவோ வார்த்தைகளைத் தெளிவில்லாமல் தடுமாறிக் கூறி,

"விசாரித்தேன் என்று சொல்லுங்கள்" என்று தத்தளித்தவாறு நிறுத்தினாள் அவள்.

அவள் பார்வை இப்போது தூர வெளிகளைத் தாண்டி எங்கேயோ அண்டங்களைக் கடந்து ஒரு பெரும் கனவு லோகத்தில் ஆழ்ந்து நின்றுவிட்டது.

23

கண்ணனூரில் உள்ள சுல்தானின் உய்யான வனத்தில் தேவதாசி தாராவை திருமணத்தூண் நம்பி விட்டுச் சென்று மூன்று மாத காலம் போன பின்னர் சுல்தானுக்கு மெள்ள நோயின் அறிகுறி தோன்ற ஆரம்பித்தது.

உடலில் நமைச்சலும், அரிப்பும் உபாதைகளும் ஏற்பட ஆரம்பித்தன.

காலின் கணுக்களில் மெள்ள இரணங்கள் தோன்றி நீர் வடியத் தொடங்கியது.

சுல்தான் முக்கால் வேளையும் போதையிலேயே இருந்ததால் இவற்றைப் பொருட்படுத்தாமல் இருந்தார்.

ஆனால் உபாதைகள் அதிகமான போதுதான் அவருக்கு விழிப்பு ஏற்பட ஆரம்பித்தது.

இதற்குள் சுல்தானின் உடலில் இரணங்களைக் கண்ட ராஜவைத்தியர் முதன் முதலில் கண்ணனூரை விட்டு ஓட்டம் பிடித்தார்.

ஏனெனில் சுல்தானின் குணங்கள் அவருக்குத் தெரியும்.

ஏதாவது நோய் ஏற்பட்டு அதை வைத்தியர் குணப்படுத்த முடியாமல் போனால், 'இந்த வைத்தியர்கள் ஏமாற்றுக்காரர்கள்' என்று சொல்லி அவர்களைச் சிரச்சேதம் செய்யச் சொல்லிவிடுவார்.

மதுரையில் இந்த சுல்தான் அப்படிச் செய்ததன் காரணமாய் வைத்திய இனம் முழுவதும் அந்த ஊரை விட்டு ஓடிவிட்டது.

அதே போன்றுதான் கண்ணனூரிலும் நிகழ ஆரம்பித்தது.

வைத்தியர்கள் ஒவ்வொருவராக ஊரைவிட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓட ஆரம்பித்தார்கள். முடிவில் சுல்தான் வைத்தியரைத் தேடும் போது யாரும் அகப்படவில்லை. 'அகப்படவில்லை' என்று வந்து கூறிய அதிகாரியை அந்தக் கணமே சிறையில் தள்ளினார் சுல்தான்.

இந்த விஷயம் காஞ்சிபுரத்திற்கு எட்டவே தாங்கள் நினைத்தபடி நடந்துவிட்டது என்று ராஜாங்கத்தில் எல்லோரும் சந்தோஷப்பட்டார்கள்.

ஆனால் சுல்தான் மதுரைக்குப் போய்விடுவார் என்று அவர்கள் எதிர்பார்த்த போது, அந்தக் காரியம் மட்டும் நடவாமல் போய்விட்டது.

என்ன காரணத்தினாலோ சுல்தான் கண்ணனூரி லேயே இருந்துவிட்டார்.

இரண்டு மாதங்களும் ஓடிவிட்டன.

திருமணத்தூண் நம்பி தவித்துப் போய்விட்டார். 'நாம் ஒன்று நினைக்க நடப்பது வேறொன்றாக இருக்கிறதே' என்று வருத்தப்பட்டார்.

அவருக்கு இன்னொரு பயமும் இருந்தது. 'தாராவின் நிலை எப்படி இருக்கிறதோ. அவளைப் பார்த்து நாளாகிவிட்டதே! ஒரு நடை கண்ணனூருக்குப் போய் விஷயங்களைத் தெரிந்து கொண்டு வந்தால் என்ன?' என்று தோன்றியது.

ஒரு நாள் காலையில் புறப்பட்டார். கண்ணனூர்க் கோட்டைக்குள் போனதும் எல்லோரும் கும்பல் கும்பலாக நின்று கொண்டு சுல்தானது உடல் நிலை குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

உய்யான வனத்திற்குப் போகும் போது நம்பிக்கு பல விதத் தயக்கங்கள் இருந்தன.

அனுமதி பெற்று வனத்துக்குள் போய், அங்கே தனியான மாளிகையில் இருந்த சுல்தானைக் கண்டதும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து, "பிரபோ! தாங்கள் நோய்வாய்ப்படலாமோ? ஆண்டவன் இப்படிச் சோதனை செய்யலாமோ?" என்று பிரலாபித்துப் புலம்பிக் கண்ணீர் விட்டார்.

படுத்திருந்த சுல்தானும் பிரீதி அடைந்து அவரைப் பார்த்தும், "நம்பி! உன்னை நினைத்தேன். நீ வந்தாய்! எனக்கு வைத்தியர் வேண்டுமே! உங்கள் வைத்தியர் யாராவது இருப்பார்களோ?" என்று வினவினார்.

சுல்தான் மீது ஈக்கள் மொய்க்காமல் நான்கு பணிப் பெண்கள் விசிறி வீசிக் கொண்டிருந்தார்கள். உள்ளே ஒருவித நெடி பரவியிருந்தது. சுல்தான் தமது காலில் கட்டுகள் போட்டிருந்தார்.

"பிரபோ! வைத்தியர் இருந்தால் அழைத்து வந்திருப்பேனே! கிடைக்கவில்லையே! இருந்தாலும் தேடுகிறேன்!" என்று சொல்ல,

"உடனே தேடு! சீக்கிரம் போ! யாரையாவது நல்ல ஆளை அழைத்து வா. என்ன வேண்டுமானாலும் கொடுக்கிறேன்!" என்றார் சுல்தான்.

"இதோ!" என்று சொல்லி நம்பி புறப்பட்டு வெளியில் வர, ஒரு மகிழ மரத்தடியில் அவர் போகும் போது, "சுவாமி!" என்று ஒரு குரல் கேட்க, அங்கே தாரா என்னும் அடியாள் பிரசன்ன வதனத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

"தாரா! நீயா? உன்னை உள்ளே எல்லாம் தேடினேனே. சௌக்கியந்தானே அம்மா!" என்று சொன்னவர், அவளை மேலும் கீழும் நன்றாகப் பார்த்து, "இதென்ன தாரா! நீ புஷ்டியும் ஆரோக்கியமுமாக இருக்கிறாய்! உன்னை நோய் படுத்தவில்லை போலும்!" என்று ஆச்சரியத்துடன் கூறினார்.

தாராவும், "சுவாமி! நான் விரதங்களையும் அனுஷ்டானங்களையும் காப்பவள் அன்றோ. நான் இப்போது என்னிடம் கற்பித்துக் கொண்ட மாசு தவிர

வேறு மாசு எதுவும் கிடையாதே! ஆகவே என் உடல் தாங்குகிறது. நோய் என்னை அதிகமாக ஏதும் செய்ய முடியவில்லை. இது எல்லாம் என் தெய்வம் திருவரங்கன் அருள்!" என்றாள். அப்பால் சுல்தான் தமது வாழ்க்கையில் அதிக இன்பங்களைத் துய்த்ததால் பலவீனமாகிவிட்டார் என்றும், அவரை நோய் அதிகமாகப் பிடித்து விட்டதில் அதிசயமில்லை என்றும் கூறினாள்.

"அம்மா! கேட்க மிக சந்தோஷமாக இருக்கிறது. எல்லாம் அரங்கன் அருள். இன்னொரு காரியம் நீ செய்ய வேண்டும் அம்மா!" என்றார்.

"சொல்லுங்கள் சுவாமி!" என்றாள் அவள்.

"சுல்தானை இங்கிருந்து நகர்த்தி மதுரைக்குக் கொண்டு போய்விட வேண்டும் அம்மா. அதற்கு ஏதாவது உபாயம் இருந்தால் செய். அது அவசியமான காரியம்" என்றார் நம்பி.

"நல்லது, அரங்கன் அருள் புரிவார். அப்படியே செய்கிறேன்!" என்றாள் தாரா.

அப்பால் அவர் விடைபெற்றுப் புறப்பட தாராவும் தயங்கி, "சுவாமி!" என்றாள்.

"என்ன?" என்று அவர் கேட்க,

தலைகுனிந்தவாறு, "அவரை விசாரித்தேன் என்று கூறுங்கள்" என்றாள்.

நம்பியும் புரிந்துகொண்டு, "அப்போதும் சொல்லி அனுப்பித்தேன். இப்போதும் நிச்சயம் சொல்கிறேன் அம்மா" என்றார்.

சுல்தானிடம் தாரா அன்றிலிருந்து, "நாம் மதுரைக்குப் போக வேண்டும். அந்த ஊர்தான் தங்கள் வியாதியைக் குணமாக்கும். அங்கே வரும் மலைக்

காற்றும் நிச்சயம் தங்களைக் குணமாக்கும். வைகை நீரும் மூலிகைச் சத்து நிறைந்தது. அதுவும் தங்களை நிச்சயம் குணமாக்கும்" என்று அடிக்கடிச் சொல்ல ஆரம்பித்தாள். பலரும் அவள் சொன்னதை ஆமோதித்தார்கள்.

போகப் போக சுல்தானுக்கு அதில் மனம் செல்ல ஆரம்பித்தது.

தம் அந்தரங்க ஆட்களை அழைத்து அவர் வினவ அவர்களும், 'ராஜரீகமாகவும் அதுவே நல்லது! இல்லாவிடில் தங்கள் நோய் பற்றி பலவித வதந்திகள் தலைநகரில் பரவும். எனவே மதுரைக்குப் போவது நல்லது' என்று சொல்லத் தொடங்கினார்கள்.

கடைசியில் சுல்தானும் ஒருநாள் புறப்பட்டுப் பரிவாரங்களுடன் மதுரை போய்ச் சேர்ந்தார்.

இந்த விஷயம் காஞ்சிபுரத்திற்குத் தெரிந்ததுதான் தாமதம், இதர வேலைகள் மளமள என்று நடக்கத் தொடங்கின.

படை திரட்டும் வேலை ஆரம்பமாகியது. தென் பாண்டியருக்கும், கேரள மன்னருக்கும் உதவி கோரித் தூதுகள் பறந்தன. வடக்கே உள்ள சிற்றரசர்களுக்கு ஒரு தூதுவக் குழு சென்றது. கோபணா அவசர அவசரமாக முள்வாய் நகருக்குச் சென்றார். இதரப் பிரதானிகள் வடமேற்கிலும், கிழக்கிலும் சென்றார்கள்.

கன்னட, தெலுங்கு நாடுகளின் நகரங்களில் எல்லாம் கோபணா "தர்மத்திற்கு ஒரு யுத்தம். படை எழுப்புவீர்! பொருள் தாருவீர்!" என்று வளநாட்டு அதிபதிகளைக் கேட்டுக் கொண்டார்.

முள்வாய் ராஜ்ய ஜனங்களிடையே அதுவரை கண்டறியாத பரபரப்பும், உற்சாகமும் ஏற்பட்டன. வடக்கில் பாமனித் துருக்கியருடன் நடத்தும்

போர்களுக்கு ஆயத்தம் பலமுறை அவர்கள் செய்திருக்கிறார்கள். அதற்குப் பொதுவாக ஒரு உற்சாகம் இருந்தாலும் இந்தத் தென்னாட்டுப் போருக்கு அதிக அளவு உற்சாகம் எழுந்தது.

முக்கியமாகத் தென்னாட்டு க்ஷேத்திரங்களான திருவரங்கம், இராமேசுவரம், மதுரை முதலியவற்றின் ஆலயங்களை அவர்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக தரிசித்ததே இல்லை. புதிதாகப் பிறந்து வளர்ந்த சமுதாயத்தினருக்கு அந்த ஊரைப் பற்றிய மாண்பு தெரியுமே ஒழிய வேறு எதுவும் தெரியாது. நேரில் சென்று அவர்கள் பார்த்தவர்கள் அல்ல.

அந்தப் புனித ஊர்களையும், இன்னும் நதிகளையும், தீர்த்தங்களையும், ஆழ்வார்கள், நாயன்மார்கள் பாடி அருளிய ஆலயங்களையும் தரிசிக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது படையெடுப்பு நடந்து அந்நாடுகளை ஜெயிப்பதன் மூலம் அவைகளைப் போய்ப் பார்க்க வழி பிறக்கப் போகிறது என்று அவர்கள் நினைத்ததும் அவர்களுக்கு உற்சாகம் கரை புரண்டது.

எங்கும் மக்கள் பொற்காசுகளையும், நவரத்தினங் களையும் பண்டாரங்களில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

படை வீரர்களுக்கான வேல், வாள், அம்புகளைப் பெருவாரியாக உற்பத்திச் செய்தார்கள்.

மெத்தை போன்ற கவசங்களையும், இரும்புக் கவசங்களையும் பெருவாரியாகச் செய்து குவித்தார்கள்.

தாங்கள் வளர்க்கும் குதிரைகளையும், பொதி மாடுகளையும் போர்ப் படைகளுக்கு இலவசமாக அளித்தார்கள்.

ஆங்காங்கே மக்கள் வில், வாள் பயிற்சியிலும், குதிரை, யானை ஏற்றத்திலும் பழக ஆரம்பித்தார்கள்.

மேற்கே துளுவ நாட்டிலிருந்து கிழக்கே ஓரங்கல் நாடு வரை வள நாட்டு அதிபதிகள் ஒரே லட்சியத்துடன் பரபரப்பாக இயங்கத் தொடங்கினார்கள்.

முன்வாய் நகரத்தில் யுத்த ஆயத்தங்களைச் செய்துவிட்டு கோபணா நேராகத் திருநாராயண புரத்திற்குப் பறந்து சென்றார்.

அங்கே குன்றின் மேலேறி, வேதாந்த தேசிகரின் குடிலை அடைந்து அவர் முன்னிலையில், "சுவாமி!" என்று சொல்லி சாஷ்டாங்கமாக விழுந்தார்.

"போதும்!" என்று சொல்லும் வரை மீண்டும் மீண்டும் கீழே விழுந்து நமஸ்கரித்து, பிறகு கைகட்டி வாய் புதைத்து தேசிகரின் முன் மிகுந்த பக்தியுடன் நின்றார் அவர்.

வேதாந்த தேசிகரை இப்போது, இந்நிலையில் பார்ப்பதே அவருக்குப் புல்லரித்தது.

தேசிகருக்கு அப்போது 100 பிராயம் தாண்டி இருந்தது. அப்படி நூறு கோடைகளையும், நூறு வசந்தங்களையும் தாண்டியதால் இப்போது உள்ளும் புறமும் ஞான சொருபமாகி, தெய்வ காந்தியுடன் ஒரு அபூர்வ ஜோதி போல் இருந்தார் அவர். அவரது திருமேனி இளைத்து இருந்தும், சந்தனம் போல் விகசித்தது.

திருமுடிகள் எல்லாம் தும்பையாய் நரைத்திருந்தும், அதில் ஒரு பொன் ஒளி நிகழ்ந்தது.

திருக்கண்களைப் பார்த்தால் ஜீவ களை மட்டுமின்றி ஒரு ஆன்ம களை தோன்றிப் பார்ப்பவர் களை எல்லாம் பரவசமடையச் செய்தது.

வான் உலகில் வாழும் ஒரு தேவரே இங்கே மண்ணுலகில் வந்திருக்கிறார் என்று சொல்லும்படி, அவர் திருத் தோற்றத்திலேயே ஒரு அதிசயமான தெய்வ சான்னித்தியம் திகழ்ந்து கொண்டிருந்தது.

அவர் முன்னால் விழுந்து எழுந்த கோபணா மெய்சிலிர்க்க, விதிர் விதிக்க, மெள்ள நிமிர்ந்து, தேசிகரின் திருக்கண்களைக் கண்டு அந்தப் பார்வையின் ஸ்பர்சத்தினாலேயே உடம்பெல்லாம் நடுக்கம் கொள்ள, குரல் தழதழத்து, "சுவாமி!" என்றார்.

தேசிகரும் தமது முறுவல் திருவாயைத் திறந்து, "கோபணா! வேளை வந்ததுவோ?" என்று திருச்சொற்களைக் கூற,

"ஆமாம், சுவாமி! ஆமாம் சுவாமி!" என்று தட்டுத் தடுமாறிக் கூறினார் கோபணா.

"நல்லது கோபணா! திருவரங்கத் திருவை நீ பெறுவாய்! அதனால் வற்றாத ஒரு செல்வத்தை உன் நாடு அடையப் போகிறது. இனி எந்த யவனர்களாலும் இது போன்ற ஒரு பெரும் துக்கம் அரங்கன் கோவிலுக்குச் சம்பவிக்கப் போவதில்லை. நாடுகளும், ஊர்களும், கோவில்களும் இனி செழித்து வளரும். கோபணா! அரங்கன் மீது பாரத்தைப் போட்டு, அஷ்டாட்சரத்தை ஜபித்துக் கொண்டு, தைரியமாகப் போரில் இறங்கு! வெற்றி சித்திக்கும்!" என்று திருவாய் மலர்ந்து அருளினார்.

கோபணா அதைக் கேட்டு மெய்யுருகி நின்று, "சுவாமி! அடியேன் மனத்தில் ஒரு கிலேசம் இருந்து வருகிறது. மதுரை மீது போர் தொடுப்பதில் அடியேன் காலம் கடத்திவிட்டேனோ என்று அவ்வப்போது ஐயுற்று மனத்தில் நைகின்றேன். இந்த ஐயங்கள் என் ஆன்மாவையே அரிக்கின்றன. தாங்கள்தான் அடியேனுக்குப் புத்தி கூற வேண்டும்" என்று இறைஞ்சினார்.

தேசிகரின் திருக்கண்களிலேயே இப்போது முறுவல் தவழ்ந்தது.

"கோபணா!" என்று திருவாய் மலர்ந்த அவர், "கீதையில் பகவான் கூறியதை நீ அறிந்ததில்லையோ? விசுவரூபம் எடுத்த போது அவர் கடைவாயிலே எதிரிகள் ஏற்கெனவே அரைபட்டிருப்பதை அர்ச்சுன னுக்குப் பகவான் காட்டியதின் உள் அர்த்தம் என்ன? அவர் நம்மை ஒரு கருவியாக வைத்து ஒரு காரியத்தைச் செய்ய வைக்கிறார். ஆனால் உண்மையில் காரியத்தை அவரே செய்து முடிக்கிறார். அது போல இங்கேயும் பகவான் உன்னைக் கருவியாகக் கொண்டு காரியத்தில் இறங்கிவிட்டார். உன்னால் இது நாள் வரை செய்ய முடியவில்லை என்று மனத்தில் தாபப்படாதே! பகவான் அதைப் பற்றி தக்க தருணம் என்று நினைக்கவில்லை என்று மனத்தை சமாதானம் செய்து கொள்!" என்று கனீர் என்னும் குரலில் கூறினார்.

அவரின் அந்தத் திருமொழிகளைக் கேட்டதுமே கோபணாவின் நெஞ்சில் ஒரு குளிர்ச்சி ஏற்பட்டது போலிருந்தது.

இத்தனை நாளும் அவரை விரட்டிக் கொண்டிருந்த ஒரு தாபம் திடீரென்று கரைந்தது போல் தோன்றியது.

அப்படியே, "சுவாமி!" என்று தழதழப்புடன் கூவி அவரது பாதார விந்தங்களில் விழுந்தார் கோபணா.

"சுவாமி! தங்களால் இந்த நாடு பாக்கியம் பெறுகிறது. நாங்களும் பாக்கியம் பெறுகிறோம்" என்று கண்ணீர் சொரியக் கூறி,

பல முறை தண்டனிட்டுக் கடைசியில் விடைபெற்றார் அவர்.

பரிதாபி (கி.பி.1371) வருடம் ஜனித்த சித்திரை மாதக் கடைசியில் இரு திசைகளிலிருந்து இருபடைகள் புறப்பட்டன.

வடக்கே காஞ்சிபுரத்திலிருந்து ஒரு படையும், வடமேற்கே சத்தியமங்கலத்திலிருந்து ஒரு படையும் மதுரை நோக்கித் தனித்தனியாகப் புறப்பட்டன.

விஜயநகர ராஜ்யமே அதுவரை காணாத ஒரு உற்சாகமுடன் இந்தப் படைகள் புறப்பட்டன.

அதனிடையே காணப்பட்ட உத்வேகமும் ஆர்ப்பரிப்பும் அளவிறந்ததாய் இருந்தது.

காஞ்சிபுரப் பகுதிப் படையில் கோபணாவும், கம்பணரும் இருந்தார்கள்.

அந்தப் படை ஒரே நாளில் பிரயாணம் செய்து சுல்தானின் ராஜ்யத்தை மிதித்தது.

24

சுல்தானிய ராஜ்யத்தின் மண்ணை மிதித்ததும் கம்பணரும் கோபணாவும் பூஜை நடத்தினார்கள்.

பிறகு வீர கோஷங்கள் முழங்கிக் கொண்டு அந்த ராஜ்யத்துள் நுழைந்தார்கள்.

ராஜ்யத்தின் முதல் துர்க்கம் ஒரு நாழிகை தூரத்தில் இருந்தது. அதில் இருந்த இருபது சுல்தானியர்கள் அதில் விஜயநகரப் படையைக் கண்டதும் கீழே இறங்கி ஓட்டம் பிடித்தார்கள்.

அந்த மண் துர்க்கத்தின் மீது முதன் முறையாக வராகக் கொடியைப் பறக்க விட்டு விட்டு,

அடுத்தாற் போலிருந்த முதல் கிராமத்தில் கம்பணரும், கோபணாவும் நுழைந்தார்கள்.

ஊர் ஜனங்களுக்குத் தங்கள் கண்களை நம்ப முடியவில்லை. இந்நாட்டு மன்னர்கள் இப்படித் தைரியமாக சுல்தான் ராஜ்யத்திற்குள் வந்து விட்டார்களா என்று ஆச்சரியப்பட்டார்கள்.

உற்சாகம் பிறந்து பக்கத்திலுள்ள காட்டிற்குச் சென்று அங்கு ஒளிந்து வாழ்ந்த மக்களை அழைத்து வந்தார்கள்.

மக்கள் எல்லாம் திரண்டு தாரை, தப்படைகளை அதிர்த்து கம்பணரை வரவேற்றார்கள்.

பெண்களில் பெரும்பாலோர் ஆரத்தி எடுப்பது எப்படி என்பது கூடத் தெரியாமல் இருந்தார்கள். 48 வருட அந்நியர் ஆட்சியில் அவர்களது பழக்க வழக்கங்கள் நிறைய அழிந்து விட்டிருந்தன. வயதில் முதிர்ந்தவர்கள் அவர்களுக்கு அந்த முறைகளை முதன் முறையாகக் கற்றுக் கொடுத்தார்கள்.

உற்சாகம் பொங்கிய ஜனங்களிடம் கோபணா, “இனி பயமின்றி வாழுங்கள். உங்கள் வழிபாடுகளைக் கவலையில்லாமல் நடத்துங்கள்!” என்று கூறினார்.

“கம்பணர் வாழ்க! கோபணா வாழ்க! விஜயநகரம் வாழ்க!” என்று எங்கும் கோஷங்கள் எழுந்தன.

முதல் ஊரைப் பிடித்தவுடன் திருவரங்கப் பெருமாளை செஞ்சியிலிருந்து திருவரங்கம் வரை எழுந்தருள வைத்து தமக்குப் பின்னாலேயே அழைத்துச் செல்ல வேண்டும் என்பது கோபணாவின் ஆசை! அதற்காக இரண்டு ஆட்களை அனுப்பி வைக்க மறுநாள் மதிய வேளைக்குள் திருவரங்கன் சிங்கவரத்திலிருந்து கோலாகலமாய் வந்து சேர்ந்தார்.

மன்னரும் சைனியாதிபதியும் உணர்ச்சி வசமாகி அவரது சந்நிதி முன் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து அரங்கனுக்கு வேண்டிய உபசாரங்களை எல்லாம் செய்யத் தொடங்கினார்கள்.

கிராம ஜனங்கள் எல்லோரும் பரவசரானார்கள். அவர்களில் ஐம்பது வயதுக்கு உள்ளானவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் முதன் முறையாக சுவாமிக்கு வழிபாடுகள் நடத்தப்படுவதைப் பார்த்தார்கள். மனங்களில் அறியாத ஆனந்தத்தை அனுபவித்தார்கள்.

அறுபதுக்கு மேல் வயதானவர்கள் தங்கள் சிறுபிள்ளைப் பருவத்தில் இதுபோன்ற வழிபாடுகளைப் பார்த்தவர்கள். பலருக்கு அந்த ஞாபகம் கனவு போல் போய்விட்டது. எனவே இப்போது வாழ்க்கையில் காணக் கிடைக்காததைக் காண்பது போல் சந்தோஷப்பட்டார்கள். கம்பண ராஜாவைப் போய் ஊர்ப் பெரியவர்கள் வீழ்ந்து வணங்கி காணிக்கைகள் கொடுத்துவிட்டு தங்கள் இளைஞர்களை யுத்தத்திற்கு அனுப்புவதாகக் கூறினார்கள். கோபணாவுக்கு அந்தக் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவர் கண்களில் நீர் துளிர்த்தது. கம்பணரிடம் தனியாகப் போய், “மன்னவ, நாம் ஒரு வகையில் தப்புக் கணக்குப் போட்டு விட்டோம்!” என்று கோபணா கூறினார்.

“எந்த வகையில்?” என்று கேட்டார் கம்பணர்.

“முப்பதினாயிரம் படையோடு புறப்பட்டிருக் கிறோம். எதிரிகளின் கண்ணனூர்ப் படையே ஒரு லட்சம் இருக்கிறது என்று நினைத்து சிறிது கவலைப்பட்டோம். நமக்கு அரங்கன் வழி காண்பித்துவிட்டார் பார்த்தீர்களா?” என்றார் கோபணா.

"இந்த கிராம இளைஞர்கள் நூறு பேர் தானே இருப்பார்கள்?" என்றார் கம்பணர்.

"அப்படி இல்லையே! போகும் கிராமம் எல்லாம் படைகளைத் திரட்டலாமே நாம்! தவிர நம் வழியில் இல்லாத பிரதேசங்களுக்கும் ஆட்கள் அனுப்புவோம். எதிரியின் தேசத்திலேயே படை திரட்டுவோம்!" என்றார் கோபணா.

மறுநாள் காலையில் கம்பணரும், கோபணாவும் ஊர் ஜனங்களிடம் விடைபெற்று புறப்பட்டார்கள்.

முன்னே செல்லும் மலை இனத்துக் காவல்படையினர் கம்பணர் கோபணாக்களின் வருகையை அறிவித்துக் கொண்டே போய் விட்டபடியால் போகுமிடமெல்லாம் மக்கள் ஆரவாரத்தோடு நின்று அவர்களை வரவேற்க ஆரம்பித்தார்கள்.

தமது மண்ணுக்கும் பண்பாட்டுக்கும் உரித்த ஒரு மன்னர் ஒருவரைப் பார்ப்பதற்கு அவர்களுக்குச் சந்தோஷமாக இருந்தது.

படைக்கு ஆட்களைக் கொடுப்பதில் இருந்து வேல், வாள் முதலிய உபகரணங்களை கொடுப்பதிலும், பொன் பொருள் சேகரித்துக் கொடுப்பதிலும் ஈடுபட்டார்கள்.

அரங்கப் பெருமாளும் படைகளுக்குப் பின்னாலேயே வந்து கொண்டிருந்ததால் மக்களின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

நான்காம் நாள் காலையில் விஜயநகரப் படைகள் கண்ணனூரை (தற்கால சமயபுரம்) நெருங்கிவிட்டன.

அதே நேரத்தில் பிரதானி சோமப்பரின் தலைமையில் சத்தியமங்கலத்திலிருந்து புறப்பட்ட

படையும் வழியில் கோலாகலமான வரவேற்புகளைப் பெற்றுக் கொண்டு கண்ணனூருக்கு மேற்கே ஒரு நாழிகை தூரத்தில் வந்து நின்றது.

இரு படைகளும் ஒற்றர்களை அனுப்பி தங்கள் தங்கள் பரஸ்பர இடங்களைத் தெரிவித்துக் கொண்டன.

இனி இந்தப் படைகள் சிறிது நகர்ந்தால் கூட யுத்தந்தான்.

ஆனால் அவைகள் நகரவில்லை.

ஒரு வசதியான இடத்தில் படைகளை வரிசைகளாக வகுத்து கோபணா நிறுத்தியிருந்தார். அவருக்கு ஒரே ஒரு கவலை. கண்ணனூர்க் கோட்டைக்குள் ஐம்பதினாயிரம் பேர்கள் கொண்ட யவனப்படை இருந்தது. கோட்டைக்கு வெளியே யவனரல்லாத இதரப் படைகள் ஐம்பதினாயிரம் பேரோடு இருந்தது. இந்த இரண்டு படைகளும் ஒன்று சேர்ந்து தம்மை எதிர்க்க வந்துவிடக் கூடாது என்பதுதான் அவரது கவலை.

இப்படிச் சேர்வதைத் தவிர்ப்பதற்காக ஒரு ராஜதந்திரம் செய்திருந்தார்.

வல்லபனையும், தத்தனையும் ஒற்றர்களாக அனுப்பி இருந்தார். அவர்களுக்குப் பல முக்கிய அலுவல்களைக் கொடுத்திருந்தார்.

காரியங்கள் முடிந்ததும் அவர்கள் திரும்பி வந்து அவரிடம் செய்தி கூற வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

இதுவரை அவர் சொல்படி எல்லாம் நடந்திருந்தால், இதற்குள் அந்த இளைஞர்கள் அவரிடம் வந்திருக்க வேண்டும்.

அவர்கள் வரவில்லை! எனவே அவருக்குப் பெரும் கவலை ஏற்பட்டது.

வழியில் அவர்களுக்கு ஏதாவது நிகழ்ந்திருக்குமா அல்லது தமது திட்டம் நிறைவேறாமல் வேறு ஏதாவது இடையூறுகள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்குமா?

என்ன காரணம் தெரியவில்லையே!

ஒரு பெரும் படையோடு இங்கே வந்து நிற்கும் வேளையில் எந்தச் செய்தியும் வராமல் இருக்கிறதே! இது போல் சோதனை இருக்குமா என்று நினைத்தார்.

மேலும் ஒரு நாள் ஓடியது.

இரண்டு நாட்களும் ஓடிவிட்டன.

கோபணாவுக்கு பெரிய தவிப்பு ஏற்பட்டது. கம்பணர் அவரிடம் வந்து. "கோபணா! இனி என்ன செய்வோம்?" என்று கேட்டார். அரசர் முகத்திலும் கவலைக்குறிகள் தோன்ற ஆரம்பித் திருந்தன.

"இல்லை மன்னவ! இரண்டு இளைஞர்களும் திறமை வாய்ந்தவர்கள். நிச்சயம் வந்து விடுவார்கள். காரணம் ஏதோ இருக்க வேண்டும்!" என்றார் கோபணா.

இன்னும் ஒரு நாள் ஓடியது. படைகளின் கடைசியில் வந்து கொண்டிருந்த அந்தப்புர பகுதியும் அதற்குள் வந்து சேர்ந்துவிட்டது. பெண்கள் வீராங்கனைகளாகக் குதிரைகளில் வந்து இறங்கினார்கள். அவர்களுக்கு நாயகமாக விளங்கிய கம்பணரின் மனைவி கங்காதேவியும் வந்து இறங்கி விட்டாள்.

மன்னர் யுத்த களத்திற்குப் போனால் அவரைத் தொடர்ந்து மனைவிகளும் செல்வது அந்நாளின் வழக்கமாக இருந்தது. வசதிக் குறைவுகள் இருக்குமானால் தான் ராணிகள் போகாமல் இருப்பார்கள்.

இந்தப் படை எடுப்பின் போது அரசி கங்காதேவி தானும் அவசியம் வரப் போவதாகக் கூறிவிட்டிருந்தாள்.

மன்னரும் அதைத் தடை செய்யவில்லை.

ராணி கங்காதேவி இப்போது கம்பணரிடம் வந்து. "சுவாமி! என் இடது கண்களும் தோள்களும் துடிக்கின்றன. நல்ல சகுனம்! ஏன் தாமதிக்கிறீர்கள்? கோட்டையை நோக்கிப் போவதுதானே? ஏன் யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"கங்கா! செய்தி வர வேண்டும். ஒற்றுச் செய்தி! காத்துக் கொண்டிருக்கிறோம்!" என்றார் கம்பணர்.

அவர் அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பின்னால் வெகு தூரத்தில் சின்னங்கள் ஊதும் ஒலி கேட்டது. தீவர்த்திகள் புகையைக் கக்கிக் கொண்டு வருவது தெரிந்தது.

"கோபண சுவாமி!" என்றார் கம்பணர். "அரங்கரும் வந்துவிட்டார். பரிவாரங்கள் எத்தனை நாட்கள்தான் பின்னால் காத்திருப்பார்கள்?" என்றார் கம்பணர்.

கோபணா யோசித்துக் கொண்டே நின்றார். அவர் மனத்தில் எத்தனையோ சிந்தனைகள் ஓடின. இப்போது என்ன முடிவெடுக்க வேண்டும்? என்ன முடிவு எடுத்தால் என்ன நடக்கும்? எல்லாம் நல்லதாகவே முடியுமா?

குனிந்தவாறே யோசித்தார் அவர். பிறகு சடேரென்று திரும்பினார். அரங்கன் வந்து

கொண்டிருக்கும் திசை நோக்கி விரைவாகப் போக ஆரம்பித்தார். ஒரே தீவிரமுடனும் வேட்கையுடனும் வேகமாக அவர் போய்க் கொண்டிருந்தார்.

அரங்கன் வெகு தூரத்தில் வந்து கொண்டு இருந்ததால் அவரை அடைய கால் நாழிகையாயிற்று. பாதரட்சைகள் ஏதும் இல்லாமல் வெறும் பாதங்களுடன் கல்லிலும், குழியிலும் நடந்து சென்று, அரங்கனின் பல்லக்கு முன்னால் நின்று, "ரங்கா!" என்று சொல்லி மண்டியிட்டுச் சரணம் அடைந்தார்.

"அரங்கா! உம்மைத் திருவரங்கம் கொண்டு சேர்ப்பதாய் ஒரு சபதம் செய்துவிட்டு இவ்விதம் ஒரு இக்கட்டான நிலையில் தவிக்கிறேனே! இந்த அடியவனின் நிலையை நீ அறியவில்லையோ! உம்மையும் இப்படி ஊரில்லாக் காட்டிலே கொண்டு நிறுத்தியிருக்கிறேனே! இன்னமும் உமது காட்டுவாசம் தீரவில்லையோ! அரங்கா! அரங்கா! எனக்கு ஒரு வழி அருளுவாய்!" என்று நெக்குருகப் பிரார்த்தனை செய்தார்.

கண்ணீர் ததும்பிய கண்களுடன் அரங்கனை நிமிர்ந்து பார்த்தார்.

யோகத்திலிருப்பான் போல் பொலிந்த அரங்கனது திருமுகம் இந்தக் கணத்தில் விகசித்துச் சுடர்ப்பது போல் அவருக்குத் தோன்றியது.

குமிழ் அதரமுள்ள வாயில் ஒரு புன்னகை மெள்ள முற்றி அழகு சிந்துவதுபோல் அவருக்குத் தோன்றியது.

அரங்கன் இப்போது விக்கிரமாகவே அவருக்குப் படவில்லை. அதற்கு மாறாக அவர் குளிர்ந்து சான்னித்தியம் நிறைந்த ஒரு தெய்வ உருவமாகவே தோன்றினார்.

கோபணாவின் அகக் கண்ணில் இந்த உருவம் தோன்றியிருந்தாலும் சரி, அல்லது புறக்கண்ணில் தோன்றியிருந்தாலும் சரி, அது அவர் மனத்தில் குளுமை நிரம்பிய ஒரு மகத்தான அமைதியைக் கொடுப்பதாக இருந்தது.

அதுவரை குழப்பமும், கொந்தளிப்பும் கொண்டிருந்த அவர் எண்ணங்கள் இப்போது சீராகப் படிந்து மெள்ள மெள்ள ஒரு அமைதியில் ஆழ்வது போல் இருந்தது.

அவர் உடலில் ஏதோ புதுசக்தி பிரவகித்து மயிர்க் கால்களிலும் கூட நிரவி ஓடுவது போலிருந்தது.

ஆனந்த பாஷ்பமுடன் எழுந்தார் அவர்.

அஞ்சலி செய்த கைகளுடன் அவர் திரும்பும்போது கிழக்குப் பகுதியில் அவருக்கு ஏதோ சலனமிடுவது தெரிந்தது.

திடுக்கிட்டு அந்தத் திசையை உற்று நோக்கினார்.

இது ஏன் இத்தனை நேரமும் கண்ணில் படவில்லை?

அரங்கன் இருக்கும் மேட்டில் ஏறிய பிறகுதான் அந்தச் சலனம் அவர் கண்களுக்குத் தெரிந்தது. அரங்கன் தம்மை அங்கு அழைத்ததே இந்தச் சலனத்தை காட்டுவதற்குத் தானோ?

அதே திசையில் பார்த்துக் கொண்டிருந்தார் கோபணார்.

மரம் நெருங்கிப் படராத அந்தப் பகுதியில், புல்லும் புதர்களும் நின்றிருந்த தரையில் ஏதோ ஒன்று எழும்பி எழும்பிப் படிந்து மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது.

நிச்சயமாக அந்தச் சலனம் அவர் திசை நோக்கி வருகிறது என்பதை அறிந்ததும், அதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்று யோசித்த கோபணா, திடீரென்று அந்தத் திசையை நோக்கிப் போக ஆரம்பித்தார்.

முதலில் நிச்சயமில்லாமல் சிறிது தூரம் நடந்தவர் பிறகு வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

கால் முகூர்த்தம் ஓடியிருக்கும்.

சலனத்தை நெருங்க நெருங்க அவருக்கு ஒரு ஆச்சரியம் தோன்றிக் கொண்டிருந்தது.

அந்தச் சலனம் ஒரு மனித உருவமாகத் தெரிந்தது.

அந்த உருவம் காலால் நடக்காமல் தரையில் ஊர்ந்து கொண்டே வருவது போலிருந்தது.

என்ன காரணம் இருக்கும்?

யாராக இருக்கும்?

இப்படிப் பல யோசனைகள் செய்த கோபணா வெகு வேகமாகத் தாவி நடக்க. . . .

வெகு சீக்கிரத்தில் அந்த ஊர்கிற மனிதர் அருகில் இருந்தார்.

உருவத்தைப் பார்த்ததும் கோபணாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அவர் ஒரு வைணவர்.

அவரது கால்கள் இரண்டும் ரண காயப்படுத்தப் பட்டிருந்தன.

அவைகளை உபயோகிக்க முடியாமல்தான் அவர் ஊர்ந்து வந்து கொண்டிருந்தார்.

அப்படி ஊர்ந்ததால் அவர் மேனி மீது முள்ளும் கற்களும் குத்தி அங்கங்கே ரணமாக மாறி இருந்தன. வெகு தூரமும், வெகு நேரமும் அவர் அப்படி ஊர்ந்து ஊர்ந்து வந்திருந்ததால், களைப்பும், சோர்வும் அவரை வெகுவாகப் பீடித்திருந்தன. மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கப் பல்லைக் கடித்தவாறு அவர் தம் கைகளாலேயே ஊர்ந்து கொண்டிருந்தார். கால்கள் சுரணையற்றவைபோல் பின்னால் நகர்ந்து வந்து கொண்டிருந்தன.

"சுவாமி! தாங்கள் யார்? ஏன் இப்படி ஊர்கிறீர்கள்?" என்று கேட்டார் கோபணா.

ஆசுவாசத்தை சிறிது சிறிதாகப் பெற்ற அந்த வைணவர் மெதுவாக நிமிர்ந்து பார்த்து, "அடியேனது பெயர் கிருஷ்ணராஜ உத்தம நம்பி! கோபணா சுவாமியை நான் சீக்கிரம் பார்க்க வேண்டும்!" என்று கூறினார்.

அதிசயமடைந்த கோபணா, அவரை நோக்கி, "சுவாமி! அடியேன்தான் கோபணா! என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"அப்படியா?" என்று ஆச்சரியத்துடன் கூறி கிருஷ்ண ராஜ உத்தம நம்பி, "இதுவும் அரங்கன் செயல்தான். சுவாமி! வல்லபன் செய்தி அனுப்பித்தார். தாங்கள் கோட்டையைத் தாக்கலாம்!" என்று உரக்கக் கூவினார்.

கோபணாவுக்கு ஒரு மின்னல் பாய்வது போல் இருந்தது.

"சுவாமி! சுவாமி! இந்தச் செய்திக்காகத்தான் நான் காத்துக் கொண்டிருக்கிறேன். தாங்கள் யார்? எப்படி இங்கே வந்தீர்கள்? வல்லபன் என்னென்ன சொன்னான்?" என்று பரபரப்புடன் கேட்டார் கோபணா.

உத்தம நம்பி நீண்ட மூச்சு விட்டார்.

"கோபணா சுவாமி!. . . என்னால் அதிகம் பேச முடியவில்லை. . . எல்லாவற்றையும் மெதுவாகச் சொல்கிறேன். . . இப்போது. . அவசரம்.. தாங்கள் படை எடுக்க உத்தரவிடுங்கள். நான் மற்றவை. . . பின்னால் சொல்கிறேன்" என்று இழைக்க . . இழைக்கக் கூறினார்.

"சுவாமி! நல்லது நான் உத்திரவிடுகிறேன். தாங்கள் இங்கேயே தயை செய்து இருங்கள்! தங்களுக்கு ஒரு பல்லக்கு அனுப்புகிறேன்!" என்று கூறிவிட்டு கோபணா ஒரே வேகமாய் மேட்டு நிலம் நோக்கி ஓட ஆரம்பித்தார்.

அவர் போன அரை நாழிகையில் படை எடுப்பதற்கான எக்காளங்களும், முரசுகளும், துந்துபிகளும் நகராக்களும் பயங்கரமாய் முழங்க ஆரம்பித்தன.

25

விஜயநகர சேனைகள் கொதித்துக் கொண்டு முன்னால் சென்றன. கவசம் தரித்த குதிரைகள் பைசாசங்கள் போலத் தென்பட்டன. அவை மீது தோற் கவசங்கள் தரித்த வீரர்கள் விரித்த வில்களுடன் அமர்ந்திருந்தார்கள்.

யானைகளின் தந்தங்களில் கூரிய கத்திகள் ஒரே நீட்டத்தில் கட்டப்பட்டிருந்தன. அவைகளின் அம்பாரங்களில் எட்டெட்டு வீரர்கள் வில்களுடன் அமர்ந்திருந்தார்கள். காலாட்கள் கையில் வில்லும் வாளும் வைத்திருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் கவசம் அணியவில்லை. அதற்கு மாறாக உடம்பெல்லாம் எண்ணெய் பூசியிருந்தார்கள்.

ஓ! என்ற பேரிரைச்சலுடனும், யானைகளின் கடூரமான பிளிறல்களுடன்.. "ரங்கா! ரங்கா!" என்று ஒரு பக்தி மூக்கமான குரலுடனும் சேனைகள் முன்னேறிச் சென்றன.

கண்ணனூர்க் கோட்டையின் கீழ் வசத்தில் யவனரல்லாதரின் ஐம்பதினாயிரப் படை இருந்தது.

இந்தப் படையுடன்தான் முதன் முதலில் மோதல் ஏற்பட்டது.

மேலே ஆகாயத்தை நோக்கி அம்புகள் விட்டு இரு சேனைகளும் யுத்தத்திற்கான ஆயத்தத்தைத் தெரிவித்த தும், போர் ஆரம்பமாயிற்று.

தர்மத்திற்காகப் போரிடுகிறோம், சொந்த மண்ணை மீட்பதற்காகப் போர் புரிகிறோம் என்ற எண்ணங்கள் விஜயநகரப் படையினருக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது. அரங்கரே படையோடு வந்திருக்கிறார் என்ற அதிசய நிகழ்ச்சிகூடப் புதிய உத்வேகத்தை அவர்களுக்கு ஊக்குவித்தது.

பிரதானிகள் சாளுவமங்கு, ஆனைகுந்தி விட்டப்பர், மாரய்யா நாயகர் ஆகியவர்கள் குதிரைகளில் ஏறி அங்கங்கே படைகளுக்கு ஆணையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

சர்வ சைனியாதிபதி கோபணா மின்னல்போல் படையினரிடையே இயங்கிக் கொண்டிருந்தார்.

முதல் நாழிகையில் யுத்தம் இரு தரத்தாருக்கும் சமமாக நடந்தது. இரு பக்கங்களிலும் சேதங்கள் விளைந்தன. இந்த நேரத்தில் அதிகம் கவலைப்பட்டவர் கோபணாதான்!. . . அவர் கொண்டு வந்திருக்கும் படையோ எண்ணிக்கையில் குறைவு! எனவே சம அளவுச் சேதம் நேர்ந்தால்கூடத் தன் படையைத்தான் அது பாதிக்கும் என்று நம்பினார்.

அவரும் பிரதானிகளும் யோசனை நடத்தினார்கள்.

மேலும் இரு நாழிகை நேரம் யுத்தத்தை நடத்துவது என்றும், அதன்பின்னர் யோசிப்பது என்றும் முடிவு கொண்டார்கள்.

இரு நாழிகையும் போய்விட்டது. எதிரியின் மீது கனிசமான சேதத்தை ஏற்படுத்த முடியவில்லை. இதை நினைத்து கோபணா கவலைப்படும்போது, ஒரு நிகழ்ச்சி நடந்தது.

சத்தியமங்கலத்திலிருந்து சோமப்பர் துணையோடு வந்த படை மேற்கு வழியே கோட்டையைச் சூழ்ந்தது. வரும் வழியில் பல சிற்றாறுகளைக் கடக்க வேண்டி வந்ததால் தாமதமாகிவிட்டது. ஆனால் அந்தத் தாமதம் முதலில் கோபணாவுக்குக் கவலையைக் கொடுத்தாலும், பின்னர் அதுவே பெருத்த நன்மையாகப் போய்விட்டது.

திடீரென்று தங்கள் பின்னால் பெரும்படை ஒன்று வருவதைக் கண்டதும், எதிரிப் படையார் திகைத்துப் போனார்கள். உண்மையில் அது சிறிய படையேயானாலும், எதிரியாட்களுக்கு அது பெரிய படை போல் தென்பட்டது.

பயத்தில் எதிரியின் முதற் பிரிவு களத்தை விட்டு ஓட ஆரம்பித்தது. அதன் அதிபதி கொல்லப்பட்டு அவரது கொடியும் பறிக்கப்பட்டு விட்டது.

ஒரு பிரிவு ஓடுவதைப் பார்த்ததும், பீதி இதர பிரிவுகளுக்குப் பரவ ஆரம்பித்தது.

அவ்வளவுதான்! எதிரிப் படை முழுவதுமே பயத்தில் கொந்தளிக்க ஆரம்பித்தது. வீரர்கள் களம்விட்டு ஓட ஆரம்பித்தார்கள். விஜயநகரத்தார் அவர்களை விடவில்லை. வேட்டையாடுவதுபோல் விரட்டிச் சென்றார்கள். கும்பல் கும்பலாகப் பிடித்து வந்தார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் பிடிபட்டார்கள். குதிரைகளையும், ஆயுதங்களையும் அவர்களிடம் இருந்து பறித்துத் தங்கள் கூடார வாயிலில் விஜயநகர வீரர்கள் குவித்தார்கள். பிடிபட்ட வீரர்களைச் சுற்றிப் பலத்த காவல் போட்டார்கள். மாலை நேரம் ஆவதற்குள் யுத்தகளம் எங்கும் பயத்துடன் கூடிய அமைதி கூடிவிட்டது.

வெற்றி அடைந்த பெருமிதத்தில் கோபணா, தம் வீரர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கும்போது பிடிப்பட்ட எதிரித் தலைவர்களில் ஐவர் பலத்த பாதுகாப்புடன் வந்தார்கள்.

“பிரபோ! எங்களுக்கு உயிர் பிச்சை அருள வேண்டும். எங்கள் பிரார்த்தனையையும் செவி சாய்க்க வேண்டும். நாங்கள் தங்கள் படையுடன் ஒத்துழைக்க விரும்புகிறோம். அனுமதி வேண்டும்” என்று கூறினார்கள்.

சிரித்தார் கோபணா.

“உங்களை நம்புவதா? எங்களுக்கு உங்கள் உதவியில் விருப்பமில்லை!” என்றார்.

“பிரபோ!” என்று சொல்லி முன்னால் வந்தான் ஒருவன். “நாங்கள் எல்லோரும் இந்த மண்ணில் பிறந்தவர்கள். பலாத்காரமாக மதம் மாற்றப்பட்டவர்கள். வேறு வழியின்றி எங்கள் பெற்றோர்கள் காலத்திலிருந்து இந்த சுல்தானுக்கு உழைத்து விட்டோம். இதைத் தவிர எங்களுக்கு வேறு வழி எதுவும் தோன்றியதில்லை. இப்போது எங்கள் சொந்த மன்னர்களே இந்த மண்ணில் புகுந்து விட்டதை அறிந்ததும் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இந்தத் தருணத்தில் நாங்கள் எல்லோருமே எங்களது பழைய வேத மார்க்கத்திற்குத் திரும்ப விரும்புகிறோம்.

எங்களை ஏற்றுக் கொண்டு எங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சியைத் தாருங்கள்!" என்று கூறினான்.

"நல்லது" என்றார் கோபணா. "நீங்கள் சொல்வதையெல்லாம் ஏற்றுக் கொள்கிறேன். உங்களை எப்படி நம்புவது?" என்று கேட்டார். ஏற்கெனவே இது போன்ற விஷயத்தில் வீர வல்லாளர் ஏமாந்ததை அவர் நன்கு அறிந்திருந்தார்.

"பிரபோ!" என்றான் ஒருவன். "எங்கள் பேச்சில் ஐயம் வேண்டாம். தாங்கள் எங்களுக்கு உத்தரவு தாருங்கள். நாங்கள் தங்கள் கட்சியில் போர் புரிகிறோம். யவனர்களைக் கொன்று குவிக்கிறோம். அதுவே எங்கள் விசுவாசத்தைக் காட்டும்!" என்று கூறினான்.

கோபணா அப்போதும் அவர்களை நம்பவில்லை.

"நீங்கள் அதிபதிகள் எத்தனை பேர் எங்களிடம் பிடிப்பட்டு இருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"நூறு பேர்கள் இருப்போம்!" என்றான் வந்தவன்.

"இவர்களில் பாதிப் பேர்களை எம்மிடம் பணயமாக வையுங்கள்! மற்றவர்கள் சண்டையிடுங்கள்! நீங்கள் துரோகம் செய்வது தெரிந்தால் இவர்களைக் கொன்று விடுவோம்!" என்றார் கோபணா.

"நல்லது நாங்கள் சம்மதிக்கிறோம்" என்றார்கள் வந்தவர்கள்.

அவர்களைப் போக விடுத்துவிட்டு,

இரவு ஒற்றர்களை ஏவி அவர்களைக் கண்காணிக்கும்படிக் கட்டளை இட்டார் கோபணா.

அன்று இரவு போரின் முதல் கட்டம் முடிந்துவிட்டதால், பிரதானிகளோடு ஆலோசனை நடத்திவிட்டு, கடைசியில் கிருஷ்ணராஜ உத்தம நம்பியை கோபணா பார்க்கப் போனார்.

உத்தம நம்பியை ஒரு கூடாரத்தில் கிடத்தி இருந்தார்கள். அரச வைத்தியர் அவருக்குச் சிகிச்சை செய்திருந்ததால் அவரது உபாதைகள் வெகுவாகக் குறைந்திருந்தன.

கோபணாவைக் கண்டதும் உத்தமநம்பி, படுக்கை யிலிருந்தே கை கூப்பினார்.

கோபணா வேண்டிக் கொண்டதும் அவர் தம் வரலாற்றைக் கூறினார்.

"சுவாமி! தாங்கள் என்னை அறிந்திருக்க மாட்டீர்கள். நாங்கள் *பெரியாழ்வாரின் வம்சத்தினர்! அந்தப் புண்ணியரும் அவரது பிரசித்தி பெற்ற தெய்வ பக்தை ஆண்டாளும் எம் முன்னோர்கள்! அவர்கள் தொடக்கமாகப் பல பெரிய புண்ணிய ஆத்மாக்கள் எம் பரம்பரையில் தோன்றி இருக்கிறார்கள். இராமாநுஜர் காலத்தில் வாழ்ந்த ஆழ்வார்கள் சரிதங்களையும் ஆசாரியர்

* ஆழ்வார் காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்ந்து வருகிற ஒரு குடும்பத்தின் வம்சாவளி நம்மவரிடையே இருப்பது அதிசயமாகும். உத்தம நம்பி குடும்பத்தாரின் வம்சாவளிதான் அத்தகைய அதிசய வம்சாவளி! பெரியாழ்வார் தொடங்கி அவரது குடும்பப் பரம்பரையில் வாழ்ந்தவர்கள் பெயர்களும், அவர்களது ஆயுட் காலங்கள் (நாட்கள் சுத்தமாக) இந்த வம்சாவளியில் குறிக்கப்பட்டுள்ளன. கிழக்கிந்திய கம்பெனி காலத்தில் வாழ்ந்த மெக்கன்ஸி என்னும் ஆங்கிலேயரால் சேகரிக்கப்பட்ட எண்ணற்ற நூல்களில் இந்த வம்சாவளியைக் கூறும் நூலும் ஒன்று! இந்த உத்தம நம்பி குடும்பத்தார் இன்றும் திருவரங்கத்தில் வாழ்ந்து வருகிறார்கள்.

சரித்திரங்களையும் முதன் முதலாக முறைப்படி எழுதிய கருட வாகனப் பண்டிதரும் எம் முன்னோர்தான். எம் வம்சத்தவர் இந்தத் திருவரங்கக் கோவிலுக்கு ஆவி, உடல், பொருள்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். கோவிலை மகோன்னதங் களுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் துருக்கர் முன்பு திருவரங்கத்தைத் தாக்கிய போது ஊரை விட்டு வெளியே போன குடும்பத்தாரில் எம் குடும்பத்தாரும் ஒன்று.

மேற்கு திசை ஊருக்குப் போய் அங்கே ஒரு தலைமுறை வாழ்ந்து விட்டோம். ஆனால் திருவரங்கத் திற்குத் திரும்ப வேண்டும் என்ற ஆசை எங்களிடம் எப்போதும் இருந்து வந்தது. சில ஆண்டுகளுக்கு முன் திருமணத்தூண் நம்பியைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்தாம் எங்களை இரகசியமாக அழகிய மணவாள கிராமத்திற்கு அழைத்து வந்தார். அது முதல் அந்தக் கிராமத்தில்தான் இருந்து வருகிறோம்.

இது எங்கள் கதை!

இதற்கு மேல் தாங்கள் ஒற்றுக்காக அனுப்பிய வல்லபனும், தத்தனும் என்ன ஆனார்கள் என்று சொல்கிறேன்.

அவர்கள் இருபது ஆட்களோடு எம் கிராமத்திற்கு வந்து ஒரு நாள் தங்கினார்கள். இரவுக்கிரவே அவர்களை காவேரியைக் கடக்கச் செய்து, தொண்டைமான் காட்டுக்குள் விட்டு விட்டு வந்தோம். தினமும் உணவுகளையும் அனுப்பி வந்தோம்.

ஆனால் தாங்கள் போட்டிருந்த திட்டப்படிச் சில காரியங்கள் நடக்கவில்லை. சுல்தான் தமது நோயோடு மதுரைக்குப் போனார். ஆனால், மதுரையை விட்டு வேறு எங்கும் போகவில்லை.

தாங்கள் படையெடுத்து வருகிறீர்கள் என்ற செய்தி இரண்டு தினங்களுக்குள் அவருக்குக் கிடைத்துவிட்டது.

போதையில் இருந்தாலும் சரியான கட்டளைகளை அவரால் கொடுக்க முடிந்தது. கண்ணனூரில் இருக்கும் யவனப் படைகளைக் கோட்டைக்கு வெளியே வருமாறும், விஜயநகரப் படைகளைத் தாக்குமாறும் கட்டளைகளைப் பிறப்பித்தார்.

அந்தக் கட்டளைகள் அடங்கிய ஓலையை எடுத்து வந்த வீரர்கள் மதுரையிலிருந்து நாம் எதிர்பார்த்த படியே தொண்டைமான் காட்டு வழியாகத்தான் கொண்டு வந்தார்கள்.

வல்லபன் தன் இருபது ஆட்களோடு அவர்களை மடக்கினான். இருபது ஆட்கள் எதிரே வரும் இருபது ஆட்களை விரட்டிவிடலாம். ஆனால் ஒருவரை விடாமல் கொல்ல முடியுமா?

அந்தச் சாதனையை வல்லபனும் அவன் ஆட்களும் செய்தார்கள். ஆனால் ஒரே ஒரு ஆள் மட்டும் தப்பிவிட்டான். சடலங்களை எண்ணியபோது தான் தெரிந்தது. இவனால் ஏதாவது அபாயம் ஏற்படும் என்று வல்லபனும் இதரர்களும் நினைத்தார்கள்.

அவன் யாரையாவது அழைத்து வருவதற்கு முன் அவர்கள் தப்பி விட நினைத்தார்கள். அவசரமாக காவேரியைக் கடந்தார்கள். அழகிய மணவாள கிராமத்திற்கு வந்தார்கள். விரைவாக ஒரு மாற்று ஓலை சித்தம் செய்தார்கள். அதில் எக்காரணம் கொண்டும் யவனப் படைகள் கண்ணனூர்க் கோட்டையை விட்டு வெளியே போகக் கூடாது என்று சுல்தான் கட்டளையிட்டது போல் எழுதி வைத்தார்கள். சுல்தானியரது இலச்சினையும்

முத்திரையும் கையில் அகப்பட்டு விட்டதால், அதை எடுத்துக் கொண்டு இரண்டு துணையோடு வல்லபனும், தத்தனும் கண்ணனூர்க் கோட்டைக்குப் புறப்பட்டார்கள். புறப்படும் போது எங்களை நோக்கி, உடனே உங்களில் யாராவது கோபணா சுவாமியைப் போய் சந்தியுங்கள்! இனிப் போர் தொடுக்கலாம். யவனர்கள் வெளியே வர மாட்டார்கள் என்று சொல்லுங்கள் என்று கூறினார்கள். அவர்கள் போனதுதான் தாமதம் திடீரென்று முப்பது சுல்தானியர்கள் எங்கள் கிராமத்தை நோக்கி வருவதை நாங்கள் பார்த்துவிட்டோம். காட்டில் வல்லபன் வாளுக்குத் தப்பிய ஒற்றன்தான் அவர்களை அழைத்து வருகிறான் என்று தெரிந்துவிட்டது.

நாங்கள் கூடி யோசித்தோம். இவர்கள் கண்ணனூருக்குப் போய்விட்டால் வல்லபன் அகப்பட்டு விடுவான். வல்லபன் செய்துள்ள ஏமாற்றுக் காரியங்களும் அம்பலமாகிவிடும். இதனால் எல்லாம் பாழாகும். ஆகவே இந்த முப்பது சுல்தானிய வீரர்களையும் கண்ணனூருக்குப் போக விடாமல் தடுப்பது எங்கள் கடமை என்று நினைத்தோம்.

எங்களுக்கு வெறி வந்துவிட்டது. பெண்டு பிள்ளைகளை வேறு கிராமத்திற்கு அனுப்பினோம். ஆண்கள் எல்லோரும் திரண்டோம். எங்களில் பலருக்கு வாள் பயிற்சியும், வில் பயிற்சியும் உண்டு. இது போன்ற ஏதாவது பிரச்னைகள் வரும் என்று திருமணத்தூண் நம்பி ஆயுத சேகரணம் பண்ணியிருந்தார். ஆகவே அந்த ஆயுதங்கள் எங்களுக்கு வசதியாகப் போய்விட்டது. ஊரில் நாங்கள் முப்பது பேர் தேறினோம். மற்ற பேர் வயதானவர்கள். ஊரைச் சுற்றி மண்சுவர் இருந்தது. அதுதான் எங்கள் கோட்டை ஆகியது. எல்லோரும் மிக ஆக்கிரோஷத்தோடு காத்திருந்தோம்.

சுல்தானியர்கள் ஆற்றைக் கடந்து வந்தார்கள். அவர்கள் எந்த வித நினைப்பும் இல்லாமல் எங்கள் மண் கோட்டை அருகில் வந்தார்கள். நாங்கள் சித்தமாக இருந்தோம். திருமணத்தூண் நம்பி கையை அசைத்ததும் சரமாரியாக வேல்களை எறிந்தோம். பதினைந்து பேர் குற்றுயிராக விழுந்துவிட்டார்கள். குதிரைகள் பெரும்பாலும் அடிப்பட்டு விட்டன.

எஞ்சிய பதினைந்து பேர் விறுவிறுவென்று வாட்களை எடுத்தார்கள். நாங்கள் மண் கோட்டையிலிருந்து கீழே குதித்தோம். நேருக்கு நேர் சண்டையிட ஆரம்பித்தோம்.

சற்றும் அவர்கள் அந்தத் தாக்குதலை எதிர்பாராததால் அவர்களை நாங்கள் சுலபமாக மடக்க முடிந்தது. பலரைக் கொன்றோம். எனினும் மிஞ்சிய மீதிப் பேர்கள் எங்களுக்குப் பெரும் பாரமாகவே தோன்றினார்கள். எங்களைவிட உக்கிரத்தோடு சண்டை செய்ய ஆரம்பித்தார்கள். நம் கட்சியில் ஒன்பது பேர் மாண்டார்கள்.

மீதிப் பேர் எல்லோருமே காயம் அடைந்தார்கள். அவர்களில் சிலர் மரண அவஸ்தையில் இருக்கிறார்கள். திருமணத்தூண் நம்பியும் அவர்களில் ஒருவர்" என்று கூறி முடித்தார் கிருஷ்ணராஜ உத்தம நம்பி.

"அப்படியா?" என்று சொல்லித் திடுக்கிட்டார் கோபணா. "அப்புறம் என்ன ஆயிற்று? சுல்தானியர்கள் தப்பி விட்டார்களா? அது ஆபத்தாயிற்றே" என்று பரபரப்புடன் கேட்டார்.

"இல்லை பிரபு. நாங்கள் விடுவோமா? எல்லோரையும் அடித்துத் தள்ளி விட்டோம். குற்றுயிர் குலையுயிர் ஆக்கிவிட்டோம். யாரும் ஒரு அங்குலம் கூட நகர முடியாது. இந்த நிலையில் நாங்களும்

ஒருவர் விடாமல் எல்லோருமே அடிபட்டு மண்ணில் கிடந்தோம். எனக்குக் காலில் வெட்டுக் காயம்! நான் கீழே கிடக்கும்போதுதான் எனக்கு ஒரு திடீர் எண்ணம் தோன்றியது. ஐயோ வல்லபன் சொன்ன செய்தியை கோபணா சுவாமிக்குப் போய்ச் சொல்ல யாரும் இல்லையே என்று நினைத்தேன். அப்போது ஒருத்தர் மட்டும் எழ முயல்வது தெரிந்தது. அவர்தான் திருமணத்தூண் நம்பி புறப்படுவதற்காக எழுந்தார். தடால் என்று விழுந்தார். விழும்போதே என்னைப் பார்த்தார். 'நம்பி எல்லோரும் உபாதைகளில் கீழே நகர முடியாமல் கிடக்கிறார்கள். கோபணா சுவாமியிடம் யாராவது விஷயத்தைச் சொல்ல வேண்டும். அவசரம் நீங்களாவது போங்கள்' என்றார். நான் ஒருத்தன்தான் சிறிதாவது நகரக் கூடியவன் நகர ஆரம்பித்தேன். ஊர்ந்து ஊர்ந்து வந்தேன். இங்கே வருவதற்குப் பாதி நாள் ஆகிவிட்டது. சுவாமி!" என்று சொல்லித் தம் கதையை முடித்தார் உத்தமநம்பி.

கோபணாவின் கண்கள் பனித்தன.

"சுவாமி தாங்கள் சொல்வது எனக்கு மகிழ்ச்சியையும் சோகத்தையும் ஒருங்கே தருகிறது. இப்போது அவர்கள் கதி என்னவாயிற்று? யாராவது அவர்களைக் கவனிக்கிறார்களா? சொல்லுங்கள்" என்றார் பரபரப்புடன்.

"அதுதான் தெரியவில்லை. நான் இங்கு வந்து விட்டேன்" என்றார் உத்தமநம்பி.

"அப்படியானால் அந்தக் காரியத்தை இதோ கவனிக்கிறேன். தாங்கள் கவலைப்படாமல் இருங்கள்!" என்று கூறி விட்டு விடை பெற்றுச் சென்றார் கோபணா.

அன்றிரவு வைத்தியர்களையும் இதர உதவி களையும் அழகிய மணவாள கிராமத்திற்கு அனுப்பி

Released by Maran's Dog. Toronto, Canada

விட்டு, கோபணா படுக்க முயன்ற போது ஜாமக் கோழி கூவ ஆரம்பித்தது.

மறுநாள் காலையில் கண்ணனூர்க் கோட்டையின் முற்றுகை ஆரம்பமாயிற்று.

கோபணா மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்தார். கோட்டையைச் சுற்றியுள்ள எல்லாப் பகுதிகளையும் கவனமாகக் கண்காணித்தார். மதுரையிலிருந்து சுல்தானின் படை இரகசியமாக வந்துவிடக் கூடாது என்பதற்காக காவேரி ஓரம் இரகசியமாக ஒரு ஐயாயிரப் படையை வைத்திருந்தார்.

சுல்தானின் பொய்க் கட்டளையை வல்லபன் கோட்டைக்குள் எடுத்துப் போயிருப்பதால், உள்ளிருந்து யவன வீரர்கள் வெளியே வந்து சண்டை செய்ய மாட்டார்கள். Released by Maran's Dog. Toronto, Canada

அதுவே கோபணாவுக்கு ஒரு அனுகூலமாகத் தோன்றியது. ஏனெனில் முற்றுகையின் மூலம் உள்ளிருப்பவர்களின் அன்றாட உணவு வகைகளுக்குப் பிரச்னை ஏற்படுத்தி விட்டால் அவர்கள் வாடி வதங்க ஆரம்பித்து விடுவார்கள். யவன வீரர்கள் அன்றாட மாமிச உணவு கிடைக்கவில்லை என்றால் கூடத் துன்பப்படுவார்கள்.

அவர்களை வாடச் செய்த பிறகு கோட்டையை உடைக்க முற்பட்டால், அதிக எதிர்ப்பு இல்லாமல் காரியம் நிறைவேறிவிடும்.

முற்றுகை இரு வாரம் நீண்டது.

ஒரு நாள் யவனரல்லாப் படைத் தலைவர்கள் (முன்பு சிறைப் பிடிக்கப்பட்டவர்கள்) கோபணாவிடம் வந்து, "சுவாமி! எங்களுக்கு அனுமதி கொடுங்கள்! நாங்கள் கோட்டை மீது ஏறி உள்ளே போகிறோம். நாங்கள் யார் என்று தெரியுமாதலால் யவன வீரர்கள்

எங்களைக் கோட்டைக்குள் வருவதற்கு அனுமதி அளிப்பார்கள். இப்படிக் கணிசமான அளவு உள்ளே போன பிறகு உள்ளிருந்து கொண்டே அவர்களைத் தாக்க ஆரம்பித்து விடுகிறோம். கோட்டைக் கதவையும் திறந்து விடுகிறோம்" என்றார்கள்.

யோசித்தார் கோபணா.

இப்போதும் அந்தப் பழைய எதிரித் தலைவர்களை நம்பலாமா என்ற யோசனை.

"ஒரு நிபந்தனை" என்றார் கோபணா.

"என்ன?" என்றார்கள் தலைவர்கள்.

"உங்களில் பாதிப் பேர்களை இங்கே நிறுத்திக் கொள்வோம். உள்ளே போனவர்கள் எங்களுக்குத் துரோகம் செய்வது தெரிந்தால் அவர்களைத் தாட்சண்யமின்றிச் சிரச்சேதம் செய்து விடுவோம்!" என்றார் கோபணா.

"சம்மதம், பிரபு!" என்று வீரத்துடன் கூறினார்கள் தலைவர்கள்.

எச்சரிக்கையுடன் அந்தத் தலைவர்களும் அவர்களது வீரர்களும் சிறு சிறு குழுக்களாகக் கோட்டை மதில் பக்கம் அனுப்பப்பட்டார்கள்.

அவர்களும் தாங்கள் இன்னார் என்று மதில் மேல் உள்ளோர்க்குக் கூறி, "தப்பித்து வந்து விட்டோம். மேலே தூக்குங்கள்!" என்று கேட்டுக் கொண்டார்கள். மதில் வீரர்களும் நூலேணி மூலமாக அவர்களை மேலே ஏற்றி உள்ளே இறக்கினார்கள்.

இந்த நிகழ்ச்சிக் இரவு முழுவதும் நடந்தன.

மறுநாள் காலையில் கோபணா என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க ஆவலோடு காத்திருந்தார்.

விடிந்து நான்கு நாழிகை வரை ஏதும் நடக்கவில்லை.

போனவர்கள் துரோகம் செய்துவிட்டார்களோ என்று ஒரு கணம் நினைத்தார்.

ஆனால் மறுகணமே அவர்களது மத மாற்றமும் அதனால் ஏற்பட்ட மனமாற்றமும் மிகவும் உறுதியானது என்று நம்பிக்கை வைத்தார்.

ஒரு நாழிகை ஓடியது.

திடீர் என்று கோட்டைக்குள் பல இடங்களிலிருந்து புகை மண்டலங்கள் புறப்பட்டன.

அவை சீக்கிரத்தில் பெரிதாகி வான மண்டலத்தை நிறைந்தன.

அதைத் தொடர்ந்து உள்ளே கலவரங்கள்போல் பேரிரைச்சலின் மெல்லிய சத்தம் கேட்டது.

உள்ளே ஏதோ நடக்கிறது என்று சீக்கிரம் தெரிந்துவிட்டது.

அடுத்த அரை நாழிகையில் தீ நாக்குகள் மேலே எழுவது தெரிந்தது.

மதில் மேல் உள்ள வீரர்கள் பதட்டம் அடைந்து அங்கும் இங்கும் பார்ப்பதும் கூப்பாடு போடுவதும் தெரிந்தது.

குதிரைகளின் கனைத்தலும் யானைகளின் பிளிறல்களும் சீக்கிரம் இந்தச் சத்தங்களுடன் சேர்ந்து கொண்டன.

விஜயநகரப் படைகள் எல்லாம் ஆச்சரியத்துடன் இவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது,

கீழ்க்கோட்டை வாயில் பளீர் என்று திறந்தது.

தொங்கு பாலமும் உடனே அகழி மீது வீசப்பட்டது.

யவன வீரர்கள் குய்யோ, முறையோ என்று கத்திக் கொண்டு வெளியே ஓடிவந்தார்கள். அவர்கள் முகங்களில் ஒரே பீதி!

அடுத்த கணம் கோபணா சைகை செய்ய, யுத்த பேரிகைகள் முழங்கின.

வெளியே ஓடிவரும் யவன வீரர்களை விஜய நகரப் படைகள் ஆக்கிரோஷத்தோடு தாக்கினார்கள்.

வெளியே வருபவர்களின் தலைகள் எல்லாம் துண்டாகிப் பறந்து, அகழியிலும், சுற்றுப்புறங்களிலும் விழுந்தன.

சிலரது முண்டங்கள் சிறிது தூரம் தாமாக ஓடிப் போய் கீழே விழுந்தன.

உள்ளே இருந்த யவனர்களில் பலர் அகழிப் பக்கம் நூலேணியில் இறங்கினார்கள். இறங்கிய உடனேயே விஜயநகரப் படைகளின் அம்புகளுக்கு இரையானார்கள்.

உள்ளே இருந்த படைகள் யாவும் வெளியேறப் பன்னிரண்டு நாழிகைகள் பிடித்தன. அவர்களில் பாதிப் பேர் கொல்லப்பட்டார்கள். பாதிப் பேர் குற்றுயிர் ஆக்கப்பட்டார்கள்.

மாலை நேரத்திற்குள் போர் நின்றது.

விஜயநகரப் படைகள் வெற்றி முரசங்களைக் கொட்டின.

ஆனந்தமும் மகிழ்ச்சியும் பொங்க கண்ணனூர்க் கோட்டைக்குள் விஜயநகரப் படைகள் நுழைந்தன. கண்ணனூர் விஜயநகரத்தார் வசமாகியது.

26

முன்பு துருக்கியர் நடத்திய ஒரு தீச் செயலுக்குப் பிரதிச் செயல்தான் கண்ணனூரில் அந்தப் பரிதாபி ஆண்டு (கி.பி.1371) வைகாசி மாதத்தில் நடந்தது.

அதே ஊரில் அதற்கு 29 ஆண்டுகளுக்கு முன்புதான் (கி.பி.1342) முதல் செயல் நடந்தது.

ஒய்சள வல்லாளரின் சைனியத்தில் அப்போது துருக்கிய சமயத்தைச் சார்ந்த வீரர்களும் ஏராளமாக இருந்தார்கள்.

சண்டை நடக்கும் போது அவர்கள் திடீரென்று சுல்தானியரின் படையில் சேர்ந்து கொண்டு ஒய்சளப் படைக்குத் துரோகம் செய்தார்கள்.

இதனால் ஒய்சளரின் படை முறியடிக்கப்பட்டது. வல்லாள தேவரும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தத் துரோகச் செயல் கிட்டத்தட்ட 29 ஆண்டு ஏராள தெலுங்கு, கன்னட மக்களைத் துருக்கிய சமயத்திற்கு மாற்றியிருந்தார்கள்.

அவர்கள் இப்போது விஜயநகரப் படை வந்ததும் மனம் மாறினார்கள். பிறகு மதமும் மாறினார்கள்.

இதன் காரணமாய் தாங்கள் ஊழியம் செய்து வந்த சுல்தானியப் படைக்குத் துரோகம் செய்தார்கள்.

விஜயநகரப் படையுடன் சேர்ந்து, அதன் வெற்றிக்காகப் பாடுபட ஆரம்பித்தார்கள்.

கோபணாவிடம் அனுமதி பெற்று கண்ணனூர்க் கோட்டை மீது ஏறி உள்ளே குதித்தார்கள்.

மதில் மீது காவல் புரிந்த சுல்தானிய வீரர்களும் அவர்கள் விஜயநகரத்தார் பிடியிலிருந்து தப்பி வந்திருக்கிறார்கள் என்று எண்ணினார்கள்.

கோட்டையுள் போனதும் அவர்கள் இரகசியமாக அணிவகுத்துக் கொண்டார்கள். கோட்டையின் இரு பிரதான வீதிகளில் இரண்டு சுவர்களாகப் பிரிந்து நின்று திடீரென்று சுல்தானிய வீரர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள்.

இதைச் சற்றும் எதிர்பாராத சுல்தானியர்கள் திகைத்தார்கள். எதிரிகளை ஊடுருவிக் கொண்டு நகர மத்திக்குப் போக விரும்பினார்கள்.

இதை அறிந்த மனம் மாறிய வீரர்கள் ஒரு யுக்தி செய்தார்கள். அவர்கள் போகக் கூடிய வழியிலெல்லாம் தீயை வைத்தார்கள். வீடுகளையும், மாளிகைகளையும் கொளுத்திவிட்டார்கள்.

ஒருபுறம் தீ ஜுவாலை நெருங்கி வர, மறுபுறத்தில் மனமாற்ற வீரர்கள் கடும் தாக்குத் தாக்க, இரண்டையும் பொறுக்க முடியாமல் திணறிப் போய்,

கடைசியில் கிழக்குக் கோட்டைக் கதவைத் திறந்து பிய்த்துக் கொண்டு வெளியே வந்தார்கள்.

வந்ததும் அங்கு சித்தமாக நின்று கொண்டிருக்கும் விஜயநகரப் படையின் வாள்களுக்கும் அம்புகளுக்கும் இரையானார்கள்.

இவ்விதம் ஒரு செயலுக்குப் பிரதிச் செயல் நிகழ்ந்து கண்ணனூர்க் கோட்டையில் விஜயநகரத் தாருக்கு வெற்றி கிடைத்துவிட்டது.

வீர முழக்கங்களும், ஆரவாரங்களும், பேரோசை களுமாக விஜயநகர வீரர்கள் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

வராகக் கொடிகளை ஆங்காங்கே மாளிகைகளில் பறக்கவிட்டார்கள். ஒரு பகுதிப் படையினர் பரவி வரும் தீயை அணைக்க முற்பட்டார்கள். மறு பகுதியினர் எஞ்சியிருந்த சுல்தானியர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தேடித் தேடிச் சென்று பிடித்து இழுத்து வந்தார்கள்.

கோட்டைக்குள் ஏராளமான தேவதாசிகள் சுல்தானியத் தளபதிகளுக்கு ஆசைநாயகிகளாக இருந்து வந்தார்கள்.

விஜயநகரத்தார் நுழைந்ததும் அவர்கள் ஒரே ஆனந்தம் பொங்க அந்த வீரர்களை வரவேற்று, அவர்களை வெவ்வேறு மாளிகையில் இரகசிய இடங்களுக்கெல்லாம் அழைத்துப் போய், அங்கங்கு ஒளிந்திருக்கும் சுல்தானியர்களை எல்லாம் பிடித்துக் கொடுத்தார்கள்.

அந்தத் தேவதாசிகளில் இருவர் கோட்டைக் கிடங்கு ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் வல்லபனையும், தத்தனையும் கண்டுபிடிக்க விஜயநகரத்தாருக்கும் உதவினார்கள்.

இரு இளைஞர்களும் பொய் ஓலையுடன் கண்ணனூர்க் கோட்டைக்குள் புகுந்தபோது ஓலையுடன் வழக்கமாக வரும் சுல்தானிய வீரர் வராததால், சந்தேகப்பட்டு அவர்களைக் கிடங்கில் தள்ளிவிட்டு, மதுரைக்கு இது பற்றி அறிய தூதுவர்களை அனுப்பியிருந்தார்கள் சுல்தானிய தளபதிகள்!

அந்த இரு இளைஞர்களையும் பாதி மயங்கிய நிலையில் கோபணாவின் முன்னிலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

அவர் அவர்களை, "என் அருமைச் சகோதரர்களே!" என்று ஆரத் தழுவிக் கொண்டு,

"உங்கள் சேவைகள் அதி ஆச்சரியமானது! அரங்கன் அருள் உங்கள் மீது என்றும் இருக்கும்" என்று சொல்லி, அங்கேயே அவர்கள் கழுத்தில் விலையுயர்ந்த முத்து மாலைகளை அணிவித்து, ஓய்வுக்கும் சிகிச்சைக்குமாக ஆதுரக் கூடாரத்திற்கு அனுப்பி வைத்தார்.

பின்னர் மனமாற்ற வீரர்களின் தளபதிகளை அழைத்து அவர்கள் விஜயநகரத்தாருக்குச் செய்த பேருதவிக்காக கோபணா அவர்களைப் பாராட்டி, கங்கணங்களால் அவர்களை அலங்கரித்தார்.

நகரத்துள் கோபணா செய்த அடுத்த காரியம் உள்ளே இருந்த ஓய்சளேசுவரர் கோவிலை உடன் சீர் செய்ததுதான். வல்லாளதேவரின் மூதாதையர்களால் கட்டப்பட்ட கோவில் அது! சுல்தானியர் ஆட்சியில் அதன் மூர்த்திகள் அகற்றப்பட்டுத் துருக்கியரின் வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டிருந்தது.

அந்தக் கோவிலை அடைந்த கோபணா உடனே அங்கே மூர்த்திகளைக் கொண்டு வரவும், பூஜைகள் தொடங்கிவிடவும் உத்திரவுகள் வழங்கினார். (இப்போதும் இந்தக் கோவில் இருந்து வருகிறது. பொய்சலேசுவரர் கோவில் என்ற பெயருடன் சமயபுரத்தில் இருக்கும் கோவில் இந்தக் கோவில்தான்.)

இவ்வண்ணம் கோலாகலமாய் ஒரு வெற்றி கொண்டாடிய இரவு தளபதிகளும், கம்பணரும், கோபணாவும் அரங்கரைச் சூழ்ந்து கொண்டு அவருக்கு விசேஷ பூஜைகள் செய்தார்கள்.

கோபணா எல்லோரையும் பார்த்துத் தம் குரலை உயர்த்தி, "நாளை நம் அரங்கர் திருவரங்கத்துள் பிரவேசிக்கிறார்" என்று தழதழப்புடன் கூறினார்.

அவ்வளவில் பூமி வெடித்ததோ எனும்படி ஒரு கோஷமும் வானைப் பிளக்கும் வாழ்த்தொலிகளின் பேரோசையும் எழுந்து அந்தப் பிரதேசத்தில் ஒரு உணர்ச்சிப் பெருக்காக நிரம்பியது. எங்கும் அதன் வேகத்தின் ரீங்காரம் பரவியது.

முரசுகளும், தாரைகளும் தும்தும் என்று காற்றை அதிர வைத்தன.

எல்லோரும் "ரங்கா ரங்கா!" என்று பக்தி கோஷத்தை எழுப்பி அரங்கரை நோக்கிக் கைகூப்பினார்கள்.

மறுநாள் வைகாசி பதினேழாம் நாள் ஒரு மங்களகரமான தினமாக உதித்தது.

எங்கும் காற்றிலே ஒரு சுபம் பூத்திருந்தது. தன் நிமித்தங்களும், நன் மணங்களும், எங்கும் நிரம்பி வழிந்தன.

கண்ணனூரின் வெற்றியும், அரங்கன் புறப்படப் போகும் செய்தியும் அந்தப் பிரதேசம் முழுவதிலும் மின்னல் போல் பரவிவிட்டிருந்தது.

கிராமங்களிலிருந்தும், ஒளிவிடங்களிலிருந்தும் திரள் திரளாக ஜனங்கள் கூட ஆரம்பித்தார்கள்.

வரும்போது மலர்களையும், பச்சிலைகளையும் பறித்து வந்தார்கள்.

கடலோ, சமுத்திரமோ எனும்படியாய் எங்கும் மக்களின் தலைகளே தென்பட்டன. ஜனங்கள் தங்கள் அபிமான தெய்வத்தையும், தங்களைச் சேர்ந்த மன்னரையும் கண்ட வெறியில் பக்திக் கூத்து ஆடத் தொடங்கினார்கள். வெறி அதிகமானவர்கள் குணாலைக் கூத்தாடினார்கள். (தலைகீழ் ஆடும் கூத்து)

எங்கும் அரங்கன் நாமமும் அவரது புகழ்பாடலுமே ஒலிக்கத் தொடங்கின.

அந்தணர்கள் கூட்டமும் கூடிவிட்டதால் தமிழ் மறை ஒலியும், வேத கோஷங்களும் இனிமையாய்க் கேட்க ஆரம்பித்தன.

அந்தப் படைவீட்டில் அரங்கனைக் காணும் போது, அரங்கனே ஒரு பெரும் படைக்குத் தலைவனாக அங்கே யுத்தம் நடத்த வந்தது போல இருந்தது.

குருக்ஷேத்திரக் களத்தில் தேர் செலுத்திய பெருமானை இங்கே மற்றொரு யுத்தகளத்தில் அதிசயமான சூழ்நிலையில் பார்ப்பது ஒரு அபூர்வக் காட்சியாக இருந்தது.

பெரியவர்கள் குறித்துத் தந்த நல்ல நேரத்தில் 'சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்துப் புறப்பட்டாற் போல்' திருவரங்கன் புறப்பட்டார்.

அவர் முகம் அன்று ஒரு பேரொளி போல் திகழ்ந்து கொண்டிருந்தது. அவர் முக விலாசத்தில் பொலிந்து நின்ற ஒரு தேஜஸ் மயம் பிரபஞ்சத்தின் ஆதி உண்மை போல் அப்பழுக்கு ஏதும் இல்லாமல் சுபம் வெளிச்சமாய் பிரகாசித்தது.

அந்த அற்புத ஆதி வெளிச்சத்தைப் பார்க்கும் போது சத்தியமே ஜொலிப்பது போலவும் அது ஒன்று தான் ஜெயிக்கும் என்று சொல்வது போலவும் இருந்தது.

அந்த பொன்னிற அரங்கன் அருகில் அழகு அமைதி என்ற இரு குணங்கள் பக்தியில் அடக்கத்துடன் நிற்பது போல் இரு நாச்சிமார்கள் நின்று கொண்டிருந்தார்கள். திருப்பதி மலை மேல் அரங்கன் இருந்த போது, சந்திரகிரி அரசர் ரங்கநாத

யாதவராயர் இந்த நாச்சிமார் ஜோடிகளைச் செய்வித்து அரங்கனோடு இணை சேர்த்து வைத்திருந்தார்.

புனிதமன்னர் யாதவராயர் அரங்கனை கண்டெடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் அமரராகிவிட்டதால், அந்த வைபவக் காட்சிகள் அவரில்லாமலேயே நடந்தது.

வல்லபனும் தத்தனும் அவரை மனத்தில் கனிவுடனும், கண்களில் ஈரமுடனும் நினைத்தார்கள்.

யாதவராயர் அரங்கனுக்காகக் கட்டி முடித்த ரங்க மண்டபம் இன்னும் திருமலை வேங்கடவர் கோவிலில் ஒரு பகுதியாகவே இருந்து வருகிறது.

அரங்கன் பெருமாள் கோலாகலமாகப் புறப்பட,

வடகாவேரிக் (கொள்ளிடம்) கரையிலும் திருவரங்கக் கரையிலும் ஜனங்கள் இடைவெளி இல்லாமல் நிறைந்து விட்டார்கள்.

அரங்கனுக்காகக் காத்திருந்தார்கள்.

சில முகூர்த்த நேரத்தில் அழகிய மணவாள கிராமத்தை அரங்கர் அடைந்துவிட்டார்.

அங்கே சண்டையில் உயிர் துறந்தவர்களுக்கு விசேஷ அருளப்பாடு வழங்கப்பட்டது.

அதன் பின்னர் அரங்கர் வடகாவேரி (கொள்ளிடம்) கரையை அடைந்த போது, காவிரித் தாய் பல்லாண்டுகளுக்குப் பிறகு சிரிப்பது போல் காலை ஒளியில் வெள்ளியாய்த் தகதகத்துக் கொண்டிருந்தாள்.

48 ஆண்டுகளுக்கு முன் தென்காவேரியைக் கடந்து தெற்கே சென்ற அரங்கர் இப்போது தமிழ்த் தேசத்தையே ஒரு பூப்பிரதட்சிணம் செய்தவர் போல்,

வடகாவேரி வழியாகத் திருவரங்கத்தை அடைந்து கொண்டிருந்தார்.

அன்று ஒருத்தி மகனாய் ஒளிந்து போவது போல் இரகசியமாய் வெளியே போன அவர், இன்று பாரதப் போர் நடத்திவிட்டு வெற்றியுடன் வருபவர் போல் பகிரங்கமாய் திருவரங்கத்துள் நுழைந்து கொண்டிருந்தார்.

வட காவேரியைச் சீக்கிரம் கடந்துவிட்டார் அவர்.

திருவரங்கக் கரையை அவர் மிதித்ததும் பலர் அந்தக் கண் கொள்ளாக் காட்சியில் நெகிழ்ந்து போய் மூர்ச்சை அடைந்து விட்டார்கள்.

தம் வாழ்நாளில் காண முடியாததைக் கண்டு விட்டாற் போல், "ரங்கா! ரங்கா!" என்று கூறிக் கொண்டு கோபணாவே மெய் மறந்து அந்தப் புனித க்ஷேத்திரத்தின் மண்ணில் புரள ஆரம்பித்துவிட்டார்.

கம்பணரின் மனைவி கங்காதேவி ஏதோ தேவ கங்கை பொழிந்து வந்தது போல் சரமாரியாக வடமொழித் தோத்திரங்களை உச்ச ஸ்தாபியில் தன்னை மறந்து கூவிக் கொண்டிருந்தாள்.

பிரதானி சாளுவமங்கு, சோமப்பர், மாரய்ய நாயகர் எல்லோரும் அகம் கரைந்து, மெய்யுருகி, "ரங்கா! ரங்கா!" "ரங்கா! ரங்கா!" என்று ஆவேசம் வந்தவர் போல் வீறிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மொய்த்திருந்த பெரிய ஜன சமுத்திரத்தைப் பக்தி வெறி ஒரு புயல் போல் தாக்கிவிடவே,

எங்கும் காணக் கிடைக்காத பரவசங்களின் ஆனந்தங்களின், இன்பங்களின், உற்சாகங்களின் அபரிமிதமான, ஆவிர்பவிப்புகள் குதித்து எழுந்தன.

பிரம்மானந்தம் என்னும் அந்த அளப்பரிய ஆனந்தமே அந்த வேளையில் அந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் ஊற்றுக்களாகக் குமிழ்ந்து எங்கும் சிதறிக் கொண்டிருக்கிறதோ என்று சொல்லும்படியாய் அது தோற்றம் அளித்தது.

அப்போது அரங்கனது திருப்பல்லக்கின் ஒரு மூலையைக் கம்பணர் தம் தோளில் ஏற்றிக் கொள்ள,

மற்ற மூன்று மூலைகளிலும் அவரது பிரதானிகளான சாளுவமங்கு, சோமப்பர், விட்டப்பர் ஆகியோர் தாங்கிக் கொண்டார்கள்.

கோபணா வெண்சாமரத்தை எடுத்துக் கொண்டு அரங்கருக்கு வீச ஆரம்பித்தார்.

எங்கும் பரவசமான ஆர்ப்பரிப்புகளும் கொந்தளிப்புகளும் பரவி அந்தப் பிரதேசத்தையே அமளி துமளியாக்கியது.

ஒரு உற்சாகம் கள்வெறி போல் பரந்து, அந்த ஜனத் திரளையே ஆட்டிக் கொண்டிருந்தது.

அரங்கர் கரை ஏறி கஜ நடையில் கம்பீரமாய் ஆடிச் சென்ற போது,

பணியாளர்கள் முன்னரே சென்று திருவரங்கன் சாலைகளையும், வீதிகளையும், சுத்தம் செய்து வைத்தார்கள்.

வடக்கு வாயில் வழியாக அரங்கர் திருவரங்க நகருள் பிரவேசித்தார்.

இடிந்த கட்டடங்களும், மாளிகைகளும், சிதைந்த அரண்களும், கோபுரங்களும் ஒரு பழைய மகோன்னதத்தின் அழிந்து போன சின்னங்களாக அப்போது தோற்றமளித்தன.

எனினும் அரங்கனோடு வரும் மக்களின் கரைகாணாத உற்சாகத்தைப் பார்த்தால் இனி வரப் போகும் மகோன்னதம் சூசகமாகத் தெரிந்தது.

அவசரமாகப் புதுப்பிக்கப்பட்ட அலங்கரிக்கப் பட்ட திருவரங்க வீதிகள் அரங்கனுக்கு மனங் கனிந்த வரவேற்பை தந்துக்கொண்டிருந்தன.

எனினும் பிரசித்தி பெற்ற அந்த நகரின் திருவீதிகள் அப்போதிருந்த நிலையைக் கண்டு கோபணா விட்ட கண்ணீர் திருவரங்கனின் கண்ணீர் போலவே இருந்தது.

வீதிகளில் அங்குல அங்குலமாக முன்னேறிக் கோவிலின் முகப்பை அடைந்த போது எங்கும் ஒரு பெரும் ஆரவாரத்தின் பேரோசைதான் இருந்தது.

விஜய நகர வீரர்கள் கோவில் முகப்பில் நின்று ஜனத் திரளை அன்பான மொழிகளால் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

காட்டு வாசம் செய்து விட்டு இராமர் அயோத்தி திரும்பியது போல் அரங்கரும் திரும்பி வருகிறார் என்று எண்ணி மக்களில் பெரும்பாலோர் கண்ணீர் சொரிந்தார்கள். பணியாளர்கள் இதற்குள் கோவிலை முடிந்த அளவு சுத்தம் செய்திருந்தார்கள்.

பாழடைந்த கருட மண்டபம், அணியரங்கன் முற்றம் இவற்றைக் கடந்து அரங்கன் உள்ளே நுழைந்தார். கோவிலின் நாழிகை கேட்டான் வாயிலைத் தாண்டி உள்ளே போனதும் சன்னிதி வந்துவிட்டது.

நெஞ்சம் தழதழக்க அப்போது கோபணா ஒரு கல்மேடை மேல் ஏறிக் கையமர்த்தினார். ஆராவாரமெல்லாம் சுருண்டு அடங்கி எங்கும் மௌனம் விழுந்துவிட்டது.

"அரங்க பக்தர்களே! இன்று நமக்குப் புனித நாள்! நமது எல்லோரது கனவும் இன்று நிறைவேறுகிறது. இன்று அரங்கர் தமது ராஜதானிக்குள் பிரவேசித்து விட்டார். இந்தப் பிரவேசத்திற்குக் காரணமாக நாங்கள் இருந்துவிட்டது எங்களது பெரும் பாக்கியம். பெருமானை முறைப்படி பிரிதிஷ்டை செய்யும் முன் ஒரு விண்ணப்பம்! மூலவரின் சன்னிதி நல்ல வேலையாக அன்று மூடப்பட்டது போலவே இருந்து வருகிறது. அப்போது வைத்த கல் சுவர் அப்படியே பின்னமாகாமல் இருக்கிறது. இதில் அடியேனுக்கு ஒரு ஆசை! அன்று துருக்கியப் படை எடுப்பின் போது இந்தக் கல் சுவரை எழுப்பியவர் நம் வேதாந்த தேசிகர். அந்த மகான் இன்னும் நம்மிடையே வாழ்ந்து வருவது நமது பூர்வ ஜென்ம புண்ணியமாகும். அந்த மகான் எழுப்பிய கல்சுவரை அந்த மகானே வந்து விலக்குவதுதான் உத்தமம். புனிதம் என்று கருதுகிறேன். அந்த மகான் வெளி ராஜ்யத்தில் இருந்து கொண்டு தமது கோயிலுக்குத் திரும்பி வர, எவ்வளவோ பாடுபட்டு இருக்கிறார். அவர் இங்கே வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். அவர் வரும் நாள் வரை யாவரும் பொறுமையாக இருந்து உற்சவ அரங்கரை சேவித்துக் கிருபை பெற்றுக் கொள்ளுமாறு விண்ணடித்துக் கொள்கிறேன்". என்று கூறினார்.

கூடியிருந்தோர் கைதட்டி ஆமோதித்தார்கள்.

பிறகு அரங்கரைத் தாற்காலிகமாக சன்னிதி மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, விசேஷ வழிபாடுகளை எல்லாம் முடித்துவிட, ஜனங்கள் திரள் திரளாக உள்ளே வந்து அரங்கரைச் சேவித்த வண்ணம் இருந்தார்கள்.

இந்தக் கோலாகல வைபவங்கள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில்

அவற்றை அமைதியோடு பல ஜீவன்கள் பார்த்துக் கொண்டு இருந்தன.

அவர்கள்தான் இந்த வைபவங்கள் நிறைவேறு வதற்கான காரணத்திற்கே அடிகோலியவர்கள்.

முக்கியமாக வல்லபன் தத்தன் என்ற இரு இளைஞர்களும் ஆரம்ப முதல் கடைசி வரை கண்ணீர்ப் பெருக்காகவே நின்று கொண்டிருந்தார்கள்.

வல்லபன், தன் தந்தை குலசேகரரே வந்து அவனை ஆசீர்வதிப்பது போல் கற்பனை செய்து கொண்டு ஆறாக நீர்ப் பெருக்கிக் கொண்டிருந்தான்.

தன் தந்தையும், தாயும் நடந்த புண்ணிய பூமி அது என்று நினைக்கும் போது அவ்வப்போது கண்ணீர்த் திரள் தெறித்து வந்தது.

தத்தன் வழக்கம் போலத் தன் உணர்ச்சிகளை வெளிக் காட்டிக் கொள்ளாமல், வரும் கண்ணீரை அவ்வப்போது துடைத்துக் கொண்டு ஏதும் தனக்கு நேராததுபோல் உணர்வுகளை அடக்கிக் கொண்டிருந்தான்.

இவர்கள் இருவரைத் தவிர காயம்பட்டுப் படுத்த படுக்கையாக இருந்த திருமணத்தூண் நம்பியையும் கிருஷ்ணராஜ உத்தமநம்பியையும் கட்டிலோடு அந்த அரங்க க்ஷேத்திரத்திற்குப் பரிசனங்கள் கொண்டு வந்திருந்தார்கள்.

அவர்கள் இருவரும் நீண்ட நாள் கனவு ஒன்று பலிதம் ஆனது என்று நினைத்துக் கண்ணீரைக் காவேரியாய் ஓட விட்டிருந்தார்கள்.

இன்னும் காயம்பட்டிருந்த அழகிய மணவாளவாசிகள் பலரும் அந்த கோலாகலங்களைப் பெருகிய நீரோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இப்படி எல்லோரும் உணர்ச்சிவசமாய் வைபவங்களை முடித்து வைத்த வேளையில், திருமணத்தூண் நம்பி கட்டிலை வெளியே கொணர்ந்த போது, கோவில் மண்டபம் அருகே பல பக்தர்களும் பரிசனங்களும் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் தீவிரமாகப் பேசுவதை வல்லபன் உன்னிப்பாகக் கவனித்தான்.

அவர்கள் போன பிறகு அவன் நம்பியை அணுகி, "சுவாமி என்ன விஷயம்?" என்று விசாரிக்க,

நம்பியும், "ஐயா! அவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? கோவிலுக்குள் இந்த அரங்கனைக் கொண்டு வந்து விட்டீர்களே! குறை சொல்லவில்லை. ஆனால் நாங்கள் ஆராதிக்கும் அரங்கரை அல்லவா கொண்டு போக வேண்டும்? அவரல்லவா இவ்வூர் அரங்கர்! இவரை எங்கள் அரங்கர் என்று எப்படி ஏற்றுக் கொள்வது. தங்களுக்கும் இந்த விஷயம் தெரிந்திருக்க வேண்டுமே என்று கூறினார்கள். நான் அவர்களுக்கு என்ன உத்திரம் சொல்வதென்று தெரியவில்லை. அப்புறம் விளக்குகிறேன் என்றேன்!" என்று கூறினார்.

வல்லபனுக்கு அந்த வார்த்தைகள் சுருக்கென்று தைத்தன. ஆத்திரமும் மனதில் பொங்கி எழுந்தது.

ராமர் நிறைய கஷ்டங்கள் பட்டு இலங்கை சென்று யுத்தம் செய்து சீதாவை மீட்டு வந்த போது,யாரோ சீதாவின் மீது சொன்ன அவச் சொல் போல் இருக்கிறதே இது!

இந்த அரங்கரைக் காப்பாற்றிக் கொண்டு வர எண்ணற்ற பேர்கள் எத்தனையோ விதத் தியாகங்களையும், சாகசங்களையும் செய்ய வேண்டி வந்தது. ஒரு தலைமுறை சமுதாயமே இதற்காக எவ்வளவோ பாடுபட்டது. ஆனால் அதற்குப் பின்

வந்த சமுதாயத்தினர் அதை உணராமல் இவர்கள் இவ்விதம் மிக எளிதாகப் பேசுகிறார்களே என்று நினைத்தான். இப்போது கஷ்டப்பட்டு யுத்தம் செய்து அரங்கப் பெருமாளை இங்கே கொண்டு வரும் போது, இப்படி ஒரு சந்தேகமா? இவர்கள் யாருக்கும் நடந்து போன பழைய சம்பவங்கள் எதுவுமே தெரியாமல் போய்விட்டது. அதைச் சொல்பவர்களும், வெளியூர் களுக்குச் சிதறி ஓடி விட்டார்கள். அவர்களும் இப்போது மிகச் சிலரே இருக்கிறார்கள் என்பதை வல்லபன் ஊகித்தான்.

எனவே ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "என்ன சொல்கிறார்கள்? இவர்களது அரங்கனையும் கோவிலுக்குள் எழுந்தருள வைக்க வேண்டும் அவ்வளவுதானே? தாராளமாகச் செய்து கொள்ளட்டும். இரு அரங்கர்கள் இருப்பதால் நமக்கு குறை ஒன்றும் ஏற்படாது!" என்று கூறினான்.

நம்பி அதற்கு உத்தரம் ஒன்றும் கூறவில்லை.

அப்பால், கோபணா அழைக்கிறார் என்று சேவகர்கள் வந்து கூற, இளைஞர்கள் இருவரும் உடனே புறப்பட்டுச் சென்றார்கள்.

"வல்லபா! தத்தா! நாம் எல்லோரும் நாளை மதுரை நோக்கிப் புறப்படுகிறோம்!" என்றார் கோபணா.

"உடனேயா, பிரபோ!" என்றான் வல்லபன்.

"ஆமாம், வல்லபா! நாம் ஒரு நாளைக் கூட இனி வீணாகக் கழிக்க முடியாது. ஒரு விஷயம் புரிந்துகொள்! பாதி யுத்தத்தைத்தான் நாம் ஜெயித்திருக்கிறோம். இன்னும் ஒரு பாதி மதுரை உருவில் மீதி இருக்கிறது. இதில் நீங்கள் இருவருமே நேரிடையாகப் பங்கு கொள்ளப் போகிறீர்கள்" என்றார் கோபணா.

"சந்தோஷம், சுவாமி!" என்றார்கள் இளைஞர்கள்.

"அரங்கன் அருளாள் மதுரையையும் வெல்வோம். அதன் பிறகு திருவரங்கத்திற்குத் திரும்பி வருவோம். மகான் வேதாந்த தேசிக சுவாமியை இங்கே எழுந்தருளக் கேட்டுக் கொண்டு ஏற்கெனவே ஓலையையும் பல்லக்குப் பரிவாரங்களையும் அனுப்பிவிட்டேன். அவர் வந்த பிறகு அரங்கனைக் கோவிலில் ஸ்தாபிதம் செய்து விடுவோம். அதற்குள் உன் தாயாரையும் காஞ்சியிலிருந்து இங்கே வரவழைத்துக் கொள்! இன்னும் தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் அழைத்துக் கொள்!" என்று கூறினார்.

மறுநாள் காலையில் விஜயநகரப் படைகள் தெற்கு நோக்கிப் புறப்பட வல்லபனும், தத்தனும் உடல் நிலை காரணத்தால் இரு பல்லக்குகளில் ஏறிக் கொண்டு அதனுடன் புறப்பட்டார்கள்.

பல்லக்கில் படுத்த வசமாயிருந்த வல்லபனின் மனத்தில் கோபணாவின் வார்த்தைகள் மெல்ல ஓடி வந்தன.

'இன்னும் தெரிந்தவர்கள் யாராயிருந்தாலும் அழைத்துக் கொள்!'

என்ன வார்த்தைகள் இவை?

எனக்குத் தெரிந்தவர்கள் யார்?

கண்களை மூடினான்.

அவன் மனத்தில் நிரந்தர சோகத்திற்கும் நிரந்தர இன்பத்திற்கும் காரணமாக இருந்த ஒரு உருவம் எங்கோ வெகு தொலைவிலிருந்து அவனைப் பார்ப்பது போலிருந்தது.

இடத்தினால் மட்டும் தூரம் அல்ல!

காலத்தினாலும் தூரம்தான்!

அந்த உருவம் மெள்ள நலுங்கி குலுங்கி அவனை நோக்கி முன்னே வர.

சுவர்க்கமயமான கீதங்கள் எங்கெங்கிருந்தெல்லாமோ அவன் மனத்தில் கேட்க ஆரம்பித்தன.

உடலில் ஒவ்வொரு அணுவும் விதிர்க்க உரோமங்கள் சிலிர்த்துப் போய் விரைத்து நிற்க.

அவன் உயிரே திடுக்கிட்டு நின்றுவிட்டது.

அவனது மனமென்னும் அரங்கில் மெள்ளப் பாதங்களை ஊன்றி புன்னகையை சின்னஞ் சிறியதாய்ச் சிந்தி நீல ஸ்படிகம் போன்ற கண்களைக் கொண்டு பார்த்து.

ஓவியமே ஒரு கன்னி உருவில் வந்ததுவோ எனும்படி விகசித்து நின்றாள்.

மதுராங்கினி என்னும் அவனது மதுரா!

27

மதுரையை நோக்கி விஜயநகரப் படைகள் கோலாகலமாய் முன்னேறின.

அவை வரும் செய்தி காட்டுத் தீ போல் பரவி விட்ட தால் வழியெங்கும் ஜனங்கள் கூட்டமாகக் கூடி விஜய கோஷம் வழங்கினார்கள்.

படைகளுக்குத் தேவையான பொருட்களையும் உணவு வகைகளையும் கொண்டு நிரப்பினார்கள்.

வயது வந்தவர்கள் எல்லாம் கையில் வாளையும் வில்லையும் எடுத்துக் கொண்டு வீராவேசக் கோஷங் களை மொழிந்து படையுடன் சேர்ந்து கொண்டார்கள். இதனால் அந்தச் சேனையின் தொகையும் பல்லாயிரக் கணக்கில் பெருக ஆரம்பித்தது.

இதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த கோபணா, "ரங்கா! எம்மிடம் படைபலம் இல்லை என்று கவலைப்பட்டேன். எதிர்பாராமல் கொண்டு வந்து நிறைக்கிறாயே!" என்று சொல்லி மனமுருகினார்.

முப்பதினாயிரமாகப் புறப்பட்ட படை மனமாற்ற வீரர்கள் சேர்ந்து கொண்டதால் ஐம்பதினாயிரத்தைத் தாண்டியது.

இப்போது தமிழ் நாடுகளின் வீரர்களும் இளைஞர்களும் சேர்ந்துவிடப் படைபலம் வட்சத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

இனிக் கவலையில்லை. மதுரை நிச்சயம் கிடைத்துவிடும் என்று கம்பணரும் கோபணாவும் கருதினார்கள்.

பொதுவாக அந்த நூற்றாண்டின் படைகளுக்கு கண்ணனூரிலிருந்து மதுரைக்குப் போகும் பிரயாண காலம் எட்டிலிருந்து பத்து நாட்கள்.

ஆனால் அளவு கடந்த உற்சாகம் எங்கும் பீறிக் கொண்டு ஓடியதால் விஜயநகரப் படைகள் ஐந்தாம் நாள் காலையில் மதுரையின் வெளிப்புறத்தில் ஆரவாரம் செய்து நின்றன.

வைகையைக் கடந்ததும் கம்பணரும், கங்காவும், அதன் அழகைக் கண்டு நிலைத்து விட்டார்கள். அந்தக் கோடை நாளிலும் தெளிந்த நீருடன் சிறு பூங்கொடி வளைந்து செல்வதுபோல் வைகை நிறைவுடன் ஓடிக் கொண்டிருந்தாள்.

இருமருங்கும் பசேல் என்ற சோலைகளும், உபவனங்களும் செழுமையாய் நிறைந்திருந்தன.

வைகையைத் தொட்டதும் அரசரும் அரசியும் ஜலத்தைத் தோத்திரங்கள் சொல்லித் தலையில் புரோக்ஷணம் செய்து கொண்டார்கள்.

கங்கா அந்த நதியின் ஓட்டத்தில் மாலையையும், அகல் விளக்குகளையும் மிதக்க விட்டாள்.

அப்பால் அவர் கரைமேட்டில் ஏறியதும் தெற்கே பளிச்சென்று ஏதோ வெட்டியது.

மரங்களின் உச்சிகளுக்கு மேலே ஒரு கோபுரத்தின் தூபி அவரை நோக்கி வீசிய வெளிச்சம்தான் அது.

திடீரென்று பரவசராய், "மீனாக்ஷி" என்று மெய்மறந்து கம்பணர் கூறினார்.

அதே நேரத்தில் அந்தத் தூபியையும், அந்தச் சோலை வனங்களையும் வியாபித்துக் கொண்டு யௌவனமாக ஒரு நங்கை குறுகுறுப் புன்னகையோடு நின்றாள். அவள் நெற்றியில் நீறு, கண்களில் கருணை, மூக்கில் தளுக்கு! முகத்தில் சுடர்ப்பு! காதில் குழை! கழுத்தில் நகை! கையில் கிளி, மெய்யெல்லாம் ஒளி!

"மீனாக்ஷி" என்றார் கம்பணர். விதிர்விதிர்த்து உடல் நடுங்க, அவளைப் பார்த்துக் கைக்கூப்பினார்.

ஒரு ஆத்ம அனுபவமே அவருக்கு அப்போது ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

"அம்மா! உன் கட்டளையை நிறைவேற்று வேனம்மா!" என்று தலைகுனிந்து கூற,

அந்த நங்கையும் தன் செப்பஞ்சுக் கையால் அவரை ஆசீர்வதித்துக் குறுநகை பூத்தாள்.

சிலைபோல நின்றது நின்றபடி நிற்கும் மன்னரை கங்காதேவி பிடித்துக் கொண்டாள்.

"சுவாமி! தங்களுக்கு நேர்ந்தது என்ன? சுவாமி, சுவாமி!" என்று பரபரப்போடு கேட்டாள்.

கம்பணர் கண்களை மூடியபடியே இருந்தார்.

அவர் மேனியெல்லாம் வியர்வை வழிந்தோடியது.

வெள்ளமாக வழியும் அந்த நீரிலிருந்து சந்தனம் போன்ற நறுமணம் பிறப்பதைக் கண்ட கங்கா திடுக்கிட்டு,

"சுவாமி! சுவாமி! இது ஒரு யோக அனுபூதி அல்லவா! காரணமில்லாமல் நன்மணங்கள் மணப்பதும், நல் நாதங்கள் கேட்பதும், நல்ஒளிகள் ஒளிர்வதும் ஒரு யோக நிலையில் உச்சநிலைக் குணங்கள் அல்லவா? சுவாமி நீங்கள் யாரைப் பார்த்தீர்கள்? சொல்லுங்கள்! சொல்லுங்கள்!" என்று அவரைப் பிடித்து உலுக்கியவாறு கேட்டாள்.

மெதுவாக அவர் கண்களை விழித்தார்.

"மீனாக்ஷி" என்றார் அவர்.

"மீனாக்ஷியா?" என்றாள் அவள்.

கங்காவுக்குச் சிலிர்த்து விட்டது. "அம்மா!" என்று வான் நோக்கிக் கை கூப்பினாள். "உன்னை நான் நேரிலே பார்க்கவில்லை. ஆனால் உன் ஆவிர்பவிப்பை அவரிடத்தில் பார்த்துவிட்டேன். இதுவே நான் செய்த பூர்வ ஜன்ம புண்ணியம் அம்மா! தாயே! மதுரைக்கு அரசியே! மதுரா நாயகியே! மதுரையை அடைந்து, உன் சன்னிதியில் விழுந்து வணங்கும் பேறு நான் பெற்றால் எங்கள் விஜயத்தையே நான் மதுரா விஜயமாகப்

பாடுவேனம்மா! அதற்கு அருள் புரிவாயம்மா, தேவி மீனாக்ஷி!" என்று நெக்குருக மனமுருகிப் பிரார்த்தித்தாள் அவள்.

அப்போது அருகில் வந்த கோபணாவைப் பார்த்த கம்பணர், "கோபணா சுவாமி! அரங்கர் தங்களுக்குக் கட்டளை விதித்தார். கண்ணனூர்ப் போரை நடத்தினீர்கள். மீனாக்ஷி எனக்குக் கட்டளை இடுகிறாள். மதுரைப் போரை நான் நடத்துகிறேன்" என்றார்.

மதுரைக் கோட்டையை மதிய நேரத்திற்கு ஒரு சமுத்திர வெள்ளமே தாக்கியது.

வாள், வில், கட்டாரி, வேல், எரி அம்பு, சுரிவாள் எல்லாம் பல்லாயிரக்கணக்கில் தென்பட அவற்றின் மீது பட்ட ஒளி மின்னல் புரள்வது போல் ஜொலித்தன.

'ஜய விஜய' கோஷங்கள் ஊழிக்கடலின் ஆர்ப்பரிப்பு போல் கோட்டைச் சுவர்களைத் தாக்கின.

யானைகள் ஆங்காங்கே பெரும் திமிங்கலங்கள் போல் இடம் பெயர்ந்து கொண்டிருந்தன.

எல்லாவற்றையும் விட அந்தப் படை வீரர்களின் நம்பிக்கையும், உற்சாகமுமே பெரிய சக்திகள் போன்று மதுரைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டன.

எதிரிகளுக்கு ஒரே நாள் மட்டும் அவகாசம் கொடுத்தார்கள்.

அவர்கள் வெளி வரவில்லை என்று தெரிந்ததும் கோட்டையைத் தாக்க ஆரம்பித்தார்கள்.

தமிழ் பேசும் நாடுகளின் ஏகோபித்த ஆத்திரமே கோட்டையைத் தாக்கியது.

பிரளய நாளில் மலையே புரண்டு வந்து மோதுவது போல், ஒரு ஜன சமுத்திரமே பெருகி வந்து கோட்டையை முட்டியது.

கோட்டையின் அகழ் ஒரே நாளில் மூடப்பட்டு விட்டது.

பரிகரங்களில், பல உடைத்துத் தகர்க்கப்பட்டு விட்டன.

எரிகவண்கள் வானமெல்லாம் அடைத்துக் கொண்டு கோட்டைக்குள் சாடி விழுந்தன.

அம்புகளின் பாய்ச்சலில் காற்றே கிழிந்து கொண்டிருந்தது.

எட்டாவது நாழிகையில் கோட்டை மதில் மேலிருந்த எதிர்ப்பு நசித்து விட்டது.

அவ்வளவில் மதில் சுவர்களில் பரபர என்று ஏணிகளும், உடும்புக் கயிறுகளும் ஊசலாட ஆரம்பித்தன.

விஜயநகர வீரர்கள் எறும்புகள் போல் சாரிசாரியாக அங்கங்கே அதன் மீது ஏற முற்பட்டார்கள்.

இடியோசைகளைப் போல் பிளிறிக் கொண்டு கதவுகளின் முகப்புகளை யானைகள் முட்டி மோதிக் கொண்டிருந்தன.

இரண்டு நாழிகையில் கோட்டைச் சுவர்களும், மதில் மாடங்களும் விஜயநகரப் படையின் வசமாயின.

பயந்த கண்களுடன் துருக்கிய வீரர்கள் உயிருக்கு அஞ்சி அங்குமிங்கும் ஓட ஆரம்பித்தார்கள்.

வடக்குக் கோட்டை வாசல் ஒரு முகூர்த்தத்தில் திறக்கப்பட்டு விட்டது.

மதகுகளைப் பிடுங்கிக் கொண்டு வரும் நீர் போல் விஜய நகரத்தார் உள்ளே புகுந்தார்கள்.

எங்கும் ஜய கோஷங்கள் காதுகளைக் குடைந்து சென்றன.

ஆயிரக்கணக்கான துருக்கிய வீரர்கள் வீதிகளில் மாண்டு கிடக்க, விஜயநகரத்தார் அவர்கள் சடலங் களைத் தாண்டித் தாண்டி ஓடினார்கள்.

கம்பணர் தம் மெய்க் காவலோடு சுல்தானின் அரண்மனை வாயிலை அணுகினார்.

வாயிலில் கடும்போர் நிகழ்ந்தது. சுல்தானிய அரண்மனைக் காவல் சீக்கிரம் உடைந்தது.

ஆத்திரம் அடைந்த சுல்தான் பக்ருதீன் முப்ராக்ஷா தாமே போரிட வெளியே வந்தார்.

மெய்க்காவலோடு வந்திருந்த வல்லபனும் தத்தனும் சுல்தானை எதிர்க்கப் போக, கம்பணர், "வல்லபா! அந்தக் காரியத்தை என்னிடம் விடு!" என்று சொல்லி வாளைத் தூக்கினார்.

சுல்தானுக்கு அவருக்கும் போர் துவங்கியது. இரண்டு புலிகள் சந்தித்தாற் போல் அவர்கள் சண்டை இட்டார்கள்.

இருவரது வாள்கள் பீறிக் கொண்டு பாய, குதித்தும் துள்ளியும் அவர்கள் போரிட்டார்கள்.

ஒரு முகூர்த்தம் முடியுமுன் ஒரு துணிச்சலான இடைவெளியில் ஒரே தாவலில் சுல்தானை ஓங்கி அடிக்க அவர் ஏதோ ஐந்து அடிபட்டது போல் துவண்டு கீழே விழுந்தார்.

கூடியிருந்தோர் ஆரவாரம் செய்தார்கள். ஜயகோஷங்கள் வானைக் கலைத்து விட்டன.

மதுரை நகர் எங்கும் வீரர்களின் உற்சாகங்கள் கரை புரண்டு ஓடின. வாழ்த்தொலிகளும், விஜய கோஷங்களும் மாறி மாறி எழுந்து கொண்டிருந்தன.

வராகக் கொடிகள் அரண்மனை, மாளிகைகள் கொத்தளங்கள் மீது பறக்க ஆரம்பித்தன.

மாலை வந்துவிட்டது.

கம்பணரும் இதரர்களும் அவசர நீராடிக் கோவிலை நோக்கிச் சென்றார்கள்.

திருவரங்கத்தைப் போலவே சுவர் எழுப்பிச் சன்னிதியை மறைத்து இருந்தார்கள்.

புகழ் பெற்ற மீனாக்ஷியின் கோலத்தைப் பார்க்க வேண்டும் என்ற அவசரத்தில் சன்னிதிச் சுவரைச் சீக்கிரம் அகற்றச் சொன்னார் கம்பணர்.

பணியாட்கள் வேலையில் ஈடுபட்டார்கள்.

கம்பணர் கங்காதேவி, கோபணா, சாளுவமங்கு, சோமப்பர், விட்டப்பர் யாருமே ஆயுளில் மீனாக்ஷியைத் தரிசித்திராதவர்கள்.

ஆகவே பரபரப்போடு இருந்தார்கள்.

வேலையாட்கள் அரை முகூர்த்தத்தில் சுவரை உடைத்து சன்னிதியைத் திறந்தார்கள்.

உணர்ச்சிக் கடல் பொங்க, கம்பணர் ஒவ்வொரு அடியாக வைத்து உள்ளே போனார்.

பக்தி நிறைந்த கண்களோடு மீனாக்ஷியின் உருவத்தைப் பார்த்தார்.

பார்த்ததுதான் தாமதம்! பட்டென்று ஒரு அதிர்ச்சி அவரைப் பெரும் தாக்காய்த் தாக்கியது. மீனாக்ஷியின் மீது சாத்தப்பட்டிருந்த மாலைகளும், சந்தனமும், குங்குமமும் அப்போது சாத்தப்பட்டது போல வாடாமல் வதங்காமல், புதுமை அழியாமல் அப்படியே இருந்தன.

48 ஆண்டுகளுக்கு முன் அன்னையை அலங்கரித்த மாலையும், பூவும் அன்று அலர்ந்தது போலவே இருந்தன. இந்த அதிசயத்தைப் பார்த்ததுதான் தாமதம், கம்பணர் கன்னத்தில் அடித்துக் கொண்டு அடியோடு தரையில் சாஷ்டாங்கமாக விழுந்தார்.

பிறகு எழுந்து, "அன்னையே! அதிசயத்தைக் கண்டேன்! அம்மா! கொஞ்சம் நஞ்சமிருந்த என் புன்மையான சந்தேகத்தையும் தவிர்த்தேன். தாயே! உன்னை இனி இந்நிலையிலிருந்து மாற்றிப் பெரிய மகோன்னதத்திற்கு அழைத்துச் செல்கிறேன். பாழ்பட்ட உனது வாசஸ்தலத்தைத் திருத்தி அமைத்து உலகோர் வியக்கும் வண்ணம் மாபெரும் கோவிலை எழுப்பிவிடுகிறேன். இது சத்தியம்! தாயே அருள் புரிவாயம்மா!" என்று தழுதழுக்கக் கூறினார்.

(மதுரைக் கோவிலின் தற்போதுள்ள பிரமாத வளர்ச்சிக்கு கம்பணரும் அவரது வழிவந்த விஜயநகர வம்சத்தாருந்தான் காரணம் ஆவார்கள். இப்போதுள்ள கோபுரங்கள், மண்டபங்கள், பிரகாரங்கள் ஆகியவை பெரும்பாலும் அவர்கள் கட்டியவையே!)

கம்பணர் வெளியே வர, கங்காதேவி கோபணா இதர பிரதானிகளும் உள்ளே சென்று மீனாக்ஷியையும், அவள் மாலையின் அதிசயத்தையும் தரிசித்துவிட்டு மிகவும் பரவசர்களாகி வெளியே வந்தார்கள்.

அடுத்து சுந்தரேசுவரர் சன்னிதிக்குச் சென்றார்கள்.

சுல்தானிய ஆட்சியில் கோவிலின் எல்லா கோபுரங்களும், பஞ்சாட்சரத் திருமதிலும், அதைச் சுற்றியுள்ள வீதிகளும் நாசமாகியிருந்தன.

இரு பிரதான சன்னிதிகளும், அர்த்த மண்டபம், மகா மண்டபங்களும் மாத்திரமே நாசமடையாமல் நின்றன.

சுவாமி சன்னிதிக்குச் சென்று அதை உடைத்துப் பார்க்குங்கால் சுவாமியின் மீதுள்ள பூமாலை, சந்தன குங்குமங்களும், தூங்கா விளக்கில் சுடரொளியும் அன்று பார்த்தவை போலவே இருந்தன. கீழே விழுந்து கன்னத்தில் போட்டுக் கொண்ட கம்பணர், முன்பு போலவே சபதம் செய்தார்.

சுவாமி, அம்மன்களுக்குப் பொன் நகைகளும், தினசரி வழிபாட்டுக்கான திரவியங்களும் உடனே அளிக்கக் கூறி, உத்தரவுகள் வழங்கினார்.

மீனாக்ஷி, சுந்தரேசுவரர்களின் உற்சவமூர்த்திகள் தெற்கே நாஞ்சில் நாட்டில் அடைக்கலம் இருப்பதாகக் கேள்விப் பட்டு உடனே அவைகளை எழுந்தருள வைத்துக் கொண்டு வர தளபதிகளுக்குக் கட்டளை இட்டார்.

அந்த ஒரு வாரத்துள் நாடெங்கும் கோவில்கள் எல்லாம் திறக்கப்பட்டன. கேரளத்திற்கு அடைக்கலம் போய் இருந்த விக்கிரகங்கள் எல்லாம் திரும்பி அழைக்கப் பெற்றன. துருக்கிய பயத்தில் நூற்றுக் கணக்கான விக்கிரகங்கள் மண்ணில் புதைக்கப்பட்டிருந்தபடியால் விஷயம் தெரிந்தவர்களின் உதவி கொண்டு பல ஊர்களில் அவை தோண்டி எடுக்கப் பட்டன. (இப்போதும் ஆங்காங்கே தோண்டும் போது நமக்குக் கிடைக்கும் விக்கிரகங்கள் பெரும்பாலும்

Released by Maran's Dog. Toronto, Canada

மதுரை சுல்தானிய அரசு காலத்தில் பாதுகாப்புக்காக மண்ணில் புதைக்கப்பட்டவையே.)

இந்தச் சமயத்தில் கோபணாவும் சில பிரதானிகளும் உடனே திருவரங்கம் திரும்பினார்கள்.

அரங்கரை ஸ்தாபிதம் செய்ய வேண்டும். மன்னருக்கு வீராபிஷேகம் செய்ய வேண்டும். இதுதான் அவர்கள் குறிக்கோள்.

Released by Maran's Dog. Toronto, Canada

திருவரங்கம் புதுக் களை கொள்ள ஆரம்பித்தது. ஊரை விட்டு ஓடியிருந்த குடும்பங்கள் திரும்ப ஆரம்பித்தன.

வீதிகள் சுத்தமாகத் தொடங்கின. வீடுகள் மீண்டும் நிமிர ஆரம்பித்தன. கோவிலின் இடிபாடுகள் யாவும் அகற்றப்பட்டு விட்டன.

இந்த நேரத்தில் துரதிருஷ்ட வசமாக அரங்கனைப் பற்றிய சர்ச்சைகளும் வளரத் தொடங்கின.

Released by Maran's Dog. Toronto, Canada

ஊரில் சில காலம் ரகசியமாக வழிபடப்பட்டு வந்த விக்கிரகந்தான் திருவரங்கர் விக்கிரகமா அல்லது கோபணா சிங்கவரத்திலிருந்து அழைப்பித்து வந்த விக்கிரகந்தான் திருவரங்கன் விக்கிரகமா என்று விவாதிக்கத் தொடங்கினார்கள்.

அரங்க விக்கிரகத்தை இரகசியமாக பூஜை செய்து வந்தவர்கள் தங்கள் நம்பிக்கையிலிருந்து மாறுவதற்குக் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு அந்த விக்கிரகத்தின் மீது உணர்ச்சிமயமான ஈடுபாடு வந்துவிட்டது. புதிதாக ஊரில் குடியேற ஆரம்பித்தவர்களும் அவர்கள் சொல்வது சரி என்று ஆமோதிக்க ஆரம்பித்தார்கள். இதனால் இந்தக் கட்சியாரின் எண்ணிக்கை அதிகமாக வளர்ந்துவிட்டது.

Released by Maran's Dog. Toronto, Canada

Released by Maran's Dog. Toronto, Canada

இது வல்லபனுக்கு வேதனையைக் கொடுத்தது. இனியும் தவிர்க்க முடியாது என்று நினைத்து. கோபணாவிடம் விஷயத்தைத் தெரிவித்தான்.

அவர் திடுக்கிட்டு ஊர்ப் பெரியவர்களை அழைத்துப் பேசினார். அவர்களில் பெரும்பாலோர் கோபணாவின் திருவரங்கரை ஏற்றுக் கொள்ளவில்லை. அரங்கனோடு போன கோஷ்டியில் யாரேனும் ஒருவர் மிச்சமிருந்தால் கூட அவர் சொல்லை ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருந்தார்கள். கோபணா உட்பட எல்லோருமே இவர் திருவரங்கர் என்று செவியால் கேள்விப்பட்ட வர்கள்தான். பழைய அரங்கரைப் பார்த்தவர்கள் அல்ல.

"ஏன்? என் தாயார் வாசந்திகா வரப் போகிறார்கள். அவர்களைக் கொண்டு கண்டுபிடிக்கச் சொல்கிறேன்" என்றான் வல்லபன்.

"உன் தாயாரும் ஒரு இடைக் காலத்தில் அரங்கரைப் பார்த்ததில்லை. 48 வருடங்களும் அரங்கன் கூட இருந்தவராக இருக்க வேண்டும். இல்லையேல் ஏற்றுக் கொள்வதற்கில்லை" என்று சொல்லிவிட்டார்கள்.

கோபணாவுக்குத் தர்மசங்கடமாக இருந்தது.

இவ்வளவு பாடுபட்டு, யுத்தங்கள் புரிந்து காப்பாற்றிய ஒரு காரியம் இப்படி நொடியில் வீணாகிறதே என்று நினைத்த போது துக்கம் தொண்டையை அடைத்தது.

எனினும் உணர்ச்சிக்கு ஆளாகாமல் மகான் வேதாந்த தேசிகர் வந்தால் அவர் தீர்மானத்திற்கே காரியங்களை விட்டு விடுவோம் என்று எண்ணி மேலே நடக்க வேண்டிய கோவில் உத்தாரண வேலைகளில் ஈடுபட்டார்.

இரண்டு தினங்களில் வேதாந்த தேசிகர் அருள் பழம்போல் வந்து சேர்ந்தார். நூற்றிரண்டு பிராயம் ஆன அவர், பல்லக்கைக் கூட ஒரு சுகபோகம் என்று வெறுத்து திருநாராயணபுரத்திலிருந்து திருவரங்கம் வரை நீண்ட நெடும் வழி முழுதும் மெள்ள நடந்து வந்தார். திருவரங்கத்தை அடையப் பதினைந்து தினங்கள் எடுத்திருந்தார்.

திருவரங்கத்தைக் கண்டதும் பழைய நினைவுகள் தோன்றிட அவர் திருக்கண்களில் நீர் நிரம்பிவிட்டது.

ஊரில் பாழாக்கப்பட்ட வீதிகளையும், மதில்களை யும் பார்த்து மனத்திலே பெரிதும் கிலேசம் அடைந்தார்.

துருக்கர் படையெடுப்புக்குப் பிறகு ஊரில் எல்லாப் பெரியவர்களும் மறைந்து விட்டார்களே என்று நொந்து கொண்டார்.

எனினும் நாட்டில் மீண்டும் வேத மார்க்கத்தின் ஆட்சி வருகிறது' என்பது அவருக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கோபணா வந்து அவர் முன்னிலையில் சாஷ்டாங்கமாக விழுந்த போது மிகவும் சந்தோஷப்பட்டு அவரது பக்தி சிரத்தையை மிகவும் மெச்சி, "நீ ஊழியும் செய்யும் சாம்ராஜ்யம் மேலும் மேலும் விருத்தி அடையும்" என்று வாழ்த்தி அருளினார்.

பின்னர் கோபணா தயங்கியவாறு திருவரங்கத்தில் நடந்துள்ள சர்ச்சைகளைக் கூறி, இனி என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்ட போது,

தேசிகரும் திருக்கண் மலர்த்தியருளி, "கோபணா! இந்த அடியவன் எந்த மூர்த்தியைத் தேர்ந்தெடுக்கப் போகிறான் என்பதைப் பற்றி எண்ணாதே! சீதா பிராட்டி மீது தூஷணைகள் சொன்ன போது இராமபிரான் என்ன செய்தார் என்பதை நினை. அவருக்குத் தெரியும் பிராட்டி அப்பழுக்கற்றவர் என்று. எனினும் உலகோருக்காக அவரைச் சோதனைகளுக்குள்ளாக்க வேண்டிய நிர்பந்தம் ராமருக்குத் தோன்றியது. அதுபோலவே இங்கு நான் சொல்வதை மட்டும் தீர்மானமாகக் கொள்ளாமல் ஒன்று செய், இந்த ஊரில் அறுபது வயதுக்கு மேல் உள்ள வயோதிகர்கள் யாராவது இருக்கிறார்களா என்று பார்! அவர்கள் நிச்சயம் பழைய அரங்கரைத் தரிசித்திருப்பார்கள். அவர்களை அழைப்பித்து இரண்டு திருவரங்கர் களையும் காட்டி, இவர்களில் யார் பழைய திருவரங்கன் என்று சொல்லச் சொல். இந்தக் காரியத்தை செய்யும் முன் ஊரார் எல்லோரும் இந்த ஆலோசனைக்கு ஒத்துக் கொள்கிறார்களா என்று கேட்டுக் கொள்" என்று கூறினார்.

கோபணாவுக்கு இது சரி என்று பட்டது. ஊர்ப் பெரியவர்களை அழைத்து அவர்களிடம் கேட்க, அவர் களும் இந்த நிபந்தனைகளுக்கு ஆமோதித்தார்கள்.

மறுநாள் காலையில் திருவரங்கத்திலும், அடுத்து உள்ள ஊர்களிலும் முரசம் கொட்டப்பட்டது.

"பழைய அரங்கனை நன்றாகப் பார்த்தவர்கள் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் யாரேனும் இருந்தால் கோவிலுக்கு வர வேண்டும் பிரதானிகளின் உத்தரவு" என்று அறிக்கை எங்கும் தெரிவிக்கப்பட்டது.

ஊரை அலசிப் பார்த்ததில் அப்படிப்பட்ட பொருத்தமுடன் வயதானவர்கள் யாரும் கிடைப்பார் இல்லை. ஊரை விட்டுப் போன பழைய தலைமுறைகள் எல்லாம் எங்கெங்கோ நசிந்து

விட்டன என்பது தெரியவந்தது. இரண்டு நாள் தேடியதில் கடைசியாக ஒரே ஒரு வயோதிகர் அகப்பட்டார். அவருடைய பிராயம் தொண்ணூறு! பழைய அரங்கரைப் பார்த்திருப்பதாகச் சொன்னதால், அவரை ஆர்வமுடன் கோவிலுக்கு அழைத்து வந்தார்கள்.

இரு அரங்கர்களின் முன்னால் அவரை நிறுத்தி, இதில் பழைய அரங்கன் யார் என்று கேட்டபோதுதான் ஒரு உண்மை வெளிப்பட்டது.

"சுவாமிகளே! என் கண்கள் திறந்திருக்கின்றனவே தவிர, நான் திருஷ்டி சுகத்தை இழந்து ஐந்து வருடங்களாகி விட்டன. என்னால் எதையும் இனம் காண முடியாது!" என்றார்.

எல்லோருக்கும் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைக்கப் போக, பழையபடி ஆகிவிட்டதே என்று கசமுச என்று பேச ஆரம்பித்தார்கள்.

28

எல்லோரும் பிரமித்திருக்க, அந்த வயோதிகர், "சுவாமிகாள்!" என்றார். "அடியேன் சொல்வதை கேளுங்கள். நான் இந்தக் கோவிலின் பழைய நாளைய *ஈரங்கொல்லி. பெருமானது வஸ்திரங்களை அடியேன்தான் தினமும் துவைத்துக் கொடுப்பேன். அந்தப் பழைய நாட்களிலே அடியேன் ஒரு காரியம் செய்வதுண்டு. பெருமாள் திருமஞ்சன நீராடிய வஸ்திரத்தை அடியேனிடம் துவைக்கக் கொடுக்கும் போது, அடியேன் அந்த ஈர வஸ்திரத்தைப் பிழிந்து அதன் தீர்த்தத்தைப் பெருமாளது பிரசாதமாக உட்கொள்ளுவேன். அந்தத் தீர்த்தத்தின் ருசியே

தனியாகயிருக்கும். அது பெருமாளது விக்கிரகத்தின் மகிமை என்று அடியேன் நினைத்துக் கொள்வதுண்டு. இப்போது சுவாமிகள் எல்லோரும் ஒன்று செய்யலாம். இரண்டு அரங்கருக்கும் திருமஞ்சனம் செய்து இரண்டு பேருடைய ஈர வஸ்திரங்களையும் அடியேனிடம் தாருங்கள். அடியேன் அவைகளைப் பிழிந்து தீர்த்தத்தைப் பருகுவதன் மூலம் பழைய பெருமாள் யார் என்று ருசியினால் கண்டுபிடிக்க முடிகிறதா என்று பார்க் கிறேன். சுவாமிகள் எல்லோரும் சரி என்று நினைத்தால் இதைச் செய்யலாம்!" என்று விண்ணப்பித்தார்.

எல்லோரும் யோசித்து, சரி! என்று அதை ஆமோதித்தார்கள்.

உடனே திருமஞ்சனத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டது. மண்டப வாசலிலே பெரும் கூட்டம் கூடி விட்டது.

ஈரம் கொல்லி பயபக்தியோடு நின்று கொண்டிருந்தார்.

திருமஞ்சனம் நிறைவேறியது.

ஈர வஸ்திரங்கள் களையப்பட்டன.

அர்ச்சகர் ஈரம் கொல்லியிடம் முதல் வஸ்திரத்தைக் கொடுத்து, "இது இடது பக்கப் பெருமாளின் வஸ்திரம்" என்றும், இரண்டாவதைக் கொடுத்து, "இது வலது பக்கப் பெருமாளின் வஸ்திரம்" என்றும் கூறினார்.

ஈரம்கொல்லி இரண்டு வஸ்திரங்களையும் கையில் வைத்துக் கொண்டார். முதலில் ஒன்றைப் பிழிந்து தீர்த்தத்தைப் பருகினார். பிறகு இரண்டாவதைப் பிழிந்து பருகினார். சிறிது நேரம் கண்ணை மூடி யோசித்தார்.

பிறகு இரண்டாம் முறையும் இரு வஸ்திரங் களையும் பிழிந்து பருகினார்.

அவர் முகம் பிரகாசமாகியது. "சுவாமிகளே! இடது பக்கம் இருக்கும் பெருமாளே பழைய பெருமாள்! அவரது வஸ்திர தீர்த்தந்தான் முன்போல் என் நாவிற்கு அபிருகியாய் இருக்கிறது" என்றார்.

வல்லபனும், தத்தனும் துள்ளிக் குதித்தார்கள். இடது அரங்கன் தான் அவர்களது அரங்கன்.

கோபனா பேரானந்தத்துடன் எழுந்து, "பெரியீர்காள்! அரங்கன் தம்மைத் தாமே காட்டிக் கொண்டார்" என்று கூறினார். சபையினர் கரகோஷம் செய்து ஆமோதித்தனர்.

அடுத்து தேசிகர் நேரே சன்னிதிக்குச் சென்றார். 48 ஆண்டுகளுக்கு முன் தாம் கட்டிய சுவர் அப்படியே நின்றது. "ரங்கா! ரங்கா!" என்று சொல்லிக் கொண்டு தம் திருக்கரங்களிலுள்ள உளியால் சுவரைக் கொத்தி விட, அவரைத் தொடர்ந்து இதரர்கள் அதைப் பொழிக்க ஆரம்பித்தார்கள்.

சுவர் அழிய ஒரு முகூர்த்தம் ஆனது. தேசிகர் கைகூப்பிக் கொண்டு, "திருவரங்கா! திருவரங்கா!" என்று உள்ளே நுழைந்தார்.

இருட்டின் திரை சிறிது விலகியதும், பெருமாளின் திருவுரு மெள்ள மெள்ள விகசிக்கத் தொடங்கியது.

அப்போதுதான் திருமஞ்சனம் ஆகி, திருவஸ்திரம் தரித்தாற்போல் சுவாமி புதுப் பொலிவுடன் உள்ளே திகழ்ந்தார்.

திருமேனியின் பூ மாலைகளும், துளசி மாலைகளும் அன்று அலர்ந்தது போல் இருந்தன.

திரு ஆடைகள் புத்தம் புதியவையாகத் தெரிந்தன.

பூஜைப் பாத்திரங்கள் யாவும் அன்று துலக்கி வைத்தது போன்ற புத்தொளிகள் வீசின.

எல்லோரும் கண்கொள்ளாமல் இந்த அதிசயத்தைக் கண்டு பக்திப் பெருக்கால், "ரங்கா! ரங்கா!" என்று கூவினார்கள்.

அப்போது திடீரென்று மேகங்கள் கூடி மழை பொழியத் தொடங்கியது.

கோவிலையும், நகரையும் சுத்தம் செய்வது போல் பல முகூர்த்தங்கள் அடித்துப் பொழிந்தது. அது குறைகிற வேளையில் தாயார் சன்னிதிக்கு அருகிலுள்ள வில்வ மரத்தின் அடியில் ஒரு அற்புதம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

மழை நீர் மண்ணைக் கரைத்துக் கொண்டு போக, அங்கே ஒரு பள்ளம் தோன்றி அதனுள்ளே பளபளப்பாக ஏதோ தெரியத் தொடங்கியது.

சீக்கிரம் அது ஒரு கற்சிலையின் தலைப்பகுதி என்று தெரியவந்தது. கோபனா உடனே பணியாட்களை அனுப்பி, சிலையைத் தோண்டும்படி கூறினார். தோண்டி எடுத்ததில் அது தாயார் அரங்கநாயகியின் கற்சிலை (மூலவர்) என்று தெரிந்தது.

அன்னியர் படையெடுத்தக் காலத்தில் அரங்கன் மூலவரைச் சுவர் வைத்து மறைத்த போது, தாயார் மூலவரை வில்வ மரத்தடியில் புதைத்து விட்டார்கள். அந்தத் தாயார்தான் இப்போது வெளியே வந்துள்ளார். வல்லபன் இதைத் தன் தாயார் மூலம் கேள்விப்பட்டிருக்கிறான். இப்போது அந்தச் செய்தியைக் கோபனாவிடம் தெரிவித்தான்.

கோபணா மகிழ்ச்சியடைந்தார். ஆனால் கோவிலில் இரகசிய பூஜை செய்தவர்கள் ஏற்கெனவே சில காலம் முன்பே ஒரு தாயார் மூலவரை அங்கே ஸ்தாபிதம் பண்ணி இருந்தார்கள். இதை யோசித்த கோபணா கூடியிருந்த பெரியவர்களுடன் ஆலோசித்து, மரத்தடியில் இருந்த மூலவரையும் உள்ளே ஸ்தாபிதம் செய்யும்படி உத்தரவு வழங்கினார்.

(இன்னும் இந்த இரு மூலவர்கள், தாயார் சன்னிதியில் இருந்து வருகிறார்கள்.)

ஆனி பதினேழு! ஊர் விழாக்கோலம் பூண்டது. வேத கோஷங்களும், தமிழ் மறை ஓசைகளும் எங்கும் கேட்டன. கோவிலிலிருந்து ஓமப் புகையும், நன் மணங்களும் எழுந்து ஊர் முழுவதையுமே நிரப்பின. மங்கள வாத்தியங்கள் எங்கும் முழங்கத் தொடங்கின.

விக்கிரக ரூபமாக தேச தேசங்களுக்குச் சென்று, காடுகளில் வாழ்ந்து லீலைகள் செய்த திருவரங்கன் தமது சன்னிதியில் ஸ்தாபனமாகி எழுந்தருளினார்.

மற்றவர்கள் கொணர்ந்திருந்த புதிய திருவரங்கர் "யாக பேரர்" ஆக அதே சன்னிதியில் ஸ்தாபிக்கப்பட்டு விட்டார்.

அந்தத் திருக் காட்சியைக் கண்டவர்கள் எல்லோரும் மனம் உருகிக் கண்ணீர் பெருக்கினார்கள்.

கோபணா உணர்ச்சி வசத்தில் தம்மையே மறந்தவராக இருந்தார்.

வழிபாடுகள் முடிந்த பிறகு அவர் எழுந்து, கம்பணர் சார்பில் பதினாறாயிரம் பொன்னையும், தம் சார்பில் ஆயிரம் பொன்னையும் கோவிலுக்காக

வழங்கினார். அவற்றைக் கிருஷ்ணராஜ உத்தம நம்பி பக்தியோடு பெற்றுக் கொண்டார். (பின்னர் உத்தம நம்பி இந்தத் தொகை கொண்டு 52 கிராமங்களைக் கோவிலுக்காக வழங்கினார்.)

பிரதானிகளில் சாளுவமங்கு, அஷ்டாட்சரத்தின் சின்னமான எட்டுக் கிராமங்களை வாங்குவதற்கு 60000 பொற்கழஞ்சுகளை அளித்தார். 1000 சாலிக்கிராமங்களை மனமுவந்து வழங்கினார்.

மற்ற பிரதானிகளும் தளபதிகளும் தம் தம் பதவிக்கு ஏற்பப் பரிசில்களை வழங்கினார்கள்.

தேசிகர் எல்லா வைபவங்களையும் தம் திருக் கண்களால் அனுபவித்து விட்டு ஒரு சுலோகத்தைப் பாடினார்.

ஆநீயா நீலச்ருங்கத் யுதிரசித ஜகத் ரஞ்ஜ
நாதஞ்ஜாநாத்ரேச்

செஞ்ஜ்யாமாராத்யகஞ்சித் ஸமய மத நிஹத்
யோத்த நுஷ்காந்ஸ துலுஷ்காந்

லக்ஷ்மீக்ஷ்மாப்யா முபாப்யாம் ஸஹ நிஜ நிலயே
ஸ்தாபயந் ரங்கநாதம்

ஸம்யக்வர்யாம் ஸ்பர்யாம் குருத நிஜயஸோ
தர்ப்பணோ கோபணார்ய.

(உலகத்திற்கு ஆனந்தம் தரும் நீல உச்சிகளுடைய அஞ்சனாத்ரி (திருப்பதி) மலையில் இருந்து, ஸ்ரீதேவி, பூதேவி சகிதம் ரங்கநாதரை செஞ்சிக்குக் கொணர்ந்து பூஜை செய்து, பின்னர் துருக்கர்களை வென்று திருவரங்க நகரிலே அவரை மீண்டும் ஸ்தாபிதம் செய்தார் புகழ் வாய்ந்த கோபணார்யர்.)

இந்த சுலோகம் பிறகு தர்மவர்மாவின் திருமதில்களில் கீழண்டை வெளிப்புறத்தில் உள்ள கல்லின் மீது பொறிக்கப்பட்டது.

சகல கோலாகலமான இந்த வைபவங்களை எல்லாம் கண்டு பேரானந்தம் அடைந்த பல்லாயிரக் கணக்கான ஜீவன்களில் ஒரு ஜீவன் மட்டும் தனித்த ஒரு சாயுஜ்யமான சுகானந்தத்தை அனுபவித்தது.

வாசந்திகா என்னும் ஜீவன்தான் அது.

நான்கு நாட்களுக்கு முன்னர் காஞ்சியிலிருந்து வந்த யாத்திரைக் கூட்டத்துடன் வந்திருந்தாள் அவள்.

திருவரங்க மண்ணை மிதித்ததுமே அவளுக்கு மூர்ச்சைப் போட்டது.

சிறு பருவ நாட்கள் எல்லாம் அவள் கண்முன்னே தோகை விரித்து நர்த்தனம் செய்தன.

அரங்கத்தின் ஒவ்வொரு பிடி மண்ணும் அவளுக்குப் புனிதமாகத் தோன்றியது.

அவளும் அவள் கணவர் குலசேகரனும் கண்ட கனவு இன்று சோபிதமாய் நிறைவேற்றப்படுகிறது. இதை நிறைவேற்றியதில் பெரும்பங்கு அவளது திருக்குமார னையேச் சார்ந்தது. அதை நினைத்துத்தான் ஒரு ஆத்மானுபவமான சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள் அவள்.

தாயைக் கண்டு ஆனந்தம் அடைந்தாலும் வல்லபனின் கண்கள் வெகுதூரம் நீந்தி மலையாள தேசத்திற்குச் சென்றிருந்தது.

திருவரங்கத்தில் நடக்கும் வீராபிஷேகத்திற்கு எல்லாக் குறுநில மன்னர்களையும், சிற்றரசர்களையும் ஓலை எழுதி அழைத்திருந்தார் கம்பணர்.

தென் பாண்டியத்தில் ஒரு பெரிய பகுதிக்கு உண்மை பாத்தியதை உடைய மதுராவுக்கும் அழைப்பு ஓலை அனுப்பப்பட்டது.

"பாண்டிய குல மகிஷி ஸ்ரீ ஸ்ரீ மதுராங்கினி தேவிக்கு!" என்று ஓலையின் திருமுகம் எழுதப்பட்டிருந்ததை வல்லபன் நன்கு அறிவான். நாளை மறுநாள் வீராபிஷேகத் திருநாள்! அன்று வருவாள் என்று எதிர்பார்த்திருந்தான்.

அந்த மங்கள நாள் உதயமாகியது.

நகர் முழுதும் மீண்டும் விழாக் கோலம்! கமுகும் வாழையும் நிறைந்த பந்தல்கள்! சுபவாத்தியங்கள் அதிர்க்கும் முரசுகள் எல்லை இல்லாத ஜன சமுத்திரங்கள்!

காலையில் தேசிகர் ஆசீர்வாதத்துடன் தொடங்கி கம்பணருக்கு வீராபிஷேகம் நடத்தப் பெற்றது. பார்ப்பவருக்கு எல்லாம் அது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

பின்னர் சிற்றரசர்களுக்கெல்லாம் கம்பணர் பரிசில்கள் வழங்கினார்.

கட்டியம் கூறி மெய்க்காவல் வீரர்கள் வந்தார்கள்.

சிற்றரசர்களும் கம்பணரை வணங்கி வாழ்த்தி அவர் அளித்த பரிசிலை வாங்கிச் சென்றார்கள்.

"தென் பாண்டிய மகிஷி ஸ்ரீ ஸ்ரீ மதுராங்கினி" என்று சொல்லி நீளக்கட்டியம் கூறினார்கள்.

சந்திரிகை நடப்பதுபோல் ஒரு பேரழகி நடந்து வந்தாள்.

வல்லபன் தன் ஆதனத்திலிருந்து ஆவலோடு பார்த்தான்.

கம்பீர நடை நடந்து. அம்சம் போன்ற ஒயிலுடன் கம்பனர் முன் நிற்க. அவரும் பேருவகை அடைந்து தென் பாண்டியம் முழுவதையும் பாண்டிய வழி வந்த அவளுக்கே வழங்குவதாகக் கூறி சாசனத்தையும் அவள் கரங்களில் ஒப்புவித்தார். எங்கும் கரகோஷம் பொங்கி நிலவியது.

வல்லபனின் கண்களில் நீர் நிறைந்தது.

"மதுரா! மதுரா! இதோ இருக்கிறேன். இதோ இருக்கிறேன்" என்று மனசிலேயே கூவினான் அவன்.

மதுராவின் விழிகள் சிறிது இருபக்கமும் அசையவில்லை. தன் வழியைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். இது அவனுக்கு வருத்தத்தைக் கொடுத்தது. பிரேமைக் கண்களோடு அவனைத் தேட வேண்டாமா. அல்லது தேடுகிறேன் என்ற பாவத்தை அவனறியச் செய்ய வேண்டாமா?

அவன் பார்வை திடீரென்று திரும்பியது.

மதுராவின் பின்னால் ஒரு இளைஞர் புன்னகையுடன் சேர்ந்து கொண்டார். அவள் அவருடன் ஏதோ பேச அவரும் புன்னகையுடன் பேசினார். இருவரும் பேசிக் கொண்டே தங்கள் ஆதனங்களில் அமர்ந்தார்கள்.

வல்லபனின் தவிப்பு தாங்கவில்லை. மெள்ள எழுந்தான். ஆனகுந்தி விட்டப்பர்தான் வயதில் சிறிய பிரதானி. அவரிடம் போய், "அந்த மகிஷி அருகில் இருப்பவர் யார்?" என்று கேட்டான்.

விட்டப்பரும் புன்னகையுடன், "ஏன்? அது அவள் கணவர்தான். பாண்டிய கிளைக் குடும்பத்து இளைஞரை அவள் மணந்திருக்கிறாள்!" என்று கூறினார்.

ஒரு கணம் அந்தக் கோலாகல சபைக் கூட்டமே வெறும் உயிரற்றப் படமாகியது. அதன் ஆரவாரங்கள் ஏதும் அவன் காதில் விழவில்லை. இதயம் தடக்கென நின்றது. கால்கள் ஊன்றி நிற்க மறுத்தன.

சிரமத்துடன் ஆதனத்திற்கு வந்தான். இருக்க முடியவில்லை. சபையை விட்டு எழுந்தான். வெளியே போனான். கோயிலை நோக்கி விறுவிறுவென்று ஓடினான். சன்னிதி மண்டபத்தின் படியில் அமர்ந்தான். கண்ணீரைத் திறந்தான்.

ஊழி நாள் மாரி போல் அழுகை. கண்ணீர்தான் கடல் என அவன் கண்ணில் உறைந்து இருக்குமோ! துக்கந்தான் மேகம் போல் அவன் மனமெல்லாம் அடைத்திருக்குமோ!

குழந்தை போல் அழுதான்.

இரு நாழிகை துயரின் கடுமையான எரிவில் அகப்பட்ட இளம்கொடிபோல் கருகி, பகமையெல்லாம் அழிய உலர்ந்த பின்,

அவன் மனம் திடீரென்று அலையில்லாக் கடல் போல் அமைதியானது. நலுங்காமல் பார்வை நிலையாய் நின்றது.

மனம் எதையும் நினையாமல் சூன்யமாகிவிட்டது.

அப்போது எதிரே இருட்டின் ஆழத்திலிருந்து தேவதையொன்று உற்பத்தியாகிக் கொண்டிருந்தது. மதுராங்கினியின் உரு அதற்கு இருந்தது.

அதிசயத்துடன் பார்க்கும் போது அந்த உரு அவன் முன்னே வந்து நின்றது. அவன் உடல் பதறியது. கண்ணைக் கொட்டவில்லை. கொட்டினால் உருவம் அழிந்துவிடும் என்று நினைத்தான்.

"சுவாமி!" என்ற குரல்.

அதுவும் பிரமையா? உற்றுப் பார்த்தான்.

"சுவாமி!"

இது பிரமையல்ல! அதிசயத்துடன் பார்த்தான். உருவத்தின் கண்களில் நீர்.

"நான் தான் சுவாமி மதுரா! தங்கள் நினைவுகளில் வாழ்ந்த மதுரா!"

நீர் அவள் கண்களில் அலைபோன்று வந்தது.

"பேசுங்கள் சுவாமி! இல்லையேல் என் இதயம் உடைந்து விடும் சுவாமி!"

அவள் நிஜமானவள் என்று அவனுக்குத் தெரிந்து விட்டது.

"சுவாமி அடியாளிடம் பேசுங்கள்!"

தழைந்து கீழே அமர்ந்தாள்.

சோகமாகப் பார்த்தான். பேச முடியவில்லை. உலகில் மகத்தான ஒரு வேதனைக்கு ஆளானது போல் நினைத்தான். வாழ்க்கையில் இத்தனை நாள் வாழ்ந்து, உழைத்து, தியாகம் செய்தது எல்லாமே வீணாகிவிட்டது.

"சுவாமி, சுவாமி என்னைப் பாருங்கள். என்னிடத்தில் பேசுங்கள்! நான் ஒரு பாபி. பாதகம் செய்தவள். ஏனெனில் தங்களது பிரேமையைத் திருடிக் கொண்டு போய் விட்டேன். பிரேமைதான் தங்களுக்கு உயிர். அதைத் திருடியவள் கொண்டு போய் என் வாழ்நாள் முழுதும் நானே அனுபவித்தேனில்லை. அதை வீணாக்கித் தூரே எறிந்து விட்டேன். அறிந்தே செய்தேன் சுவாமி! இதனால் தாங்கள் உயிர் இல்லாதவராவீர்கள்! வாழ்நாள் முழுதும் ஜடமாக அலைவீர்கள் என்பதை நன்று அறிந்திருந்தேன். இருந்தும் செய்தேன், இருந்தும் செய்தேன்" என்று சொல்லி அலமந்து அந்தப் படிக்கல்லில் தன் தலையை மோதினாள்.

திடுக்கிட்ட அவன், "மதுரா! மதுரா!" என்றான். கைகளால் அவளை எடுக்கப் போனான். பிறகு அதிர்ச்சியுடன் பின் நகர்ந்து, "மகாராணி, மகாராணி! என்ன இது? தாங்கள் இப்படிச் செய்யலாமா? எழுந்திருங்கள் எழுந்திருங்கள்!" என்று பதறினான்.

அவள் நிமிர்ந்தாள். நெற்றியில் ரத்தம் கசிந்திருந்தது.

"சுவாமி, சுவாமி! தங்கள் முன்னிலையில் அழுது சரண் அடைந்தால்தான் என் இதயம் நிர்மலம் ஆகும் போலிருந்தது. அரச சபையிலிருந்து தாங்கள் எழுந்ததும் தெரியும், போனதும் தெரியும். நீங்கள் என்னுடன் வருபவரைப் பார்த்து அதிர்ச்சி அடைந்திருப்பீர்கள்! அதனால் துக்கம் தாளாது போயிருப்பீர்கள் என்பதை நான் அறிந்தவள். ஏனெனில் நானும் அதுபோல் தனியேச் சென்று அழுதவள்தான். சபை முடிந்து வீடு போனதும் நீங்கள் எங்கே போயிருக்கக் கூடும் என்று யோசித்தேன். தவித்தேன். கடைசியில் அரங்கன் கோவிலில்தான் இருப்பீர்கள் என்று நினைத்தேன். தனியாக இங்கே எப்படியாவது வர வேண்டும் என்று நினைத்தேன். பிரதானி பரிவாரங்களைத் தவிர்த்துப் பின்புற வழியாய் இங்கே வந்தேன்.

"நான் இந்தத் திருமணத்தைக் கடமைக்காகச் செய்து கொண்டவள். என் தந்தை நோய்வாய்ப்பட்டு இருந்தார். மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். என்னை யாரிடமாவது ஒப்படைக்க விரும்பினார். அப்படிச் செய்யாவிடில் ராஜரீகம் காரணமாக

யாராவது என்னை மீண்டும் அபகரித்துப் போய்விடக் கூடாது என்பது அவர் பயம்.

"தடுத்துப் பார்த்தேன். வெகுநாள் முடியவில்லை. ஒரு பெண் கன்னியாக எத்தனை நாள் வாழ்ந்துவிட முடியும்? தமிழ்த் தேசங்களுக்கு நற்கதியும் சீக்கிரம் வருவதாக அப்போது தோன்றவில்லை. தந்தையும் கடைசி நாட்களில் இருந்தார். வழியேதும் இல்லை. சரி என்றேன் திருமணத்திற்கு!

"சுவாமி, அப்படிச் சொன்னேனே. அன்று தங்களைப் போலவே தனியாக ஓடினேன். நெஞ்சத்தைக் கொட்டி அழுதேன். உயிரை மாய்த்துக் கொள்ளலாமா என்று நினைவு! ஆனால் தங்களுக்கு நான் வாழவில்லை என்பதைவிட எங்கேயோ வாழ்கிறேன், தங்களை நினைக்கிறேன் என்ற நினைவே, மகிழ்ச்சி தரும் என்று எண்ணினேன்.

"அந்த நினைப்பில்தான் வாழத் தீர்மானித்தேன். திருமணத்திற்குச் சம்மதித்தேன். சுவாமி! சுவாமி! இது தவறானால் என்னைப் பொறுத்தருளுங்கள். நீ வாழ்ந்திருக்க வேண்டாம். இறந்திருந்தால் சந்தோஷப் பட்டிருப்பேன் என்று கூறுங்கள்! இதோ இந்தக் கணமே இறந்து விடுகிறேன் சுவாமி! இந்த அபலையைக் காப்பாற்றுங்கள். ஏதாவது சொல்லுங்கள்" என்று அரற்றினாள் அவள்.

வல்லபன் பேசவில்லை. அவன் மனம் நிர்மலத் தடாகமாய் விரிந்திருந்தது. மதுராவின் உருவில் பெண்மை அவனிடம் நியாயம் கேட்பது போல் நினைத்தான். மதுரா நேரில் வந்தது. கெஞ்சியது. முறையிட்டது. அழுதது. நியாயம்கேட்டது எல்லாமே அவன் மனத்தின் ரணங்களை ஓரளவு குணப்படுத்திக் கொண்டிருந்தது. பத்து வருடங்களில் அவள் வேறு என்ன செய்திருக்க முடியும்? எதுவும் முடியாது.

அதை நினைக்கும்போது அவள் மீது இரக்கமும் பச்சாதாபமுமே மிகுந்தன.

வெகுநேரம் இந்த நினைவுகளில் ஆழ்ந்த பின் அவனைக் குளிர்வுடன் சோகமாகப் பார்த்தான். புயல் இல்லாத அமைதிப் பார்வை அது.

"மகாராணி!" என்றான். "தங்களை மதுரா என்று அழைக்கும் பாத்தியத்தை இழந்தவன். தாங்களும் அழாதீர்கள். தங்கள் அழுகை என்னைப் பாதிக்கும். தாங்களும் தனிமையில் ஒரு நாள் எனக்காக அழுதீர்கள் என்று சொன்னீர்களே. அந்த ஒரு வார்த்தை போதும் எனக்கு! வாழ்நாள் முழுவதும் அசைப் போட்டுக் கொண்டிருப்பேன். தங்களது நிரந்தர அமைதிக்காக நானும் தங்களுக்கு ஒரு வார்த்தை கூறுகிறேன். தாங்கள் வாழ்வதையே நான் விரும்புகிறேன்.

"ஒரே ஒரு வரம் மகாராணி. தங்களைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்க எனக்கு உரிமை கொடுங்கள்! அதுவே போதும் என் வாழ்க்கைக்கு! பிரேமை உடைந்து போனதின் துக்கத்தைப் பொறுத்துக் கொண்டு வாழ்வேன்!" என்றான் அவன்.

"தாங்கள் என்னை நினைப்பதற்குப் பூரண உரிமை பெற்றவர். நம் பிரேமை தூயதாக இருப்பதால் இல்லற வாழ்விலும் ஒரு தூய உணர்வுடன் தங்களை நினைப்பதில் யாரும் என்னைக் குறை கூறவும் முடியாது. அப்படியே நினைப்பேன்" என்றாள் அவள்.

அந்தப் பேச்சிலேயே இருவருக்கும் எல்லையில்லா அமைதியும், நிர்மலமும் விழுந்துவிட்டது.

எழுந்தார்கள்.

அரங்கனை வணங்கினார்கள்.

வெளியே வந்தார்கள்.

பிரிந்தார்கள்.

வல்லபன் பிறகு துறவி போல்தான் வாழ்ந்தான். அவனது தாயார் வாசந்திகா திருவரங்கம் வந்த பின் ஓராண்டு வாழ்ந்தாள். வல்லபன் மணம் செய்து கொள்ள விரும்பாத காரணத்தை மெள்ள மெள்ள தத்தனிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டாள். ஒரு பிரேமையில் அகப்பட்டு, அதன் காரணத்தால் வழி மாற வேண்டிய நிலை ஏற்பட்டும் தாயின் சொல்லைக் காப்பாற்றுவதற்காக வழி பிறழாமல் இருந்து, கடைசியில் அந்தப் பிரேமை முழுமை பெறாது உடைந்து போய் நிற்கிறான் என்பதை அவள் அறிந்தாள். அவன் முன்னமேயே மதுராவை மணந்திருப்பான். அப்படி மணக்காமல் இருக்கும்படி செய்ததில் வாசந்திகா வாங்கிக் கொண்ட சபதம் ஒரு பெரும் காரணமாக இருந்திருக்கும்.

இப்படி மகனின் திருமணத்தைத் தான் கெடுத்து விட்டதாக வாசந்திகா சோகத்துடன் நினைத்தாள்.

அவனை இனிமேல் மணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தவில்லை. தன் கடைசி நேரத்தில் அவனை அழைத்து, "நிம்மதியோடு வாழ்வாய்!" என்று ஆசீர்வதித்தாள்.

ஆனால் அதே நேரத்தில் தத்தனிடமிருந்து அவள் ஒரு உறுதிமொழி வாங்கியிருந்தாள். வல்லபனை அவன் கடைசி வரை தன் சகோதரனாக நினைத்துக் காப்பாற்ற வேண்டும். அவன் மனம் நோக விடாமல் எல்லா நேரங்களிலும் நடந்து கொள்ள வேண்டும். இதற்காகத் தத்தனே ஒரு குடும்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியிருந்தாள். தத்தனும் கண்ணீரோடு அவளுக்கு வாக்குத்தத்தம் அளித்திருந்தான்.

இதற்காக அவன் மஞ்சரியைத் தேடிப் போய் மணந்து கொண்டான்.

அந்த உத்தம நண்பன்தான் வல்லபனுக்கு வாழ்வில் தாய், தந்தை, மனைவி, மகன் எல்லாமாகவும் மாறினான். வல்லபனின் சுகத்தையே என்றும் கண்காணித்தான்.

இருவரும் சேர்ந்தே திருவரங்கனுக்கு ஈடில்லாத் தொண்டுகளை ஆற்றினார்கள்.

அரங்கனது அருள் அவர்கள் மீது பரிபூரணமாக சுரந்திருந்தது.

அந்த அருளின் சுரப்பால் வல்லபனின் பிரேமையெல்லாம் தெய்வீக பக்தியாகக் கனிந்து விட்டது.


அந்த பக்தியில் அவன் திளைத்து அரங்கனும் அவனும் பாலும் தேனும் கலந்தவொத்தாற் போல் ஒன்றாகி விட்டார்கள்.

சுபம்

ஸ்ரீவே.

அரங்கன் இதுவரை போயுள்ள வழி

Released by Maran's Dog ,Toronto, Canada



Released by Maran's Dog ,Toronto, Canada
Released by Maran's Dog ,Toronto, Canada
Released by Maran's Dog ,Toronto, Canada